# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை - [illegible]0
பக்கங்கள் - 56

சுடர் 31 | கதிர் 339 | வள்ளுவர் ஆண்டு 2047 | ஐப்பசி 14, ஞாயிற்றுக்கிழமை 30.10.2016

## வவுனியாவில் வாள் வெட்டு

### காயப்பட்ட இருவர் வைத்தியசாலையில்

வவுனியா, ஒக். 30
வவுனியாவில் இரு குழுக்களிடையே நேற்றுப் பிற்பகல் இடம்பெற்ற மோதலைத் தொடர்ந்து இருவர் வாள்வெட்டுக்கு இலக்காகிப்படுகாயமடைந்து வவுனியா பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.
வவுனியா, பம்பைமடுப் பகுதியில் உள்ள குளக் கட்டில் வவுனியா சுந்தரபுரம் பகுதியிலுள்ள இளைஞர்கள் சிலர் ஒன்றிணைந்து குளித்துக் கொண்டிருந்துள்ளனர். குளித்துவிட்டு அந்தப் பகுதியூடாக செல்லும்போது அருகிலுள்ள வீடு ஒன்றுக்குள் சென்ற இளைஞர் குழுவினர் அங்கு தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். இளைஞர்களின் தொல்லையை அடுத்து அங்கு சென்ற அந்தப் பகுதி இளைஞர்கள் சிலர் தர்க்கத்தில் ஈடுபட்டுள்ளனர். எனினும் அங்கிருந்து சென்ற சுந்தரபுரம் பகுதி >> 51

## புதிய அரசமைப்பு

# நவம்பரில் வரும் இடைக்கால அறிக்கைகள் 2

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 30
புதிய அரசமைப்புத் தொடர்பில் இடைக்கால அறிக்கை இரண்டு அடுத்த மாதம் வெளிவரவுள்ளது. அடுத்த மாத நடுப் பகுதியில் முதலாவது அறிக்கையும், மாத இறுதியில் இரண்டாவது அறிக்கையும் வெளிவரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.
அடுத்த மாத நடுப் பகுதியில் உப குழுக்களின் தொகுக்கப்பட்ட அறிக்கையும், மாத இறுதியில் வழிநடத்தல் குழுவின் அறிக்கையும் நாடாளுமன்றத்தில் வெளியிடப்படவுள்ளன.
புதிய அரசமைப்பு உருவாக்கத்துக்கான நாடாளுமன்றம் கடந்த மார்ச் மாதம் அரசமைப்பு நிர்ணயச் சபையாக மாற்றப்பட்டது. இதன் பின்னர் நாடாளுமன்றத்தில் உள்ள சகல கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்தி ஆறு உப குழுக்கள் உருவாக்கப்பட்டன. இதற்கு மேலதிகமாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் வழிநடத்தல் குழுவும் >> 51

## பரவிப்பாஞ்சானில்

# காணிகளை விடுவிக்காது இராணுவம்

### பாதுகாப்பு அமைச்சு திட்டவட்டம்

கிளிநொச்சி, ஒக். 30
பரவிப்பாஞ்சானில் இராணுவ ஆக்கிரமிப்பிலுள்ள 10 ஏக்கர் காணியை விடுவிக்க முடியாது என்று பாதுகாப்புத் தரப்பினர் மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர். எஞ்சிய 3 ஏக்கரை விடுவிக்க பாதுகாப்பு அமைச்சுக்குப் >> 51

## பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை

### புலனாய்வு அதிகாரிகளை விசாரிப்பது தொடர்பில்

கொழும்பு, ஒக்.30
புலனாய்வு அதிகாரிகளின் பணிகளுக்கு இடையூறு ஏற்படாத வகையில் விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கி >> 51



## ஹைபிறிட் காரில் சிக்கியது கஞ்சா

### வவுனியாவில் 2 பேர் கைது

வவுனியா, ஒக். 30
வவுனியாவில் ஹைபிறிட் காரில் 14 கிலோகிராம் கேரளக் கஞ்சா கடத்தும் முயற்சி முறியடிக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய 2 பேரைக் கைது செய்துள்ளதாகவும் அவர்கள் கூறினர். தீபாவளி தினமான நேற்று அதிகாலை 4 மணி >> 51

## இறுதிப் போரில் குற்றமா? அப்படி ஒன்றுமேயில்லை

### மீண்டும் மகிந்த திட்டவட்டம்



கொழும்பு, ஒக். 30
தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு எதிரான போரின் போது எனது கட்டளைகளை ஏற்று இராணுவம் போரை வெற்றிகரமாக முன்னெடுத்தது. அந்தப் போரின் போது போர்க்குற்றங்களை இராணுவம் ஒருபோதும் இழைத்திருக்கவில்லை.
இவ்வாறு மீண்டும் திட்ட >> 51

## மாணவர் படுகொலை:

# சிறப்பு புலன் விசாரணை அறிக்கை அடுத்த வாரம்

யாழ்ப்பாணம், ஒக். 30
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டில் படுகொலைசெய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் சிறப்புப் புலன்விசாரணைகளை மேற்கொண்ட நிபுணர்களின் அறிக்கை அடுத்தவாரம் ஆணைக்குழுவுக்குக் கிடைக்கும் என்று பொலிஸ் ஆணைக் குழுவின் செயலாளர் >> 51

# சர்வாதிகாரத்தை மீண்டும் கொண்டுவர முயற்சிக்க வேண்டாம்

### அமைச்சர் சுஜீவ சேனாசிங்க கோரிக்கை

கொழும்பு, ஒக் 30
எங்களுக்கு எதிராகப் பிரசாரம் செய்து மீண்டும் சர்வாதிகார சக்தியொன்றைக் கொண்டுவர முன்வர வேண்டாம் எனப் பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்க வேண்டுகோள் விடுத்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
மத்திய வங்கியில் அர்ஜுன மகேந்திரனை நியமிக்கும்போதே, அவருடை மருமகனுடைய நிறுவனமொன்றுடன் தொடர்பு இருப்பதை நாம் தெரிந்துகொண்டோம். தவறு இடம்பெறுவதற்கான சூழல் இருப்பதை நாம் சுட்டிக்காட்னோம். இது எமக்கு ஒரு நல்ல பாடம். குடும்பத்தவர்களைப் >> 51




## தீபாவளிப் பட்டாசினால் வீடு முற்றாக நாசமாகியது

### முல்லைத்தீவில் நேற்று துயரம்

முல்லைத்தீவு, ஒக்.30
தீபாவளிப் பண்டிகைக்குக் கொளுத்தப்பட்ட பட்டாசு வீட்டின் மீது விழுந்து வெடித்ததில் அந்த வீடு முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதாக் தெரிவிக்கப்படுகின்றது.
இந்தச் சம்பவம் >> 51

# கிழக்கு ஆட்சியைப் பிடிக்க ரிசாத் முனைப்பு

கொழும்பு, ஒக். 30
கிழக்கில் சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் செல்வாக்கைத் துடைத்தெறிந்து தனது ஆதிக்கத்தை நிலைநாட்டுவதற்குக் கடும் முயற்சிகளை மேற்கொண்டுவரும் ரிசாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், அதில் ஒரு பகுதியாகக் கிழக்கு மாகாண ஆட்சியைக் கைப்பற்றுவதற்கான வியூகம் ஒன்றை வகுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்த வியூகத்தின் அடிப்படையில் அடுத்த கிழக்கு மாகாண சபைத் >> 51



அடகுக்கான அதிகூடிய பெறுமதியுடன் பெறுமதி மிக்க பரிசில்களைப் பெற்றிடுங்கள்...
24 கெரட் இற்கு ரூ.36,000
22 கெரட் இற்கு ரூ.33,000
மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்.
011 5 411 411
ஸ்வர்ணகிரண
தங்க நகை அடகுச் சேவை
SDB வங்கி
011 5 411 411



# ஜேர்மனியிலும் தமிழர்கள் கவனவீர்ப்பு

## பல்கலைக்கழக மாணவர் படுகொலைக்கு நீதி கோரி

கொழும்பு, ஒக். 30
யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களின் படுகொலைக்கு நீதி கோரி ஜேர்மன் அயலுறவு அமைச்சுக்கு முன்பாக நேற்றுக் கவனவீர்ப்பு இடம்பெற்றது.

யாழ்ப்பாணம், கொக்குவிலில் கடந்த 20 ஆம் திகதி யாப்பாணப் பல்கலைக்கழக மாணவர்களான கஜன், சுலக்சன் ஆகியோர் பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டனர்.

இதற்கு நீதி கோரி ஜேர்மன் அயலுறவு அமைச்சுக்கு முன்பாக நேற்றுத் தமிழ் மக்கள் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர். கடும் குளிரையும் பொருட்படுத்தாது மக்கள் இந்தப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.


மாணவர்கள் படுகொலையானது சிங்களப் பேரினவாத அரசின் ஈழத்தமிழர்கள் மீதான இனப்படுகொலை எண்ணத்தையே வெளிப்படுத்துகின்றது என்று அவர்கள் தெரிவித்ததோடு, நிகழ்வின் இறுதியில் மனு ஒன்றையும் அயலுறவு அமைச்சிடம் கையளித்தனர். தமிழ் இளையோர் அமைப்பு, ஈழத்தமிழர் மக்கள் அவை என்பன இந்தக் கவனவீர்ப்பை ஏற்பாடு செய்திருந்தன. (த-4)

# நல்லாட்சி அரசினால் கிட்டும் நிரந்தரத் தீர்வு

## தீபாவளி நிகழ்வில் சம்பந்தன் நம்பிக்கை

கொழும்பு, ஒக் 30
ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரின் நல்லாட்சி அரசில் தமிழ் மக்களுக்கான நிரந்தரத் தீர்வென்று கிடைக்குமென்ற நம்பிக்கை இருப்பதாகத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன் தெரிவித்தார்.

சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள் குடியேற்றம், இந்து மத அலுவல்கள் அமைச்சு மற்றும் பிரதமர் அலுவலகம் ஆகியவற்றின் ஏற்பாட்டில் அலரி மாளிகையில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற



தேசிய தீபாவளிப் பண்டிகையில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே சம்பந்தன் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் அங்கு தெரிவித்ததாவது:-
தற்போதைய நல்லாட்சி அரசின் ஆக்கபூர்வமான நகர்வின் வெளிப்பாடே இத்தகைய தேசிய பண்டிகையாகும். இதனை நாங்கள் நல்லுள்ளத்துடன் வரவேற்கிறோம். தற்போதைய நல்லாட்சியில் எம் மக்களுக்கான வெளிச்சம் தென்படத் தொடங்கியிருக்கிறது. அடுத்த முறை தீபாவளிக்கிடையில் இந்த வெளிச்சம் நிரந்தரமானதாக அமையுமென்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது-என்றார்.

தொடர்ந்து உரையாற்றிய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க,
எதிர்க்கட்சித் தலைவரின் எதிர்பார்ப்பு கூடிய சீக்கிரம் நிறைவேறும் என்ற நம்பிக்கை எமக்கிருக்கிறது எனத் தெரிவித்தார். (தி)

# மனித உரிமைகள் சபைக்கு மீண்டும் அமெ., பிரிட்டன், சீனா

## வாக்கெடுப்பில் ரஷ்யா தோல்வி

கொழும்பு, ஒக் 30
ஐ.நா மனித உரிமைகள் சபைக்கான 14 புதிய உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்வதற்காக நேற்று முன் தினம் ஐ.நா பொதுச் சபையில் நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், அமெரிக்கா, பிரிட்டன், சீனா உள்ளிட்ட நாடுகள் வெற்றி பெற்றுள்ளன.

ஐ.நா மனித உரிமைகள் சபையின் 47 உறுப்பு நாடுகளின் பதவிக் காலம் சுழற்சி முறையில் மூன்று ஆண்டுகளுக்கு ஒரு முறை காலாவதியாகும்.

இந்த வகையில், இந்த ஆண்டு டிசெம்பருடன் பதவிக்காலம் முடியவுள்ள 14 நாடுகளின் இடங்களுக்குப் பதிலாக புதிய உறுப்பு நாடுகளைத் தெரிவு செய்வதற்கான தேர்தல் நேற்று முன் தினம் ஐ.நா பொதுச் சபையில் இடம்பெற்றது.

இதில், பிரேசில், சீனா, குறோசியா, கியூபா, எகிப்து, ஹங்கேரி, ஜப்பான், ருவான்டா, ஈராக், சவூதி அரேபியா, துனீசியா, தென்னாபிரிக்கா, பிரிட்டன், அமெரிக்கா ஆகிய நாடுகள் வெற்றி பெற்று 2017 ஜனவரி தொடக்கம், அடுத்த மூன்று ஆண்டுகளுக்கான உறுப்புரிமையைப் பெற்றுள்ளன.

அமெரிக்கா, பிரிட்டன், சீனா, கியூபா உள்ளிட்ட நாடுகள் ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு மீண்டும் தெரிவாகியுள்ளன. எனினும், ரஷ்யா மீண்டும் போட்டியிட்ட போதிலும், தோல்வியைத் தழுவியது.

மனித உரிமை மீறல்களில் ஈடுபடும் ரஷ்யா, சீனா, கியூபா, ஈராக், எகிப்து, ருவாண்டா, மலேசியா ஆகிய நாடுகளை ஐ.நா மனித உரிமைகள் சபைக்குத் தெரிவு செய்யக் கூடாது என்று மனித உரிமை அமைப்புகள் பரப்புரை செய்து வந்தன.

கிழக்கு ஐரோப்பிய பிரிவில், போட்டியிட்ட ரஷ்யா, 112 வாக்குகளைப் பெற்றுத் தோல்வியடைந்தது. ஹங்கேரி 144 வாக்குகளையும், குரோசியா 114 வாக்குகளையும் பெற்று வெற்றி பெற்றன.

2006ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதல் முறையாக ஐ.நா மனித உரிமைகள் சபையின் உறுப்புரிமையை ரஷ்யா அடுத்த ஆண்டு இழக்கவுள்ளது. (தி)

# இலங்கையர் மதுரையில் கைது

போலி ஆவணங்களைப் பயன்படுத்தி இந்தியாவில் இருந்து இலங்கைக்கு வர முயற்சித்த இலங்கையர் ஒருவர், இந்தியாவின் மதுரையில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார் என இந்திய செய்திகள் தெரிவித்தன.

கைது செய்யப்பட்டவரிடம் போலி ஆவணங்களைப் பயன்படுத்தித் தயாரிக்கப்பட்ட இந்தியக் கடவுச் சீட்டு இருந்துள்ளது. மிஹின் லங்கா விமானத்தில் இலங்கைக்குப் பயணிக்க முயற்சித்தபோதே குடிவரவு அதிகாரிகளால் இவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் இலங்கைத் தமிழ் பேசியதை அறிந்த சுங்கத் துறையினர் சந்தேகங்கொண்டு விசாரித்த போதே அவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவர் இந்தியப் பெண் ஒருவரைத் திருமணம் செய்து இந்தியாவில் வாழ்வதாக ஆரம்பக்கட்ட விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது. 38 வயதுடைய ஸ்ரீதயா என்ற குறித்த இலங்கையர் 2008 ஆம் ஆண்டு இந்தியாவுக்குச் சென்று அவரது சகோதரியின் வீட்டில் வசித்து வந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (தி)

# மனித உரிமை மீறல்கள் அமெ. அதிக அக்கறை

## இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி தெரிவிப்பு

வொஷிங்டன், ஒக் 30
அவசரமான- மோசமான மனித உரிமை மீறல்கள் குறித்து அனைத்துலக சமூகத்துடன் இணைந்து பணியாற்றப் போவதாகவும், ஐ.நா மனித உரிமைகள் சபையை வலுப்படுத்தப் போவதாகவும் அமெரிக்கா தெரிவித்துள்ளது.



ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு அமெரிக்கா மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளமை தொடர்பாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் ஜோன் கெரி அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

அந்த அறிக்கையில் அவர், ஐ.நா மனித உரிமைகள் சபைக்கு அமெரிக்காவை மீண்டும் தெரிவு செய்தமைக்காக ஐ.நா பொதுச்சபைக்கு நன்றியைத் தெரிவித்துள்ளார்.

2009ஆம் ஆண்டு ஐ.நா மனித உரிமைகள் சபையில் அமெரிக்கா இணைந்து கொண்ட பின்னர், சிரியா, வடகொரியா, புரூண்டி தொடர்பான விசாரணை ஆணைக் குழுக்கள் நியமிக்கப்பட்டதுடன், இலங்கை, ஈரான், பர்மா தொடர்பாக குறிப்பிடத்தக்க தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன என்பதையும் அவர் நினைவுபடுத்தியுள்ளார். அதேவேளை, உலகம் முழுவதிலும் மனித உரிமைகளை ஊக்குவிக்க அமெரிக்கா தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்கும் என்று ஜெனிவாவில் உள்ள ஐ.நாவுக்கான அமெரிக்கத் தூதுவர் கெய்த் ஹாப்பர் தெரிவித்துள்ளார். (த-4)

# இந்திய நாடாளுமன்றில் அகதிகள் புகலிடச் சட்டம்

## குளிர்காலக் கூட்டத்தொடரில் முன்வைப்பதற்கு நடவடிக்கை

புதுடில்லி, ஒக் 30
அகதிகளுக்குப் புகலிடம் அளிப்பது தொடர்பான சட்டவரைவு இந்திய நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடரில் முன்வைக்கப்படும் என்று புதுடில்லித் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அகதிகள் சட்டவரைவு, 2015ஆம் ஆண்டு காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் சசிதாரூரால், தனிநபர் பிரேரணையாக முன்வைக்கப்பட்டது. இந்தச் சட்டவரைவு எதிர்வரும் நவம்பர் 16ஆம் திகதி ஆரம்பமாகவுள்ள இந்திய நாடாளுமன்றத்தின் குளிர்காலக் கூட்டத்தொடரில் விவாதத்துக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

அகதிகள் மற்றும் புகலிடம் தேடி வருவோரை ஒரு பொருத்தமான சட்ட வரையறைகளுக்குள் காத்திரமான முறையில் பாதுகாப்பதை நோக்காகக் கொண்டு இந்தச் சட்டவரைவு கொண்டு வரப்பட்டுள்ளது.

பெருமளவு அகதிகளை கொண்டுள்ள இந்தியா, அடைக்கலம் கோருவோர் பிரச்சினை தொடர்பான ஒரு தெளிவான சட்டத்தைக் கொண்டிருக்கவில்லை.

இதனைக் கருத்தில் கொண்டு, புதிதாகக் கொண்டு வரப்படவுள்ள சட்டவரைவின் கீழ், அடைக்கலம் கோருவோரின் விண்ணப்பங்களை பரிசீலிப்பதற்கான ஆணைக் குழு ஒன்று அமைக்கப்படும். இதன் கீழ் தலைமை ஆணையாளர் மற்றும் ஆறுக்கும் குறையாத ஆணையாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

2015ஆம் ஆண்டில் இந்தியாவில் 2,01,281 அகதிகளும், 6480 புகலிடக் கோரிக்கையாளர்களும் தங்கியிருப்பதாக அகதிகளுக்கான ஐ.நா அமைப்பு தெரிவித்திருந்தது.

தெற்காசியாவில், அதிகளவு அகதிகளைக் கொண்ட நாடுகளில் ஒன்றாக விளங்கும் இந்தியாவில் இலங்கை, திபெத், பங்களாதேஷ், ஆப்கானிஸ்தான் அகதிகள் அதிகளவில் வாழ்கின்றனர். இந்தியாவில் முறைசார் அகதிக் கொள்கை இதுவரை இல்லாத நிலையில், அகதிகளின் விண்ணப்பத்தின் அடிப்படையில் அடைக்கலம் வழங்க இந்திய அரசு முடிவு செய்துள்ளது. (தி)

# தரம் 2

## மாணவர்களுக்கான

## புதிய வெளியீடு




**உள்ளே...**

**பாடத்திட்டத்துக்கு அமைவாக**

*செயற்பாடு ரீதியான பயிற்சிகள்.
*எழுதுவோம், வாசிப்போம்.
*அடிப்படைச் சுற்றாடல் பயிற்சிகள்.
*உருவங்களை இனங்காண்போம்.
* சிறுவர்களுக்கான கதை.
* சொற்களை உருவாக்குவோம்.
*பாடல்கள்.
*அடிப்படைக் கணிதப் பயிற்சிகள்.
*நிறங்களை இனங்காண்போம்.
* அடிப்படை ஆங்கிலப் பயிற்சிகள்

**மற்றும் பல அம்சங்களுடன்**

**நவம்பர் 01 முதல் வெளிவருகின்றது.**

பிரதிகளைப் பெற்றுக்கொள்ள :- வடமாகாணம் : 0776569617, கிழக்கு மாகாணம்: 0718724057, கொழும்பு: 0718628372, மலையகம்: 0718724056, தலைமை அலுவலகம்: 0716850005 மற்றும் அனைத்து பத்திரிகை முகவர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்.

இந்த வாரம் புதுவிதியில்... விலை - 20/ = மட்டுமே

# பல்கலை மாணவர் கொலை:



## சுட்டது தமிழ் பொலிஸா?

## எந்தத் துப்பாக்கி குண்டை உமிழ்ந்தது?

## திட்டமிட்டகொலை!

## இருமுனையில் துப்பாக்கிச் சூடு!

இதுவரை வெளிவராத உண்மைகளை அலசும் விரிவான புலனாய்வுக் கட்டுரை

# ஊடகத்துறையில் ஆர்வமுள்ளோருக்கு

**புதுவிதியில் இணைய வாய்ப்பு!**

சமூக, கலை, இலக்கிய, அரசியல் விடயங்களில் ஈடுபாடும், தேடலும், எழுத முடியும் என்ற தன்னம்பிக்கையும் உடைய இளையோருக்கு புதுவிதியில் பணியாற்ற வாய்ப்பு


puthuvithi@gmail.com

## மரண அறிவித்தல்கள்

### சரவணமுத்துஉடையார் செல்வத்துரை

(நயினாதீவு)

(மேனாள் கொத்தணி அதிபர்- புங்குடுதீவு மகாவித்தியாலயம். யாழ்.கனகரெத்தினம் ம.ம.வி)



நயினாதீவைப் பிறப்பிடமாகவும், நல்லூரை வசிப்பிடமாகவும், கனடாவை வதிவிடமாகவும் கொண்ட பன்மொழிப் புலவர் வித்துவான் சரவணமுத்து செல்வத்துரை 27.10.2016 வியாழக்கிழமை கனடாவில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து உடையார்- முத்துப்பிள்ளை (நயினாதீவு) தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், காலஞ்சென்றவர்களான குணமாலை நாகலிங்கம் - பாக்கியம் (புங்குடுதீவு) தம்பதிகளின் மூத்த மருமகனும், காலஞ்சென்ற மீனாம்பாளின் அன்புக் கணவரும், கலாயினி, கலாதரன், பிரபாலினி, கிருபாலினி, பிரபாகரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், சிவகுமார், பத்மினி, சிவாசீலன், கிருபாகரன், சிவசங்கரி ஆகியோரின் அன்பு மாமனாரும், ஆதித்தியன், சாயகி, சேயோன், ஆத்மன், அர்ச்சயன், திலீபன், சரவணன், ஆதிரை, ஆர்த்தி, மாதுமை ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான காசிலிங்கம், சின்னம்மா, சிவக்கொழுந்து, தையலம்மை, விசாலாட்சி, குமாரவேலு, புவனசுந்தரம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கனடாவில் நாளை (31.10.2016) திங்கட்கிழமை நடைபெறுவதுடன் அவர் வாழ்ந்து சிறப்பித்த நல்லூர் இல்லத்தில் முற்பகல் 10 மணி தொடக்கம் நண்பகல் 12 மணிவரை அவரின் ஆத்மா சாந்தி அடையப் பிரார்த்தனையும் திருவுருவப் படத்துக்கு உற்றார், உறவினர், அயலவர்கள், நண்பர்களால் புஸ்பாஞ்சலியும் செலுத்தப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

131/1, பருத்தித்துறை வீதி,
நல்லூர்.

(C /23043) (11,16,21)

தகவல்:
குடும்பத்தினர்.
077 100 0376

**0019 05948 9310, 0014 16702 6792**



அன்னையின் மடியில்
05.04.1943

ஆண்டவன் அடியில்
28.10.2016

### திருமதி ரதிதேவி சின்னத்தம்பி

நெல்லியடியைப் பிறப்பிடமாகவும் வாழ்விடமாகவும் கொழும்பை தற்காலிக வதிவிடமாகவும் கொண்டிருந்த திருமதி ரதிதேவி சின்னத்தம்பி 28.10.2016 வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான மகேசன் - பொன்னம்மா தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான பொன்னையா - சின்னாச்சி தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற பொன்னையா சின்னத்தம்பி (Ps Master) அவர்களின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற்வர்களான சிவானந்தம், ரஞ்சிதமலர், நித்தியானந்தம் மற்றும் சர்வானந்தம் (ஜேர்மனி) ஆகியோரின் அருமைச் சகோதரியும் சுகுமாரன் (லண்டன்), உதயகுமாரன் (சிங்கப்பூர்), வாசுகி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும் எழிலரசி, Dr.நிவேதா, கலாநிதி ரவீந்திரன் ஆகியோரின் மாமியாரும் நிருஷ், நிரோன்,, சஞ்சீவ், கோகுல் ஆகியோரின் அன்பு அப்பம்மாவும் யோஜித், ஸோபிதா ஆகியோரின் ஆசை அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் திருவுடல் அஞ்சலிக்காக இன்று (30.10.2016) ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிமுதல் Mahinda Florists (591 Galle Road,Mt. Lavinia)இல் வைக்கப்பட்டு மதியம் 12.00 மணியளவில் இறுதிக் கிரியைகள், நடைபெற்று பி.ப 2 மணியளவில் கல்கிசை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

**077 071 4401, 011 236 6863**

## மரண அறிவித்தல்கள்

### சின்னத்தம்பி தர்மலிங்கம்



நீர்வேலியைப் பிறப்பிடமாகவும் ஏழாலை மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி தர்மலிங்கம் (ஆசையண்ணை) 28.10.2016 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - வள்ளிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ் சென்றவர்களான அப்புத்துரை - நாகம்மா தம்பதியரின் மருமகனும் காலஞ்சென்ற நாகேஸ்வரியின் அன்புக் கணவரும் லிங்கேஸ்வரன் (கனடா), லோகேஸ்வரன் (பிரான்ஸ்), தனிஸ்வரன், ராஜி(கனடா), ரதினி(பிரான்ஸ்), ரஜிதா, துயிர்தா ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்ற சிவராசா(கனடா) மற்றும் யோகேஸ்வரன் (பிரான்ஸ்), பாசமலர்(கனடா), சுகிர்தா (பிரான்ஸ்), நிரூஜா ஆகியோரின் பாசமிகு மாமனாரும் நிதுஷன், நிருசா, சுசோபன், சுஷாணன், சுஸ்ரினா, சதுர்ஷன், அனுருஷன், அனன்ஷிகா ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.10.2016) ஞாயிற்றுக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஏழாலை சோன்கலை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை மத்தி,
ஏழாலை

(ஜே/ 5740)(12,17,21)

தகவல்:
குடும்பத்தினர்.

### திருமதி பாமதி தர்மரத்தினம்

(உபதபால் அதிபர்)



அச்சுவேலி, உடையார் வளவு இடைக்காட்டைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பாமதி தர்மரத்தினம் 2016.10.27 வியாழக்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் அருளானந்தம் காலஞ்சென்ற பொன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தசாமி - சிவக்கொழுந்து தம்பதியரின் பாசமிகு மருமகளும் தர்மரத்தினம் அவர்களின் அன்பு மனைவியும் சதுர்சிகாவின் பாசமிகு தாயாரும் அருள்ரூபன், கருணா, சுகுணா(லண்டன்) ஆகியோரின் பர்சமிகு சகோதரியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(30.10.2016) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று மு.ப 11.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைகளிற்காக இடைக்காடு சாமித்திடல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

உடையார் வளவு,
இடைக்காடு,
அச்சுவேலி.

(J 5739), (14,17)

தகவல்:
குடும்பத்தினர்.

### சரவணமுத்து செல்வரத்தினம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சரவணமுத்து செல்வரத்தினம் 28.10.2016 வெள்ளிக்கிழமை கால மானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சரவணமுத்து - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகசபை - சின்னம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், பரமேஸ்வரியின் அன்புக் கணவரும், சிவபாலன் (ஜேர்மனி), குலசேகரம் (கனடா), காலஞ்சென்ற சுகந்தினி மற்றும் உதயகுமாரன் (முன்னாள் பிரதேசசபை உறுப்பினர்- வலி.தெற்கு - சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஞான அருட்கரசி (ஜேர்மனி), தானியா (கனடா), சுகந்தினி (ஆசிரியர் - யா/உடுவில் மான்ஸ் த.க. பாட சாலை) ஆகியோரின் பாசமிகு மாமனும், காலஞ்சென்ற ஆயிலியத்தின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்றவர்களான சங்கரலிங்கம், கனகரத்தினம், சிவராசா, கைலாயநாதன், சரவணமுத்து ஆகியோரின் மைத்துனரும், பாலமயூரன், ராம்கி, வேனியா, அபிரா, அஸ்ரா, விக்ரோரியா, சம்பத்மேனன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 01.11.2016 செவ்வாய்க்கிழமை காலை 9 மணியளவில் அவரது இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பூவோடை இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சிவசக்தி இல்லம்,
இணுவில் கிழக்கு,
இணுவில்.

தகவல்:
செ.உதயகுமாரன்
(மகன்)

**077 046 0150**

(J /5738) (11,18,21)

# அம்பாறையில் திடீரென முளைத்தார் புத்தர்

## பிரதேச மக்கள் கடும் எதிர்ப்பு

அம்பாறை, ஒக். 30

அம்பாறை மாவட்டம் மாணிக்கமடு பகுதியில் புத்தர் சிலையொன்று நேற்றுத் திடீரென்று வைக்கப்பட்டுள்ளது. அந்தப் பிரதேசத்தைச் சேர்ந்த தமிழ், முஸ்லிம் மக்கள் அதற்குக் கடும் கண்டனங்களை வெளியிட்டனர்.

தமிழ் மக்கள் வாழும், இறக்காமம் பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மாணிக்கமடு பகுதியிலுள்ள மாயக்கல்லி மலையில் இந்த புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளது.

அம்பாறையிலிருந்து நேற்றுப் பௌத்த மத குருமார்களுடன் பெருமளவான வாகனங்களில் சென்றவர்களே அந்தப் பகுதியில் புத்தர் சிலையை வைத்து விட்டுச் சென்றுள்ளனர். அந்தப் பிரதேசத்தில் பௌத்தர்கள் எவரும் வசிப்பதில்லை.

புதிதாக புத்தர் சிலை வைக்கப்பட்டுள்ளமைக்கு தாம் எதிர்ப்புத் தெரிவித்தோம் என்றும், இதன்போது தங்களுக்கு இலங்கையின் எந்தப் பகுதியிலும் புத்தர் சிலைகளை நிறுவுவதற்கு அதிகாரம் உள்ளது என, சிலையை வைத்தவர்கள் கூறினர் என்றும் மாணிக்கமடு மக்கள் தெரிவிக்கின்றனர்.

தமிழ் மற்றும் முஸ்லிம் கிராமங்களின் எல்லைகளை ஆக்கிரமிப்புச் செய்யும் வகையில், இவ்வாறான நடவடிக்கைகள் ஏற்கனவே அம்பாறை மாவட்டத்தின் பல இடங்களிலும் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில் இறக்காமம் பிரதேச செயலாளர் பிரிவிக்குட்பட்ட பகுதியில் புதிதாக புத்தர் சிலை நிறுவப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

இது தொடர்பில் அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் நாடாளுமன்ற மற்றும் மாகாண சபை உறுப்பினர்கள் உடனடியாக நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்று அந்தப் பகுதி மக்கள் கோரிக்கை விடுத்தனர். (ற-4,49)

# மானிப்பாய் வைத்தியசாலை காணி கொள்வனவுக்கு நிதி சேகரிப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30

மானிப்பாய் பிரதேச வைத்தியசாலையின் உட்கட்டுமான அபிவிருத்தி மற்றும் எதிர்கால வைத்தியசாலை அகலிப்புக்காக மூன்றுபரப்புக் காணி பொதுமக்கள் வழங்கும் 18 லட்சம் ரூபா நிதி மூலம் கொள்வனவு செய்யப்படவுள்ளது.

இதுவரை வலி. தென்மேற்கு ஆனைக்கோட்டை உபஅலுவலகப் பிரிவுக்கு உட்பட்ட மக்கள் 10 லட்சம் ரூபாவை இந்தத் திட்டத்துக்கு வழங்கியுள்ளனர் என்று நோயாளர் நலன்புரி சங்க செயலாளர் இ.மனோகரன் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

வைத்தியசாலையில் அபிவிருத்திக்காகவும் நோயாளர் சேவைக்காகவும் மருத்துவர் ஏ.காந்தநேசன் தலைமையில் முழுசேவை இடம்பெறுகின்றது.

இந்தச் சேவையை வலி.தென்மேற்கில் மேலும் மெருகூட்டவேண்டிய அவசர அவசிய தேவை எழுந்துள்ளது. கடந்த காலங்களில் 100க்கும் உட்பட்ட மக்களே மருத்துவ சேவையைப் பெற்றனர்.

தற்போது மருத்துவர் ஏ.காந்தநேசன் இவ்வைத்தியசாலையைப் பொறுப்பேற்றது முதல் தினமும் 450 முதல் 550 க்கும் மேற்பட்ட மக்கள் குடாநாட்டின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து வந்து சேவை பெறுகின்றனர்.

இவ்வாறு அதிகரித்த சேவைக்கு ஏற்ப மக்கள் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்கான கட்டட வசதிகள், மருத்துவர் தங்குமிட கட்டடங்கள் வெளிநோயாளர் பிரிவுக்கான தேவைகள் என விஸ்தரிப்பு என்பது முக்கியமானதாக உள்ளது.

இந்த அவசிய தேவைக்காக எமது நோயாளர் நலன்புரி சங்க பணியாளர்கள் 20 பேர் வீதிகளில் இறங்கி மக்களிடம் நிதி கோருகின்றனர். வலி.தென்மேற்கு மக்கள் மிகுதி 8 லட்சம் ரூபாவுக்கான நிதியை வழங்க வேண்டும்.- என்றார். (ற-50)

# மங்கள சமரவீரவை பதவி நீக்க வேண்டும்

## அஸ்வர் கூறுகின்றார்

கொழும்பு, ஒக்.30

முஸ்லிம் விரோத சக்திகளுக்குப் பக்கபலமாக செயற்படும் அயலுறவு அமைச்சர் மங்கள சமர வீரவை அமைச்சுப் பதவியில் இருந்து நீக்கவேண்டும் என முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் செயலதிபர் ஏ.எச்.எம். அஸ்வர் தெரிவித்துள்ளார்.

பைத்துல் முகத்தஸ் அல் அக்ஸா விவகாரம் தொடர்பாக அரசின் நிலைப்பாட்டை எதிர்த்து நேற்றுமுன்தினம் கொள்ளுப்பிட்டி பள்ளிவாசலுக்கு முன்னால் ஜும்ஆ தொழுகைக்குப் பின்னர் நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

முஸ்லிம் விரோத சக்திகளுக்குப் பக்கபலமாக தோள் கொடுக்கின்ற மங்கள சமரவீர தொடர்பில் ஜனாதிபதி எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஜனாதிபதி மங்கள சமரவீரவை அயலுறவு அமைச்சுப்பதவி யில் இருந்து நீக்க வேண்டும்.

அரசு இவ்வாறு முஸ்லிம்களுக்கு எதிரான நடவடிக்கைகளைத் தொடர்ந்தால் உலக முஸ்லிம் நாடு களின் உதவிகளை இழக்க வேண்டிய அபாய நிலை ஏற்படும் - என்றார். (ற)



தீபாவளிப் பண்டிகையான நேற்று நாடு முழுவதும் இந்து ஆலயங்களில் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. புத்தாடை அணிந்து பலரும் வழிபாடுகளில் ஈடுபட்டனர். ஹற்றனில் ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமி ஆலயத்தின் பிரதான குரு ஸ்ரீ பாலசுப்பிரமணிய குருக்கள் தலைமையில் தீபாவளி சமய வழிபாடுகள் நடைபெற்றன. (த-4)

கட்டடம் கட்டும் ஸ்தாபனத்திற்கு வேலையாள்கள் தேவை.

விபரங்கட்கு
0711642180,
0777563930,
0711642944,
0777409953

**Tourist / Business Visit Visa / Settlement / Refusal**

வெள்ளவத்தையில் சகல நாடுகளுக்குமான
Online Visa Applications

IELTS A1 B1 Life Skills Classes

UK, CANADA, AUSTRALIA & USA

Travel Itinerary,
Translation,
Travel Insurance,
Valuation,
Dual Citizenship
Applications
ஆகியன செய்து தரப்படும்.

**JANA COMPUTER TECH**
No. 385 -1/1, Galle Road, Colombo - 06.
Tel: 0773 480 494, 2 360494 | E-mail: visaonline5@gmail.com

**ஐரோப்பிய நாடுகளிற்கான (3 வருட) குடியுரிமை விசா ஆலோசனைகள்**

வங்கிப் பணவைப்புகள்

**Racas Travels & Tours (Pvt) Ltd.**

தொடர்பு: 0770 722 327

**எழுதுவினைஞர்கள் தேவை**

யாழ்ப்பாணம், வவுனியா பிரதேசத்தவர்களில் எமது காரியாலயத்துக்கு எழுதுவினைஞர்கள் தேவை. (Female ) பெண்கள் தேவை. சம்பளம் 15,000/= + பயிற்சி வழங்கப்படும். சிங்களம் பேசக்கூடியவர்கள் விசேடம்.

வவுனியா -077 600 0507,
யாழ்ப்பாணம் - 077 505 2239

**விஷேட பல் வைத்திய சேவை**

- பல் முக சீராக்கல் (Consultant Orthodontist)
- முக சத்திரசிகிச்சை (Consultant Facio Maxillary Surgeon)

மேற்கொள்ளுவதற்கு விசேட வைத்திய நிபுணர்கள் வருகை தருகின்றனர்

- மிதப்புப் பற்களைச் சீராக்குதல் (கிளிப் மூலம்)
- ஒழுங்கற்ற பற்களைச் சீராக்குதல்
- நிரந்தரமாக பற்களைப் பொருத்துதல் (Crown & Bridges, Implants)
- வேர்முறை சிகிச்சை (Root Canal Filling)
- நவீன முறையில் அனைத்துவிதமான பற்சிகிச்சைகள்
- பற்களை வெண்மையாக்குதல் (Vital Bleeching)

**சன்றைஸ் மெடி கிளினிக்**
388, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 559 8006 (லதா)

**றோயல் மெடிக்கல் சென்ரர்**
454, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொடர்பு: 077 654 4731 (தர்சினி)

**வாழ்க்கையைக் கட்டியெழுப்பும் இடம்**

# British Way® English Academy

எந்த மாற்று வழியுமில்லை British Way

இலங்கையின் முதலாவது ஆங்கிலத்துக்கான பயிற்சிப்பட்டறை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நிட்டம்புவ 033 302 19 19 | காலி 033 302 11 11 | மாத்தறை 033 302 12 12 | அநுராதபுரம் 033 302 13 13 | நுகேகொட 033 302 14 14 | கம்பஹா 033 302 15 15 |
| யாழ்ப்பாணம் 033 33 40 600 | நீர்கொழும்பு 033 302 16 16 | கண்டி 033 302 17 17 | குருநாகல் 033 302 18 18 | கிரிபத்கொட 077 325 77 67 | இரத்தினபுரி 0333 555 315 |

DAkkS Deutsche Akkreditierungsstelle D-ZM-18590-01-00
ISO 9001:2008 CERTIFIED

இவ் இரண்டு மாத காலப் பயிற்சியின் பின்னர் 180 நாடுகளில் அங்கீகரிக்கப்பட்ட ETS TOEFL Junior மற்றும் ETS TOEIC USA தரத்திலான சர்வதேச சான்றிதழ்கள் வழங்கப்படும்

**இரண்டு மாத காலப் பயிற்சி** 02 Months

காலை 8.00 மணி தொடக்கம் பிற்பகல் 4.00 மணி வரை திங்கள் முதல் வெள்ளி வரை இரண்டு மாத காலப் பயிற்சி வழங்கப்படும்.

இப்பயிற்சியானது பிரித்தானியா மற்றும் அனேக நாடுகளில் கையாளும் விதத்தில் இரண்டு மாதத்திற்குள் ஆங்கில அறிவே இல்லாத ஒருவருக்கு கற்பிக்கும் முறைமைக்கேற்ப இலங்கையிலும் விசேடமாக யாழ் மண்ணிலும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இப்பயிற்சியின் மூலம் 100% ஆங்கிலத்தை சரளமாக பேச வைக்க முடியுமென இக்கல்வியகம் உத்தரவாதம் அளிக்கின்றது.

07, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**வார இறுதி வகுப்புகள்** 04 Months

காலை 8.30 முதல் 4.00 மணி வரை பிரதி ஞாயிற்றுக்கிழமைகளில்

வார இறுதி வகுப்புகள் ஞாயிறு காலை 8.30 மணி தொடக்கம் மாலை 4.00 மணி வரை நான்கு மாத காலம் நடைபெறும். தொழில் செய்பவர்களுக்கு இப்பயிற்சிநெறி மிகவும் உகந்ததாகும்.

13, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**KIDS' Class** Grade 1-10

சனிக்கிழமைகளில் காலை 8.30 முதல் 12.30 வரையும் மாலை 1.00 முதல் 4.00 வரையும்

சிறுவர்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ள இந்த பாடநெறியானது மாணவர்களின் ஆங்கிலம் தொடர்பாக காணப்படும் பயத்தை நீக்கி அவர்களின் சிறந்த எதிர்காலத்திற்கான சரியான வழியை காண்பிப்பதற்காக விசேடமாக தயாரிக்கப்பட்டுள்ளது

19, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

**IELTS** சனிக்கிழமைகளில் மாலை 1.30 முதல் 5.30 வரை

05, November, 2016 முன் உங்கள் பதிவுகளை மேற்கொள்ளவும்

British Way® English Academy

Contact (Jaffna Branch) : 033 33 40 600

நிட்டம்புவ | Tel: 033 302 19 19 | Fax: 033 2297912 | E-mail: info.britishway@gmail.com | Web: www.britishway.lk

No.15, Kannathiddy, Jaffna. (In front of the Shivan Kovil)

# 232 மக்களை கொன்று ஐ.எஸ். வெறியாட்டம்



பக்தாத், ஒக். 30

மோசூல் நகரை மீட்பதற்காக நடைபெற்றுவரும் போரில் பெரும் பின்னடைவைச் சந்தித்துள்ள ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு 232 பொதுமக்களை கொன்றுகுவித்துள்ளதாக ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பின் பிடியிலிருந்த ஈராக்கின் இரண்டாவது பெரிய நகரான மோசூலைக் கைப்பற்றுவதற்காக ஈராக் படை பெரும் போராட்டத்தை முன்னெடுத்து வருகிறது. ஈராக்குக்கு ஆதரவாக அமெரிக்காவும், துருக்கியும் களத்தில் உள்ளன. போர் ஆரம்பித்த தினத்திலிருந்து முதல் 10 நாள்களாக முன்னெடுக்கப்பட்ட போரில் 900 ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகள் கொல்லப்பட்டதாக அமெரிக்கா அறிக்கை சமர்ப் பித்தது. இந்த நிலையில் தனது பின்னடைவைச் சமாளிக்கும் விதத்திலும், ஈராக் படையின் கவனத்தை திசைதிருப்பும் விதத்திலும் 232 பொதுமக்களை ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு சுட்டுக்கொன்றதாக ஈராக் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன. இவர்களில் 190 பேர் ஈராக்கைச் சேர்ந்தவர்கள், அவர்களில் பலர் முன்னாள் இராணுவச் சிப்பாய்கள் என மேலும் தெரிவிக்கப்பட்டது. (ம)



## மெக்காவை குறிவைக்கும் ஹௌதி கிளர்ச்சிக் குழு

ஏமன் அரசுக்கு எதிரான கிளர்ச்சிக் குழுவான ஹௌதி, இஸ்லாமியர்களின் புனித நகரான மெக்காவை குறிவைத்து ஏவுகணைத் தாக்குதல் நடத்தியது என சவுதி குற்றஞ்சாட்டியுள்ளது.

ஏமன் அரசுக்கு எதிராக தோற்றம்பெற்றுள்ள மிகப் பெரிய ஆயுதக் குழுவாக ஹௌதி கருதப்படுகிறது. இதனால் குறித்த ஆயுதக் குழுவுக்கு எதிராகவும் ஏமனுக்கு ஆதரவாகவும் சவுதி அரேபியா தலைமையிலான கூட்டுப் படைகள் கடந்த ஆண்டு மார்ச் மாதத்திலிருந்து தாக்குதல் நடத்தி வருகின்றன. இந்த நிலையில், சவுதி அரேபியா நாட்டில் உள்ள இஸ்லாமியர்களின் புனித நகரமான மெக்காவை குறிவைத்து ஹௌதி ஆயுதக் குழுவால் நேற்றுமுன்தினம் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் அதை இடைமறித்து தாம் அழித்ததாகவும் சவுதி தெரிவித்தது. அவர்கள் தமது பிரதான இலக்காக மெக்காவைக் கொண்டுள்ளனர் என்றும் சவுதி மேலும் தெரிவித்தது. (ம)




## பிலிப்பைன்ஸில்
## நகர சபைத் தலைவர் சுட்டுக் கொலை போதைப்பொருள் கடத்தல் குற்றச்சாட்டில்

பிலிப்பைன்ஸின் மின்டானாவோ மாகாணத்தின் அம்பட்டுவான் நகரசபைத் தலைவர் சம்சுதீன் போதைப்பொருளைக் கடத்தினார் என்ற குற்றச்சாட்டில் சுட்டுக்கொல்லப்பட்டார்.

போதைப்பொருளுக்கு எதிராக பிலிப்பைன்ஸின் ஜனாதிபதி றொட்றிக்கோ டுடேர்தே கடும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். போதைப் பொருளுடன் தொடர்புபட்டவர்களுக்கு சாவுத் தண்டனையே தீர்ப்பாகவுள்ளது. 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் இதுவரை கொல்லப்பட்டனர். 7 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் சரணடைந்துள்ளனர். 30 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். 3 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் பொலிஸாரினால் தேடப்பட்டு வருகின்றனர். இந்த நிலையில் போதைப்பொருளைக் கடத்திய குற்றச்சாட்டில் மின்டானாவோ மாகாணத்தின் அம்பட்டுவான் நகரசபைத் தலைவர் சம்சுதீனுக்கு கடந்த வியாழக்கிழமை சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டுள்ளது. அவருடன் வேறு ஒன்பது பேருக்கும் சாவுத்தண்டனை நிறைவேற்றப்பட்டது. (ம)

## அமெரிக்க விமானத்தில் பற்றியது திடீர் தீ 170 பயணிகள் அதிர்ஷ்டவசமாக தப்பினர்

அமெரிக்காவின் சிக்காக்கோ நகரிலிருந்து மியாமி நோக்கிப் புறப்படவிருந்த அமெரிக்க ஏயார்லைன்ஸ் நிறுவனத்துக்குச் சொந்தமான போயிங் 767 ரக விமானத்தில் நேற்றுக் காலை தீ விபத்து ஏற்பட்டது. விபத்தை விமானி முன்கூட்டியே கணித்தமையால் பெரும் சேதம் தவிர்க்கப்பட்டது என அமெரிக்கன் ஏயார்லைன்ஸ் தெரிவித்தது.

161 பயணிகள் மற்றும் 9 ஊழியர்கள் என மொத்தம் 170 பேருடன் விமானம் புறப்படத் தயாரான வேளை திடீரென விமானத்தில் இருந்து புகை வெளிவந்தது. இதை அவதானித்த விமானி உடனடியாக விமானத்தை நிறுத்தி, பயணிகளை உடனடியாக வெளியேறுமாறு உத்தரவிட்டார். தீயணைப்பு வாகனங்களின் உதவியுடன் தீ கட்டுக்குள் கொண்டுவரப்பட்டது.

உயிரிழப்பு ஏற்படவில்லையாயினும், மக்கள் விரைவாக வெளியேறியமையால் ஏற்பட்ட நெரிசல் காரணமாக 20 பயணிகள் இலேசான காயமடைந்தனர் என அமெரிக்கன் ஏயார் லைன்ஸ் மேலும் தெரிவித்தது. (ம)



# லிபியாவில் படகு விபத்து; 90 பேரைக் காணவில்லை



லிபியாவின் மேற்கு கடல் பகுதியில், அகதிகள் படகொன்று மூழ்கியதில், 90 இக்கும் மேற்பட்டோரைக் காணவில்லை என கடற்கரையோரப் பாதுகாப்புப் பிரிவு தெரிவித்தது.

லிபியத் தலைநகர் திரிபோலிக்கு 41 கிலோமீற்றர்கள் கிழக்காக நேற்றுமுன்தினம் இந்த விபத்து நடைபெற்றுள்ளது. நூற்றுக்கும் அதிகமானவர்கள் படகில் பயணித்தனர். அவர்களில் 19 பேர் உடனடியாக மீட்கப்பட்டார்கள். கிட்டத்தட்ட 90 பேரைக் காணவில்லை.

அவர்களைத் தேடும் பணிகள் துரிதமாக்கப்பட்டுள்ளன என கடற்கரையோரப் பாதுகாப்புப் பிரிவு மேலும் தெரிவித்தது.

படகின் ஒரு பகுதியில் அதிகமானோர் இருந்ததன் காரணமாக, அந்தப் பகுதியில் ஓட்டை ஏற்பட்டு, நீர் உள்ளே புகுந்துள்ளது என முதல்கட்ட விசாரணைகளின் அடிப்படையில் தெரியவந்தது. (ம)




# சிறப்புப் பூசைகளுடன் வடக்கில் தீபாவளி

தீபாவளிப் பண்டிகையை முன்னிட்டு வடக்கில் உள்ள ஆலயங்களில் சிறப்புப் பூசைகள் நடத்தப்பட்டன. புத்தாடை அணிந்து பூசை வழிபாடுகளில் அதிகமானோர் ஈடுபட்டதைக் காண முடிந்தது.
இந்துக்களின் மிகவும் முக்கியம் வாய்ந்த பண்டிகைகளில் ஒன்றான தீபத் திருநாளை உலகளாவிய ரீதியில் இந்துக்கள் நேற்றுக் கொண்டாடினர்.
முள்ளியவளை கல்யாண வேலவன் ஆலயம், ஒட்டுசுட்டான் தான்தோன்றி சிவன் கோயில், குமாரபுரம் கந்தசுவாமி ஆலயம், கொட்டுக் கிணற்றுப் பிள்ளையார் கோயில், முள்ளிவாய்க்கால் குளத்தடிப் பிள்ளையார், ஊற்றங்கரை சித்தி விநாயகர் மற்றும் காட்டு விநாயகர் ஆலயம் உள்ளிட்ட சகல ஆலயங்களிலும் மிகவும் சிறப்பாக தீபாவளி வழிபாடுகள் நடைபெற்றன.
இவை மாத்திரமன்றி யாழ். நல்லூர் கந்தசுவாமி கோயில், பெருமாள் கோயில், உள்ளிட்ட பல இடங்களிலுமுள்ள சிறு ஆலயங்களிலும் நேற்றுத் தீபாவளி சிறப்புப்பூசைகள் இடம்பெற்றன. அவற்றில் பெருமளவிலான மக்கள் கலந்து கொண்டனர்.(ற-4,7,8)

# மர நடுகை மாத ஆரம்ப நிகழ்வு

யாழ்ப்பாணம், ஒக்.30
வடக்கு மாகாண மர நடுகை மாதத்தின் தொடக்க நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை முற்பகல் 9 மணியளவில் கிளிநொச்சி இரணைமடுவிலுள்ள கோவிந்தன் கடைச்சந்தியில் நடைபெறவுள்ளது.
வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுக்கு வடமாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் முதன்மை விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார்.
அத்துடன் எதிர்வரும் 5 ஆம் திகதியிலிருந்து 11 ஆம் திகதி வரை வடமாகாண தாவர உற்பத்தியாளர்கள் மற்றும் விற்பனையாளர்கள் சங்கங்கள் பங்கேற்கும் மலர்க் கண்காட்சி நல்லூர் சங்கிலியன் பூங்காவில் தினமும் முற்பகல் 9 மணி முதல் இரவு 8 மணி வரை நடைபெறவுள்ளது.
(ற-8)

# பனம் கைப்பணி பயிற்சிக்கு பயிலுநர்கள் இணைப்பு

அச்சுவேலி, ஒக்.30
பனம் கைப்பணி கிராமங்களை உருவாக்கி பனம் கைப்பணிப் பயிற்சியை வழங்கும் திட்டத்தின் அடுத்த அணிக்கு பயிலுநர்கள் இணைத்துக் கொள்ளப்பட உள்ளனர்.
பனை அபிவிருத்திச்சபை வடக்கு, கிழக்கு மாகாணத்தில் உள்ள மாவட்டங்கள் தோறும் பனம் கைப்பணிக் கிராமங்களை உருவாக்கிச் சிறு சுவடுகள் உதவித் திட்டத்தின் கீழ் பனம் கைப்பணிப் பயிற்சியை வழங்குகின்றது. ஆறு மாதங்கள் கொண்ட இந்தப் பயிற்சி நெறியில் இணைந்து பயிற்சி பெறுபவர்களுக்கு மாதாந்தம் ஊக்குவிப்பு உதவித் தொகையாக ருபா 3 ஆயிரத்து 500 வழங்கப்படுகின்றது.
பனம் கைப்பணிக் கிராமங்கள் வடக்கு மாகாணத்தில் உள்ள ஐந்து மாவட்டங்களிலும் கிழக்கு மாகாணத்தில் உள்ள மூன்று மாவட்டங்களிலும் புத்தளம் மாவட்டத்திலுமாக மொத்தம் ஒன்பது மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ளன. கைப்பணிக் கிராமங்களில் செயற்படும் கைப்பணிப் பயிற்சி நிலையங்களில் பனையில் இருந்து பெறப்படும் மூலப் பொருள்களைக்கொண்டு கைப்பணிப்பயிற்சி, தொழில் முயற்சிக்கான பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. பயிற்சி பெறும் பயிலுநர்களுக்கு பயிற்சி பெறும் காலத்தில் மாதம் ஒன்றுக்கு 3 ஆயிரத்து 500 ரூபா ஊக்குவிப்பு உதவு தொகையாக வழங்கப்படுகின்றது. கடந்த மே மாதம் தொடங்கிய பயிற்சி நெறி இந்தமாதம் 30ஆம் திகதி நிறைவு பெறுவதால் அடுத்த அணி பயிற்சியில் இணைத்துக் கொள்ளப்படவுள்ளது. பயிற்சி நெறியில் இணைந்து கொள்ள விரும்புபவர்கள் பனை அபிவிருத்திச் சபையின் 021-222 2034 இலக்க தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மேலதிக விவரங் களை அறிந்து கொள்ளலாம்.– என்று பனை அபிவிருத்திச் சபையின் தலைவர் மருத்துவர் இ.சிவசங்கர் தெரிவித்தார்.
(ற-11)

# யூனியன் முகாமை விடுவிக்க அவகாசம் கோரும் ராணுவம்

## எப்போது தீர்வு கிடைக்கும் என காணி உரிமையாளர்கள் ஏக்கம்

அச்சுவேலி,ஒக்.30
அச்சுவேலி தெற்கில் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைமை காரியாலய வளாகம் மற்றும் அத்தோடு இணைந்த ஒன்பது தனியாருக்குச் சொந்தமான காணிகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருக்கும் இராணுவ முகாமை அகற்றி தனியாருக்குச் சொந்தமான காணியைத் திருப்பிக்கையளிப்பதற்குப் பாதுகாப்பு அமைச்சு காலம் குறிப்பிடாமல் நிபந்தனை விதித்துள்ளது.
இவ்வாறு பாதிக்கப்பட்ட காணி உரிமையாளர்கள் கவலை தெரிவித்தனர்.
பொருத்தமான காணி கிடைக்கும் வரை முகாம் அதே இடத்தில் செயற்படும் என்று பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது என்றும் அவர்கள் குறிப்பிட்டனர்.
அச்சுவேலி தெற்கு கிராம அலுவலர் பிரிவில் அச்சுவேலி பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைமை காரியாலய கட்டடத் தொகுதியை உள்ளடக்கி அதற்கு அருகில் அமைந்துள்ள தனியார் ஒன்பது பேருக்குச் சொந்தமான காணிகள் உள்ளடங்கலாக நான்கு ஏக்கர் நிலப்பரப்பில் அச்சுவேலி தெற்கு யூனியன் இராணுவ முகாம் அமைக்கப்பட்டுள்ளது. 1995ஆம் ஆண்டில் இருந்து இந்த இராணுவ முகாம் செயற்படுகின்றது.
அந்தக் காணிகளில் ஒன்றின் உரிமையாளரான ஓய்வுநிலை பொலிஸ் அதிகாரி இதுகுறித்துத் தெரிவித்ததாவது:
எமது வாழ்வாதாரத்துக்கான பயிர்ச்செய்கையை மேற்கொண்டுவந்த தோட்டநிலத்தில் கடந்த 20 வருடங்களாக இராணுவ முகாம் செயற்படுகின்றது. இராணுவ முகாம் தொடர்பான காணியை சுவீகரிப்பதற்கு மூன்று தடவை நில அளவை செய்வதற்கு முயற்சித்த வேளையில் தடுத்து நிறுத்தினோம். காணி உரிமையாளர்கள் ஒன்பது பேரும் உயர் நீதிமன்றத்தில் தனித்தனியாக வழக்குகளையும் தாக்கல் செய்துள்ளோம்.
எமது காணிகள் பிள்ளைகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டு சீதனமாக வழங்கப்பட்டுள்ளன. அவர்கள் உரிய முறையில் காணியை பயன்படுத்த முடியாத நிலையில் இருப்பது குடும்பப் பிணக்குகளை உருவாக்கி உள்ளது. எமது காணியை விடுவிக்குமாறு பாதுகாப்பு அமைச்சுக்கும் அத்தோடுசம்பந்தப்பட்டவர்களுக்கும் பல கடிதங்களை அனுப்பி வைத்துள்ளோம்.
எமது கோரிக்கைக்கு சாதகமாகப் பதில்களை வழங்கி வந்த பாதுகாப்பு அமைச்சு அண்மையில் அனுப்பி வைத்த கடிதத்தில் இராணுவமுகாமை இடமாற்றுவதற்குப் பொருத்தமான காணியை பெறும்வரை முகாம் தொடர்ந்து செயற்படுவதற்கு காணி உரிமையாளர்கள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்என அறிவித்துள்ளது. இராணுவ முகாமை அகற்றும் விடயத்தில் காலம் குறிப்பிடாமல் பாதுகாப்பு அமைச்சு காணி தேடுகின்றது என்று அறிவித்திருப்பது எங்களை நம்பிக்கை இழக்கச் செய்துள்ளது. எமது ஆயுள்காலத்தில் இந்தப் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படும் காணிகளைப் பிள்ளைகள் தமது தேவைகளுக்கு ஏற்றவகையில் பயன்படுத்துவர் என்பதில் நம்பிக்கை இல்லை – என்றார்.(ற-11)

# வீட்டுத் திட்டப் பயனாளி தெரிவில் அதிருப்தி எனில் அறிவிக்கலாம்

## யாழ். மாவட்டச் செயலர் தெரிவிப்பு

வடக்கு – கிழக்கில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள 2016 - 2017 ஆம் ஆண்டு வீட்டுத் திட்டத்துக்கான பயனாளிகள் தெரிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பயனாளி தெரிவுக்கான வரையறைகள் குறிப்பிடப்பட்டுள்ளன. அதற்கு மாறாகத் தெரிவுகள் நடைபெற்றால் பிரதேச செயலக மீளாய்வுக் குழு அல்லது மாவட்டச் செயலக மீளாய்வுக் குழுவுக்கு அறிவிக்க முடியும்.
இவ்வாறு யாழ். மாவட்டச் செயலர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.
சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்து மத அலுவல்கள் அமைச்சால் நடைமுறைப்படுத்தப் படவுள்ள வீட்டுத் திட்டத்துக்குப் பிரதேச செயலர் பிரிவுகளாக தெரிவுகள் இடம்பெற்று வருகின்றன.
போரால் பெற்றோரை இழந்து அநாதரவானவர்கள், போரால் கணவனை இழந்த விதவைகள், போரால் காணாமற்போனோர் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள், போரால் காயமடைந்தவர்கள், அங்கவீனமாக்கப்பட்டவர்கள், புனர்வாழ்வளிக்கப்பட்டு மீளக் குடியமர்ந்தவர்கள், உள்நாட்டில் இடம்பெயர்ந்து மீளக்குடியமர்ந்த நிரந்தர வதிவிடமற்றவர்கள், இந்தியாவில் இருந்து அண்மையில் மீளக்குடியமர்ந்தவர்கள், ஏனைய பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட பயனாளிகள் என்ற வகையில் தெரிவு இடம்பெறுகின்றது.
இது தொடர்பான மேலதிக தகவல்கள், முறைப்பாடுகள் அல்லது ஆட்சேபனைகள் இருப்பின் பிரதேச செயலக மீளாய்வுக் குழுவுக்கு அல்லது மாவட்டச் செயலக மீளாய்வுக்குழுவுக்கு உடன் முறையிடுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.
(ற-5-10)

# புலமைப் பரிசில் தொகையை அதிகரிக்க நடவடிக்கை

திருகோணமலை, ஒக். 30
திருகோணமலை மாவட்ட ஓய்வூதிய நம்பிக்கை நிதிய கூட்டத்தில் அதன் அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் தொகையை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.
கிண்ணியா அலுவலகத்தில் நேற்று இடம்பெற்ற கூட்டத்தில் இந்தத் தீர்மானம் முன்னெடுக்கப்பட்டது. மாவட்டத் தலைவர் விஜேரத்ன தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் மாவட்டத்தின் 11 பிரதேச செயலகப் பிரிவு கிளைத் தலைவர், செயலாளர்கள் கலந்து கொண்டனர்.
உறுப்பினர்களுக்கு வழங்கப்படும்மரணப்பணிக்கொடையை 25 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல், ஒரு கண் வில்லைக்கான கொடுப்பனவை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல், வைத்தியசாலையில் தங்கிச் சிகிச்சை பெறும்போது நாளொன்றுக்கு ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல், பிள்ளைகளுக்கு வழங்கப்படும் புலமைப் பரிசில் தொகையை 10 ஆயிரம் ரூபாவாக அதிகரித்தல், உறுப்பினர்களுக்கு மட்டும் வழங்கப்படும் மானியத்தை அவர்களது பராமரிப்பிலுள்ள மனைவி, பிள்ளைகள், பெற்றோருக்கும் வழங்குதல், புகையிரத ஆணைச் சீட்டுக்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் ஆகிய தீர்மானங்கள் அதில் எடுக்கப்பட்டன. (ற-4)

## சட்டவிரோதமாகத் தறித்த மரக்குற்றிகள் சிக்கின



கிளிநொச்சி, ஒக்.30
கிளிநொச்சியில் சட்டவிரோதமாகத் தறிக்கப்பட்டு யாழ்ப்பாணத்துக்குக் கடத்த இருந்த பெறுமதியான மரக்குற்றிகள் நேற்று அதிகாலை கைப்பற்றப்பட்டன என்று அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர்.
கிளிநொச்சி அக்கராயன்குளம் பொலிஸ் பிரிவில் அவை கைப்பற்றப்பட்டன.
அக்கராயன் பொலிஸ் காவலரணுக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்ட பொலிஸார் வன்னேரிக்குளத்திலிருந்து யாழ்ப்பாணத்துக்கு எடுத்துச் செல்லப்பட்ட மரக்குற்றிகளை மீட்டனர். மரக்குற்றிகளை ஏற்றிச் சென்ற பார ஊர்தியும் கைப்பற்றப்பட்டது என்று அக்கராயன் பொலிஸார் தெரிவித்தனர். (ற-21)

# மீனவர் விடயத்தில் கடற்படை எல்லை மீறி நடக்கக் கூடாது

### மன்னார் நீரியல் வளத் துறை பிரதிப் பணிப்பாளர் அறிவுறுத்து

மன்னார், ஒக்.30
மன்னார்க் கடற்பரப்பில் சட்டவிரோத நடவடிக்கைகள் இடம்பெற்றால் மட்டுமே கடற்படை நடவடிக்கை எடுக்க முடியும். வேறு காரணங்களைக் காட்டி மீனவர்களைக் கைது செய்யவதற்குக் கடற்படையினருக்கு அதிகாரம் இல்லை. மீனவர்களின் ஏனைய பிரச்சினைகளை நாம் பார்த்துக் கொள்வோம்.
இவ்வாறு மன்னார் மாவட்ட நீரியல் வளத் துறைப் பிரதிப் பணிப்பாளர் என்.மெராண்டா கடற்படையினரிடம் தெரிவித்தார்.
மன்னார், முத்தரிப்புத்துறைக் கிராமத்தில் கடந்த 18 ஆம் திகதி இரவு கிராமத்துக்குள் புகுந்த கடற்படைச் சிப்பாய்களைக் கிராமத்தை சேர்ந்தவர்கள் தாக்கினர். அந்தச் சம்பவத்தை அடுத்து குறித்த கிராமத்தைச் சேர்ந்த மீனவர்களை இலங்கைக் கடற்படையினர் கைதுசெய்வதும், மறித்து வைக்கும் சம்பவங்களும் அதிகரித்துள்ளன. நேற்று முன்தினமும் முத்தரிப்பு கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்ட 71 மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள்.
கைது நடவடிக்கைகள் தொடர்பாகத் தெளிவுபடுத்தும் சிறப்புக் கலந்துரையாடல் கடந்த வியாழக்கிழமை மாலை கடற்படையால் சிலாவத்துறைக் கடற்படை முகாமில் ஏற்பாடு செய்யப்பட்டது. அதற்கு கடற்றொழில் நீரியல் வளத்திணைக்கள அதிகாரிகள், அருட்தந்தையர்கள், கிராமத்தைச் சேர்ந்த மீனவர்கள், கிராம சேவகர்கள் அழைக்கப்பட்டிருந்தனர். அதிலேயே மன்னார் மாவட்ட நீரியல் வளத்திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
“மீனவர்களின் விடயங்களில் அத்துமீறித் தலையிடுவதற்குக் கடற்படையினருக்கு அதிகாரம் இல்லை. காப்புறுதிகள், அனுமதிப் பத்திரங்கள் இல்லையா, இருக்கின்றனவா என்பதை நீரியல் வளத்திணைக்களம் பார்த்துக் கொள்ளும், சட்டவிரோத தொழில்கள் இடம் பெற்றால் மட்டுமே கடற்படையினர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். அதை விடுத்து மீனவர்களுடைய சிறிய பிரச்சினைகளில் கடற்படையினர் தலையிடுவதையும், மீனவர்களைக் கைது செய்வதையும் தவிர்க்க வேண்டும்” என்று அவர் அங்கு குறிப்பிட்டார்.
பிரதிப் பணிப்பாளருடைய கருத்துக்குச் செவி சாய்த்த கடற்படையினர் “குறித்த விடயங்களைத் தவிர்த்துப் பணியாற்றுவோம்” என்றனர். (ற-21)

## மழை வேண்டி வழிபாடுகள்

யாழ்ப்பாணம், ஒக்.30
மழை வேண்டி ஆலயங்களில் விவசாயிகள் சிறப்புப் பூசை வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
வலி.கிழக்கு, வலி.மேற்கு மற்றும் தென்மராட்சிப் பிரதேசங்களில் உள்ள ஆலயங்களில் மழை பெய்யவேண்டி விவசாயிகள் பொங்கல் பொங்கி மடை பரவி தேங்காய் அடித்து வழிபாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.
காலபோக நெற்செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் மழை பெய்யாததால் சிரமப்பட்டு வருகின்றனர். அனேகமான விவசாயிகள் கடந்த வாரத்தில் பெய்த மழையை அடுத்து வயல்களில் நெல்லை விதைத்தனர்.
நெல் முளைத்துப் பயிர்கள் வந்த நிலையில் மழை இன்றி கடுமையான வறட்சி ஏற்பட்டுள்ளது. இந்த நிலையில் விவசாயிகள் சிலர் ஆலயங்களில் நேற்று மழை வேண்டி பொங்கி வழிபாட்டில் ஈடுபட்டுள்ளனர். (ற-17)



தீபாவளியான நேற்று கிளிநொச்சியைச் சேர்ந்த பெருமளவான மக் கள் முறிகண்டிப் பிள்ளையார் ஆலயத்தில் சிறப்பு வழிபாடுகளில் ஈடுபட்டனர். பக்தர்களுடைய வருகையைக் கருத்திற்கொண்டு ஆலயத்தில் அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டு பூசைகள் இடம்பெற்றன. (ற-21,34)

## இனப் பெருக்கத்துக்காக வெளிமாவட்டப் பசுக்கள்

### வடக்கு விவசாய அமைச்சர் தெரிவிப்பு

கிளிநொச்சி, ஒக்.30
மக்களுடைய வாழ்வாதாரத்துக்காக வழங்கப்படும் பசுக்கள் திட்டமிடப்படாது உள்ளூரில் இருந்து பெறப்பட்டு வழங்கப்படுவதால், பசுக்களின் இனப்பெருக்கம் அதிகரிக்கப்படவில்லை. அதற்காகவே வெளி இடங்களில் இருந்து பசுக்களை வரவழைத்து வழங்குகின்றோம்.
இவ்வாறு தெரிவித்தார் வடக்கு மாகாண சுகாதார அமைச்சர் பொ. ஐங்கரநேசன்.
இரணைமடு நீர்பாசன அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் வடக்கு மாகாணக் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தால் தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு கலப்பின பசுக்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுக் கிளிநொச்சியில் நடைபெற்றது. பன்னங் கண்டியில் நடைபெற்ற நிகழ்வில் உரையாற்றும் போதே அவர்இவ்வாறுதெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:
தரமற்ற கால்நடைகளை வழங்குவதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகின்றன. வெளி மாவட்டங்களில் இருந்து கால்நடைகள் பெற்றுக் கொள்வது தொடர்பில், அவற்றை உள்ளூரிலேயே பெற்று கொள்ள முடியும் எனவும் பலராலும் பேசப்படுகின்றது. கடந்த காலங்களில் வழங்கப்பட்ட கால்நடைகளின் எண்ணிக்கையை பார்த்தால் அதிகளவான பால் கிளிநொச்சியில் உற்பத்தி செய்யப்பட்டிருக்க வேண்டும். ஆனால் திட்டமிடாது உள்ளூரில் பசுக்கள் கொள்வனவு செய்யப்பட்டு வழங்கப்பட்டதால் பசுக்களின் இனப்பெருக்கம் அதிகரிக்கவில்லை. அதற்காகவே நாம் திட்டமிட்டு இவ்வாறு வெளி மாவட்டங்களில் இருந்து பசுக்களைக் கொண்டு வந்துள்ளோம். அரச அதிகாரிகளாலும் பசுக்கள் வாழ் வாதாரமாக வழங்கப்படுகின்றன. அவர்கள் வழங்கும்போது பசுக்களைதரகர்கள் மூலம் பெற்று கொள்கின்றார்கள் – என்றார்.
நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினர் சு.பசுபதிப்பிள்ளை உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது:
புத்தளம் முதல் அம்பாறைவரை கடற்படையினர் உள்ளனர். அவர்களை அறியாமல் போதைப் பொருள்கள் வடக்குக்கு வர முடியாது. அண்மைக் காலமாக வடக்கில் பலகோடி பெறுமதியான போதைப் பொருள்கள் மீட்கப்படுகின்றன. போதைப்பொருள்கள் பறந்தோ, அல்லது மிதந்தோ வடக்குக்கு வர முடியாது – என்றார்.
நிகழ்வில் வடமாகாண விவசாய அமைச்சர் ஐங்கரநேசன், வடமாகாண சபை உறுப்பினர்கள், விவசாயிகள் உட்படப்பலர் கலந்து கொண்டனர். (ற-21,34)



## பனையில் இருந்து வீழ்ந்தவர் உயிரிழப்பு

யாழ்ப்பாணம், ஒக். 30
கிளிநொச்சி பனை தென்னை வள கூட்டுறவுச் சங்க அங்கத்தவர் ஒருவர் தொழிலுக்காகப் பனையில் ஏறியபோது தவறி வீழ்ந்து உயிரிழந்தார்.
8ஆம் வாய்க்கால் உருத்திரபுரத்தைச் சேர்ந்த வைரவன் அந்தோனிப்பிள்ளை (வயது-58) என்பவரே உயிரிழந்தவராவார்.
பனையில் இருந்து தவறி வீழ்ந்தவர் உடனடியாகமாவட் வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட போதும் சிகிச்சை பயனின்றி அவர் உயிரிழந்தார். இது குறித்து கிளிநொச்சிப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ற-101)

## இருப்பை நிர்ணயிப்பது எங்களுடைய கலைகளே

### கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் கருத்து

யாழ்ப்பாணம், ஒக். 30
எங்களுடைய இருப்பை நிர்ணயிப்பது எங்களுடைய கலைகளே. அவற்றைப் பேணிப் பாதுகாக்க வேண்டியது எங்ளுடைய கடமை. கிராமங்கள் தோறும் கலைஞர்கள் கௌரவிக்கப்படவேண்டும். கலைஞர்களைக் கௌரவிப்பது தான் இவ்வாறான விழாக்களுக்குச் சிறப்பு. எங்களுடைய பாரம்பரிய கலைகள் இந்த முதியவர்களுடன் அழிவடைந்து விடாது இளைய தலைமுறையினர் அதனை பேணிக்காக்க வேண்டும் இதுவே கரைதுறைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவையின் நோக்கம்.



இவ்வாறு கரைதுறைப் பற்று பிரதேச செயலாளர் குணபாலன் தெரிவித்தார்.
கரைதுறைப்பற்று பிரதேச செயலக கலாசாரப் பேரவையும், வன்னி மேம்பாட்டுப் பேரவையும் இணைந்து கொக்கிளாய் பிரதேச மூத்த கலைஞர்களை நேற்று முன்தினம் கௌரவித்தன. இந்த நிகழ்வு நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை பி.ப. 3 மணிக்கு கொக்குத்தொடுவாய் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் நடத்தப்பட்டது. அதில் கரைதுறைப்பற்று பிரதேச செயலாளர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.
அவர் தெரிவித்ததாவது:
– என்றார்.
கொக்குத்தொடுவாய், கொக்கிளாய் பிரதேசங்களில் தமிழர்களுடையபாரம்பரியக்கலைகளை வளர்த்த மூத்த கலைஞர்களான கதிரேசன் மாசிலாமணி, சிவப்பிரகாசம் சிவஞானசுந்தரம், வேலுப்பிள்ளை தியாகராசா, கந்தையா அருமைநாயகம், சுந்தரம்பிள்ளை தங்கம்மா, கதிர்காமு சிவலோகேஸ்வரன், சுப்பிரமணியம் கருணாகரன், அம்பிகாவதி இலங்கேஸ்வரன் ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர். (ற-7,102)

## விபத்தில் நால்வர் காயம்

கொழும்பு, ஒக்.30
புத்தளம் நாகவில்லுவ பகுதியில் ரயில் கடவையில் ரயிலுடன் வான் ஒன்று மோதி விபத்துக்குள்ளனாது. அதில் நான்கு பேர் படுகாயமடைந்தனர். இந்தச் சம்பவம் நேற்று நடந்துள்ளது.
சம்பவத்தில் படுகாயமடைந்த நால்வரும் புத்தளம் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசாரணைகள் முன்னெடுத்து வருகின்றனர். (ற)



வவுனியா – மன்னார் வீதியூடாகப் பயணித்த பட்டா ரக வாகனம் வீதியின் அருகே இருந்த மதகில் மோதி நேற்றுமுன்தினம் விபத்துக்குள்ளானது. ஓட்டோ ஒன்று திடீரென வீதியின் மறுபக்கத்துக்குத் திரும்பியதால் ஏற்படவிருந்த விபத்தைத் தடுக்க முயன்றபோதே பட்டா மதகுடன் மோதியது என்று தெரிவிக்கப்பட்டது. பட்டார ரக வாகன சாரதிக்கு காயங்கள் ஏற்பட்டன என்று தெரிவிக்கப்பட்டது. (ற-21)

# முஸ்லிம்கள் மீள்குடியேறுவதை தடுக்கிறார் வடக்கு முதலமைச்சர்

## குற்றஞ்சாட்டுகின்றார் அமைச்சர் ரிசாத்

யாழ்ப்பாணம், ஒக்.30

போரால் வடக்கில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்களைச் சொந்த இடங்களில் குடியமர்த்துவதற்கு நல்லாட்சி அரசும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் இணக்கம் வெளியிட்டுள்ள நிலையில் வடக்கு மாகாண சபை முதலமைச்சர் மட்டும் எதிர்ப்பு வெளியிடுகின்றார்.

இவ்வாறு குற்றஞ்சாட்டினார் வர்த்தக அமைச்சர் ரிசாத் பதியுதீன்.

வடக்கில் இருந்து முஸ்லிம்கள் வெளியேறி 26 ஆண்டுகள் பூர்த்தியடைந்துள்ளன. அதைமுன்னிட்டு நேற்று கொழும்பில் விசேட செய்தியாளர் சந்திப்பு நடத்தப்பட்டது. அதில் வர்த்தக அமைச்சர் கருத்துத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது:

போரால் 26 வருடங்களுக்கு முன்னர் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம் மக்கள் தமிழ் மக்களைப்போன்று அனைத்து வசதிகளுடனும் மீள்குடியேற்றப்படவேண்டும் என்பதே எனது கோரிக்கை. நல்லாட்சி அரசு அந்தக் கோரிக்கையை ஏற்றுக்கொண்டு அதற்கான குழுவை நியமித்திருக்கிறது. வடமாகாண முதலமைச்சர் க.வி.விக்னேஸ்வரன் அதற்கு எதிர்ப்பை வெளியிட்டுள்ளார். எனினும் அரசு இந்த முயற்சியை நிறுத்தவில்லை. தற்போது மீள்குடியேற்ற அமைச்சின் செயலாளர் தலைமையில் 4 அமைச்சர்களைக் கொண்ட குழுவொன்றை அரசு நியமித்து நடவடிக்கைகளை ஆரம்பித்திருக்கிறது.

வடக்கு மாகாண முதலமைச்சர் எதிர்ப்பு தெரிவிக்கின்றபோதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும், எதிர்க் கட்சித் தலைவருமான இரா. சம்பந்தன், கூட்டமைப்பின் பேச்சாளர் சுமந்திரன் மற்றும் மாவை. சேனாதிராசா உள்ளிட்ட மூத்த தமிழ்த் தலைவர்கள் முஸ்லிம்களை மீள்குடியேற்றுமாறு கோரிக்கை விடுத்துள்ளனர். வடமாகாண முதலமைச்சர் மட்டுமே எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றார். முதலமைச்சரது எதிர்ப்பால் நாங்கள் இந்த முயற்சியை விட்டு விலகப் போவதில்லை– என்றார். (ற-21)

# தொழிலின்றி வடக்கில் 4 லட்சம் இளைஞர்கள்

வவுனியா, ஒக்.29

வடக்கு மாகாணத்தில் 4 லட்சத்து 50 ஆயிரம் இளைஞர் யுவதிகள் வேலை வாய்ப்பின்றி உள்ளனர் என்று கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறு தொழிற்சங்க உறவுகளின் அமைச்சரின் செயலாளர் சுனில் அபேவர்த்தன தெரிவித்தார்.

வவுனியா மாவட்ட செயலகத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற மனிதவலு தொழில்துறை மீளாய்வுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தெரிவித்ததாவது–

தொழில்துறை அமைச்சின் ஏற்பாட்டில் தொழில் திணைக்களம் மூலம் எடுக்கப்படும் நடவடிக்கைகள் ஊடாக தொழில் பயிற்சிகள் மற்றும் தொழில் ரீதியான பிரச்சினைகள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றோம்.

வடக்கில் உள்ள மாவட்டங்களில் முகம் கொடுக்கும் பிரச்சினைகள், அவற்றுக்கான தீர்வுகள் தொடர்பில் தொழில் திணைக்கள உத்தியோகத்தர்களிடம் கேட்டறியலாம்.



இவை தொடர்பாக ஆராயவே இந்த அமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இன்றைய அமர்வின் முக்கிய நோக்கம் பிரச்சினைகள் தொடர்பாக உங்களின் கருத்துக்களை முன்வைக்க வேண்டும் என்பதே.

வடக்கு மாகாணத்தைப் பொறுத்தவரையில் 4.5 சதவீதமானவர்களுக்கு தொழில் இல்லை. அல்லது வழங்கப்படவில்லை. வடக்கு மாகாணத்தில் கடந்த கால சூழ்நிலைகளால் இந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று கூறலாம்.

தொழில் தேடுநர்கள் சரியான தகைமைகளைக் கொண்டிருக்கின்றார்களா?, பயிற்சி நெறிகளைமுழுமைப் படுத்தியுள்ளனரா? என்பவை குறித்து ஆராய வேண்டியுள்ளது. வடக்கு இளைஞர் யுவதிகளுக்கு என்ன தேவைகள் இருக்கின்றன, கொள்கைகளில் ஏதாவது மாற்றம் செய்ய வேண்டுமா என்பது பற்றித் தீர்மானிக்க வேண்டியுள்ளது. மாவட்டங்களின் களத்தில் பணியாற்றுபவர்களே இது குறித்து எமக்குத் தெரிவிக்க வேண்டும். அவற்றைத் தொகுத்தே தேசிய மட்டத்தில் கொள்கைகளில் மாற்றங்களை ஏற்படுத்த முடியும். அதற்கு நாம் தயாராக இருக்கின்றோம்.– என்றார். (ற-21)

# வளலாய் மக்களுக்கு குழாய் மூலம் தண்ணீர்

கோப்பாய், தெல்லிப்பழை பிரதேச செயலகங்களை உள்ளடக்கிய வளலாய் மீள்குடியமர்வுத் திட்டத்துக்கு நிலத்தடி குழாய்கள் மூலம் குடிதண்ணீர் வழங்கப்படவுள்ளது.

இவ்வாறு யாழ்.மாவட்ட தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை தெரிவித்தது.

குடிதண்ணீர் பற்றாக்குறையான இடங்கள் மற்றும் உப்புத் தன்மையுள்ள தண்ணீர் உள்ள இடங்கள் தெரிவு செய்யப்பட்டு அந்தப் பகுதிகளுக்கு நிலத்தடி குழாய்கள் மூலம் குடிதண்ணீர் விநியோகிக்கப் படுகின்றது.

400 குடும்பங்களை உள்ளடக்கிய வளலாய் மீள்குடியமர்வுத் திட்டத்துக்கான குடிதண்ணீர் விநியோகத்துக்கு யாழ். மாவட்ட செயலர் ஊடாக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமதஅலுவல்கள் அமைச்சு 25 மில்லியன் ரூபாவை ஒதுக்கியுள்ளது.

அதற்குரிய வேலைத் திட்டங்கள் முடிந்துள்ளன. விரைவில் அந்த பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர் விநியோகிக்கப் படும்.

பருத்தித்துறை இன்பர்சிட்டி, சக்கோட்டை ஆகிய பிரதேசங்களிலும் நிலத்தடிக் குழாய் நீர் விநியோகம் 2 கட்டங்களாக நடைபெறுகின்றது. முதல் கட்டத்துக்கு 19 மில்லியன் ரூபாவும், 2ஆம் கட்டத்துக்கு 33 மில்லியன்ரூபாவும்யாழ்.மாவட்ட செயலர் ஊடாக மீள்குடியேற்ற அமைச்சுஒதுக்கியுள்ளதுஎன்று தெரிவிக்கப்பட்டது. (ற-10)

# அசாத் சாலி ஆர்ப்பாட்டத்தில் அவருக்கெதிராகவே பதாகை!

கொழும்பு, ஒக்.30

கொழும்பு மாநகர சபையின் முன்னாள் பிரதி மேயர் அசாத் சாலி தலைமை தாங்கிய ஆர்ப்பாட்டமொன்றில் அவருக்கு எதிராகவே பதாகையொன்று பிடிக்கப்பட்ட சம்பவம் நடந்துள்ளது.

அதில் அவரைப் பற்றிய தவறான வாசகம் காணப்பட்டது. அந்தப் பதாகையை அசாத் சாலிக்கு அருகிலேயே ஒருவர் பிடித்துக்கொண்டு அசாத் சாலியுடன் இணைந்து அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டார்.

இலங்கை அரசு மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ள முஸ்லிம் விவாக மற்றும் விவாகரத்துச் சட்டத் திருத்தத்துக்கு எதிராக முஸ்லிம்கள் இணைந்து நேற்று கொழும்பு தெவட்டகஹ பள்ளிவாசலுக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் முன்னெடுத்தனர். அதில் அரசுக்கு எதிராக பல்வேறு சுலோகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டோர் ஏந்தியிருந்தனர். அவர்களில் ஒருவரால் அசாத் சாலிக்கு எதிராக எழுதப்பட்ட பதாகை பிடிக்கப்பட்டிருந்தது. (ற-21)






# கட்டுப்பாட்டை இழந்ததால் வீட்டுக்குள் புகுந்தது லொறி

## உறங்கிக் கொண்டிருந்த மூவர் படுகாயம்; கொம்மாந்துறையில் அதிகாலை சம்பவம்

மட்டக்களப்பு, ஒக். 30

மட்டக்களப்பு-கொழும்பு பிரதான வீதியில்-கொம்மாந்துறையில் வீட்டுக்குள் பாரவூர்தி புகுந்ததால் கோர விபத்து ஏற்பட்டது. இதனால் கல் வீட்டின் ஒரு பகுதி இடிந்து தரைமட்டமாகியது. வீட்டுக்குள் இருந்த மூவர் படுகாயமடைந்தனர். அவர்கள் உடனடியாக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று அதிகாலை இந்த விபத்து இடம்பெற்றது. வீட்டில் உறங்கிக் கொண்டிருந்த மூவரும் லொறிச் சாரதியுமே காயமடைந்து செங்கலடி பிரதேச வைத்தியசாலையில் சேர்க் கப்பட்டனர். இருவர் மேலதிக சிகிச்சைக்காக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு உடனடியாக மாற்றப்பட்டனர் என்று பொலிஸார் கூறினர்.



மட்டக்களப்பிலுள்ள கடைகளுக்குப் பொருள்களை விநியோகிப்பதற்காகக் கொழும்பிலிருந்து பெருள்களை ஏற்றிச் சென்ற போதே பாரவூர்தி அதிகாலை 2 மணியளவில் விபத்துக்குள்ளானது.

அதன் சில்லொன்று வெடித்ததன் காரணமாகக் கட்டுப்பாட்டை இழந்து வீதி வடிகாலைக் கடந்து மின்கம்பத்துடன் மோதி, வீட்டுக்குள் புகுந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டுக்குள் உறங்கிக் கொண்டிருந்த சகோதரர்கள் மீது வீட்டுச் சுவர் பெரும் சத்தத்துடன் சரிந்து வீழ்ந்துள்ளது. இதனால் அங்கிருந்த மூவர் படுகாயமடைந்தனர். அவர்களில் ஒருவர் வீட்டுச் சுவர் இடிந்து கற்களால் மூடப்பட்ட நிலையில் சிரமத்தின் மத்தியில் மீட்கப்பட்டு வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (த-4)









# அபிவிருத்தித் திட்டங்களால் மகிழ்ச்சி

*- றிப்கான் பதியுதீன்*

மன்னார், பெரிய மடு கிராமத்தில்மேற்கொள்ளப்படும் அபிவிருத்தித் திட்டங்கள் எம்மால் மேற்கொள்ளப்பட்டவை என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சி அடைகின்றேன். இவ்வாறு வடக்கு மாகாண சபை உறுப்பினர் றிப்கான் பதியுதீன் தெரிவித்தார். மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குற்பட்ட பெரியமடு மகா வித்தியாலயத் துக்கு சுத்திகரிக்கப்பட்ட குடிதண்ணீர், தளபாடம், ஒலி பெருக்கி போன்றவற்றை வடமா காண சபை உறுப் பினர் றிப்கான் பதியுதீன் நேற்று முன்தினம் வழங் கினார். அந்த நிகழ்வில் உரை. யாற்றும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் தெரிவித்ததாவது–

பெரியமடு கிராமம் போரால் பாதிக் கப்பட்ட கிராமமாகும். அன்று கிராமத்திலிருந்து வெளியேறிய எமது முஸ்லிம் சமூகம் தற்போது நிலவும் நல்லாட்சியில் மீண்டும் மீள்குடிய மர்கின்றனர். அவர்களுக்கு அமைச்சர் ரிசாத் பதியுதீன் அபிவிருத்தித் திட்டங்களை செய்கின்றார். வடமா காண சபை உறுப்பினராக இருக்கும் நானும் அவசியமான திட்டங்களை முன்னெடுத்து வருகின்றேன். கிராமத்தில் போடப்படும் வீதியாக இருந்தாலும் சரி, வீடுகளாக இருந்தாலும் சரி, வைத்தியசாலை கட்டடமாக இருந்தாலும் சரி அது எம்மால் வழங்கப் பட்டது என்பதை நினைக்கும் போது மகிழ்ச்சியாக இருக்கின்றது. அது மட்டுமன்றி புதிதாக குடியே றிய மக்கள் தமது விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்ள கிணறுகள் குழாய்க் கிணறுகள் போன்றவற்றை வழங்கி யுள்ளோம். சுத்தமான குடிதண்ணீரைப் பெற்றுக் கொடுக்கும் நோக்கோடு சுத்திகரிக்கப் பட்ட நீரை மக்களுக்கு வழங்கியுள்ளோம். எமது சமூகம் பட்ட துன்பங்கள் இனியும் படக்கூடாது என்பதுவே எமது நோக்கம்– என்றார். (ற–56)

## வீட்டுப்பணிப்பெண் தேவை

சாவகச்சேரியிலுள்ள வீடு ஒன்றில் பணிபுரிய சமையல் தெரிந்த பெண் தேவை.

**077 461 8002** (J 5670) (13,18,21)

## அறைகள் வாடகைக்கு

திருநெல்வேலி, அரசடி ஒழுங்கையில் இரண்டு சிறிய அறைகள் வாடகைக்கு உண்டு. மாணவர்கள் அல்லது சிறிய குடும்பம் விரும்பத்தக்கது.

**077 776 0663** (J 5679) (13,18,21)

## பெண்பணியாளர் தேவை

யாழ்ப்பாணம், உரும்பிராய் பிரதேசத்தில் அமைந்துள்ள வீடு ஒன்றில் குழந்தையைப் பராமரிக்க பெண் பணியாளர் தேவை. (J 5748) (12,18)

**071 801 5371**

## வீடு விற்பனைக்கு

வாசிகசாலை ஒழுங்கை ,கல்வியங்காட்டில் அமைந்த நில.பர. 3¾ உம் வீடும் விற்பனைக்கு உண்டு. (J 5598) (12,18)

**077 776 0663**

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

**யோகராசா தயாபரன்**
(அகில இலங்கை சமாதான நீதிவான்)







**கதிர்காமத்தையன் ரஜனிகாந்தன்**
(தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக்கழக இலங்கைக் கிளை விரிவுரையாளர், சீர்திருத்த உத்தியோகத்தர்)

எமது கிராமத்தின் முன்னேற்றத்துக்கு முன்னின்று உழைத்துவருபவர்களான **திரு.யோகராசா தயாபரன்** அவர்கள் 21.10.2016 அன்று அகில இலங்கை சமாதான நீதிவானாகவும் திரு.கதிர்காமத்தையன் ரஜனிகாந்தன் 23.09.2016 அன்று நீதி நிர்வாக மாவட்டத்திற்கு உட்பட்ட சமாதான நீதிவானாகவும் சாவகச்சேரி நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டமையை பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களது சேவை எமது கிராமத்துக்கு தொடர்ந்து கிடைக்க எல்லாம் வல்ல இறைவன் அருள்வேண்டி பிரார்த்திக்கின்றோம்.

**மீசாலை**

மீசாலை வடக்கு கிராம மக்கள் சார்பாக
**திருமதி சி.விநாயகமூர்த்தி**

(ஜே.5725)(13.18.21)

# வவுனியா தெற்கு தமிழ் பிரதேச சபை

## வழங்குநர்களையும் ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல் - 2017

சபையானது 2017ஆம் ஆண்டுக்கான கீழ்க்குறிக்கப்பட்டுள்ள பொருள்கள் சேவைகளை வழங்குவதற்குத் தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்களிடம் இருந்து விண்ணப்பங்களை ஏற்கவுள்ளது.

**01) பொருள்கள்**

01. காகிதாதிகள் பொருள்கள் எழுது பொருள்கள்
02. அலுவலக உபகரணங்கள்
03. நூலகங்களுக்கான நூல்கள்
04. துணிவகைகள்
05. கட்டடப் பொருள்கள் (சிமெந்து, ஓடுகள், கம்பி வகைகள், கொங்கிறீட் தூண்கள், சிமெந்து கற்கள்)
06. கற்கள், மணல், கிரவல்
07. தீந்தைகள் வகைகள், (Paints) நிறந்தீட்டும் பொருள்கள்
08. நீர் வழங்கும் குழாய்கள், கியூம் பைப்புக்கள் (Hume Pipes) மற்றும் ஏனைய பொருள்கள்
09. வாகன உதிரிப்பாகங்கள், துணைப்பொருள்கள்.
10. மின்வழங்கும் பொருள்கள், மின்பாவனைப் பொருள்கள்.
11. எரிபொருள்கள், உராய்வு நீக்கிகள்
12. இரும்புப் பொருள்கள்
13. தீராந்திகள், பலகைகள்
14. பனைமரங்கள், சலாகைகள்
15. வாகனங்களுக்கான டயர், ரியூப் மற்றும் மின்கலங்கள்.
16. கணினி, பிரதியாக்கல் இயந்திரம் மற்றும் இவற்றுக்கான உதிரிப்பாகங்கள்.
17. சுத்திகரிப்புப் பொருள்கள், கிருமிநாசினிகள்.
18. பாதணிகள், தோற் பொருள்கள்.
19. அலங்காரப் பொருள்கள்.
20. இலத்திரனியல் பொருள்கள்.

**02) சேவைகள்**

01. அச்சிடுதல். புத்தகங்கள் கட்டுதல்.
02. மோட்டார் வாகனங்களுக்கான உதிரிப்பாகங்கள்.
03. ஒட்டுவேலைகள், உலோகவேலைகள்.
04. மின்சாதனங்கள் திருத்தம், மீளமின்வலுவூட்டல் (Battery Charge )
05. இலத்திரனியல் சாதனங்கள்.
06. வாகனங்கள் ரியூப் ஒட்டுதல்.
07. வாகனச் சுத்திகரிப்பு.
08. கோலவுடை, சீருடை தைத்தல்.
09. கணினி பிரதியாக்கம் இயந்திரம் திருத்துதல், சுத்திகரிப்பு (Service )
10. இறப்பர் முத்திரை தயாரித்தல்.

**03) ஒப்பந்த வேலைகள் (ICTAD) பதிவு உள்ளவர்கள் மட்டும்.**

01. கட்டட நிர்மாண வேலைகள்
02. கிணறு அமைத்தல்.
03. வீதி நிர்மாணம், திருத்த வேலைகள்.

பதிவானது ஒவ்வொரு வழங்கல் சேவைக்கும் தனித்தனியான விண்ணப்பங்கள் அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களை சபையின் தலைமை அலுவலகத்தின் நிதிக்கிளையில் பெற்றுக்கொள்ளலாம். **ஒவ்வொரு விண்ணப்பத்துக்கும் பதிவுக்கட்டணமாக ரூபா. 1000/= உடன் (அரசவரிகளையும் சேர்த்து) 1,130/= செலுத்தப்படல் வேண்டும்.**

விண்ண்ப்பப் படிவங்கள் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"வழங்கல் சேவைக்கான விண்ணப்பம் - 2017"** எனக்குறிப்பிட்டு பதிவுத் தபால் மூலம் **செயலாளர், தலைமைக் காரியாலயம், வவுனியா தெற்கு தமிழ்ப் பிரதேசசபை, நேரிகுளவீதி, நெளுக்குளம், வவுனியா** என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பப் படிவங்கள் **20.12.2016 ஆம் திகதி வரை** ஏற்றுக்கொள்ளப்படும். மேலதிக விவரங்களுக்கு **024 222 5737 அல்லது 024 205 0067** என்னும் இலக்கத்துடன் தொடர்பு கொள்ளவும்.

**சுகந்தி கிஷோர்**
**செயலாளர், வவுனியா தெற்கு தமிழ் பிரதேசசபை, வவுனியா.**

(C/23034)(11,18,21)

## தேவை

இரத்தினபுரி மாவட்டத்தில் சகல வசதிகளுடனும் இயங்கும் தனியார் மருத்துவமனையில் முழு நேரம் நின்று கடமையாற்ற இலங்கை வைத்திய சபையில் அனுமதி பெற்ற

- வெளிநோயாளர் பிரிவு (OPD) வைத்தியர்.
- பாமஸி மருந்தாளர் (Pharmacist)ஆகியோர் தேவை.

சகல வசதிகளுடனும், கவர்ச்சியான சம்பளம், தங்குமிட வசதிகள் உண்டு. (C 26000) (14,17,18)

**தொடர்பு: 071 806 8551**

## Wanted Medical (Sales) Representative

மருத்துவ உபகரணங்கள்,மருந்து வகைகள் இறக்குமதி செய்து விநியோகிக்கும் நிறுவனத்துக்கு மேற்குறிப்பிடப்பட்ட பதவி நிலைக்கு விண்ணப்பம் கோரப்படுகின்றது.

மேற்படி பதவிக்கான தொழில் அனுபவம் உள்ளவருக்கு முன்னுரிமை அளிக்கப்படும். விண்ணப்பிப்பவர் வயதெல்லை 20-35 ஆகவும் A/L விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களில் சித்தியுடன் சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றிருத்தல் வேண்டும். அடிப்படைச் சம்பளத்துடன் போக்குவரவு, மேலதிக ஊக்கக் கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

**நேர்முகத் தேர்வு:- 01.11.2016 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குச் சுயவிவரக்கோவை, சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.**

MEDCON (PVT) LTD
No: 218, 1/1, Hospital Road, Jaffna.
**077 012 4415, 021 492 3587**

## கல்லீரல் தேவை

### Liver Wanted

கல்லீரலின் ஒரு சிறு பகுதி தேவைப்படுகின்றது.



**இரத்த வகை-** A+/ O
**வயது: 18-50**

தானம் செய்ய விரும்புபவர்கள் தொடர்பு கொள்ளவும்.மேலதிக விவரங்களுக்கு. (J 4681) (12,17,18)

**அழையுங்கள் : 077 577 8871**

# VACANCY

A leading star class hotel in the North requires
ACCOUNTS ASSISTANT
Preferably a graduate or with any other Accounts qualification. Candidate must have at least 2 years experience in the accounts field.

**CASHIER / ASSISTANT MANAGER**
(Food and Beverages section)
Conversant in all three languages would be advantageous.
**Excellent Career prospect.**

Please forward your Cv to: rm@cityhoteljaffna.com

TILKO

Tilko Jaffna City Hotels (Pvt) Ltd,
70/6, K.K.S.Road, Jaffna.
Tel: 021 222 5969

**Family Rehabilitation Centre**
**Vacancy–** Kilinochchi/ Pointpedro

**Project Coordinator** - Kilinochchi
Qualifications & responsibilities:
- A relevant degree/ equivalent qualification
- At least 03years experience in Gender/Health Project Management
- Good knowledge on report writing and presentation

Salary around:Rs 50,000/- per month

**Project Assistant** - Kilinochchi
Qualifications & responsibilities:
- A Diploma/ equivalent qualification
- At least 03years experience in Gender/Health Project implementation
- Good knowledge on report writing and presentation

Salary around:Rs 30,000/- per month

**Field Officer** - Pointpedro
Applicants must possess:
- Minimum GCE A/L Education
- At least 03 years experience in project implementation


Salary around:Rs 23,000/- per month

**General requirements for all positions:**
- Computer knowledge and application
- Fluency in local languages and working knowledge in English
- Valid Motor bike licence

Please forward your CV with 02 non related referees within 07 days to: rc-north@frcsl.org or to the following address:

**FAMILY REHABILITATION CENTRE (FRC)**
No.395, Nagathampiran Lane, Ananthapuram,Kilinochchi.

## மரண அறிவித்தல்



### நீக்கிளஸ் ஸ்ரனிஸ்கிளஸ் ஜீவரெட்ணம்

கொய்யாத் தோட்டத்தைப் பிறப்பிடமாகவும் இல 28/1, பிரப்பங்குளம் வீதி, வண்ணார்பண்ணையை வதிவிடமாகவும் கொண்ட நீக்கிளஸ் ஸ்ரனிஸ்கிளஸ் ஜீவரெட்ணம் 2016.10.28 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கிறிஸ்தோபர் - றோஷம்மா தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான துரைரெட்ணம், ஜெயரெட்ணம், பாலரெட்ணம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் தம்பையா நளாயினியின் அன்புக் கணவரும் ஜெசிந்தா ஜீவராணி, றெஜினோல்ட் சுரேஸ்குமார், ஜரின்சுபத்திரா(ஆசிரியை - கதீஜா பெண்கள் கல்லூரி), காலஞ்சென்ற டிலானி பவித்திரா மற்றும் றொபேட் பிரசன்னா, நளின் பிரதீபன் ஆகியோரின் அன்புத் தந்தையும் சாராசாளினி, றொசான், பிறேமினி, தேனுஜா, கனிஸ்ரன், டிலுசியா, சஜிஸ்ரன், சங்கவி, அபிஷன், அக்சயன் ஆகியோரின் பேரனும் சானுஜனின் அன்புப் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று(2016.10.30) ஞாயிற்றுக்கிழமை இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் சாட்டி கிறிஸ்தவ மயானத்தில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.

(J/5738),
(14,17)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும். நன்றி நவிலலும்



அமரர்
**இராமநாதன் இராமச்சந்திரன்**
(ஓய்வு பெற்ற கணக்காய்வுத் திணைக்கள அலுவலர்)

தோற்றம்
27.01.1949

மறைவு
30.09.2016

ஒரு திங்கள் உருண்டோடியது நீங்களின்றி
இன்று தான் நாம் உணர்கின்றோம்
நீங்கள் தந்துவிட்டு சென்ற வெற்றிடத்தால்
நீங்கள் உடனிருந்த போது சிரித்திருந்த நம் முகங்கள்
உங்கள் நினைவுகள் மட்டும் உடனிருக்கையில்
வெறுமையாய்க் கிடக்கின்றன.
புன்சிரிப்பில் நிறைந்த உம் வதனம்
இன்றும் எம் உள்ளத்தில் நிறைகிறது மீளாத துயரமாய்.......

2016.09.30 அன்று இறைபதம் அடைந்த எம் குடும்பத்தலைவரின் இறுதிக் கிரியை நிகழ்வில் நேரடியாகப் பங்குபற்றி துயர் பகிர்ந்த மற்றும் பல்வேறு வழிகளில் துணை நின்ற உறவினர்கள், நண்பர்கள், அயலவர்களுக்கும் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு இலங்கை மற்றும் அயல்நாடுகளிலிருந்து அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும் அஞ்சலிப்பிரசுரங்கள், பதாகைகள் மூலம் துயர்பகிர்ந்தவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

36/4, கச்சேரி நல்லூர் றோட்,
சுண்டுக்குளி.
077 865 9229

(J 5714)
(14,17,18)

என்றும் உம் நினைவுகளுடன்
குடும்பத்தினர்.

# நீர்ப்பாசனத் திட்டங்கள் பல விரைவில் ஆரம்பிக்கப்படும்

## *ஜனாதிபதி மைத்திரி தெரிவிப்பு*

கொழும்பு, ஒக் 30

விவசாயத்தின் மூலமே எமது நாடு எப்போதும் வெற்றிபெற்றுவந்துள்ளது எனத் தெரிவித்துள்ள ஜனாதிபதி, நாட்டின் விவசாயத் துறையில் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தும் வகையில் பல்வேறு பெரும் நீர்ப்பாசனத் திட்டங்கள் எதிர் வரும் சில மாதங்களில் ஆரம்பிக்கப் படும் என்றும் தெரிவித்தார்.

நேற்று முற்பகல் கொழும்பு 07, ஹெக்டர் கொப்பேகடுவ கேட்போர் கூடத்தில் நடைபெற்ற மகாவலி பொறியியலாளர்கள் சங்கத்தின் 30ஆவது வருடாந்த மாநாட்டில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

அவர் தெரிவித்த தாவது:-

நாட்டின் விவசாயத் துறையைப் பலப்படுத்துவதற்காக உள்நாட்டு, வெளிநாட்டு நிதி ஏற்பாடுகளின் கீழ் அரசு தற்போது பல நீர்ப்பாசனத் திட்டங்களை நடைமுறைப் படுத்தியுள்ளதோடு, பின்னடைந்திருந்த பல்வேறு திட்டங்களின் பணிகளும் தற்போது ஆரம்பிக்கப் பட்டுள்ளன. இந்தத் திட்டங்களின் வெற்றிக்காக மகாவலி பொறியியலாளர்கள் சங்கத்தின் பங்களிப்பை எதிர்பார்த்துள்ளோம். அவர்களது நீண்ட கால பிரச்சினையாக உள்ள சம்பளப் பிரச்சினையை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப் படும்-என்றார்.

இந்த நிகழ்வில் மகாவலி பொறியியலாளர்கள் சங்கத்தினால் ஜனாதிபதிக்கு ஒரு விசேட நினைவுச்சின்னம் வழங்கப் பட்டது. (த)

## மனம் நெகிழஞ்சலி



யாழ்.நாவாந்துறையைப் பிறப்பிடமாகவும்
கனடா Toronto Scarborough ஐ
வசிப்பிடமாகவும் கொண்ட

திருமதி
**பரமேஸ்வரி செல்லப்பா**
அவர்களின் பிரிவுக்கு என்மனம் நெகிழ் அஞ்சலிகள்

தோற்றம்
10.08.1932

மறைவு
25.10.2016

ஆறாத் துயர்தந்து சென்ற ஈஸ்வரியே
வஞ்சனை இல்லா உள்ளம் உடையம்மா
யாவருக்கும் உதவிடும் உள்ளமும் உடையம்மா
" வேசம் இல்லா நேசம் தந்த பெருமகளே "
உங்கள் நினைவுகள் என்றும் பசுமையாக
என் உயிர் உள்ளவரை இருக்கும் அப்பம்மா
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றேன்.

வராஹி அம்மன் கோயிலடி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

(J 5734) (14,17,18)

பாசமுடன் அன்புப் பேரன்
தனராஜா தனத்சன்

## 47 ஆவது நாள் நினைவஞ்சலி

அமரர்
**பாக்கியநாதன் திவிஜன்**



மண்ணில்
1996.10.15

விண்ணில்
2016.09.14

அன்பு மகனே! எங்கு சென்றாய்?
ஆறாத்துயரில் நாமும் தவிக்கின்றோம்
கேட்டதெல்லாம் வாங்கித் தந்தோம்
கேட்பதற்கு இன்று நீயும் இல்லையே!
எங்கு செல்கிறாய் தம்பீ எனக்கேட்டோம்
கோவிலுக்குச் செல்கிறேன் என்றாயே
உந்தன் வருகை பார்த்து இருக்கின்றோம் என்று வருவாய் மகனே...

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வில் கலந்து கொண்ட உற்றார், உறவினர்கள், அயலவர்கள், நண்பர்கள் பாடசாலைச் சமூகத்தினர்கள் மற்றும் இறுதிக்கிரியை நிகழ்விற்கும் பல்வேறு வழிகளிலும் உதவிய அனைத்து உள்ளங்களுக்கும் எமது நன்றிகள்.

நந்தாவில் அம்மன் கோயிலடி,
கொக்குவில்.

(J 5670) (14,17,18)

குடும்பத்தினர்.

## நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர் **யோகீஸ்வரன் நிஜாந்தன்**



தோற்றம்
09.01.1988

மறைவு
30.10.2012

கண்ணிமைத்து விழிக்கவில்லை
நான்கு ஆண்டுகள் சென்று விட்டதையா
ஒரு நொடிப் பொழுதும் அழியவில்லை
உங்கள் அன்பான உள்ளம் எம்மைவிட்டு....

என்றும் நினைவில்
குடும்பத்தினர்.
கைதடி மேற்கு, கைதடி.

## வீடு, காணி விற்பனைக்கு

பருத்தித்துறையில் காணியுடன் கூடிய வீடு விற்பனைக்குண்டு.

**077 602 5163**

## வீடு வாடகைக்கு உண்டு

திருநெல்வேலி பரமேஸ்வரா சந்திக்கும் தபால்பெட்டி சந்திக்கும் இடையில் பலாலி வீதியில் வீடு வாடகைக்கு உண்டு.

**077 958 1022**

## தேவை

பம்பலப்பிட்டியிலுள்ள புடவைக் கடையில் சமையல் வேலைக்கான ஆண் உதவியாளர்கள் உடன் தேவை. ஸ்டோரில் வேலை செய்வதற்கு ஆண் ஊழியர்கள் (வயது 25 - 45) தேவை. சம்பளம் பேசித் தீர்க்கப்படும்.

**077 761 9327, 077 600 3333**

## பரிசுத்த ஆவிக்கு செபம்

எனக்கு ஒளியாயிருந்து உன்னத நிலையை நானடைய வழிகாட்டும் பரிசுத்த ஆவியே உமது திருநாமம் அர்ச்சிக்கப்படுவதாக உமது அருட் கொடைகளின் மூலம் என்னுள் ளத்தைப் பக்குவப்படுத்தி எனக்குத் தீங்கு செய்தோரையும் நான் மன்னிக்க அருள் புரிபவரே என் வாழ்வில் எச்சந்தர்ப்பத்திலும் எனக்கு உற்ற துணையான உமக்கு இச்சிறிய செபத்தின் மூலம் நீர் செய்யும் சகலத்துக்கும் நன்றி கூறித்துதிக்கிறேன் என் தேவைகள் எவ்வளவு முக்கியமாக இருப்பினும் உம்மி லிருந்து விலகாமல் என்றும் உம்மில் நிலைத் திருப்பேனென உறுதி கூறுகிறேன். நானும் என்னால் நேசிக்கப்படும். அனைவரும் என்றென்றும் உமது முடிவிலா மகிமையில் பங்குபெற வேண்டுகிறேன். ஆமென்

**அடியாள்**

## காணி விற்பனைக்கு

கொழும்பு 03, கொள்ளுப்பிட்டியில் Marine Drive facing 8.36 Perches 40 Feet Frontage.

**077 934 7222**

## காணி விற்பனைக்கு

கொழும்பு - 06 Alexandra Road, 27.8 பேர்ச்சஸ் காணி விற்பனைக்குண்டு. Gajan (RE/Max)

**077 934 7222**

## வீடு விற்பனைக்கு

பம்பலப்பிட்டிய ரம்யா வீதியில் காலி வீதிக்கு அருகில் வீட்டுடன் கூடிய காணி விற்பனைக்கு உண்டு. 11.65 Perches தொடர்புகளுக்கு

**Gajan - 077 934 7222**

## சாரதி தேவை

கொழும்பில் உள்ள முன்னணி நிறுவனத்திற்கு சாரதிகள் தேவை. தகுந்த சம்பளம் வழங்கப்படும். உடனடியாக தொடர்பு கொள்ளவும்.

**011 259 6225/ 077 442 2016**

## PERSONAL CLASS

கணிதம் (தரம் 6-11 வரை) சி. தீபன் B.Sc

**077 920 8945**

## பெண் வரவேற்பாளர் தேவை

யாழ்.நகரில் உள்ள பிரமாண்டமான ஹோட்டல் ஒன்றுக்குப் பெண் வரவேற்பாளர் தேவை.

தகைமை:- ஆங்கில அறிவு, கணினி அறிவு

**077 794 5773**

## காணி விற்பனைக்கு

பீச் றோட்டில் . குருநகர் பொலிஸ் நிலையத்திற்கு அருகில் உள்ள 4¾ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

**072 245 8296**

## அறை வாடகைக்கு

யாழ்ப்பாணம் . கச்சேரிக்கு அண்மையில் பெண் பிள்ளைகள் தங்குவதற்கு அறை வாடகைக்கு உண்டு.

**077 967 2863, 077 9894594**

இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட

## ஸ்ரீ தனலஷ்மி யந்திரம்



பதக்கம் சிலை பாதுகை யந்திரம் ஆமை



கையிருப்பு உள்ளவரை மட்டுமே... இன்றே முந்துங்கள்! Free! Key & Odal

SLR 9322

**0777 614 186**

Sri Lanka. 4, IBC, Wellawatte.

## மணமகன் தேவை

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் 1976 இல் பிறந்த பூரம் முதலாம் பாதம் பாவக்கிரகம் 30 உடைய அழகிய மணமகளுக்கு தகுந்த மணமகன் தேவை.

**075 795 8155**

## OVERSEAS STUDENT SCHOLARSHIPS

- 100% Funded for UK & USA
- A 100% free and unique Scholarships scheme for 100's of Art and Science Courses, Bachelor and Master Programs.
  "Terms & Condition Apply"
- Any one can apply who is talented and motivated.
- A written test may be held on later stage.

Interview & initial screening venue:
**The Kingsbury Hotel**
48, Janadhipathi Mawatha, Colombo, Sri Lanka.

Date: 10 am to 1:30pm
Monday 31st October 2016
Call in English: 0763 190 336

## வேலையாள்கள் தேவை

முறிகண்டி, மாங்குளம், புளியங்குளம் போன்ற பகுதிகளில் உள்ள சைவ உணவகத்தில் வேலை செய்வதற்கு அனைத்து வேலையாள்களும் தேவை. சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

**077 4030 619, 077 365 0280**

## வேலையாள்கள் தேவை

இதோ நம்நாட்டில் இயங்கிவரும் முன்னணி நிறுவனங்களான ஜாம், பிஸ்கட், கோடியல், பால்மா, கையுறை, சொசேஜஸ் போன்ற தயாரிப்பு தொழிற்சாலைகளில் லேபல், பொதியிடல், தயாரிப்பு QC பிரிவுகளுக்குத் வேலையாள்கள் தேவை. உடனடியாகத் தொடர்பு கொள்ளவும். வயது 18-55 வரை. ஆண், பெண் இரு பாலாரும். சம்பளம் நாள் 900/= வரை. மாத சம்பளம் 15,000/= - 32,000/= பெறலாம். உணவு, தங்குமிடம் வழங்கப்படும். சிங்களம் அவசியமில்லை. தொடர்பு கொள்ளவும்.

**077 505 2239, 077 600 0507**
No.173,Palali Road, Kandarmadam Junction, Jaffna.

## தேவை

காலங்களைக் கடக்க விடாதீர்கள். இன்றே எம்முடன் இணையுங்கள். பிரசித்தி பெற்ற எமது ஜாம், பிஸ்கட், கோடியல், கையுறை, பால்மா போன்ற தயாரிப்பு தொழிற்சாலைகளுக்கு தயாரிப்பு, லேபல், களஞ்சிய பிரிவு Clerk, Supervisor, Cashier, QC போன்ற பிரிவுகளுக்கு ஆள்சேர்ப்பு கல்விகற்ற/ கற்காதவர்களுக்கும் தொழில். உங்களுக்கு ஏற்ற வகையில் விமான நிலையம் / துறைமுகம் Driving, Security பிரிவுக்கு கிழமை, மாத சம்பளம் 15,000/= - 35,000/= வரை. உணவு, தங்குமிடம் வழங்கப்படும்.

**077 817 7017, 077 505 2239**
No:157, Kandy Road, Thekkawatta, Vavuniya.

## மகப்பேறு இனவிருத்தி நிலையம்

மகளிருக்கு குழந்தைப்பருவம் தொடக்கம் முதுமை வரையிலான பிரச்சினைகளையும் அடிக்கடி ஏற்படும் அடிவயிற்றுநோ கருச்சிதைவு,மாதவிடாய் உட்பட சகல விதமான பிரச் சினைகளுக்கு சிகிச்சையளித்தலும் மகப்பேறு இனவிருத் திக்கான சிகிச்சைகளும் IVF, ICSI யும் கொடை முட்டை (Donor Egg) விந்து நன்கொடை (Donor Sperm) போன்ற சிகிச்சைகளை ஐக்கிய இராட்சியத்தில் (UK), 40 வருட அனுபவம் கொண்ட வைத்திய நிபுணர் சதானந்தம் அவர்கள் **திருநெல்வேலி நொதேன் சென்றல் வைத்தியசாலையில்** அளித்து வருகின்றார். சென்ற மாதம் இவரின் சிகிச்சை மூலம் இரு தாய்மாருக்கு சோதனைக் குழாய் மூலம் குழந்தைகள் பிறந்தது யாவரும் அறிந்ததே.

தொடர்பு : திருமதி ராஜேஸ்வரி
இல : 077 343 9988,021 221 9988, 021 221 9977 , 021 222 2263

## சட்டென்று சமைப்பதற்கு...

## ஷிப் மெகரல் டின் மீன்




எப்போதும் இல்லத்தரசிகளின் ஒரே தெரிவு

இறக்குமதி செய்து விநியோகிப்போர்

**COLOMBO COMMODITIES**

☎ 0112 421430 / 0112 421432

இல: 71, 4ம் குறுக்குத் தெரு, கொழும்பு 11.



# நீண்டகாலம் பயன் நல்கவல்க பாபாவின் மனித மேம்பாட்டுக் கல்விமுறை

மனித உள்ளத்தை நோக்கிய சத்தியசாயி மனித மேம்பாட்டுக்கல்விமுறைக் கண்காட்சி, யாழ். சன்மார்க்க மகாவித்தியாலயத்தில் 30.10.2016 தொடக்கம் 1.11.2016 வரை நடைபெறுகிறது. அதனையொட்டி இந்த ஆக்கம் எழுதப்பட்டது

வைத்திய கலாநிதி
கு.கணேசமூர்த்தி

தற்காலம் பொன்மயமானதா? அல்லது இருள்மயமானதா?. விஞ்ஞானதொழில் நுட்ப வளர்ச்சியின் அடிப்படையில் பொன்னான காலமாகத் தெரிகிறது. ஆனால்மனிதவிழுமியங்களின்அடிப்படையில் இருள்மயமானதாகவே தெரிகிறது. நீண்டகால மாக, படிப்படியாக் நலிவுற்றுப் போயுள்ளதால் இதைச் சீர்திருத்துவது இலேசான காரியமல்ல. சீர்திருத்துவதற்கும் நீண்ட காலம்தேவை. நீண்டகாலப் பயனைப் பெற வேண்டுமாயின், கல்வி முறைச் சீர்திருத்த மூலமே அதனை அடையலாம் என்று சீன முதுமொழியொன்று கூறுகிறது. இதனை சமயபாட வகுப்புகள் மூலம் ஓரளவு நிவர்த்தி செய்தாலும் விழுமியங்களை மலரச் செய்வதற்கு மனிதமேம்பாடுகள் இணைந்த கல்விமுறையே ஒரேயொரு வழியாகும்.

**மனித மேம்பாட்டுக் கல்வி**

சிறிசத்திய சாயிபாபா மனித மேம்பாட்டுக் கல்விமுறையை 1967ஆம் ஆண்டு அறிமுகம் செய்தார். அது இப்போது இந்தியாவிலும் பல வெளிநாடுகளிலும் நடைமுறையிலுள்ளது. இந்தியாவில் பாலர் வகுப்பு முதல் பல்கலைக் கழகப் பின்படிப்புவரை நடைமுறை யிலுள்ளது. இந்த முறையை பல பிறநாட்டு அரசுகள் ஏற்றுக் கொண்டுள்ளன.

ஒரு கல்வி முறைக்கு அதற்குரிய தத்து வம், நோக்கு, பாடவிதானம், கற் பிக்கும்முறைகள், மதிப்பீடுகள், நீண்டகால அனுபவம், எந்த நாட்டிலும் நடைமுறைப் படுத்தக் கூடியதகைமை என்பவை இருக்கவேண்டும்.

*சத்தியசாயி மனிதமேம் பாட்டுக் கல்வியின் தத்துவமானது;*

மனிதன் தெய்வீகமானவன். அவனுள் உறையும்
தெய்வத்தை வெளிக் கொணர்வதே இந்தக் கல்வி முறையின் தத்துவமாகும்.

இங்கு தெய்வீகம் என்பது ஐந்து அடிப்படை மனித மேம்பாடுகளான அன்பு, சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை ஆகியவற்றையே குறிக்கிறது. உலகிலுள்ள குணாதிசயங்கள் அனைத்தும் இந்த ஐந்தினுள்ளும் அடங்குகின்றன.

இந்த ஐந்துக்கும் அடிப்படை விழுமியம் அன்பேயாகும். இவற்றை மனிதனின் உணர்வு, எண்ணம், சொல், செயல்மூலம்வெளிக்கொணர்வதே இந்தக் கல்வி முறையின் நோக்கமாகும். அத்துடன் அறிவுத் திறனையும், செயற்றிறனையும் நோக்காகக் கொண்டுள்ள.

**மனித மேம்பாடுகளின் இணைப்பு**

ஐந்து அடிப்படை மனிதமேம்பாடுகளின் இணைப்புக் கீழே தரப்பட்டுள்ளது.

அன்பு
பெண்மை - சொல்
சத்தியம்
செயல் -தர்மம்
சாந்தி - அகிம்சை

அன்பு ஒரு மகாசக்தி. அன்பே சிவம் என்று திருமூலர் கூறியுள்ளார். அன்புஉலகவாழ்க்கையில் பல நிலைகளில் வெளிப்படுகிறது. தெய்வீக அன்பே உச்ச நிலையாகும். அது தொடர்ச்சி யானது; நிபந்தனையற்றது. அத்தோடு எதிர்பார்ப் பற்ற துமாகும். இந்தத் தெய்வீக அன்பு, எண்ணம் சொல்லில் சத்தியமாக வெளிப் படுகிறது. சத்தியம் என்றால் உண்மை பேசுதல், எண்ணம் சொல் செயலில் ஒருமையும் தூய் மையும் இருத்தல் தெடங்கி என்றும் மாறாத தத்துவத்தை உணர்வதையே குறிக்கிறது. அன்பு செயலில் வெளிப்படும்போது தர்மமாகிறது. தர்மம் ஈகையில் தொடங்கி தனது இயல்பைத்தானாகவே உணர்ந்துகடமைகளைச் செய்வதையே குறிக்கிறது .அன்பும் சத்தியமும் தர்மமும் ஒன்றுசேர்ந்தால் சாந்தி நிலவும். சாந்தி அக அமைதியான சமநிலையையே குறிக்கிறது. இந்தப் பண்புகளுடன் எல்லாம் ஒன்று என்று விளக்கம் ஏற்பட்டதும். அகிம்சை வெளிப்படும். அகிம்சையென்றால் எண்ணம், சொல், செயல் மூலம் தனக்கும் பிற உயிரினங் களுக்கும் சூழலுக்கும் தீங்கிழைக்காமையையே குறிக்கிறது.

மாணவருக்கு அறிவுத்திறன், செயற்றிறன் ஆகியவற்றை இலேசாகக் கற்பிக்கலாம். மனித விழுமியங்களைக் கற்பிக்க முடியாது. அவற் றைக் கற்பிப்பவர், தனது முன் மாதிரி மூலமே மாணவர்களில் அதனை வெளிக் கொணரலாம். சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி முறை யில் ஆசிரியரின் முன்மாதிரிக்கே முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளது. இந்தக் கல்வி முறையில், ஆசிரியம் நீர்த் தொட்டியாகவும், மாணவர்கள் நீர்க்குழாய்களாகவும், உவமைப்படுத்தப்பட் டுள்ளனர். நீர் தாங்கியில் இருப்பதே குழாய்களில் வரும் என்ற விளக்கத்தை இது கொண் டுள்ளது.

இந்தக் கல்விமுறையின் பாடவிதானம் தேசியக் கல்வியின் பாடவிதானத்தை முழுமையாகக் கொண்டுள்ளது. இந்தக் கல்விப் பாடவிதானத்தில் எவ்வாறு மனித மேம்பாடுகள் இணைக்கப் படலாம் என்றும், பாடசாலையின் சகல நிகழ்வுகளிலும் இணைக்கப்படலாமென்றும் ஆசிரியர் களுக்குப் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன. உதாரணமாக விளையாட்டுப்போட்டியைப் பண்பு விருத்தி விழாவென்றே கொண்டாடுவார்கள். போட்டிக்கு பதிலாக ஒற்றுமையும், குழு முயற்சியும் வலியுறுத்தப்படுகின்றன. முதல் நிலைப் பள்ளியில் பின்வரும் கற்பிக்கும் முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன.

**முதல் நிலைப் பள்ளிகளில்**
**கற்பிக்கும் முறை**

அமைதியாயிருக்க பிரார்த்தனை மேற்கொள்வது;
கதை கூறல்;
குழுப்பாடல், குழுமுயற்சி என்பனவாகும்.
உயர்கல்வி மாணவர்களுக்குத் தியானம், பிரார்த்தனை சமூகசேவை, திட்டப்பணிகள் மூலமும், சமூக வாழ்வின் மூலமும் விழுமியங்கள் வெளிக்கொணரப்படுகின்றன.

இந்தக் கல்விமுறை 50 வருடத்துக்கு மேலான அனுபவத்தைக் கொண்டுள்ளது. இந்தியாவிலும் 95 பிறநாடுகளிலும், நடைமுறைப் படுத்தப்படுகிறது. இதை வலுப்படுத்த இந்தியாவில் 95 சத்தியசாயி பாடசாலைகளும் ஒரு பல்கலைக்கழகமும் 5 வளாகங்களும், வெளிநாடுகளில் 27 பாடசாலைகளும் இயங்குகின்றன.

இலங்கையில் மானிப்பாயில் ஒரு பாட சாலை இயங்குகிறது. இந்தக் கல்விமுறை இலவசமாக அளிக்கப்படுகிறது. பாடசாலைகளில் அன்பின் அடிப்படையில் கட்டுப்பாடு இறுக்கமாகப் பேணப்படுகிறது.

அன்பு
ஒரு மகாசக்தி.
அன்பே சிவம் என்று திரு
மூலர் கூறியுள்ளார். அன்பு உலக
வாழ்க்கையில் பல நிலைகளில்
வெளிப்படுகிறது. தெய்வீக அன்பே உச்ச
நிலையாகும். அது தொடர்ச்சியானது;
நிபந்தனையற்றது. அத்தோடு எதிர்பார்ப்
பற்ற துமாகும். இந்தத் தெய்வீக அன்பு,
எண்ணம் சொல்லில் சத்தியமாக வெளிப்
படுகிறது. சத்தியம் என்றால் உண்மை
பேசுதல், எண்ணம் சொல் செயலில்
ஒருமையும் தூய் மையும் இருத்தல்
தெடங்கி என்றும் மாறாத
தத்துவத்தை உணர் வதையே
குறிக்கிறது.

அனைவரையும் நேசி; அனைவருக்கும் உதவி செய்; எப்போதும் உதவிசெய்; ஒருபோதும் தீங்கு செய்யாதே; என்ற சாயி பாபாவின் போதனை எங்கும், எந்நேரமும், வலியுறுத்தப்பட்டு பின்பற்றப்படுகிறது. இந்தக் கல்வி முறை ஆன்மிக மகானால் தரப்பட்டது. ஒளிமயமான எதிர்காலத்தை உண்டாக்கும் சக்தி கொண்டது. ஒழுக்கமில்லாத கல்வி, கோட்பாடில்லாத அரசியல், நேர்மையற்ற வணிகம், மனித நேயமில்லாத விஞ்ஞானம், ஊழியம் இல்லாத அறுவடை, தியாகம் இல்லாத வாழ்வு என்பவை விரும்பத்தகாதவை மட்டுமல்ல, மிகவும் ஆபத்தானவையுமாகும்.

-சத்தியசாயிபாபா

*சமயம் இல்லாத விஞ்ஞானம் குருடு.*
*விஞ்ஞானம் இல்லாத சமயம் நொண்டி.*
*- அல்பேற் ஜன்ஸ்ரைன்*


சகல அபான்ஸ் எலைட் காட்சியறைகள் தினமும் இரவு 9 மணி வரை திறந்திருக்கும்.
VAT
அதிகரிக்கும் முன் சிறந்த
சேமிப்பு
50%
வரை
தள்ளுபடி
முந்துங்கள். இன்றும் நாளையும் மட்டுமே!!!
குறைந்த அளவு கையிருப்பே உள்ளது
50"
50D39
50" LED TV
ரூ.199,999
ரூ. 99,999
50% தள்ளுபடி
32"
32L2600VE
32" LED TV
ரூ.49,999
ரூ. 34,999
30% தள்ளுபடி
43"
43LF510
LG 43" LED TV
ரூ.109,999
ரூ. 84,999
தள்ளுபடி
Blu-ray 3D
BH7540
LG PREMIUM
ரூ.119,999
ரூ. 59,999
50% தள்ளுபடி
DH4130
LG
ரூ.22,999
ரூ. 16,499
28% தள்ளுபடி
HTD3540
ரூ.27,999
ரூ. 22,999
18% தள்ளுபடி
LG K10
LG
ரூ.24,999
ரூ. 21,999
12% தள்ளுபடி
HPACi3
HP
ரூ.79,999
ரூ. 62,900
34% தள்ளுபடி
IP 300 i3
LENOVO
ரூ.79,990
ரூ. 62,900
30% தள்ளுபடி
IP 300 i5
LENOVO
ரூ.99,990
ரூ. 72,900
27% தள்ளுபடி
LSS-1862QC
LG
ரூ.117,900
ரூ. 99,900
15% தள்ளுபடி
US-Q186C4A4
LG
ரூ.204,900
ரூ. 186,900
09% தள்ளுபடி
15% தள்ளுபடி
TG-2628
TOYOSTAR
ரூ.7,699
ரூ. 6,549
15% தள்ளுபடி
MWM800
MISTRAL
ரூ.2,999
ரூ. 2,549
16% தள்ளுபடி
6GX0FHDXXY
WHIRLPOOL SIDE BY SIDE
ரூ.299,899
ரூ. 249,899
12% தள்ளுபடி
HTR530L-S
HOOVER
ரூ.139,999
ரூ. 122,999
11% தள்ளுபடி
DYN7125D3/1-S
HOOVER
ரூ.89,999
ரூ. 79,999
20% தள்ளுபடி
STS15WST
ரூ.2,899
ரூ. 2,329
011 5 999 000
HOTLINE 5880656
நாடளாவிய ரீதியிலான அபான்ஸ் மற்றும் அபான்ஸ் எலைட் காட்சியறைகளில் பெற்றுக்கொள்ளலாம்.
Abans

# இலங்கையை கண்காணிக்க நிதி உதவியளிக்கிறது அமெ.

கொழும்பு, ஒக் 30
இலங்கை அரசின் நடவடிக்கைகளைக் கண்காணிப்பதற்கும் அரசுக்கு அழுத்தம் கொடுப்பதற்கும் முன்வரும் அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு 5 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்க அமெரிக்க ஜனநாயக மற்றும் மனித உரிமைகள் அமைப்பு தீர்மானித்துள்ளது. இந்த நிதியைப் பெற்றுக் கொள்ள விரும்பும் அரச சார்பற்ற நிறுவனங்களை விண்ணப்பிக்குமாறும் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (தி)

## சைக்கிள் திருட்டு

சங்கானை வலி. மேற்குப் பிரதேச செயலகத்தில் கடந்த புதன் கிழமை பெண்கள் சைக்கிள் ஒன்று களவாடப் பட்டுள்ளது. வட்டுக்கோட் டையைச் சேர்ந்த முன்பள்ளி ஆசிரியை ஒரு வரின் சைக்கிளே களவு போயுள்ளது. இவ்வாறான களவுகள் செயலகத்தில் தொடர்ச்சியாக நடைபெற்றதை அடுத்து சைக்கிள் பாதுகாப்பிற்கென ஒருவர் நியமிக்கப் பட்டார் எனினும் சைக்கிள் களவு போயுள்ளது என்று பொதுமக்கள் தெரிவித்தனர். (ற-29)



யாழ். தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் மூன்று மாடிக் கட்டடம் ஒன்றை நிர்மாணிக்கவெனப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 55 மில்லியன் ரூபாவை வழங்கியுள்ளார். நாடாளுமன்றக் கட்டடத்தில் கடந்த புதன்கிழமை இதற்கான நிதி கல்லூரியின் அதிபர் வரதனிடம் வழங்கப்பட்டது. இந்த நிகழ்வில் எதிர்க்கட்சித் தலைவர் இரா. சம்பந்தன், அமைச்சர்கள் டி.எம்.சுவாமிநாதன், ரவி கருணாநாயக்க, இராஜாங்க அமைச்சர் விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, ஈ.சரவணபவன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (தி)

CHELVA MAHAL
No: 1229, Poonari Marathady,
K.K.S. Road, Jaffna.
Tel: 021 221 9779




# தென்மரவாடிக் கிராமத்தில் மேம்பாலம் அமைக்கவேண்டும்

## நிதியமைச்சரிடம் கூட்டமைப்பு கோரிக்கை

யாழ்ப்பாணம், ஒக். 30
வடக்கு கிழக்கு மாகாணத்தின் இணைப்பு பாலமாக விளங்கவுள்ள கொக்குத் தொடுவாய் தென்னமரவாடிக் கிராமத்துக்கு இடையில் ஓர் மேம்பாலம் அமைத்துத் தருமாறு நிதி அமைச்சர் ரவி கருணாநயக்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளதாக திருகோணமலை மாவட்ட தமிழ்த் தேசி யக் கூட்டமைப் பின் நாடாளுமன்ற உறுப்பினர் க.துரைரத்தினசிங்கம் தெரிவித்தார்.
அவர் தெரிவித்ததாவது:-
வடக்கு-கிழக்கு மாகாணத்தின் எல்லையில் உள்ள கொக்குத்தொடுவாய் தென்னமரவாடிக் கிராமத்துக்கு இடையில் அமைந்துள்ள சிறு நீரேரிப் பரப்பின் ஊடாக மேம்பாலம் அமைத்துத் தருமாறு முல்லைத்தீவு மாவட்ட மக்களும் திருகோணமலை மாவட்ட மக்களும் நீண்ட காலமாக கோரிக்கை விடுத்து வந்தனர். அவர்களின் கோரிக்கை எனது கவனத்துக்கும் கொண்டுவரப்பட்டது.
குறித்த விடயம் தொடர்பில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டிருந்த நிலையில் இதன் முக்கியத்துவம் தொடர்பில் ஆராய்ந்தோம். சுமார் 3 கிலோ மீற்றர் தூரத்தைத் தாண்டுவதற்காக சுமார் 20 கிலோ மீற்றர் தூரம் சுற்றிப் பயணிக்க வேண்டிய நிலையிலேயே தமது நித்தியகடமைகளைமேற்கொள்கின்றனர். இவற்றை அடிப்படையாகக் கொண்டு குறித்த பகுதியில் ஓர் மேம்பாலம் அமைத்துக் கொடுக்க முன்வருமாறு நிதி அமைச்சர் ரவி கருணாநயக்காவிடம் வேண்டுகோள் விடுத்துள்ளோம். குறித்த பாலத்திற்கான ஓர் உத்தேச செலவு மதிப்பீடும் கோரப் பட்டுள்ளது.
இதனால் இதற்கான உத்தேச செலவு மதிப்பீட்டை வழங்கி எதிர்வரும் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கீடு செய்யுமாறு நிதி அமைச்சரிடம் கோரவுள்ளோம்-என்றார். (த-101)

## தொலைபேசிக் கட்டணத்தில் மூன்றில் ஒரு பகுதி வரி

எதிர்வரும் நவம் பர் முதலாம் திகதி முதல் நடை முறைக்கு வரவுள்ள புதிய வற்வரி மற்றும் தேசத்தைக் கட்டியெழுப்புவதற்கான வரி என்பவற்றினால் தொலைபேசி முற்கொடுப்பனவு அட்டை பயன்படுத்துபவர்கள் மூன்றில் ஒரு பகுதியை வரி யாகச் செலுத்த வேண்டும் என அரச நிதிக் கொள்கை வகுப் புத் திணைக்களத்தின் அதிகாரி யொருவர் கூறியுள்ளார். தொலைபேசி அழைப்புக்களுக்கு மேற்படி இரு வரிகளுக்கும் புறம்பாக மேலும் இரு வகையான வரிகள் அறவிடப்படவுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.
நவம்பர் முதலாம் திகதியின் பின்னர், தொலைபேசிக் கட்டணமாக 150 ரூபா செலுத்தும் ஒருவர், 100 ரூபாவின் சேவையையே பெற்றுக் கொள்ள முடியும். ஏனைய 50 ரூபாவை மேலதிகமாக வரியாகச் செலுத்தவேண்டும் என அந்த அதிகாரி தெளிவு படுத்தினார். (தி)



## வெளி இடங்களில் நியமனம் பெற்றவர்களுக்கு

மூதூர், ஒக். 30

வெளிமாகாணத்தில் ஆசிரியர் நியமனம் பெற்ற பட்டதாரிகளின் நியமன மூலப்பிரதியை இன்று ஞாயிற்றுக்கிழமை உடனடியாக கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாரின் அலுவகத்தில் சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர்.

பட்டதாரிகளுக்கான ஆசிரியர் நியமனங்களின்போது கிழக்கு மாகாணத்தைச் செர்ந்த 215 ஆசிரியர்கள் வெளி மாகாணங்களுக்கு நியமிக்கப்பட்டிருந்தனர்.

இவர்களின் நியமனங்கள் கிழக்கு மாகாணத்துக்கே வழங்க அரசு சம்மதித்ததைத் தொடர்ந்து அதற்கான பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன. நேற்றும் இன்றும் அதற்கான ஆவணங்களைச் சமர்ப்பிக்க முடியம் என்று மாகாண அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார்.

எனவே இன்று ஞாயிற்றுக்கிழமையே இறுதி நாள் என்பதனால் சம்பந்தப்பட்ட ஆசிரியர்கள் அவற்றை இன்று சமர்ப்பிக்குமாறு கோரப்பட்டுள்ளனர். (த-4-40)

## நீர்கொழும்பு சிறையிலிருந்து 6 கைதிகள் தப்பியோட்டம்

கொழும்பு, ஒக் 30

நீர்கொழும்பில் உள்ள தலுபொத சிறைச்சாலையில் இருந்த 6 கைதிகள் தப்பிச் சென்றுள்ளனர்.

இவர்கள் நேற்றுக் காலை தப்பித்துச் சென்றனர் என்று சிறைச்சாலைகள் திணைக்களம் தெரிவித்தது.

இவ்வாறு தப்பிச் சென்றுள்ளவர்கள் ஹெரோயின் மற்றும் வீடுகளை உடைத்தல் குற்றச்சாட்டில் தடுத்து வைக்கப்பட்டவர்கள் என்றும் சிறைச்சாலை அதிகாரிகள் கூறினர்.

தப்பிச் சென்ற கைதிகளை மீண்டும் கைது செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. (த)

## மொரட்டுவ பல்கலை வளாகத்தில் சடலம்

கொழும்பு, ஒக் 30

மொரட்டுவ பல்கலைக்கழக வளாகத்தில் நேற்று சனிக்கிழமை காலை சடலமொன்று மீட்கப்பட்டது.

பல்கலைக்கழக காவலாளியிடம் இருந்துபெறப்பட்ட தகவலுக்கு அமைய இந்தச் சடலம் மீட்கப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பிரிவு குறிப்பிட்டுள்ளது. மொரட்டுவ கட்டுபெத்த பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயதுடைய ஆண் ஒருவரது சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது.

பல்கலைக்கழகத்திலுள்ள மாமரத்தின் கீழ் காணப்பட்ட இந்தச் சடலம் மீட்கப்பட்டது குறித்த நபர் மரத்திலிருந்து வீழ்ந்திருப்பார் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர். (த)






உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450
செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## முறிந்துபோன நம்பிக்கை

வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் மெல்ல மெல்லத் தனது செல்வாக்கை இழந்துவிட்டார் என்பது மாகாண சபையின் கடந்த அமர்வில் அப்பட்டமாகிவிட்டது. பிரதி அவைத் தலைவர் தெரிவை அவரது கோரிக்கையையும் மீறி சபை நடத்தி முடித்ருப்பதும், அதில் முதலமைச்சர் ஆதரவு அணி தோல்வியடைந்திருப்பதும் இதனைப் பட்டவர்த்தனமாக்கியிருக்கிறது. இந்தத் தேர்தல் கிட்டத்தட்ட முதலமைச்சர் மீதான ஒரு நம்பிக்கையில்லாத் தீர்மானத்தைப் போன்றது.

விக்னேஸ்வரன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தெரிவு. போருக்குப் பின்னரான மென்போக்குத் தலைமையின் அடையாளமாகக் காலத் தேவை கருதிக் கொண்டுவரப்பட்டவர். ஆயுதப் போர் ஒன்றை வெகு தீவிரமாக நடத்தி வந்த தமிழர்கள், அதில் தோற்றபோது, மீண்டும் அது போன்ற வன்முறை வழிக்குத் திரும்பாதிருப்போம் என்பதை உலகுக்குச் சொல்லும் அடையாளமாகத் தருவிக்கப்பட்டவர். சிங்களத் தலைமைகளுடான அவரின் உறவும், தெற்கில் அவரின் இருப்பும் அவருக்கான தகுதிகளாகக் கொள்ளப்பட்டன.

ஆனால், கூட்டமைப்பில் இருக்கும் எல்லாத் தலைவர்களும் ஒன்றுகூடி வந்துகேட்டால்தான் முதலமைச்சர் வேட்பாளராவார் என்று அப்போது விக்னேஸ்வரன் அடம்பிடித்தார். பல சந்திப்புக்களின் பின்னர் கூட்டமைப்பில் அப்போதிருந்த 4 கட்சிகளின் தலைவர்களும் சென்று அவரிடம் நேரில் கேட்டுக்கொண்ட பின்னர் தேர்தல் களத்தில் - அரசியலில் - குதித்தார்.

கூட்டமைப்பினால் அவர் வெற்றிபெறச் செய்யப்பட்டார். அதிகூடிய விருப்பு வாக்குகளையும் பெற்றார். மாகாண சபை உறுப்பினர்களின் ஏகோபித்த ஆதரவோடு முதலமைச்சரானார். ஆனால் கூட்டமைப்பின் தலைமையுடன் முரண்பட்டுக்கொண்டு அவர் தனி வழி போகத் தொடங்கியபோது, அவரது புகழ் மங்கத் தொடங்கியது. மக்கள் அவரைச் சந்தேகக் கண்கொண்டு பார்க்கத் தொடங்கினர். வேறு சிலரோடு சேர்ந்து நின்றுகொண்டு உண்ட வீட்டுக்கு இரண்டகம் செய்வதைப்போன்ற அவரது செயலால் தமிழ் மக்கள் விசனப்பட ஆரம்பித்தனர்.

இந்த நிலமையின் எதிரொலி மாகாண சபை உறுப்பினர்களிடமும் பரவலாயிற்று. ஆரம்பத்தில் மாகாண சபை உறுப்பினர்கள் பலர் முதலமைச்சரின் செயற்பாடுகள் சிலவற்றில் கடும் அதிருப்தி கொண்டிருந்தாலும் கூட, அவரை எதிர்ப்பதற்குத் துணிந்ததில்லை. நடந்து முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் பகிரங்கமாகவே கூட்டமைப்பை அவர் ஆதரிக்க மறுத்ததுடன், கூட்டமைப்பின் எதிராளிகளுக்கு மறைமுக ஆதரவை வழங்கியபோது அவர் மீதான நம்பிக்கை மாகாண சபைக்குள் சரிந்தது. ஆனால், முற்றாக இழக்கப்படவில்லை. அப்போதே அவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரப்பட வேண்டும் என்று ஒரு பகுதியினர் துடித்தனர். எனினும் அதனைப் பரீட்சித்துப் பார்ப்பதற்குத் துணியவில்லை. காரணம், முதலமைச்சர் மீது உறுப்பினர்களுக்கு எஞ்சியிருந்த பாசம், நேசம்.

அப்படிப்பட்ட உறுப்பினர்கள், இப்போது முதலமைச்சரின் முடிவுக்கு எதிராக வாக்களித்து அவரது ஆதரவு அணியினரின் வேட்பாளரைத் தோற்கடிக்கும் அளவுக்கு வந்திருக்கிறார்கள் என்றால், முதலமைச்சர் மீதான நம்பிக்கையை அவர்கள் இழந்துவிட்டார்கள் என்றே அர்த்தம். அண்மையில் முதலமைச்சர் நடத்திய எழுக தமிழ் ஊர்வலத்தில், மாகாண சபை உறுப்பினராகவோ நாடாளுமன்ற உறுப்பினராகவோ தெரிவாவதன் மூலம் தமிழர்களின் உரிமையை வென்றெடுக்க முடியாது என்றசாரப்படத் தெரிவித்திருந்தார். அப்படி அவர் தெரிவித்த பின்னர் அவர் முதலமைச்சராக இருந்து என்ன பயன் என்று உறுப்பினர்கள் நினைத்துவிட்டனரோ தெரியவில்லை. அவருக்கு எதிராக வாக்களிக்கவும் அவரைத் தோற்கடிக்கவும் துணிந்தனர். உறுப்பினர்களின் நம்பிக்கையை இழந்த பின்னரும் விக்னேஸ்வரன் ஏன் முதல்வராக இருக்கிறார் என்பதை அவர்தான் மக்களுக்குத் தெளிவுபடுத்தவேண்டும்.

# கயிறு இழுப்பாக ஆகிப்போன பிரதி அவைத் தலைவர் தெரிவு

## நீயா நானா பலப் பரீட்சையில் தமிழரசுக்கட்சி உறுப்பினரே வெற்றி

திருமுருகன்

வடக்கு மாகாண சபையின் பிரதி அவைத் தலைவர் தேர்வு நடந்து முடிந்திருக்கின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினுள் எந்தப் பிளவும் இல்லை என்று தலைமைகள் சத்தியம் செய்து, திரும்பத் திரும்ப அடித்துச் சொன்னாலும், கூட்டமைப்பு இரண்டாகப் பிளவுபட்டு விட்டது என்பதையே பிரதி அவைத் தலைவர் தெரிவு விடயம் சுட்டி நிற்கின்றது.

நாடாளுமன்றத் தேர்தலில் நடுநிலைமை வகிக்கப் போகின்றேன் என்ற வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனின் முடிவுடன், கூட்டமைப்பின் பிளவு மேலும் கூர்வடைந்தது. கூட்டமைப்புக்குள்ளே இருந்து அதன் கூட்டுக்கு வேட்டு வைத்துக் கொண் டிருந்த சுரேஸ் பிரேமச்சந்திரன் போன்றவர்கள், நாடாளுமன்றத் தேர்தலில் மக்களால் நிராகரிக்கப்பட்டனர். இவ்வாறானவர்கள், முதலமைச்சரைப் பிடித்துக்கொண்டு அவருக்கு மகுடி ஊதிக்கொண்டு, ஒன்றாக இணைந்து கொண்டனர்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியும் அதனுடன் இணைந்த அணியினரும் ஒருபுறம், கூட்டமைப்பின் கூட்டைக் குலைப்பவர்கள் ஒரு புறமுமாக இரு அணிகள் உருவாகின. நாடாளுமன்றத் தேர்தலின் பின்னரான வடக்கு மாகாண சபையின் அமர்வுகள் ஒவ்வொன்றிலும் இந்தப் பிளவு தலைகாட்டிக் கொண்டேயிருந்தது.

வடக்கு மாகாண விவசாய அமைச்சர் பொ.ஐங்கரநேசன் மீதான ஊழல் குற்றச்சாட்டு, பொருளாதார வலயம் எங்கே அமைப்பது என்ற மோதல், இறுதியாக வடக்குப் பிரதி அவைத் தலைவர் தெரிவு ஆகிய விடயங்கள், கூட்டமைப்பை குலைத்தமையினால் ஓர் அணி, இன்னோர் அணி மீது ஆதிக்கம் செலுத்துவதில் அதி உச்சமாக முரண்பாடடைந்த விடயங்களாகக் கொள்ள முடியும்.

ஆகப் பிந்தியதாக நடந்து முடிந்தது வடக்கு பிரதி அவைத் தலைவர் தெரிவு விடயம்தான்.

வடக்கு மாகாண சபைத் தேர்தல் 2013 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 21 ஆம் திகதி நடந்து முடிந்தது. மூன்றிலிரண்டு பெரும்பான்மையையும் தாண்டி கூட்டமைப்புக்கு ஆசனங்கள் கிடைத்தன.

அமைச்சுப் பதவிகளுக்காக ஆளுக்காள் அடிபட்டுக் கொண்டனர். அணி பிரிந்து நின்றனர். ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பில் போட்டியிட்ட ஐங்கரநேசனுக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட் டது. அந்தக் கட்சியின் தலைவர் சுரேஸ் பிரேமசந்திரன் அதனை உடனடியாக நிராகரித்தார். தன்னுடைய தம்பி சர்வேஸ்வரனுக்கே அந்தப் பதவி வேண்டும் என்று கோரி நின்றார்.

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு அமைச்சுப் பதவி கிடைக்கவில்லை. இதனால் பிரதி அவைத் தலைவர் பதவி அந்த மாவட்டத்திற்கு வழங்கப்பட்டது. அந்தப் பதவியை இதற்கு முன் அலங்கரித்திருந்த அன்ரனி ஜெகநாதனின் சாவு நிகழ்ந்த சில தினங்களிலேயே, முதலமைச்சருக்கு மிக நெருக்கமானவராக தன்னைக் காட்டிக் கொள்கின்ற அமைச்சர் ஐங்கரநேசன், முல்லைத்தீவு மாவட்ட புளொட்டின் மாகாண சபை உறுப்பினர் சிவநேசன் (பவான்) பெயரை பிரதி அவைத் தலைவர் பதவிக்கு, பரிந்துரைத்திருந்தார்.

அன்ரனி ஜெகநாதன் தமிழ் அரசுக் கட்சியைச் சேர்ந்தவர். அதனால் முல்லைத்தீவில் ஏற்பட்ட வெற்றிடம் முல்லைத்தீவைச் சேர்ந்த தமிழ் அரசுக் கட்சி உறுப்பினர் கமலேஸ்வரனுக்கே வழங்கப்பட வேண்டும் என்று, அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் ஓர் அணியினர் கருத்துத் தெரிவிக்கத் தொடங்கினர். அன்ரனி ஜெகநாதனின் இறுதி ஊர்வலம் நடந்த அன்று, கடந்த 6 ஆம் திகதி வடக்கு மாகாண சபை அமர்வும் நடந்தது. அதற்கு முதல் நாள் நடந்த அமைச்சரவைக் கூட்டத்தில் பேசிய முதலமைச்சர், நாளைய அமர்வில் (6 ஆம் திகதிய 63 ஆவது அமர்வில்) புதிய அவைத் தலைவரை நியமிக்க வேண்டும் என்று அந்தரப்பட்டிருக்கின்றார். ஆனாலும் அமைச்சர்கள் அதற்கு ஒப்புக் கொள்ளவில்லை. இதனால் சபையின் 63 ஆவது அமர்வில் புதிய பிரதி அவைத் தலைவர் தெரிவு நடக்கவில்லை.

வடக்கு மாகாண சபையின் 64 ஆவது அமர்வில், புதிய அவைத் தலைவர் தெரிவுக்கான விடயம் குறிப்பிடப்பட்டு நிகழ்ச்சி நிரல் உறுப்பினர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது. இந்தச் சமயத்தில் வடக்கு முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் நாட்டில் இல்லை. பதில் முதலமைச்சராக த்.குருகுலராஜா செயற்பட்டுக் கொண்டிருந்தார்.

நான் இல்லாத நேரத்தில் பிரதி அவைத் தலைவர் தெரிவு நடத்த வேண்டாம் என்று பணிப்புரை விடுப்பதாக, வெளிநாட்டில்





நின்று கொண்டு அவைத் தலைவருக்கு அவசர மின்னஞ்சல் அனுப்பினார் முதலமைச்சர். தனது பதவியை இன்னொருவரிடம் கையளித்து விட்டு வெளிநாட்டில் நின்று கொண்டு, இங்குள்ள தனது அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுக்க முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்கின்றனர் சட்டம் தெரிந்தவர்கள்.

இதனால்தானோ என்னவோ, அந்த ஒரு கடிதத்துடன் முதலமைச்சர் விடயத்தை நிறுத்திக் கொண்டார். இதன் பின்னர் பதில் முதலமைச்சர் குருகுலராஜாவே, அவைத் தலைவரிடம் இந்தத் தெரிவை ஒத்திப்போடுமாறு கோரிக்கை விடுத்துக் கொண்டிருந்தார்.

கடந்த வியாழக் கிழமை மாகாணசபையின் 64 ஆவது அமர்வு ஆரம்பமாவதற்கு முன்னர், சபை நடவடிக்கைக் குழுக் கூட்டம் அவைத் தலைவர் அறையில் நடைபெற்றது. அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானம், ஜி.ரி.லிங்கநாதன், எம்.கே.சிவாஜிலிங்கம், க.சர்வேஸ்வரன், ஜனோபர், ஜெயதிலக ஆகியோர் இதில் கலந்து கொண்டனர்.

சுரேஸ் பிரேமசந்திரனின் சகோதரர் சர்வேஸ்வரன் மற்றும் சிவாஜிலிங்கம் ஆகியோர் முதலமைச்சர் வந்த பின்னரே தெரிவு நடத்த வேண்டும் என்று வலியுறுத்தினர். அவைத் தலைவர் சி.வி.கே.சிவஞானமோ, மாகாண சபைகள் கட்டளைச் சட்டத்தின் 7 ஆம் பிரிவு, வடக்கு மாகாண சபை விதி 6 இன் பிரகாரம், பிரதி அவைத் தலைவர் வெற்றிடம் விரைவாக நிரப்பப்பட வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டினார். இதனடிப்படையில் சபையில் பிரதி அவைத் தலைவர் தேர்வை நடத்துவது என சபை நடவடிக்கைக் குழு தீர்மானித்தது. சபை ஆரம்பமானது. பிரதி அவைத் தலைவர் தெரிவுக்கான அறிவிப்பு அவைத் தலைவரால் வெளியிடப்பட்டது. இதன்போது இதனை முதலமைச்சர் சொன்னதைப் போன்று ஒத்திவைக்கவேண்டும் என்று ஒரு அணியினரும், அன்றைய தினமே நடத்தப்பட வேண்டும் என்று இன்னொரு அணியினரும் மல்லுக் கட்டினர்.

இறுதியில் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், முல்லைத்தீவு மாவட்ட உறுப்பினர் வ.கமலேஸ்வரனின் பெயரைமுன்மொழிந்தார். ஆளும் கட்சி உறுப்பினர்ஆனோல்ட் வழிமொழிந்தார்.

உடனேயே, அதனை ஏகமனதான தெரிவாக ஏற்றுக் கொள்ளாமல், பிரதி அவைத் தலைவர் தெரிவை பிற் போடுமாறு கோரிய தரப்புக்குத் தலைமை தாங்கிய சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரனின் பெயரை முன்மொழிய, சர்வேஸ்வரன் அதனை வழிமொழிந்தார்.

> நான் இல்லாத நேரத்தில் பிரதி அவைத் தலைவர் தெரிவு நடத்த வேண்டாம் என்று பணிப்புரை விடுப்பதாக, வெளிநாட்டில் நின்று கொண்டு அவைத் தலைவருக்கு அவசர மின்னஞ்சல் அனுப்பினார் முதலமைச்சர். தனது பதவியை இன்னொருவரிடம் கையளித்து விட்டு வெளிநாட்டில் நின்று கொண்டு இங் குள்ள தனது அதிகாரிகளுக்கு பணிப் புரை விடுக்க முதலமைச்சருக்கு அதிகாரம் இல்லை என்கின்றனர் சட்டம் தெரிந்தவர்கள்.

முதலமைச்சரின் அணியினராக தம்மை அடையாளப் படுத்திக் கொள்பவர்கள், போட்டியைத் தொடக்கி வைத்தனர் – பிளவுக்கு பிள்ளையார் சுழி போட்டனர்.

இது இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி எதிர், ஈ.பி.ஆர்.எல்.எவ், புளொட், ரெலோ, தமிழ் அரசுக் கட்சி அதிருப்தி அணி மோதலாக மாறியது. வேட்பாளர்கள் அறிவிக்கப்பட்ட பின்னர் அவை தேநீர் இடைவேளைக்காக ஒத்தி வைக்கப்பட்டிருந்தது. சிவாஜிலிங்கம் தேநீர் இடைவேளையின்போது அனந்திக்காக வாக்குச் சேகரிப்பில் வலு மும்மரமாக ஈடுபட்டார். அவை ஆரம்பமானதுமே ஏற்கனவே தயாராக இருந்த வாக்குச் சீட்டுக்களைப் பயன்படுத்தி வாக்களிப்பு நடந்தது. முடிவு, கமலேஸ்வரன் 18 வாக்குகளைப் பெற்றுக் கொள்ள, அனந்தியால் 13 வாக்குகளை மாத்திரமே பெற முடிந்தது.

கமலேஸ்வரனுக்கு ஆதரவாக, சி.வி.கே.சிவஞானம், அ.பரஞ்சோதி, கே.சயந்தன், ஜி.குணசீலன், வ.கமலேஸ்வரன், ச.சுகிர்தன், வே.சிவயோகன், அ.அஸ்மின், ஜி.ரி.லிங்கநாதன், வி.தர்மலிங்கம், பா.டெனீஸ்வரன், ப.சத்தியலிங்கம், அரியரட்ணம், ரிப்கான் பதியுதீன், ஜெயதிலக, அகிலதாஸ், ஜவாகிர் ஆகியோர் வாக்களித்தாகச் சொல்லப்படுகின்றது. திருமதி அனந்தி சசிதரனுக்கு ஆதரவாக, எம்.கே.சிவாஜிலிங்கம், திருமதி அனந்தி சசிதரன், து.ரவிகரன், க.சிவநேசன், க.விந்தன், மயூரன், க.சர்வேஸ்வரன், தியாகராசா, இந்திரராசா, பொ.ஐங்கரநேசன், த.குருகுல ராஜா, பா.கஜதீபன், பிறிமுஸ் சிராய்வா ஆகியோர் வாக்களித்தாகச் சொல்லப்படுகின்றது.

வடக்கு மாகாண சபையின் கடந்த மூன்று ஆண்டு கால வரலாற்றில் எந்தவொரு விடயமும் வாக்கெடுப்புக்கு விடப்பட்டது கிடையாது. ஆனால் எல்லாவற்றையும் 64 ஆவது அமர்வு தலைகீழாக மாற்றி விட்டது.

கமலேஸ்வரன் பிரதி அவைத் தலைவர் பதவிக்கு நிறுத்தப்படுவார் என்பது முன்னரே தெரிந்த விடயம். இதனால் முதலமைச்சரின் அணி என்று சொல்லிக் கொள்பவர்கள், 64 ஆவது அமர்வை இரண்டு திட்டங்களுடன் எதிர் கொண்டார்கள். பிரதி அவைத் தலைவர் தேர்வை அமர்விலிருந்து எப்படியாவது நிறுத்துவது. அது முடியாவிட்டால், தமிழ் அரசுக் கட்சி பிரேரிக்கும் நபருக்கு எதிராக ஒரு போட்டியாளரை நிறுத்துவது என்பது.

எதிர்ப் போட்டியாளராக யாரை நிறுத்துவது என்பதில் அவர்களுக்கு மிகக் குறைந்த தெரிவுகளே இருந்தன. அவர்களது அணியில் இருந்தவர் முல்லைத் தீவு மாவட்ட வேட்பாளர் சிவநேசன் (பவான்) மட்டுமே. அவரை கமலேஸ்வரனை எதிர்த்து நிறுத்தினால், சிக்கல் ஏற்படும் என்பது முதலமைச்சருக்கு ஆதரவான அணியினருக்குத் தெரியும். ஆகவே போட்டி என்று வரும் போது மாவட்டத்தைப் பார்த்து வேட்பாளரை நிறுத்த முடியாது என்பதால், அனந்தி சசிதரனே வாக்குகளை ஓரளவாவது பெறக் கூடியவர் என்று கருதி அவரை வேட்பாளராக நிறுத்தும் திட்டத்துடனேயே இருந்தார்கள். அதன்படியும் செய்தார்கள். முல்லைத்தீவு மாவட்டத்துக்கு அமைச்சுப் பதவி வழங்கப்படாமையாலேயே, பிரதி அவைத் தலைவர் பதவி அம் மாவட்டத்துக்கு வழங்கப்பட்டது. அதனையும் தட்டிப் பறிக்கும் நோக்குடன் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த மாகாண சபை உறுப்பினர்கள் அனந்தியை நிறுத்தினர். இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியை விட, தாங்கள் அதிகாரம் செலுத்த வேண்டும் என்ற சுயநல "ஈகோ"வில், அனந்தி சசிதரனை வேட்பாளராக நிறுத்தி தங்கள் முகத்தில் கரியைப் பூசிக் கொண்டிருக்கின்றார்கள்.

## ஆவரங்கால் சந்தி - அச்சுவேலி-தொண்டமானாறு வீதிக்கு ஏன் இந்த நிலை

வாசகர் திருமுகம் மூலம் இருதடவைகள் இந்த வீதி புனரமைப்புத் தொடர்பாக தெரியப்படுத்தி ஒரு வருடம் ஆகின்றது. பொறுப்பானவர்கள் அந்தச் செய்தியை பார்வையிட்டார்களோ தெரியவில்லை. ஆனால் இந்தவீதியைத் தரமற்றதாக புனரமைத்தார்கள் என்றே கணிக்க முடிகின்றது. பல லட்சங்கள் செலவாகியிருக்குமோ தெரியவில்லை. காரணம் சிறுகற்கள் (சிப்ஸ் கருங்கல்) பரவி தார் ஊற்றியிருக்கின்றார்கள். ஊற்றிய தார் அப்பியாசக் கொப்பியில் கோடிட்டமாதிரி உள்ளது. சிறுகற்களோ, வீதி இருமருங்கிலும் வாகனம் செல்ல ஒதுங்கியுள்ளது. இதனால் குறுக்கு வீதியால் திரும்பும்போது கூட, விபத்து ஏற்பட வாய்ப்பை ஏற்படுத்தித் தந்திருக்கிறார்கள்.

கடந்த வாரம் பிறிதொரு பத்திரிகையில் ஆவரங்கால் சந்தியில் இருந்து தொண்டமானாறு வரை வீதித் திருத்தத்தை, வீதி அபிவிருத்தி அதிகாரசபை மேற்கொண்டதாகச் செய்தி வந்தது. அதன் பின் தொண்டைமானாறு சந்நிதிமுருகன் ஆலயம் சென்றபோது, இந்த வீதியை வீதி அபிவிருத்தி அதிகார சபையா மேற்கொண்டது என எண்ணக் கவலை யாக இருந்தது. ஆனால் இந்த வீதியை அகலிப்புச் செய்து ஏனைய பிரதானவீதிகளைப் போன்று இதனையும் செப்பனிடக் கோரியே தெரியப் படுத்தப்பட்டது. இதனை சம்பந்தப்பட்ட திணைக் களமோ அல்லது நிதி ஒதுக்கீடு செய்த அமைச்சோ பாராமுகமாக உள்ளமை மிகவும் மனவேதனையாக இருக்கின்றது. அது மட்டுமா திணைக்களங்களுக்கு ஒதுக்கப்பட்ட பணமே திரும்பும் நிலையில் ஏன்தான் திணைக்கள அதிகாரிகள் ஊழியர்களை வைத்துக் கொண்டு செயற்படுகிறார்களோ தெரியவில்லை. அவர்களும் இந்தப் பகுதிகளைச் சேர்ந்தவர்கள் தானே? ஏன்தான் பாராமுகமாக இருக்கிறார்களோ தெரியவில்லை. இந்த வீதி பல வளைவுகள் கொண்டதால் வாகனங்கள் விலத்திச் செல்ல மிகவும் கஷ்டமாக உள்ளது. அதுமட்டுமல்ல பிரதேச வைத்தியசாலையும் இங்கு உண்டு. அங்கிருந்து அவசர சிகிச்சைக்காக் நோயாளர் காவு வண்டி கூட மிக விரைவாகச் செல்லமுடியாத சூழ்நிலையும் உள்ளது. எனவே இந்த வீதியின் இரு மருங்கிலும் உள்ள காணி உரிமையாளர்களுடன் உரிய திணைக்களங்கள் கலந்துரையாடி, அவர்களது ஒத்துழைப்புடன் மழை காலத்துக்கு முன்பு இந்த வீதியை அகலித்துப் புனரமைப்புச் செய்ய பிரதேசசபை, பிரதேச செயலகம், வீதி அபிவிருத்தி அதிகாரசபை என்பவை கூடிய கவனம் எடுத்து செயற்படுத்துமாறு மக்கள் சார்பாக கேட்டுக் கொள்கின்றேன்.

தவச்சந்திரன்.
அச்சுநகர்.

## சொல்வழு குறித்துச் சுட்டிக் காட்டினால் ஏற்றுக்கொள்வீர்களா?

தங்கள் பத்திரிகையில் சுத்தவாளி என்பதைச் சுற்றவாளி எனத் தொடர்ந்து பிரசுரிக்கிறீர்கள். சுத்தவாளி என்பதே சரியான எழுத்து வடிவம். சுத்தமான நபர்; குற்றமற்றவர், பிழை செய்யாதவர் எனப் பொருள்படுவது. குற்றவாளி என்பதற்குச் சுத்தவாளி என்பதே சரியான எதிர்ப்பதம் ஆகும். சுற்றவாளி அன்று.

இதேபோல் அண்மையில் ஒருவருக்கத் தென்னீர்க்குக் குற்றி ஏர்ப்பு ஆக்கியிருந்தது என்றொரு செய்தி உதயனில் பிரசுரமாகியிருந்தது. இங்கே ஏர்ப்பு என்பது பிழையாகும். ஈர்ப்பு என்பதே சரியாகும். ஈர்ப்பு வலி என்பதே சரி; ஏர்ப்பு வலி, ஏற்பு வலி என்பவை பிழையானவை. ஈர்ப்பு வலி வராமல் தடுக்கும் ஊசியை ஈர்ப்பூசி அல்லது, ஈர்ப்புத்தடுப்பூசி அல்லது ஈர்ப்புவலித்தடுப்பூசி என அழைக்கலாம். எதிர்காலத்தில் இவற்றைக் கவனத்தில்கொண்டு சரியான சொற்பதத்தைப் பயன்படுத்துவீர்களா?


வே.பேரின்பச்செல்வன்
அல்வாய் வடக்கு
அல்வாய்.

வாசகர் திருமுகம் பகுதிக்கு எழுதுபவர்கள் தமது பெயர், முகவரி, தொடர்பு எண் என்பவற்றை நிச்சயம் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். சொந்தப் பெயரை வெளியிட விரும்பாதவர்கள் அது பற்றிக் குறிப்பிட்டு, புனை பெயரையும் எழுதி அனுப்பலாம். ஆனால் உண்மையான விவரங்கள் குறிப்பிடப்படாத வாசகர் திருமுகங்கள் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டா. எழுதியவர்களின் விவரங்கள் குறித்த இரகசியங்கள் தேவைப்படும் பட்சத்தில் காக்கப்படும்.

# நீரிழிவும் மன அழுத்தமும்

ச.சுதாகரன்

மன அழுத்தமானது உடலில்நோய், விபத்து, சோகம், துக்கம், கவலை, பயம், யோசனை, குளிர், அதிகசூடான காலம், கோபம், கடன், இழப்பு போன்ற பல காரணங்களாலோ அல்லது வெளித்தாக்கத்தினாலோ ஏற்படுகின்றது. இவ்வாறு எல்லாவித மன அழுத்தத்தினாலும் பாதிக்கப்படுவது மூளையே ஆகும். இவ்வாறு பாதிக்கப்படும் போது எமது மூளையில் இருந்து சைகைகள் (அறிவுறுத்தல்கள்) ஓமோன்களைச் சுரக்கும் சுரப்பிகளுக்கு அனுப்பப்படுகின்றன. உதாரணமாக அதிரினலின் (Adrenaline) நோர் அதிரினலின் (Nor Adrenaline) குளுக்ககோன் (Glucagon) கோட்டிசோல் (Cortisol) வளர்ச்சி ஓமோன் (Growth hormone) இவைகள் சுரக் கப்பட்டு வெவ்வேறு விதத்தில் செயற்பட்டு எமது ஈரலில் சேமித்து வைக்கப்பட்டு இருக்கும் கிளைக் கோஜனை (Glycogen) குளுக்கோசாக மாற்றி குருதியில் சேர்த்து விடுகின்றன. அத்துடன் இந்த ஓமோன்கள் இன்சுலினின் எதிர்ப்பையும் தூண்டிவிடுகின்றன. இந்த நிலையில் இவ்வாறு பெருகி வரும் குருதியில் குளுக்கோசின் அளவை இன்சுலின் ஆனது முழு அளவிலும் கலங்களுக்குள் உட்புகுத்த முடியாத நிலை ஏற்படும். இதனால் குருதியில் குளுக்கோசின் அளவு உயர்வடைகின்றது. மேற்படி மன அழுத்த ஹோமோன்களாக அதிரினலின் கோட்டிசோல் குளுக்ககோன் குருதியில் அதிகரிக்கும்போது அல்லது சேர்க்கப்படும்போது இவைகள் எல்லாம் ஒன்று சேர்ந்து இன்சுலினின் தொழிற்பாட்டைப் பாதிக்கின்றன. இதனால் கலங்களுக்குள் இன்சுலின் எதிர்ப் புச் சக்தி அதிகரித்து குளுக்கோஸ் கலங்களுக்குள் உட்புக முடியாத நிலை ஏற்படும். இந்த நிலையில் சதையியானது அதிக இன்சுலினைச் சுரக்க வேண்டிய நிலை உருவாகும். ஆனால் நீரிழிவு நோயாளிகளில் இந்த நிலையைச் சமாளிக்க முடியாமல் போய்விடும் . இதனால் இவர்களுக்கு குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரித்த நிலை ஏற்படும்.



நீரிழிவுடன் மன அழுத்தம் உள்ளவர்கள் அல்லது மன அழுத்தம் உள்ளவர்கள். தேக அப்பியாசம், உடற்பயிற்சி இல்லாமல் இருப்பவர்கள் அதிக உணவை அடிக்கடி உட்கொள்பவர்கள். இதனால் ஒருவருக்குக் குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிக்க வாய்ப்புண்டு. இவர்கள் இதற்கு ஏற்ப பயிற்றப்பட்ட மனோதத்துவ நிபுணர்களை அணுகிச் சிகிச்சை மற்றும் ஆலோசனை பெறுதல் நல்லது. இதன் மூலம் நீரிழிவு உள்ளவர்களாயின் அவர்கள் உள்ளெடுக்கும் மருந்துகள் இன்சுலின் போன்றவற்றின் அளவுகளை அதிகப்படுத்த வேண்டிய நிலை ஏற்படாது.

இன்னொரு வகையினரும் எமது சமூகத்தில் காணப்படுகின்றனர். அவர்கள் மன அழுத்தத்தைச் சமாளிப்பதற்கு அல்லது மறப்பதற்கு உணவை மறந்து தொடர்ச்சியாக ஏதாவது வேலைகளைச் செய்து கொண்டு இருப்பார்கள். இவர்களுக்கு குருதியில் குளுக்கோசின் அளவு குறைவதற்கு வாய்ப்புண்டு. எனவே சரியான அளவு உணவுடன் மருந்துகளையும் சீரான முறையில் எடுத்தல் நல்லது.

நீரிழிவு நோய் உள்ளவர்களுக்கு காய்ச்சல், தலையிடி, மாதவிடாய், சளி, அஸ்மா போன்ற மாறக்கூடிய நோய் நிலைகள் ஏற்படும் போதும் உடலில் உருவாகும் மன அழுத்த ஓமோன்களின் அதிகரிப்பால் குருதியில் இருக்கும் இன்சுலின் செயற்பாடு குறைக்கப்பட்டு குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிக்கலாம்.

சில நோய் நிலைகளுக்கு வழங்கப்படும் மருந்துகளாலும் அதனால் ஏற்படும் பாதிப்புக்களாலும் உதாரணமாக நோய் எதிர்ப்பு மருந்துகளாலும் Antibiotic புற்று நோய்க்கான மருந்துகளாலும் சிலருக்கு அமைதியின்மை உடல் மாற்றம் மன அழுத்தம் போன்றவையால் உடலில் உருவாகும் மன அழுத்த ஓமோன்களால் இன்சுலின் எதிர்ப்பு நிலை உருவாகி குருதியில் குளுக்கோசின் அளவு அதிகரிப்பு ஏற்படலாம். அதே வேளை சிலருக்கு குமட்டல், வாந்தி, உணவு உட்கொள்வதில் விருப்பமின்மை போன்றவற்றால் குருதியில் குளுக்கோசின் அளவு குறைவு ஏற்படவும் வாய்ப்பு உண்டு. எனவே அவர்களின் நோய் நிலைகள் சிகிச்சை முறைகளுக்கு ஏற்ப வைத்திய ஆலோசனை பெறுதல் அவசியம்.

**மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு ஒரு சில ஆலோசனைகள்**

01.தியானம் போன்ற பயிற்சி முறைகள் எமது மூளையில் உணர்ச்சி மயமான மூளைப் பகுதியின் தூண்டலைக் குறைக்கிறது. இதனால் எமது மூளையில் அதிரினலின் மற்றும் கோட்டிசோல் போன்ற ஹோர்மோன்களின் சுரப்பு குறைக்கப்படுகிறது. இதனால் மன அழுத்தம் குறைய குருதியில் குளுக்கோசின் அளவும் கட்டுப் பாட்டுக்கு வருகிறது.

02.நீரிழிவு நோய்க் கட்டுப்பாடு என்பது பல கோணங்களில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய திட்டமாகும். உதாரணமாக தேகப்பயிற்சி ஆலோசகர் மூலம் எடைக் குறைப்பு, தசைகளுக்கு வலிமை தசைகள் வளைந்து கொடுக்கும் தன்மை போன்றவற்றை ஏற்படுத்துவதன் மூலம் உணர்வுபூர்வமான மன ஆரோக்கியத்துக்கு வழிகாட்டுவார். இதே போல் அத்துறைசார் ஆலோசகர் சமூகசேவகர், கண் வைத்தியர், மன நிலை வல்லுநர், நீரிழிவு கல்வி புகட்டுபவர், பாத வல்லுநர் Podi atrist துறைசார் வைத்திய நிபுணர்களை அணுகுவதன் மூலம் உங்கள் நோய் நிலைக் கட்டுப்பாடு ஏற்படுவதுடன் சிறந்த மன ஆரோக்கியத்திற்கும் வழி வகுக்கும்.

03.உங்கள் வாழ்க்கையை மேம்படுத்துவதன் மூலமும் மகிழ்ச்சியான வீட்டுச் சூழலை ஏற்படுத்துவதன் மூலமும் உடற்பயிற்சி, யோகாசனம், விருப்பமான இசையைக் கேட்டல், பொழுது போக்குக்காக ஏதாவது ஒரு விளையாட்டைத் தேர்ந்தெடுத்து இதற்கான ஒரு சிறு கூட்டத்தை உருவாக்கி இதனை நடைமுறைப் படுத்துவதால் மன அழுத்தங்கள் குறைய வாய்ப்பு உண்டு.

04 உங்கள் உணர்வுகளை முழுவதுமாகப் புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். உடலையும் மனதையும் தளர்த்துங்கள். மனம் தளர்ந்து இருந்தால் தான் அர்த்தமுள்ள வழிகளில் யோசிக்க முடியும் அலை பாயும் மனதுக்கு ஒருமுகமான சிந்தனை வராது.

05. ஏதாவது ஒரு பிரச்சினை உங்கள் மனதை வாட்டிக் கொண்டே இருந்தால். அதை உங்களிடம் பகிர்ந்து கொள்ள உங்கள் ஆத்ம நண்பரைத் தேடி அவரிடம் அதைச் சொல்லி ஆற்றாமையைத் தீர்த்துக் கொள்ளுங்கள்.

06.பிறருக்கு உதவுவதற்கு என அமைப்புகள் நண்பர்கள் கூட்டம் இருக்குமாயின் அவர்களிடம் அணுகி உங்கள் பிரச்சினையைத் தீர்க்க முடியுமா எனப் பாருங்கள்.

07.ஒருவரோடு ஒருவர் நெருங்கி ஒரு சிறு கூட்டமாக மனம் விட்டு உரையாடிப் பிரச்சினையை அலசி ஆராயும் கூட்டத்தைக் கொண்ட நண்பர்களை உரு வாக்குங்கள்.

08.மன அழுத்தத்துக்கு வைத்திய நிபுணர்களால் வழங்கப்படும் மருந்துகளை ஒழுங்காக எடுங்கள். கிளினிக்குகளுக்கும் ஒழுங்காக வந்து ஆலோசனை பெறுங்கள்.

09.கோபப்படுவது கெடுதல் அல்ல. இது சாதாரண அனுபவம் தான் என்பதை சீக்கிரம் உணர்ந்து யதார்த்த நிலையோடு ஒத்துப் போவது உங்கள் கோபத்தின் ஊற்று எங்கிருக்கிறது என்பதைக் காணுங்கள். கண்டு மன நிலையில் நிவாரணம் பெற முயற்சி செய்யுங்கள். அனுபவசாலியின் ஆலோசனையைப் பெறுங்கள்.

10.நாளாந்தம் நடத்தலும் மன அழுத்தத்தைக் குறைப்பதற்கு உதவும்.

உங்கள் குருதியில் குளுக்கோசின் அளவை மாத்திரம் எப்பொழுதும் கட்டுப்பாடான நிலையில் வைத்து விட்டால் நீரிழிவு உங்களை மேலாண்மை செய்து விட முடியாது. இந்தக் கட்டுப்பாடானது உங்களைப் பத்திரமான நிலைக்குக் கொண்டு சென்று விடும்.

பொறுப்பு தாதிய உத்தியோகத்தர்
நீரிழிவு சிகிச்சை நிலையம்
யாழ்.போதனா வைத்தியசாலை.




## சர்வதேச நீரிழிவு தினத்தை முன்னிட்டு

அகில இலங்கை பாடசாலை

மாணவர்களுக்கு இடையிலான

சித்திர மற்றும்

கவிதைப் போட்டி - 2016

கீழே தரப்பட்டுள்ள விளக்க முறைகளுக்கேற்ப போட்டி சம்பந்தமான சகல ஆக்கப் பிரதிகளும் சமர்ப்பிக்கப்படவேண்டும். ஆக்கப்பிரதிகளை முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் நீரிழிவு சிகிச்சை நிலையம், யாழ். போதனா வைத்தியசாலை எனும் முகவரிக்கு 04.11.2016 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு அனுப்பி வைக்கவும். பிந்தி வரும் ஆக்கப் பிரதிகள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது

**தலைப்பு**
நீரிழிவை வெற்றி கொள்வோம்

**பிரிவுகள்**
கனிஷ்ட பிரிவு - தரம் 01 தொடக்கம் 5 வரை
இடைநிலைப்பிரிவு - தரம் 6 தொடக்கம் 10 வரை
சிரேஷ்ட பிரிவு - தரம் 11 தொடக்கம் க.பொ.த உயர்தரம் வரை

**பரிசில்கள்**
முதல் 3 இடங்களைப்பெறும் ஆக்கங்களுக்கு பரிசில் மற்றும் சான்றிதழ் வழங்கப்படும்.

### சித்திரப் போட்டி

**01. வயதுப் பிரிவு வகைகள்**
கனிஷ்ட பிரிவு, இடைநிலைப் பிரிவு மற்றும் சிரேஷ்ட பிரிவு

**02.சிறப்பு விவரம்**
தாளின் அளவு ஏ3 சித்திரத்தாள்
ஊடகம் ஏதாவது (சார்க்கோல், க்ரயோன்ஸ், நீர், எண்ணெய் வர்ணம் அல்லது வேறு)
சித்திரமானது எந்தவொரு வகையான திருட்டு மற்ற சுயமான படைப்பாக இருத்தல் அவசியம்.

**03.அனுப்பும் முறை**
சித்திரமானது முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படிவத்துடன் பதிவுத் தபால் மூலமாக அல்லது நேரடியாக மேற் குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

### கவிதைப் போட்டி

**01. வயதுப்பிரிவு வகைகள்**
இடைநிலைப் பிரிவு மற்றும் சிரேஷ்ட பிரிவு

**02. சொற்களின் வரம்பு**
இடைநிலைப்பிரிவு ஆகக்குறைந்தது 100 சொற்கள்

சிரேஷ்ட பிரிவு ஆகக்குறைந்தது 100 சொற்கள்

**03. மொழி தமிழ்**
கவிதையானது எந்தவொரு வகையான திருட்டு மற்ற சுயமான படைப்பாக இருத்தல் அவசி யம்

**04.அனுப்பும் முறை**
கவிதையானது தெளிவான கையெழுத்தில் எழுதப்பட்டு அல்லது தட்டச்சு செய்யப்பட்டு முழுமைப்படுத்தப்பட்ட விண்ணப்பப்படி வத்துடன் பதிவுத்தபால்மூலமாக அல்லது நேரடியாக மேலே குறிப்பிட்ட முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.

### விண்ணப்பப்படிவம்

முழுப்பெயர் -
தரம் -
பிரிவு -
பாடசாலை -
வீட்டு முகவரி -
தொலைபேசி இல. -
அதிபரின் உறுதிமொழி -

மேற்குறிப்பிட்ட மாணவன் எமது பாடசாலையில் மேற்குறிப்பிட்ட தரத்தில் கல்வி கற்கின்றார் என்பதையும் இந்த ஆக்கம் அவரது சொந்தப் படைப்பு என்பதையும் உறுதிப்படுத்துகிறேன்

அதிபர் ஒப்பம்.................

பயிர்களைப் பந்தாடும் வேலிகள்!
பக். 23



சூரியகாந்தி
உதயன்
30.10.2016




பகையா? உறவா?
பக். 37



வயகராவும் வந்துவிட்டது!
பக். 25



வடக்கின் முடக்கம்
பக். 24




குணசேகரன் சக்தீனா

"கம்பஸ் முடிய உங்கள நல்லரப் பார்ப்பான், கஸ்ரங்கள் எல்லாம் போயிடும், அப்பாவ வேலைக்கு விடமாட்டன் என்று தினமும் சொல்லுவான் என்ர பிள்ளை, இப்பவும் கண்ணுக்குள்ள நிக்கிறான் பிள்ள, இப்படிச் சுட்டுக்கொல்லுறதுக்கு என்ர பிள்ளை அவ்வளவு மோசமானவன் இல்லை, இனி யார் என்ன செய்தும் எங்கட பிள்ளை எங்களிட்ட திரும்பி வரமாட்டான், ஆனால் எங்கட நிலமைவேறெந்தபெற்றோருக்கும்வரக்கூடாது" சுலக்சனின் தந்தையின் மனக்குமுறல்கள் இவை.





கடந்த வியாழக்கிழமை(20.10.2016) நள்ளிரவு பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டில் சாவடைந்த யாழ். பல்கலைக்கழக மாணவர்களான சுலக்சன், கஜன் தமது பெற்றோருடன் வாழ்ந்த அந்தப் பொழுதுகளை அவர்களின் பெற்றோர் எம்முடன் பகிர்ந்து கொண்டார்கள்.

அந்த ஊர் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கந்தரோடை. வீதியின் இருமருங்கிலும் சுலக்சனின் புகைப்படம் தாங்கிய பனர்கள் தொங்கவிடப்பட்டிருந்தன. அவனது வீடு எங்குள்ளது என்பதை அறிய அவை எமக்குப் போதுமானதாக இருந்தன. பிரதான வீதியின் பக்கமாக சிறு குற்றொழுங்கை, அங்கு சுலக்சனின் வீடு என்றில்லாமல் அனைத்து வீடுகளும் சோகமயமாகவே இருந்தன. இதுதான் வீடு என்பதை ஒருவர் காட்டினார். நாம் செல்கிறோம். எம்மைச்சுற்றி பெரும் அமைதியை உணர்கிறேன். சுலக்சனின் தந்தை சோகத்தில் மூழ்கியுள்ளார். சிறிது நேரத்தில் அவர் எம்முடன் உரையாடினார்.

அவரது அமைதியை எங்களால் கலைக்க முடியவில்லை. ஆனாலும் கதைத்தோம், சுலக்சனின் சிறுவயது எப்படி யானதாக இருந்தது என்பதை அறிய வினவினோம். கண்ணீர் வடிந்து காய்ந்து போன கன்னங்களில் எந்த வித சலனமும் இன்றி மறுபடியும் கண்ணீர்த்துளிகள் விழுந்தன. இரண்டு கைகளாலும் முகத்தைப் பொத்திக் கொண்டு அழுதார்.

"என்ர லக்சனை நான் ஆம்பிளப்பிள்ளையா பார்த்தத விட பொம்பிளப்பிள்ளையா தான் பார்த்திருக்கிறேன். எவ்வளவு பொத்திப் பொத்தி பார்த்தனான். அந்தச் சண்டைக்குள்ள இருந்து கூட எவ்வளவு கவனமாகப் பாது காத்துக் கொண்டு வந்தனான். இப்ப குருவியச் சுடுறதப் போல அநியாயமாகச் சுட்டுப் போட்டுட்டுப் போட்டாங்கள்.

பிள்ளையென்றால் இப்படித் தான் இருக்க வேணும் என்று வாழ்ந்து காட்டிய பிள்ளை. சமூக சேவைகளில் அலாதிப் பிரியம் அவனுக்கு, அவன் எவ்வளவு வெற்றியாளன் என்பதற்கு இப்ப அவன்ர வெற்றிச்சான்றிதழ்கள் தான் காரணம். இனி நாங்கள் என்ன செய்கிறது. இந்தச்சுவரில் கூட அவனின் நினைவுகள் தான் பொதிந்துள்ளது.

கம்பசில கொடுக்கிற அந்தப் பணத்தில கூட ஊரில உள்ள கஷ்டப்பட்ட பிள்ளைகளின் படிப்புச் செலவுக்கு உதவி செய்வான். புத்தகம், கொப்பி என வாங்கிக் கொடுப்பான். தன்ர படிப்பு முடிய தன்னோட ஊரை வளர வைக்க வேணும் என்று எப்பவும் சொல்லுவான். ஊரும் காத்திருக்கு அவன் மீண்டும் வருவான் என்று"

இரண்டு கைகளையும் பொத்திக் கொண்டு, அமர்ந்திருந்த கதிரையை ஆழமாக அழுத்தினார். அழுகையைக் கட்டுப்படுத்த முனைந்து தோற்றுப்போனார். வானத்தை வெறித்துப் பார்த்தபடி பார்வைகள் எதையோ தேடுகின்றன.



"என்ர லக்சனுக்கு ஊடகத் துறையில படிக்க வேணும் என்ற ஆசையிலதான் கம்பஸிலயும் ஊடகத்தை தெரிவு செய்தவன். எதையாவது சாதிக்க வேணும் என்றதீவிரவேகம்கொண்டவன். படிச்சுக்கொண்டே குறும் படங்கள், நாடகங்களில நடிச்சிருக்கிறான். அவன் நடிச்சதைப் பார்த்துப் பார்த்துத் தான் இனி எங்கட செல்வத்தோட வாழ வேண்டும். அவன்ர ஆசைகள் கொஞ்சமில்லை பிள்ள. இங்க இஞ்ச படிச்சு முடிச்சு இந்தியாவில போய்ப் படிக்க வேணும்" என்று சொல்லுவான். ஆனால் அங்க படிச்சாலும் இங்க வந்து எங்கட மக்களுக்குத் தான் பணி செய்வன் என்று சொல்லுவான். இப்போன மாதத்திற்கு முதல் தான் பாஸ் போர்ட்டும் எடுத்தவன்". சுலக்சனின் அம்மா கூறினார்.

"எங்கட அண்ணாக்கு உப்புமா என்றால் நல்ல விருப்பம், நான் கூட என்ர பங்கை அவன் கம்பஸில இருந்து வரும் வரை காத்திருந்து கொடுப்பன். இண்டைக்கு அம்மா உப்புமா செய்து வைச்சிருக்கிறா. ஆனால் அவன் சாப்பிடுறானில்லை அக்கா, நீங்களும் போய்ப் பாருங்க அப்படியே இருக்கு உப்புமா" சுலக்சனின் கடைசித் தம்பியின் தவிப்பு இது.

யாழ்.மண்ணும் கிளிநொச்சி மண்ணும் இரண்டு சாதனையாளர்களை இழந்து தவிக்கின்றது. தமது ஊரை உயர்த்த வேண்டும் என்ற வேட்கை கொண்ட இரு சமூக சேவையாளர்கள் இவர்கள்.

கிளிநொச்சி 155ஆம் கட்டைச் சந்தி இப் பொழுது எந்தவித ஆரவாரமும் இன்றித் தான் இருக்கின்றது. வீதியின் இருமருங்கிலும் கஜனின் புகைப்படம் தாங்கிய சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன. மழை இலேசாகத் தூறியது கஜனின் இழப்பிலிருந்து இன்னும் மீளவில்லைப்போலும். அதுவும் எப்படி அவ்வளவு இலகு வாக அவனின் நினைவுகளில் இருந்து மீளமுடியும். இப்பொழுது மழைத்துளிகளின் கனம் அதிக மாகியது.

கஜனின் வீடு சோகம் சூழ அமைதியாக இருந்தது. தந்தை தான் வெளியில் வந்தார், தாயார் நிலத்தைப் பார்த்தபடி "கஜா இன்றைக்கு வருவியாப்பு, கஜா...." என்ற முனகலு டன் சுவரில் சாய்ந்திருந்தார். கஜனைப் பற்றிக் கேட்டதும் கண்ணீர்த்துளிகள் ஓய்ந்த கண்ணில் பரிதவிப்பு.

"என்ர கஜாவ நம்பித்தான் எங்கட குடும்பமே இருந்திச்சு, நான்கு அக்காமாரையும் சந்தோசமாக வாழ வைக்க வேணும் என்று அடிக்கடி சொல்லுவான், அம்மா உங்கள சந்தோசமா வைச்சிருக்க வேணும் நீங்க சந்தோசமா இருப்பீங்கள், ஒன்றுக்கும் யோசிக் காதேங்க அம்மா என்பான், திங்கட் கிழமை கூடச் சொன்னான் அம்மா யோசிக்காம இருங்கோ அடுத்த லீவுக்கும் வருவன் தானே என்றவன், இப்பவும் அந்த வாசலடியில போய்ப் பார்க்கிறனான் என்ர கஜா வாறனா என்று" கஜனின் தாயின் ஆற்றமுடியாத ஓலங்கள் இவை.

கஜாவுக்கு பிறப்பிலேயே கால் ஏலா மத் தான் இருந்தது. ஆனால் அந்தக் குறை எப்பவும் அவனை வாட்டினது இல்லை, ஊனம் என்று அவன் ஒதுங்கினது கிடையாது. யாரும் ஒதுக்கியதும் கிடையாது, நல்லா வேலை செய்வான். எப்ப லீவு கிடைக்குதோ அந்த நாளில் அவன் மேசனாக மாறிடுவான். அவன் தான் இந்தக் கிணத்தக் கட்டினவன். வீட்டு வேலைகள் செய்வான். இப்பவும் சுவலும், வீல்வரும் அப்படியே தான் இருக்கு அவன்கை பட்டவைகளாக, என்றவரால் அழுகையைக் கட்டுப்படுத்த முடியவில்லை.

சிரிச்சு, சிரிச்சு பேசும் போது அப்படியே பார்த்துக் கொண்டிருக்கலாம். என்ன கவலை இருந்தாலும் உடனே மறந்து போயிடும். நல்லா டான்ஸ் ஆடுவான் கால் ஏலாது என்று எப்பவும் எதற்கும் அவன் காரணம் காட்டியது இல்லை. கவிதை எழுதுவான் எல்லாக் கவிதையும் சோகக் கவிதைகளாகத் தான் இருக்கும். எதற்காக அப்படி எழுதினான் என்று இப்பத் தான் தெரியுது.

எல்லோருக்கும் உதவி செய்வான். ஊர் என்றால் அவனுக்கு அவ்வளவு பிடிக்கும். ஊருக்கு நிறையச் செய்ய வேணும் என்று அடிக்கடி சொல்லுவான்.

கம்பஸில படிச்சுக்கொண்டே வேலை செய்தவன். இரவு நேரங்களில வேலை செய்வான். தன்ன நம்பியிருக்கிற குடும்பத்தப் பார்க்க வேணும் என்று இரவு பகல் பாராமல் உழைச்சபிள்ளை, பெரிய படிப்பெல்லாம் படிக்கணும் என்ற கனவு தான் அவனிட்ட அதிகமாக இருந்திச்சு. இப்ப எல்லாத்தையும் சிதைச்சுப்போட்டாங்கள். காலேலாத என்ர பிள்ளைய கொல்லுறதுக்கு இவங்களுக்கு எப்படி மனசு வந்திச்சு" என்றார்.

"அவனப்பற்றிச் சொல்லுறதுக்கு எவ்வளவோ இருக்கு பிள்ள எங்கட வீட்டின்ர ஆணி வேரை அடியோட இல்லாமப் பண்ணிற்றாங்கள், இனி நாங்கள் என்ன செய்யப்போகிறோம்" கஜனின் தாயாரிடம் இருந்து வார்த்தைகள் வரவில்லை, அழுதழுது நீர் வற்றிவிட்ட கண்களும் களைத்து விட்டன.

இரண்டு குடும்பங்களின் ஆணிவேர்கள் அடியோடு பிடுங் கப்பட்டிருக்கின்றன. ஆறுதல் மட்டும் தான் அனை வராலும் கொடுக்க முடியும். சுலக்சனையும், கஜனையும் இழந்த குடும்பங்களுக்கு என்ன பதிலைக் கொடுக்க முடியும், அவர்களின் இழப்பை யாரால் ஈடு செய்ய முடியும். மனதில் எழுந்த இந்தக் கேள்விகளுக்கு பதில் கிடைக்குமா என்று தெரியவில்லை. இரு தாய்மாரின் கைகளையும் பற்றியிருந்த என் கைகள் குளிர்ந்தன. கண்ணீர்த்துளிகளுக்கு ஈடு கொடுக்க முடியாமல்.

> என்ர லக்சனை நான் ஆம்பிளப் பிள்ளையா பார்த்தத விட பொம்பிளப்பிள்ளையா தான் பார்த்திருக்கிறேன். எவ்வளவு பொத்திப் பொத்தி பார்த்தனான். அந்தச் சண்டைக்குள்ள இருந்து கூட எவ்வளவு கவனமாகப் பாதுகாத்துக் கொண்டு வந்தனான். இப்ப குருவியை சுடுறதப் போல அநியாயமாகச் சுட்டுப் போட்டுட்டுப் போட்டாங்கள்.

# பயிர்களை பந்தாடும் வேலிகள்!

ஸ்டோ ஸ்வாமி



மோட்டார் வாகன விபத்தொன்றில் கொல்லப்பட்டார் என்று மூன்றாண்டுகளுக்கு முன்னர் மூடப்பட்ட வழக்கு ஒன்றுக்கு விடிவு வந்து கடந்த ஆண்டு மார்கழி மாதத்தில் நீதிமன்றில் நடந்தது விபத்து அல்ல என்று அறிவிக்கப்பட்டபோது திறந்து கொண்டது விசாரணைக் களம். அப்போது திறந்த விசாரணைக் களம் இன்னமும் முடிவடைந்த பாடாக இல்லை. அந்த விசார ணைக் களம் நாளாந்தம் பெருத்துக் கொண்டே இருக்கின்றது. அந்த விசாரணைக் களத்தில் மாட்டு பவர்களும் மாட்டுப்பட இருப்பவர்களும் எனப் பெரிய ஒரு வலையமைப்புப் பின்னணி அந்தச் சம்பவத்திற்கு பின்னால் இருப்பது தெளிவாகத் தெரியவே செய்கிறது.

இலங்கை நீதித்துறையின் இருண்ட பக்கங்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்த சம்பவங்களில் ஒன்றான ரக்பி வீரர் வஸீம் தாஜுதீன் விவகாரம் தொடர்பிலேயே மேற் கூறிய விடயம் அமைந்திருக்கிறதென்பதைப் புரிந்து கொள்வது கடினமான ஒன்று அல்ல.

கடந்த வெள்ளிக்கிழமையன்று யாழ். போதனாவைத்தியசாலைக்குக் கிடைக்கப்பெற்ற இரு இளைஞர்களின் சடலங்கள் முதலில் வாகனவிபத்தொன்றின் விளைவு என்றுதான் அறியப்பட்டும் – அறிவிக்கப்பட்டும் இருந்தது. ஆனால் அந்தச் சோடிப்பு நிலவி சில மணி நேரங்களுக்குள்ளேயே அந்த இரட்டை இறப்புக்கள், கொலையும் கொலையால் நிகழ்ந்த சாவும் என வகைப்படுத்தப்பட்டது. கொலைக்குரிய துப்பாக்கிக் குண்டு சட்டபூர்வ ஆயுதம் தரிக்கும் சீருடைக்குரிய தரப்பொன்றின் விரல்களினால் விடுவிக்கப்பட்டிருக்கிறதென்பதும், பாதிக்கப்பட்டது யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் என்பதும் வெளிப்பட, பூகம்ப நிலவரத்தை எய்தி ஓய்வடைந்து வருகின்றது வடக்கு.

நடுநிலையான விசாரணைக்கு வலியுறுத்தும் வகையிலான அழுத்தங்களும் நாடு முழுவதும் பிரயோகிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு ஏமாற்றம் தரும் சில கருத்துக்களும் பதிவாகியிருக்கின்றன.

### புசல்லாவ சம்பவம்

இதேபோன்று கடந்த மாதத்தில் புசல்லாவ பொலிஸ் நிலையத்தின் தடுப்புக்காவலில் இருந்த நடராஜா ராமச்சந்திரன் என்னும் தமிழ் இளைஞன் சாவடைந்தமை தொடர்பில் அங்குபெரும் குழப்பநிலை ஏற்பட்டிருந்தது. அந்த இளைஞன் தடுப்புக்காவல் காலப்பகுதியில் நிகழ்ந்த சாவு தொடர்பில் புசல்லாவ பொலிஸ் நிலையத்தின் உதவிப் பொறுப்பதிகாரியும், கான்ஸ்டபிள் ஒருவரும் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பணி இடை நிறுத்தம் செய்யப்பட்டிருந்தனர். குறித்த இளைஞனின் இறப்பு தற்கொலை என அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் பொலிஸாரின் தாக்குதல் காரணமாகவே அவர் சாவடைந்திருக்கலாம் எனச் சந்தேகம் தெரிவித்து பிரதேச வாசிகளினால் அங்கு ஆர்ப்பாட்டம் முன்னெடுக் கப்பட்டிருந்தது.





### எம்பிலிப்பிட்டியசம்பவம்

இந்த ஆண்டு ஜனவரி மாதத்தில் எம்பிலிப்பிட்டிய பிரதேசத்தில் இடம்பெற்ற வைபவம் ஒன்றில் கலந்து கொண்டவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் ஏற்பட்ட முறுகல் நிலையினால் நான்கு பொலிஸாரும் மூன்று பொதுமக்களும் காயங்களுடன் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் சுமித் பிரசன்ன என்னும் இளைஞன் சாவடைந்தார். குறித்த சம்பவம் தொடர்பில் எம்பிலிப்பிட்டிய பொலிஸ் நிலையத்தைச் சேர்ந்த 21 பொலிஸாருக்கு தற்காலிக இடமாற்றம் வழங்கப்பட்டிருந்தது. விசாரணைகளின் பின்னர் 10 பொலிஸாருக்கு குற்றப்பத்திரிகை வழங்கத் தீர்மானிக்கப்பட்டிருந்தது. நாட்டின் பல பகுதிகளிலுமிருந்து அறிக்கையிடப்படும் பயிர் மேயும் வேலிகளின் செயற்பாடுகளின் புதிய பதிப்பாகவே யாழ்ப்பாணத்தில் நடந்த சம்பவம் நோக்கப்படுகிறது. இலங்கை பொலிஸ் சேவை கடந்த மாதத்தில் தான் தனது 150 வருட நிறைவுக் கொண்டாட்டங்களைக் கொண்டாடியிருந்ததுடன் இலங்கைப் பொலிஸ் என்றும் பெயர் மாற்றம் பெற்றிருந்தது. பொது மக்களுக்கு நட்புறவான சேவையை வழங்கலை தமது விருதுவாக்காகக் கொண்டு இயங்கும் காவல்துறை தொடர்பில், அதன் செயலின்மை தொடர்பிலும் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட வகையில் செயற் படுவது தொடர்பிலும் பொதுமக்களிடமிருந்து தேசிய பொலிஸ் ஆணைக் குழு முறைப் பாடுகளை பெற்றே வருகின்றது.

இராணுவத்தை வடக்கிலிருந்து நீக்கிப் பாதுகாப்புக்குப் பொலிஸாரை ஈடுபடுத்தக் கோரும் சில தரப்பினரின் கோரிக்கையை கேலிக்குள்ளாக்கியிருக்கிறது அண்மைய குளப்பிட்டிச் சம்பவம். ஏற்கனவே யாழ். பொலிஸ் நிலையத்திற்கான கட்டடத் திறப்பு விழாவில் நிறுவப்பட்ட பொலிஸ்நிலைய நினைவுப் படிக்கல்லில் வடமாகாண முதலமைச்சர் சி.வி. விக்கினேஸ்வரனின் பெயரும் சட்ட ஒழுங்கு விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் சாகல ரத்நாயக்கவின் பெயரும் விடுபட்டிருந்தமை தவறு என்று சுட்டிக்காட்டப்பட்டிருந்த நிலையில், பொலிஸ் சேவை மீதிருந்த அற்பசொற்ப நம்பிக்கையையும் தகர்த்துப் போட்டிருக்கிறது குளப்பிட்டியில் நடந்துள்ள சூட்டுச் சம்பவம். இன்னொரு வகையில் காணி, பொலிஸ் அதிகாரங்களை மாகாண சபைக்கு வழங்கக் கோரும் கோரிக்கைக்கும் சிறிய அளவில் வலுச் சேர்த்திருக்கிறது அண்மைய விவகாரம்.

### தண்டனை இடமாற்றங்கள் வடக்கிற்கு வேண்டாம்

தெற்கில் சேவையிலிருந்தபோது முறைகேடாக நடந்து கொண்டவர்களுக்கான தண்டனையாகக் கொள்ளும் வடக்கு இடமாற்றங்களின்போது அவர்களை வடக்குக்கு மாற்றி நன்னடத்தை பயிற்ற சிறந்த இடமாகப் பாவிக்கப்பட்டு வருகின்றது. ஆனால் மொழி உட்பட்ட வேறுபட்ட சமூக பழக்கவழக்கங்களை கொண்ட மக்கள் மட்டில் முறைகேட்டிற்குத் தண்டனை அனுபவிக்க வந்தவர்கள் செவ்வனே நடந்துகொள்வார்கள், நல்லிணக்கத்தை செயலில் காண்பிப்பார்கள் என்று எதிர்பார்ப்பது பொருத்தமற்றது ஆகும். கொல்லப்பட்ட பல்கலைக்கழக மாணவருக்குப் பயங்கரவாதி முலாம் இடாமல் சம்பவத்தோடு தொடர்புடைய பொலிஸார் கைது செய்யப்பட்டு விசாரணை வரைக்கும் போயிருப்பது தொடர்பில் திருப்திப்பட்டுக் கொள்ளலாம். ஆனால் நமது நாட்டில் நீதி தேவதை நத்தை வாகனத்தில் தான் பயணம் செய்வார் என்பதை யாரும் மறந்து விடக் கூடாது.

> பொதுமக்களுக்கு நட்புறவான சேவையை வழங்கலை தமது விருதுவாக்காக கொண்டு இயங்கும் காவல்துறை தொடர்பில், அதன் செயலின்மை தொடர்பிலும் அதிகாரத்திற்கு அப்பாற்பட்ட வகையில் செயற்படுவது தொடர்பிலும் பொதுமக்களிடமிருந்து தேசிய பொலிஸ் ஆணைக் குழு முறைப்பாடுகளை பெற்றேவருகின்றது.



# வடக்கின் முடக்கம்



தவபாரதி

வழமைபோன்ற அதிகாலை. ஆனால் கொஞ்சம் அமைதியாக விடிந்தது. வாகன, இயந்திர இரைச்சல்கள் இல்லாமல் இருந்ததுடன் மனிதர்களின் தலைக் கறுப்புக்களும் தென்படுவதாகத் தெரியவில்லை. நீண்ட காலத்தின் பின்னர் மறுபடியும் ஒருதடவை முற்றிலுமாக முடங்கிப் போனது.தமிழர்களின் அவலத்தை உணர்த்தும் வகையிலமைந்ததாய் வடபகுதி. இலங்கையில் அதிகளவில் கடையடைப்புக்களும் போராட்டங்களும் முழுஅடைப்பு மற்றும் உரிமை வேண்டிய முன்வைப்புக்களும் நிகழ்ந்தேறியவை தமிழர் பகுதிகளே. போர்ச் சூழலின்போது அடக்கி ஒடுக்கப்பட்ட அரச நடவடிக்கைகளாலும் மக்களின் கவனவீர்ப்புக்களாலும் முடங்கிக் கொண்ட வடபகுதி, போர் முடிந்ததிலிருந்து கடந்த 07வருடங்களாக அவற்றிலிருந்து விடுபட்டதாய் பயணித்துக் கொண்டிருந்தது. இடையில் ஏற்பட்ட புங்குடுதீவு மாணவி வித்தியாவின் கொலையைக் கண்டித்த ஆர்ப்பாட்டங்களும் கடைய்டைப்புக்களும் கூட இறுதியில் கலவரமாகியிருந்தன. ஆனால் கடந்த 21ஆம் திகதி நள்ளிரவு 11.30 மணியளவில் யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் இருவரைக் கொக்குவில் -குளப்பிட்டிப்பகுதியில் வைத்துக் கடமையிலீடுபட்டுக் கொண்டிருந்த பொலிஸார், சுட்டுக் கொன்றதைக் கண்டித்து கடந்த 25ஆம் திகதி வடக்குத் தமிழர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒற்றுமையாக மேற்கொண்ட அமைதியான போராட்டத்தால் வடபகுதி முற்றிலுமாய் முடங்கிப் போயிருந்தது.

போர் முடிந்த பின்னர் சில சில தூறல்களாக நடந்தேறிய இத்தகைய போராட்டங்களே ஏராளம். இவற்றின்போது ஆங்காங்கே சில இடங்களில் வழமை தொடர்ந்திருக்கும் நிலைக்ள் நிறைந்திருந்தன. ஆனால் அடக்கிக் கொள்ளமுடியாதளவுதுயரத்தையும் சிறுபிள்ளையும் அறிந்து கொள்ளும் அநீதியையும் இழைத்த பொலிஸாரின் கண்மூடித்தனமான செயலைக் கண்டித்த தமிழர்களின் மற்றுமோரு அமைதிப் போராட்டம் மக்களின் ஒற்றுமையால் வெற்றிகரமாக நடந்தேறியுள்ளது. யாழ். நகரம் மட்டுமன்றி வடபகுதியின் அனைத்து மூலைமுடுக்குகளிலுமுள்ள அத்தியாவசியத் தேவைகளுக்குரிய மருந்தகங்கள், உணவகங்கள் உட்பட அனைத்துச் சேவைகளும் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதுடன், அரச சேவைகளான போக்குவரத்து, வங்கிகள், பாடசாலை போன்றனவும் மூடப்பட்டிருந்தன. அத்துடன் பொலிஸாரின் வெறிச்செயலுக்கு நீதிகோரி இன்றுவரை யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கல்விச் செயற்பாடுகளையும் மாணவர்கள் புறக்கணித்து வருகிறார்கள்.

வடபகுதி முழுவதும் இவ்வாறாக ஒன்றித்து முடங்கிப்போனமை தமிழர்கள் தமது உரிமைக்காக ஒருபோதும் ஒற்றுமையுடன் போராடத் தயங்க மாட்டார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தது. அத்துடன் தம்மிடையே பிளவுபட்டு நிற்கும் தமிழ்த் தலைமைகளுக்கு நல்லதெரு படிப்பினையையும் எடுத்துக்காட்டியிருந்தது. அத்து டன் வன்முறைகள் எவற்றிலும் ஈடுபடாமல்அமைதியாகப் போராடியிருந்தமை கொழும்பு அரசுக்குக் கொடுத்திருந்த வன்முறையைத் தழுவாத அழுத்தமாகவும் அமைந்தது. இத்தகைய மக்களின் ஒற்றுமையைப் பயன்படுத்தித் தமது அரசியலில் இலாபம் தேடாது, தமிழருக்கு விடிவைப் பெற்றுக் கொடுத்திட தமிழ்த் தலைமைகள் பாடுபடவேண்டும். தமிழர்களின் இத்தகைய கடுங் கண்டனங்களைச் சம்பாதித்துக் கொள்வது சிறுபான்மையினரின் தயவால் வெற்றிகண்ட நல்லாட்சி போர்த்த அரசுக்கும் அழகல்ல.





வடபகுதி முழுவதும் இவ்வாறாக ஒன்றித்து முடங்கிப்போனமை தமிழர்கள் தமது உரிமைக்காக ஒருபோதும் ஒற்றுமையுடன் போராடத் தயங்க மாட்டார்கள் என்பதையும் சுட்டிக்காட்டியிருந்தது

## சவ்வுமிட்டாய் இனிக்குமே...!

சம உரிமை பழுக்கவைத்திருக்கும் நிலையினிலே
ஊர்வலம் தேவைதானோ நம்மூரினிலே
எப்போதும் ஊர்வலம் செல்லலாமோ
அதன் பயன்தான் எந்தளவு?

சம உரிமைப் பழம் பழுக்கப் பல காலம் செல்லுமே!
அது கனியாமல் அழுகியும் போய்விடுமே
இலவம் பழம் போல் பஞ்சாயும் பறக்குமே
கிளிபோலே நாமும் தான் காத்திருப்போமே

சிறைக்கைதிகள் விடயமே முடியவில்லை
அவர்கள் பசியிலே நாமோ பிசியிலே
நேரமே இல்லையாம் நீதிமன்றத்திற்கேயே
நாமோ உண்டு களிக்கிறோம் இங்கேயே

இதற்கோ நேரமில்லை என்கிறார்கள்
வேறு எதற்குத்தான் நேரம் இருக்கிறது.
ஒருமாதம் அறையுள் இருந்தே பாருங்கள்
அருமை பெருமை உரிமை புரியும்

ஒருவருக்கொருவர் வசைதான் பாடியே
காலமும் தான் முடியுமே தன்னாலேயே
அடுத்த தேர்தலும் வந்துவிடுமே
சவ்வுமிட்டாய் போலவே

இழுபடும் இழுபடும் நம் அரசியலுமே
நீண்டு இழுபடுமே காலங்காலமே
நீரிழிவுப் புண்ணும் மாறாதாமே
குரங்குப் புண்ணும் மாறாதாமே

அரசியல் அரசியல் நல்ல அரசியல்
நம் நாட்டு அரசியல்
சவ்வுமிட்டாய் அரசியல்
இழுபட இழுபட இனிக்கும் அரசியல்!

– ஞானாம்பிகா



# வயகராவும் வந்துவிட்டது!



ந.ஜெயா

திட்டமிட்டுப் போதைக்கு அடிமைப்படுத்தப்பட்டு வருகின்ற யாழ்ப்பாண இளம் தலைமுறை இன்று சீரழிந்து செல்கின்றது. இளையவர்கள், மாணவர்களைக் குறிவைத்துத் தான் இது நிகழ்த்தப்படுகின்றது என்பதைத் தெளிவாக்க அண்மையில் யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறைப்பகுதியிலிருந்து கைப்பற்றப்பட்ட கஞ்சாவுடன் இணைந்த வயகரா மாத்திரைகளைச் சான்றாக்கலாம். அதனைத் தொடர்ந்து இந்தியாவின் இராமேஸ்வரத்திலே இலங்கைக்கு, குறிப்பாக வடபகுதிக்குக் கடத்தப்பட விருந்த நிலையில் மேலும் ஒரு தொகை வயகரா மாத்திரைகள் பிடிபட்டிருந்தையும் குறிப்பிடலாம்.

### போதையுடன் இணையும் பாலியல் இச்சை

போரிலிருந்து மீண்டுள்ள யாழ்ப்பாணத்தைப் பல கோணங்களிலும் சிதைத்தழிக்கும் நோக்குடன் நிகழ்த்தப்பட்டு வரும் இதன் பாதிப்பிலிருந்து தப்பித்துக் கொள்வதாயின் இன்றைய இளையவர்களை அரவணைத்துள்ள அனைவரும் அவர்களை மிகக் கவனிப்புடனும் கவனத்துடனும் வழிநடத்திக் கொள்ளவேண்டும். போதைப் பொருளும் அதனுடன் இணைந்த பாலியல் இச்சையைத்தூண்டும் வயகரா மாத்திரைகளும் பாவிப்பவர்களை மட்டுமன்றி அவர்களது பரம்பரை பரம்பரையாகச் சந்ததிகளிடமும் தாக்கம் செலுத்தக் கூடியது. இதனால் பிறப்புக்குறைபாடுடைய நோய்கள் ஏற்படுகின்றன. போதைக்கு அடிமையாகிக் கண்மூடித்தனமான சீர்கெட்ட செயல்களைப் போதையிலே செய்துவிட்டு சமூகவிரோதிகளாக மாறி விடுவதோடு போதையில் இருந்து மீள முடியாமலும் தவிக்கிறார்கள்.

### சில நோய்களுக்கு நிவாரணி

தற்போது இலங்கையில் 'வயகரா' சில நோய்களுக்கு மருந்தாக உபயோகிக்கப்படுகின்றது. மருத்துவர்கள் நுரையீரல்குழாய்களில் ஏற்படும் இரத்த அழுத்தத்திற்கு இதனைப்பயன்படுத்தலாம் எனப் பரிந்துரை செய்கிறார்கள். ஆனாலும் பக்க விளைவாக வயகரா பாலியல் இச்சையைத் தூண்டும் ஒருவகைப் போதை மருந்து ஆகும். மருத்துவர்களின் ஆலோசனை இன்றி இவற்றைப் பயன்படுத்தக்கூடாது. இலங்கையில் ஆபத்தான மருந்துகளின் பட்டியலில் வயகராவும் உள்ளடக்கப்பட்டுள்ளது. இன்று போதையால் ஏற்படும் சீரழிவுகள் அதிகாகிக் கொண்டிருக்கும் நிலையில் இந்த மாத்திரைகளின் பயன்பாட்டால் பாலியல் வன்முறைகள் உட்படப் பாலியல் நோய்களான எயிட்ஸ், சமூக துர்நடத்தைச் செயல்களும் அதிகரிதிருக்கும் என்பதில் ஐயமில்லை.

### மண்ணின் பெருமை காப்போம்

இளம் தலைமுறையினரைத் திட்டமிட்டு சீரழிக்கும் சமூக விரோதச் செயலான இது 'பாடசாலை மாணவர்களைப் பாழாக்கவே' என்பதையும் உணர்த்துகின்றது. ஆகவே இவற்றின் மூலம் இளம் தலைமுறை சிரழிந்து போகாமல் காத்துக் கொள்ளவேண்டும். சமூகத்தில் குற்றவாளியாகக் காணப்படும் ஒருவனுக்கு நிச்சயமா கத் தாய்–தந்தை இல்லாமலில்லை. ஆகவே அனைத்துப் பெற்றோர்களும் உங்கள், உங்கள் பிள்ளைகளின் நடவடிக்கைகளைக் கவனித்து நல்வழிப்படுத்துவது தங்களின் பெறுப்பு என்பதைப் புரிந்து செயற்பட வேண்டும். அத்துடன் பாடசாலைச் சமூகமும் மாணவர்களின் கல்வியில் மட்டுமன்றி அவர்தம் நடத் தையிலும் கவனம் செலுத்த வேண்டும். இந்த வகைப் போதைக்கு இலக்கானவர்களை இனங்கண்டு நல் வழிப்படுத்தின் மீண்டும் யாழ்மண்ணில் தமிழர் பெருமை ஓங்கும்.

## மனநிலைகள் மாறவேண்டும்

முரசொலிக்கும் இனவாதம்
மூர்க்கத்தன ஊர்வலங்கள்
ஆட்சிக்கு எதிரான
அடுக்கிய ஆர்ப்பாட்டங்கள்
தமிழருக்கு உரிமையாம்?
தகாத செயல்களென்று
ஆயிரம் குற்றச்சாட்டுக்கள்

தமிழர் தும்மக் கூடாது....
மீள்குடி அமர்ந்திடுவர்
தமிழர் இருமக்கூடாது....
நிலங்களை மீட்டிடுவர்
தமிழர் பேசக் கூடாது.....
அரசமைப்பை மாற்றிடுவர்
தமிழர் சேரக்கூடாது.....
சமஷ்டியைப் பெற்றிடுவர்
தமிழர் எதிர்க்க வேண்டும்
அதுதான் எமக்குவேண்டும்
ஆளப் பிறந்தவர் நாங்கள்
வாழப் பிறந்தோரே
மற்றோரெல்லாம்

கோழைத் தனமாகவே
வேளைக்கொரு கதைபேசும்
வேதாளங்கள் மீளவுமா?
உள்ளேயும் மல்லுக்கட்டு
கயிறு இழுப்புக்கள்
கதிரைக்குதிரைகளில்
உல்லாச சவாரிகள்
கட்டி ஏழுப்பிடவும்
களத்திலே யாருமில்லை
ஒருசிலர் மட்டும்தான்
மற்றரெல்லாம் கும்பகர்ணர்
பாவம் மக்கள் தான்
மனநிலைகள் மாறவேண்டும்

*அபீர்ராஜன், அன்ரனி பீற்றர்*

# 'திமில்'


ந.ஜெயதாஸ்

தமிழில் ஒருசொல் பல பொருளை உணர்த்தி நிற்பதொன்றும் அரிதல்ல. ஆனால், அவை இருவேறுபட்ட மக்கள் குழுமத்திடையே வெவ்வேறு கருத்துக்களில் நோக்கப்படுவது அரிதே. விவசாயத்தையும் மீன்பிடியையும் வாழ்வாதாரமாகக் கொண்ட மக்கள் குழுமங்களிடையே நிலவியிருக்கும் ஒரு பெயர்ச்சொல்லாகவும், காரணப்பெயராகவும் கொள்ளப்படுகின்றது 'திமில்'. காளை மாட்டின் உடலில் முதுகுக்கும் கழுத்துக்கும் இடையில் உயர்ந்து காணப் படும் பகுதியைத் 'திமில்' என்பர் நம்மவர். 'நாம்பன்' எனக் கிராமத்தவர்கள் பேசிக் கொள்ளும் ஆண் மாட்டின் உடலமைப்பில் மாத்திரம் கம்பீரமாகக் காட்சி யளிக்கும் இதனை 'ஏரி' என்றும் சொல்வர். (மழை நீர் தேங்கிநிற்கும் நீர்நிலையையும் 'ஏரி' என்பர்) 'ஏர்' எனப்படுவது வயல் நிலத்தை உழுது பண்படுத்தும் கலப்பை. இதனைத் தாங்கிக் கொள்ளும் முதுகுப்புறமாகையால் 'ஏர்' என்பதிலிருந்து ஏரியோ? 'ஏரி' என்பதிலிருந்து ஏரோ? தோற்றம்பெற்றுமிருக்கலாம் என்ற எண்ணப்பாடும் இல்லாமலில்லை. கலப்பையைத் தாங்கிக் கொள்வது மட்டுமன்றி வண்டியைத் தாங்கி அதனை முன்னே இழுக்கும்போது பின்னே செல்ல விடாது தடையாக இருக்கும் உயர்ந்த மேடாகவும் 'ஏரி' விளங்குகின்றது. ஆனாலும் 'திமில்' என்பது சங்க காலத்தில் மீனவத் தமிழர் பயன்படுத்திய கடல் நீர்க் கலங்களுள் ஒன்று என்ற ஆதாரங்களும் உண்டு.



'புனல் பொருது மெலிந்தார் திமில் விட'- பரிபாடல்
'வெந் திறல் இளையவர் வேட்டு எழுந்தாங்கு, திமில் மேற் கொண்டு, திரைச் சுரம் நீந்தி'- நற்றிணை
'வலம்புரி மூழ்கிய வான் திமிற் பரதவர்' - அகநானூறு. இவற்றின்படி பரதவர் மீன்பிடிப்பதற்காகவும் முத்துக் குளிப்பதற்காகவும் 'திமில்' என்ற கடற் கலத்தைப் பயன்படுத்தினர். இதனால் அவர் களைத் 'திமிலர்' என்ற சாதியப் பாகுபாட்டுக்குள் இன்றும் நோக்கு வது கண்கூடு. இதன்படி திமிலர் மீன் பிடிக்கவும், முத்துக் குளிக்கவும் பயன்படுத்திய கடல் மிதவைக்குப் பெயர் 'திமில்' என்பதுவும் உறுதி. இக்காலத்தில் அதனையே கட்டு மரம் என்பர். இவ்வா றாக இருவேறு பொருள் கொள்ளும் 'திமில்' தமிழரின் பழமை கூறும் பல பொருள் உணர்த்தும் ஒரு சொல்லே.









# இதுதான் உங்கள் சேவையா?

ஜெ.றியா

வெள்ளையும் சொள்ளையுமாக யாழ்ப்பாணத்தில்பொலிஸ் நிலையம் ஒன்று புதிதாகத் திறந்து வைக்கப்பட்டவுடன் அதன் பின்விளைவுகள் மெல்ல மெல்ல வெளித் தோன்ற ஆரம்பிக்கின்றன. அரச பாதுகாப்பு, நீதி நடவடிக்கைகளுள் அதி கூடிய அளவு பெரும்பான்மை இனத்தவர்களை உள்ளடக்கியவாறு தொடரும் அரசுகள் ஒவ்வொன்றும் இதுவரை செய்து வந்த தவறையே இன்றைய அரசும் பின்பற்றுகின்றது. வேறுபட்ட ஒரு இனக்குழுவினருக்குள் பணியாற்றத் தேர்ந்தெடுக் கப்படும் இவர்களைச் சரியான பயிற்றுவிப்புக்களின் பின்பே உள்வாங்கியிருக்க வேண்டும்: இன, மத, மொழி ரீதியாக வேற்றுமைப்பட்டுள்ள பிறிதொரு சமூகத்துடன் மிகக் கவனமாகச் செயற்பட வேண்டும் என்ற உளவியல் அணுகுமுறையைத் தவிர்த்த பொறுப்பற்ற தன்மையை இதுவரையிருந்த பெரும்பான்மை அரசுகள் கடைப்பிடித்தமையாலேயே அடக்குமுறைக்குட்பட்ட, உரிமைகள் மறுக்கப்பட்ட தமிழர்கள் அகிம்சைவழியைத் தொடர்ந்த ஆயுத வழிப் போராட்டத்தில் தம்மை ஈடுபடுத்தியிருந்தனர். கடந்த மூன்று தசாப்த காலம் நீடித்து ஓய்ந்த பெரும் பான்மை அடக்குமுறைக்கெதிரான தமிழர்களின் போராட்டம் பயங்கர வாதம் என்று முத்திரைகுத்தப்பட்டு உலக நாடுகள் பலவும் இணைந்த ததாய் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. இந்த நிலையில் வழமை யானதும், பெரும்பான்மை இன இயல்பானதுமான அரச பயங்கரவாதத்தின் பிரதிபலிப்பென்று யாழ்ப்பா ணத்தை மறுபடியும் பதற்ற நிலைக்குள் ளாக்கியிருக்கின்றது.

## அர்த்தமுள்ள அப்பியாசம் 10

01. அப்பியாசம் உங்கள் தன்னம்பிக்கையைக் கூட்டும்.
02. உங்கள் சமிபாட்டைக் கூட்டும்
03. நிம்மதியாகத் தூங்க உதவும்
04. உங்கள் சக்தியைக் கூட்டும்
05. உங்கள் நிறத்தைப் பிரகாசிக்கச் செய்யும் (Fair and lovelyதேவையில்லை)
06. உங்கள் நோய் எதிர்ப்புச்செயற்பாட்டைப்பலப் படுத்தும்.
07. உடல் அமைப்பைச்சீர் செய்யும் (ஆண் அழகன் அல்லது அழகிப் போட்டியில் பங்கு பெறலாம்.)
08. மேலதிக கலோரியை எரித்து சீர் செய்யும்
09. உங்கள் தசை நார்களைச் சீர்செய்து பலமாக்கும்.
10. தசைநார் வலுவைப் பெருக்க உதவும் Mr.Muscle போட்டிக்கு விண்ணப்பிக்கலாம்)

கலாபூணம் மு.மாசிலாமணி

## மீண்டும் மிளிர்க மிடுக்கோடு...

யாழ்ப்பாணம்!
முது தமிழன் வாழ்நிலத்தின் முகவரி
எது வரினும் வரட்டும் என நிமிர்ந்த எங்களின் பூமி
ஈர்பத்தோடு ஒரு ஆண்டுகளுக்கு முன்னர்
சீரோடு நாம் இருந்த மண்ணில்
வேரகற்றி வெளியேறினோம்
கால்கள்சோர கண்களிலே நீர்வார
ஊரிழந்து நடந்தோம்
இராப் பொழுதொன்றில் இருளப்பியபடி
பராவிளக்கின் வெளிச்சத்தில் ஊர்ந்தோம்

கையில் உள்ள குழந்தையது தான் நழுவிப்போனதுவும்
அறியாது நகர்ந்த தாய்மார்கள் எத்தனைபேர்
மெய்வருத்தத்தோடு மேனியெலாம் நோக
அவதிப்பட்டு அல்லலுற்ற முதிர்வுகள் தான் எத்தனை
தைவந்தால் மீண்டும் திரும்பிடலாம் என்று
அன்றெம்மைத் தேற்றியபடி தேம்பினோம்
வையகத்தில் உள்ள வானுறையும் தெய்வங்கள்
அத்தனையும் அழைத்தன்று வேண்டினோம்

பனை வெளிகள் தலையசைத்து விடைகொடுக்க
நினை வெல்லாம் எம்மண்ணே நிறைந்து நிற்க
கனைகடலும் ஆர்ப்பரித்துக் கையசைக்க
மனையோடு மண்குடில்கள் அமைத்திருந்த
ஊரகன்று சென்றோம்
பருவ மழை கொட்ட பட்டினிதான்
எமைவாட்ட எட்டுத் திசையிருந்தும்
எறிகணைகள் கூவிவர எங்கள் ஊரே
உன்னை விட்டுப் போனோம் நாம்
தோளில் சுமையுடனும் நெஞ்சில் வலியுடனும்
நாம் பிறந்த மண்ணே உனைப் பிரிந்தோம்
வாழில் அனைவரும் வாழ்வோம்

வீழில் எல்லோரும் வீழ்வோம் என்றுதானே
யாழில் இருந்து சென்றோம் ஆயினும்
மீள வந்து வேர் விட்டோம்
மீண்டும் மிளிர்க மிடுக்கோடு
கோபுர நிமிர்வாகி விழாக்கோலம்
பூண்டு எழுக எங்கள் மண்மகளே
புயலெழுந்த எம் வாசலெல்லாம் பொலிவுபெறத்
தாண்டித் தடைகளெல்லாம் தகர்த்தபடி
தானுயர்வாய் நினைவுகள் பலிதமாக
வேண்டுகிறோம் உன்னை
மீண்டும் மிளிர்க மீடுக்கோடு

*தி.சாந்தகுமார்*
*யா/கந்தரோடை தமிழ்க் கந்தையா வித்தியாசாலை.*



# அளவுக்கு மீறினால் நஞ்சு

'தினமும் எட்டு டம்ளர் தண்ணீர் குடிக்கப் பறந்துவிடும் பல நோய்கள்' என்று பலர் அக்கறையோடு சொல்வார்கள். ஆனால் அதெல்லாம் அவசியம் இல்லை என்கிறது தற்போது ஆஸ்திரேலியாவில் விஞ்ஞானிகள் மேற்கொண்ட ஆய்வு.

உடற்பயிற்சி செய்துவரும் 20பேர் இந்த வகை ஆய்வுக்குட்படுத்தப்பட்டனர். சிலர் தாகத்துக்கு ஏற்ப தண்ணீர் குடித்தனர். சிலர் அளவுக்கு அதிகமாகத் தண்ணீர் குடித்தனர். இந்த இரு பிரிவினரதும் உடல்களிலுள்ள வேறுபாடுகள் பரிசோதிக்கப்பட்டன. அளவுக்கு அதிகமாகத் தண்ணீர் குடிப்பவர்களின் மூளை செயற்படும் விதமும் மற்றையவர்களின் மூளை செயற்படும் விதமும் நவீன கருவிகளால் (ஸ்கான்) ஆய்வு செய்யப்பட்டது.

இந்த ஆய்வின் முடிவிலிருந்தே தினமும் எட்டு டம்ளர் தண்ணீர் குடிக்க வேண்டும் என்ற பொதுவான கருத்து எல்லோருக்கும் பொருந்தாது என்கிறது இந்த ஆய்வுக்குழு. அவரவர் தாகத்துக்கு ஏற்ப தண்ணீரைக் குடித்துக்கொள்ள வேண்டும். சிலருக்கு அதிகம் தண்ணீர் தேவைப்படுகிறது. சிலருக்குக் குறைவாகத் தேவைப்படுகிறது. அது மட்டுமல்லாமல், நாம் சாப்பிடுகின்ற உணவுகள் பலவற்றிலும் தண்ணீர் கலந்துதான் இருக்கிறது. அத்துடன் சிலவகை உணவுகளில் அதிகமாகவே தண்ணீர் இருக்கிறது என்பதையும் நினைவிற் கொள்ள வேண்டும்.

அளவுக்கு மீறித் தண்ணீர் குடிப்பதால் அந்தத் தண்ணீரை ஒழுங்குபடுத்தும் வகையில் நமது உடலில் ஒரு செயற்பாடு மேலதிகமாக ஒழுங்கமைக்கப்பட்டு நடைபெறுவதையும் இந்த ஆய்வு முதன் முறையாகக் கண்டுபிடித்துள்ளது.

உடலின் முன்னெச்சரிக்கையையும் மீறி ஏராளமான தண்ணீரை நாம் ஒரே நேரத்தில் குடித்தால் எதிர்பாராத மாற்றங்கள் உடலில் ஏற்படுகின்றன. குருதியில் உள்ள சோடியத்தின்(உப்பு) அளவு சாதாரணமான அளவை விடக் குறைகிறது. இதன் விளைவாக மந்தமும் வாந்தி எடுக்கும் உணர்வும் ஏற்படுகிறது.

மிக அதிகமான அளவு தண்ணீர் குடிக்கும் ஒருவருக்கு வலிப்புக்களும் ஏற்படலாம். இதனால் மூளை பாதிக்கப்பட்டுக் கோமா நிலைக்குச் செல்லும் அபாயங்களும் உள்ளன. அதன் தொடர்ச்சியாக உயிரிழப்பும் ஏற்படக்கூடும் என்கின்றன சமீபத்திய ஆய்வுகள். அளவுக்கு மிஞ்சினால் தண்ணீரும் நஞ்சுதான் என்கிறார் இந்த ஆய்விலீடுபட்டுள்ள ஆஸ்திரேலியாவின் மோனாஷ் பல்கலைக்கழத்தின் பேராசிரியர் மைக்கேல் பார்ரெல்.







1

# திரையிசைப் பாடல்களில் பெண்ணடிமைக் கருத்துக்கள்

எஸ்.மல்லிகா

மனுக்குல வரலாற்றில் மாற்றமே என்றும் மாறாதது. இந்த மாற்றத்தில் பெண்கள் வளர்ச்சியும் சிந்திக்கத்தக்கது. அனைத்துத் துறைகளிலும் அவர்கள் தடம் பதித்துச் சாதனை படைத்து வரினும், புதுமை விரும்பிகளை அநேகமான ஆண்கள் விரும்புவதில்லை. பெண் உழைப்பும் வளர்ச்சியும் இன்றும் கொச்சைப் படுத்தப்பட்டுக்கொண்டேயிருக்கின்றன.

அந்தக் கொச்சைப்படுத்தலின் உச்சம், திரையிசைப் பாடல்களில் கையாளப்பட்டுள்ள பெண்ணடிமைக் கருத்துக்கள். சமூகத்தின் பெரும் பங்குதாரர்களான கவிஞர்கள், நிறைய மாற்றங்களுக்கு வித்திடுபவர்கள். இப்படிப்பட்ட கவிஞர்களின் எழுத்தில் ஒரு தெளிவும் தொலைநோக்குச் சிந்தனையும் இருத்தல் அவசியம். இது திரைப்படப் பாடல் ஆசிரியர்களுக்கும் பொருந்தும். ஏனென்றால், திரைப்படப் பாடல்கள் சமுதாய மாற்றத்துக்குப் பெரும் பங்கு வகிக்கின்றன. ஆனால், கதைக்குப் பின்னணியை மையமாக வைத்தே அநேகமான பாடல்கள் எழுதப்படுவதால்– அவை மறைமுகமாகப் பெண்களை அடிமைப்படுத்தி எழுதப்படுகின்றன. இப்படிப்பட்ட பாடல்களின் வரிகள் பெண்களின் சுயமரியாதையைக் குந்தகப்படுத்துவனவாகவே அமைந்துள்ளன. 1964இல் ஸ்ரீதரின் இயக்கத்தில் வெளியான "காதலிக்க நேரமில்லை' என்ற படத்தில் கதாநாயகன் கதாநாயகியைக் கேலி செய்து பாடுவதாக வரும் காட்சியில் இடம்பெற்ற கண்ணதாசன் வரிகள் இவை.



"தாலாட்டும் பெண்ணின் பூவாட்டம் கைகள்
காரோட்ட வரலாமா?
ஆளான படிப்பு நீ படித்தாலும்
அதுக்கது துணை வேண்டும்
கோடானு கோடி பணமிருந்தாலும்
கும்பிட்டு விழ வேண்டும்"

பெண்கள் எப்பொழுதும் ஆணுக்கு அடிமைதான். அவள் விருப்பு வெறுப்பு, கோபதாபங்கள் எல்லாம் அடுப்பங்கரை வரைதான் என்பதைக் கண்ண தாசன் 'நிழல் நிஜமாகிறது' என்ற படத்தில் மீண்டும் கோடிட்டுக் காட்டியுள்ளார். இப்படத்தின் கதாநாயகன் மிகவும் முற்போக்குச் சிந்தனையுடையவனாகச் சித்திரிக்கப்பட்டிருந்தான். ஆனால், அவன் ஆத்திரம் கொண்ட கதாநாயகியைப் பார்த்து டுயட் பாடுவதாய் அமைந்த காட்சியில் கண்ணதாசனின் வரிகள் இவ்வாறு அமைந்துள்ளன.

"ஆத்திரம் என்பது பெண்களுக்கெல்லாம்
அடுப்படி வரைதானே– ஒரு
ஆதிக்க நாயகன் சாதிக்க வந்தால்
அடங்குதல் முறைதானே?"



இதில் ஆண் மகன் ஆதிக்கம் செலுத்தப் பிறந்தவன். பெண் அவனுக்கு அடங்கி நடப்பதே முறை என்பதை வெளிப்படையாகக் கண்ணதாசன் கூறுகிறார்.

இதேபோன்று 'பெரிய இடத்துப் பெண்' திரைப்படத்தில் அவரது இன்னொரு பாடல். அதில் பட்டண வாழ்வின் அவலங்களைக் கதாநாயகன் பாடுவதாக அமைந்த வரிகள் இதோ–

"அடுப்பெரிக்கும் பெண்கள் எல்லாம்
அழகழகாய் படிக்குதப்பா
அச்சடித்த காகிதத்தை
அடுக்கடுக்கா சுமக்குதப்பா
ஏட்டிலே படிக்குதப்பா
எழுத சொன்னா புரியலப்பா
நாட்டுக்குத்தான் ராணியப்பா
வீட்டுக்கவ மன்னவியப்பா"

பெண் படித்துப் பட்டம் பெற்றுப் பதவியில் உயர்ந்தாலும், வீட்டுக்குள் அவள் கணவனுக்குக் கட்டுப்பட்டவள் என்பதையே இவ்வரிகள் மறைமுகமாக எடுத்துக்கூறுகின்றன. "பட்டிக்காடா பட்டணமா" திரைப்படத்தில், கதாநாயகி படித்து மேல்நாட்டு நாகரிகத்தில் மூழ்கிப்போனவள். தன் விவசாயம் செய்யும் மாமனைத் திருமணம் செய்கிறாள். மனமுறிவு ஏற்படுகிறது. இருவரும் பிரிகின்றனர். ஒரு திருமண வைபவத்தில் தம்பதியரைக் கதாநாயகன் வாழ்த்திப் பாடுகிறான். அதில் கதாநாயகி தன் தவறை உணர இடித்து உரைப்பதுபோல் அமைந்த வரிகள் இவை–

"கல்யாணக் கோவிலிலே
கணவன் ஒரு தெய்வம் அம்மா
போடுவது பொன் தாலி
தாலி ஒரு பொன் வேலி
மாப்பிள்ளையை வெறுத்தாலும்
வாசற்படி தாண்டாதே
கோபப்பட்டு உதைத்தாலும்
கொண்டவனை மறக்காதே"

இவை கண்ணதாசன் வரிகள். கல்லானாலும் கணவன் புல்லானாலும் புருஷன் என்ற அக்காலப் பழமொழியையே கவிஞர் வழிமொழிந்துள்ளார். தாலி ஒரு வேலியா அல்லது பெண்ணை ஆணுக்கு அடிமைப்படுத்தப்போடும் பொன் விலங்கா?

மனிதன் மட்டும்தான் சிரிக்கத் தெரிந்த விலங்கு. சிரிப்பது பேசுவது எல்லாம் மனித குலத்தின் சிறப்பம்சம் அல்லவா? ஆனால், பெண்கள் அதிகம் பேசக்கூடாது, அதிகம் சிரிக்கக்கூடாது என அவள் அடிப்படை உரிமைகளுக்குக்கூட சங்கு ஊதுகிறது 'சங்கே முழங்கு' திரைப்படப் பாடல் வரிகள்...

"பொம்பள சிரிச்சா போச்சு
புகையில விரிச்சா போச்சு
பெட்டைக் கோழியை காவல் காக்க
சேவல் நான் வரவா?" இவை பெண்ணின் உரிமையைப் பறிக்கும் கண்ணதாசன் வரிகள்.

"பொண்ணா பிறந்தா
ஆம்பளகிட்ட கழுத்த நீட்டிக்கணும்
அவ ஒண்ணு ரெண்டு மூணு முடிச்சு
போட்டா மாத்திக்கணும்"

'உரிமைக் குரல்' திரைப்படத்தில் இடம்பெற்ற வாலியின் பெண் அடிமைச் சாசன வரிகள் இவை. தாலி கட்டியதும் பெண் தன்னை ஆணின் விருப்பத்துக்கேற்ப மாற்றிக்கொள்ள வேண்டும் என்று வாலி கூறுகிறார்.

கவிஞர்கள் காலத்தின் குரல்கள். ஆனால், கற் பொழுக்கம் என்பது பெண்ணுக்கு மட்டுமே என்ற குரலே ஆண் கவிஞர்களின் வரிகளில் எப்போதும் எதிரொலிக் கின்றது. பெண்ணுக்குப் போடப்படும் அத்தனை கட்டுப்பாடும் அவள் கற்பை மையமாக வைத்தே முன்மொழியப்படுகின்றன. இது பெண் முன்னேற்றத்துக்கு முட்டுக்கட்டை போடும் காரணியாக அமைந்துவிடுகிறது. இதே கற்பு ஆணுக்கும் இருக்க வேண்டும் என்று பாரதியைப் போல நெஞ்சுறுதியுடன் எத்தனை கவிஞர்கள் கூறியுள்ளனர்?

# அழியா நினைவுகள்...



சமயத்தில்
திருச்சிற்றம்பலம்!
தமிழில் அகரமுதல்!
கணிதத்தில் அச்சிட்டவர் பெயர்!
ஆங்கிலத்தில் ஆம்! இல்லை!!

இதுக்கா
போனோம் பள்ளி...
அங்கே... ஆலம்விழுதில்
தொங்கி
ஆடிய நினைவுகள்..

வாத்தி பிரம்பு
வலித்தது... பின்னால்...
இன்றது இனிக்கும் முத்தம்
கன்ரினில் காசில்லாமல் ரீ
குடித்த நினைவுகள்..

கணக்குப்பாட வாத்தி
வரக்கூடாதென்றும்
வரணும் காய்ச்சல்
என்றும்...
கந்தனுக்கு வைத்த
நேர்த்தியின் நினைவுகள்!

பள்ளித்தோழிக்கு
விசில் அடிக்க
தலைமை வாத்தி வந்து
தலையில் குட்டிய
நினைவுகள்...
விஞ்ஞான வாத்தி
நியூட்டன்
மூன்றாம் விதி

கேட்க பின்வாங்கு தோழியை
காட்டிய ஞாபகம்

அடிக்கவில்லை
அருகிலழைத்து
அமிர்தமாய்
தடவினார் தலை!
அமிர்தநாதன் ஆசிரியர்

இன்னும் எத்தனை...?
இன்பங்கள் எத்தனை....??
இனிமைகள் எத்தனை....???
எந்தன் நினைவுகள்...
தான் எத்தனை..!!

பா. உதயா, கிளிநொச்சி

# கொலைகார மேகங்கள்:

# பெர்முடா முக்கோணம்




ஜெ.காயா

பெர்முடா முக்கோணம் என்று கூறப்படுவது வட அத்திலாந்திக்கடலில் கப்பல்களும் விமானங்களும் காரணம் அறியப்படாத முறையில் காணாமல் போகின்ற கடற்பரப்பை கற்பனையில் முக்கோணவடிவாக வரையறை செய்துள்ள ஒரு பகுதி. அமெரிக்காவின் புளோரிடா மாகாணத்திலுள்ள மியாமி நகரையும் கரீபியன் கடலிலுள்ள மேற்கிந்தியத் தீவுகளில் ஒன்றான பூர்டோ ரிகோர் தீவையும் அத்திலாந்திக் கடலிலுள்ள பெர்முடாத் தீவையும் இணைத்துக் கற்பனைக் கோடொன்றை வரைவதன் மூலம் தோற்றமளிக்கும் முக்கோணப் பகுதியையே பெர்முடா முக்கோணம் என்று குறிப்பிடுகின்றனர். இது உலகின் மிகவும் அதிகமான கப்பல் போக்குவரத்துப் பகுதியாக இருக்கிறது. அமெரிக்கா, ஐரோப்பா, மற்றும் கரீபியன் தீவுகளில் உள்ள துறைமுகங்களுக்குத் தினந்தோறும் இந்தப் பகுதியூடாகவே கப்பல்கள் கடந்து செல்கின்றன. பொழுதுபோக்கு வானூர்திகள் எப்போதும் இதனூடாகப் போவதும் வருவதுமாய் உள்ளன. புளோரிடா, கரீபியன், மற் றும் தென் அமெரிக்கா ஆகிய இடங்களுக்குச் செல்லும் வர்த்தக மற்றும் தனியார் விமாணங்களும் இதனூடாகவே செல்கின்றன.

### மர்மமான மறைதல்கள்

இந்தப் பகுதிக்குள் பிரவேசித்த, இந்தப் பகுதியூடாகப் பயணம் செய்த பல கப்பல்கள், விமானங்களின் மறைவுக்கான காரணங்கள் ஆதாரத்துடன் நிரூபிக்கப்படாததால் அவை காணாமல் போனமைக்குப் பலராலும் பல கோணங்களில் கருத்துரைக்கப்பட்டு வந்தது. அதிகமாக அந்தப் பகுதிக்குள் அமனுஷ்ய சக்தி இருக்கின்றது என்ற கருத்துக்களே இன்றுவரை பிரபல்யம் பெற்றுள்ளன. ஆனாலும் சிலர் உலகத்திற்கு அப்பாற்பட்டுள்ள உயிர்களின் (வேற்றுக்கிரக வாசிகள்) செயலாக இருக்கலாம் என்றும் குறிப்பிட்டிருந்தனர். 1950களிலேயே 'பெர்முடா முக்கோணம்' என்பதன் ஆரம்பம் வெளிப்படுத்தப்பட்டது. அதன் பின்னர் 'நமது கொல்லைப் புறத்தில் கடல் மர்மம்' என்று அது குறிப்பிடப்பட்டது. 1962இல் பேர்முடாப் பகுதிக்குள் பிரவேசித்த 'விமானம்-19' இன் விமானி 'நாங்கள் இப்போது எங்கிருக்கிறோம் என்பது எங்களுக்குத் தெரியவில்லை' என்று கூறியுள்ளார். அன்றிலிருந்து காணாமல் போய்விட்ட அந்த விமானம் செவ்வாய்க்குப் போய்விட்டதாகவும் கூறப்பட்டது. இதன் பின்னர் 'மரண பெர்முடா முக்கோணம்' என்று அந்தப் பகுதி குறிப்பிடப்பட்டது. ஒப்பீட்டளவில் பார்த்தால், கடலின் வேறு எந்த பகுதியினையும் விட இந்தப் பகுதிக்குள் தொலைந்து போகும் கப்பல்கள் மற்றும் விமானங்களின் எண்ணிக்கை கூடுதலாகவே காணப்படுகின்றது.

### மறுத்துரைப்போரின் ஊகங்கள்

இன்றுவரை இந்தப்பகுதிக்குள் தொலைபவை பற்றி ஏராளமாக அமானுஷ்ய கருத்துகளே நிலவுகின்றன. இவை உண்மையில்லை மனிதர்களின் கற்பனை என்று வாதிடுவோர் இவற்றின் மறைதலுக்கான சில காரணங்களையும் முன்வைக்கின்றார்கள். அசாதாரணமான காந்த அலைகள் இந்தப்பகுதியில் இருக்கலாம் என்றும் கருதுகிறார்கள். போர் நடவடிக்கைகள், கடற்கொள்ளை நடவடிக்கைகள். இந்த வகையினதாகக் கூறப்படும். இன்னும் பல சம்பவங்கள் பெருங்கடல் பகுதிகளில் மிகவும் சாதாரணமாக நிகழ்பவை. இவை அதிகமாகக் கப்பல் போக்குவரத்துப் பகுதியான இங்கேயும் நிகழ்கின்றது இதனால் கடத்தப்படும் கப்பல்கல் என்னாகின்றன என்றறியாமலுள்ளதால் இவ்வாறு மர்மம் எனக்கருதுவதாக வாதிடுகின்றனர். அத்துடன் மெக்சிகோ வளைகுடாவில் தோன்றி, புளோரிடா நீரிணை வழியாக, வட அத்திலாந்திக் கடல் வரை செல்லும் வளைகுடா நீரோட்டம் கடலுக்குள் இருக்கும் ஒரு ஆறு போன்றது. இது தன்மீது மிதக்கும் பொருள்களைச் சுமந்து செல்கிறது. சிறு விமானம் நீரில் விழுந்து விட்டாலோ அல்லது ஏதேனும் படகு இயந்திரக் கோளாறினால் நின்று விட்டாலோ அந்த இடத்தில் இருந்து நீரோட்டம் தன் போக்கில் சுமந்துசென்று எங்காவது சேர்த்து விடும். சில தொலைதல்களுக்கு கரையோரப் பகுதி அடுக்குகளில் படிந்த மீதேன் ஹைறட்ரேட் (இயற்கை எரிவாயுவின் ஒரு வடிவம்) காரணம் என்கின்றனர். ஆஸ்திரேலியாவில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனைகளின்படி இந்த வாயு நீரின் அடர்த்தியைக் குறைப்பதனால் குமிழிகள் ஏற்படுகின்றன. இவை கப்பலை மூழ்கச் செய்யக்கூடியன என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது. இவை 'சேறு எரிமலைகள்' என அழைக்கப்படுகின்றன. கப்பல்கள் மிதப்பதற்கு தேவையான மிதவைத் தன்மையை வழங்க முடியாத சகதி நீர் பிராந்தியங்களை உருவாக்கலாம் என்கிற ஒரு முடிவும் முன்வைக்கப்படுகிறது. இவ்வாறான வாயு குறிப்பிட்ட பகுதியில் கப்பலைச் சுற்றி உருவாகிக் கப்பல் வெகு துரிதமாக எச்சரிக்கையின்றி மூழ்கக் காரணமாகின்றது என்கின்றனர்.

### மர்மங்களுக்கும் ஊகங்களுக்கும் முற்றுப்புள்ளி

இவ்வாறான கடலிலுள்ள பாதகத்தால் விமானங்கள் மறைந்து போகின்றன என்பது ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்றே. இவ்வாறிருந்து வரும் பெர்முடாவுக்குள் தொலைந்துபோனவை பற்றி விடை கிடைக்காதிருந்த மர்மங்களுக்குத் தற்போது முற்றுப்புள்ளி வைத்துள்ளதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. பெர்முடா முக்கோணப்பிரதேசத்தின் மேல் நிலைகொண்டுள்ள மேகங்கள் தான் அங்கு நடக்கும் மர்மமான நிகழ்வுகளுக்குக் காரணம் எனத் தெரிவித்துள்ள ஆராய்ச்சியாளர்கள் அவற்றைக் 'கொலைகார மேகங்கள்' என்கின்றனர்.

இவை பெர்முடா முக்கோணமாகக் கருதப்படும் பகுதிக்கு மேல் அறுகோண வடிவில் அமைந்திருக்கின்றன. மேலும், அங்கு காற்று மணிக்கு 170 மைல் வேகத்தில் வீசுகின்றது. இதன் காரணத்தால்தான் பெர்முடா முக்கோணப்பகுதியில் வானிலையும் கடலும் சீரற்றுக் காணப்பட்டுக் கப்பல்கள் மற்றும் விமானங்கள் உள்வாங்கப்படுகின்றது. இது மேகங்களால் ஏற்படுத்தப்படும் விபத்து என்றே ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர்.

பெர்முடா பகுதியில் அறுகோண வடிவில் ஏறத்தாழ 20 -55 மைல் தூர அகலத்தில் மேகங்கள் அமைந்துள்ளன. இவை பெர்முடா முக்கோணத்தின் மேற்கு பகுதியில் தான் பெரும்பாலும் அமைகின்றன. இங்கே மணிக்கு 170 மைல் வேகத்தில் காற்று வீசுவதற்கும் 45 அடி உயரத்திற்கு அலைகள் எழுவதற்கும் பெர்முடா முக்கோணப் பகுதியிலுள்ள மேகங்கள் தான் காரணம் ஆகவே இந்தப் பகுதிக்குள் பிரவேசிக்கும் கப்பல்களும் விமாணங்களும் இயற்கையால் விபத்துக்குள்ளாகின்றன.

### தொடர்ந்த ஆராய்ச்சிகள்

கடந்த மார்ச் மாதம் நோர்வே நாட்டு விஞ்ஞானிகள் வெளியிட்ட கூற்றுப்படி, பெர்முடா முக்கோணக் கடல்பகுதியின் அடியில் பெரிய பள்ளங்கள் இருப்பதாக அந்த நாட்டின் ஆர்டிக் பல்கலைகழக ஆய்வாளர்கள் தெரிவித்திருந்தனர். நோர்வே நாட்டையொட்டிய, வட மத்திய கடல்பகுதியில் இந்தவகைப் பள்ளங்கள் இருப்பதாகவும் கண்டறிந்துள்ளனர். சில பள்ளங்கள் 800 மீற்றர் நீளமும், 150 அடி ஆழமும் கொண்டது என்கின்றனர். இந்தப் பகுதியில் அபரிமிதமான மீதேன் படிமங்கள் நிறைந்துள்ளன. இவை பெர்முடா முக்கோண கடற்பகுதியில் இருக்கும் ராட்சத பள்ளங்கள் வழியாகவே அங்கும் மீத்தேன் வாயுக் கசிவு ஏற்படுவதாகவும், அந்தக் கசிவால் பள்ளங்களில் பெரிய வெடிப்புகள் ஏற்படுகின்றன. மேலும், கடல் நீரின் அடர்த்தியைக் குறைத்து கப்பல்கள் மிதக்க முடியாத நிலையை ஏற்படச் செய்வதாகவும் கூறினர். மேலும், இந்தப் பள்ளங்களிலிருந்து வெளிப்படும் மீதேன் வாயு காரணமாகவும், அபரிதமான வெப்பம் காரணமாகவும் அந்தப் பகுதியில் செல்லும் விமானங்களும், கப்பல்களும் விபத்தில் சிக்குவதாகத் தெரிவித்திருந்தனர். இந்தப் பள்ளங்களிலிருந்து வெளியேறும் மீதேன் வாயு காரணமாக கப்பல்கள் பாதிக்கப்படுவதை ஒப்புக் கொண்டாலும், விமானங்கள் மாயமாவது குறித்த குழப்பம் நீடித்தது. இந்த நிலையில் தொடர்ந்த ஆராய்ச்சிகள் கப்பல் மற்றும் விமாணங்கள் மாயமாவதற்கு அதன் மேலுள்ள கொலைகார மேகங்களே காரணம் எனத் தற்போது புதிய காரணத்தைக் கண்டறிய வழிவகுத்துள்ளது.

ஆனாலும், இப்போது கூறப்பட்டுள்ள கூற்றுதான் இறுதியானதா? அல்லது வேறு காரணங்களுடன் இன்னும் ஏதாவது முடிவு எட்டப்பட்டுத் தொடர்கதையாகுமா? என்பதைப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

> இந்தப் பள்ளங்களிலிருந்து வெளியேறும் மீத்தேன் வாயு காரணமாக கப்பல்கள் பாதிக்கப்படுவதை ஒப்புக்கொண்டாலும், விமா னங்கள் மாயமாவது குறித்த குழப்பம் நீடித்தது. இந்த நிலை யில் தொடர்ந்த ஆராய்ச்சிகள் கப்பல் மற்றும் விமானங்கள் மாயமாவதற்கு அதன் மேலுள்ள கொலைகார மேகங்களே காரணம்.



# அம்மணி

## தமிழர்கள் ஒரு தடவை பார்க்க வேண்டிய படம்

தமிழ் சினிமாவுக்குள் இவ்வாறான திரைப்படங்கள் உருவாகுவது குதிரைக் கொம்பே. என்னதான் பாசத்தை ஊட்டி வளர்த்தாலும், பெற்ற பிள்ளைகளுக்குப் பணத்தின் மீதான ஆசை மட்டும்தான் அதிகமாக இருக்கும். தற்போதைய காலகட்டத்தில் நடுத்தர மற்றும் அதற்கும் கீழான நிலையில் இருக்கும் குடும்பங்களில் திருமணம் முடித்த பிள்ளைகளிடம் பெற்றோர் மீதான பாசத்தை எதிர்பார்க்க முடிவதில்லை. இவர்களுக்குள் நடக்கும் சண்டை, சச்சரவுகளுக்கு சொத்து, பணம் ஆகியவையே பிரதான காரணமாகின்றன. இந்த 'அம்மணி' திரைப்படம் சொல்வதும் இதைத்தான். இதன் இயக்குநர் லட்சுமி ராமகிருஷ்ணன் தான் தலைமை தாங்கி நடத்திவரும் 'சொல்வதெல்லாம் உண்மை' நிகழ்ச்சியில் பங்கெடுத்த ஒரு முதிய பெண்மணியின் உண்மைக் கதையையே கொஞ்சம் சினிமாத்தனத்துடன் கூடியளவு யதார்த்தம் வெளிப்படுமாறு இந்த 'அம்மணி'யில் சித்திரித்துள்ளார்.

**தமிழகத்தின்**
வடசென்னையில் இருக்கும் ஸ்ரான்லி மருத்துவமனையில் ஆயாவாக வேலை செய்கிறார் 'சாலம்மா' என்கிற லட்சுமி ராமகிருஷ்ணன். இவருடைய கணவர் இதே மருத்துவமனையில் வேலை பார்க்கும் போதே இறந்து போனதால், கருணை அடிப்படையில் அந்த வேலை சாலம்மாவுக்குக் கிடைத்திருக்கிறது. கணவர் இறந்த பின்னர்பிள்ளைகளைவளர்த்துஆளாக்கியிருக்கிறார் சாலம்மா. இதில் இளைய மக னான நிதின் சத்யா முச்சக்கர வண்டி ஓட்டி வருகிறார். மூத்த மகன் பெயிண் ரிங் வேலை செய்யும் குடிகாரன். இரண்டு மகன்களுக்கும் திருமணமும் செய்து இரு மகன்களுக்குமே இரண்டு பிள்ளைகள்.அனைவரும் ஒரே வீட்டில் வசிக்கிறார்கள். சாலம்மாவுக்கு இவர்களையும்விட மூத்த மகளும் ஒருவர் இருக்கிறார். அவர் காதல் திருமணம் செய்து கொண்டு ஊரை விட்டு ஓடிவிட்டதால் அவரோடு ஒட்டும் இல்லாமல் உறவும் இல்லாமல் இருக்கிறது சாலம்மாவின் குடும்பம்.

சாலம்மாவின் கணவருக்குச் சொந்தமான நிலத்தில் கடனாகப் பணம் பெற்றுக் கட்டிய வீடுதான் அது. அதே குடியிருப்பில் இன்னொரு ஒற்றை அறை கொண்ட வீட்டில் தெருவில்குப்பைகளைப்பொறுக்கிபிழைத்து வரும் 'அம்மணி' என்ற வயது முதிர்ந்த பெண்மணியும் இருக்கிறார்.

வேலையிலிருந்து ஓய்வாகும் வயது வந்து விட்டதால் ஊழியர் சேமநல வருங்கால வைப்புப் பணத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கிறாள் சாலம்மா. ஆனால், அவள் மட்டுமல்ல... அவளுடைய மகன்களும் கூடத்தான்.

மூத்த மகன் அம்மாவின் பணத்தை எதிர்பார்த்து பெயிண்ட் காண்ட்ராக்ட் எடுத்து நஷ்டப்பட்டுஅவலத்தில்இருக்கிறார். இளைய மகனான நிதினும் முச்சக்கர வண்டிக் கடனை அதை வைத்துதான் அடைக்க வேண்டும் என்று காத்திருக்கிறார். ஆனால் வரவிருக்கும் 2இலட்சத்து 6ஆயி ரம் ரூபாயில் வீடு கட்டியதன் கடனாக 2இலட்சத்தைக் கொடுத்துவிட்டால் மீதமாக கையில்6ஆயிரம்ரூபாய்மட்டுமேஇருக்கும். குடிகார மகனைவிடவும் சற்று விவரமாக இருக்கும் இளைய மகன்; பணம் எதுவும் கிடைக்காது என்கிற சூழலில் அந்த வீட்டைத் தனது பெயருக்கு மாற்றிக் கொடுக்கும்படி கேட்டு அடம் பிடிக்கிறான். மூத்த மகனுக்குக் குடுத்தால் அவன் குடித்தே அழித்து விடுவானே என்பதால் அவன் சொல்படியே எழுதிக் கொடுக்கிறாள் சாலம்மா. ஒருநாள்மூத்தமகனுக்கும், இளையமகனுக்கும் இடையில் சண்டை ஏற்பட.. 'இது என் வீடு. அம்மா எனக்கு எழுதிக் கொடுத்திருச்சு..' என்று சொல்லித் தனது அண்ணனை வீட்டைவிட்டு வெளியே போகும் படி சொல்கிறான் இளையவன். கூடவே அம்மாவையும் கூட்டிக் கொண்டு போகும் படி சாதுரியமாகச் சொல்ல.. பெரும் அதிர்ச்சி யாகிறார் சாலம்மா. தன்னுடைய கடைசிக் காலத்தில் தன்னைக் கவனித்துக் கொள் வான் என்று நினைத்த மகனே, தன்னை தள்ளி வைத்ததை ஜீரணிக்க முடியாத அவ லத்தில் இருக்கும் சாலம்மா, இதன் பின்பு அவர் எடுக்கும் ஒரு முடிவு? அது என்ன? என்பதும் இதன் பின்னான கதை என்ன என்பதும்தான் படத்தின் திரைக்கதை.

பிள்ளைகளைப் பெற்றெடுப்பதும், வளர்ப்பதும், குடும்பமாக வளர்வதும்கூட பெற்றோர்களின் சுயநலம்தான். ஆனால் இது தான் மனித வளர்ச்சியின் நோக்கம். அதன் அடிப்படையே ஒருவரையொருவர் சார்ந்து வாழ்தல்தான். குடும்பம்தான் முக்கியம் என்ற கலாசாரத்தைக் கொண்டிருக்கும் ஒரு பக்கம் பிள்ளைகளின் தனிக்குடித்தனம் அதிகமாக.. இன்னொரு பக்கம் முதியோர் இல்லங்கள் அதிகமாகிக் கொண்டே போக.. ஏன், எதற்கு இத்தனை கஷ்டப்பட்டு பிள்ளைகளை பெற்று வளர்க்க வேண்டும்.. என்றுமுதியவயதில் அனைத்து தாய், தந்தையரையும்யோசிக்க வைக்கிறது இன்றைய இளைய தலைமுறையினரின் செயல்.

மாமியார், மருமகள் சண்டை, அண்ணன் தம்பி மோதல்.. விட்டுக் கொடுப்பின்மை, வறட்டுக் கௌரவம், பணத்தின் மீதான ஆர்வம்.. சொந்த பந்தம் என்றாலும் பணம் என்றவுடன் குணம் மாறும் இயல்பு.. என்று பலவற்றையும் இந்தக் குடும்பத்துக் கதையில் மிகைப்படாமல் சொல்லியிருக்கிறார் இயக்குநர் லட்சுமி.



இன்னொரு பக்கம் எதைப் பற்றியும் கவலைப்படாமல் இரவு நேரத்தில் குப்பைகளைச் சேகரித்து அதில் கிடைக்கும் பணத்தில் பிழைத்து வரும் அம்மணிபாத்திரம்படத்திற்குக்கிடைத்திருக்கும் இன்னொரு பெரிய பலம். யாருமே இல்லாத அனாதையாக இருந்தாலும் கிடைத்ததை வைத்து சந்தோசமாக இருக்க-வேண்டும் என்கிறஅம்மணியின்கொள்கையை சாலம்மாவால்பின்பற்றமுடியவில்லை.

இந்த உலகத்துல நமக்குன்னு எதுவுமே சொந்தமில்லடி. இதோ.. இந்த லைட்டு மட்டும் போயிட்டா.. நம்ம நிழல் கூட நமக்குச் சொந்தமில்லை.. என்று அம்மணிப் பாட்டிபேசும் வசனம், குடும் பம் இருந்தும் தவிக்க விடப்பட்டுள்ள முதியவர்களுக்குரிய ஆதங்கமே.

அந்த கூன் விழுந்த, சுருங்கிப்போன தோல்களுடன் அழகிழந்த முகம்.. ஆனால் கண்ணில் சோகத் தையே காட்டாமல் முகத்தில் எப்போதும் சிரிப்புடனும், ஷ்தரியத்துடனும் பரிகாசத்துடன் இருக் கும் அம்மணி. பிள்ளைகள், மருமகள்கள், பேரன், பேத்திகள் இருந்தும் நிம் மதியில்லாமல் தவிக்கும் சாலம்மாவுக்கு சொல்லும்சமாதானங்களும், தைரியமும் தான் இந்தப் படம் சொல்லும் நீதி..!

அவர்கள் கண்ணெதிரேயே வாழ்ந்து காட்ட வேண்டாமா..? அதைத்தானே அம்மணியும் அவருக்கு உணர்த்தியிருக்கிறார்..! பின்பு ஏன் அந்த திடீர் முடிவு..? முடிவு யாருமே எதிர்பார்க்காதது. அதிலும் ஏதோ ஒன்று இருக்கிறது என்கிற செய்திக்குள் கொண்டு போனாலும், இதுவரைக் கதையிலிருந்த யதார்த்தம் விடுபட்டு சினிமாவாகிவிடுகின்றது படம்.

இம்ரான் ஹமத் மற்றும் கே.ஆரின் ஒளிப்பதிவு படத்திற்குக் கிடைத்திருக்கும் பலம். இதேபோல் படத் தொகுப்பு செய்திருக்கும் ரெஜித், கே.ஆர். இருவருமே தங்களது பணியைச் சிறப்பாகச் செய்திருக்கிறார்கள். அடித்தர மக்களின் வீட்டுக்குள் நடக்கும் காட்சிகளை தொகுத்து வழங்கியிருக்கும் விதம் பாராட்டுக்குரியது.

"என்னுடைய சாவு எப்படியிருக்கும் தெரியுமா..?" என்கிற சாலம்மாவின் கற்பனையில் விரிகின்ற 'லைப் மச்சான்' பாடலும், இந்தப் பாடலுக்கான ஆடலும் அசத்தல். இசையமைப்பாளர் கே-யின் அசத்தல் இசையில் விஜயலட்சுமி பாடியிருக்கும் 'மழை இங்கில்லையே' பாடல் அற்புதம். படம் முடிந்த பிறகும் பாடல் மனதுக்குள் ஒலித்துக் கொண்டேயிருக்கிறது.

வெறும் ஒன்றரை மணி நேரத்தில் ஒரு நாவலை வாசித்த உணர்வைக் கொடுத்திருக்கும் இது போன்ற படைப்புகளுக்குத்

## பெண்மையின் ஏக்கம்...

வாழ்ந்து என்ன கண்டோம்?
நாம் மனித வேட்டை எனும்
சாக்கடைக்குள்
வாழ்க்கையைத் தொலைத்து விட்டு
கிள்ளி எறியப்பட்ட வள்ளிக்
கொடியைப் போல கிடக்கின்றோம்.

துயரத்தால் மடிந்தோரும்
கோடி கோடி...
சாதனை செய்து விட்டதாக

இன்று சரித்திரம் பேசுகிறது
மறந்து விட்டால் உன் இதயம்
துடிக்குமா பயனில்லை!
கதறும் எம்குரல் கேட்கவில்லையா?
பாவை எமக்கு நீ செய்த பாவம்
உன்னைச் சும்மா விடாது

எம் வேதனையில் வெந்து மடியுங்கள்
முடிவில்லை வாழ்க்கையில்
விண்ணைத் தொட்டு விட்டோம்

எம் வாழ்க்கை விடியல்களை
இழந்து தவிக்கின்றது
எமக்கு எப்போது தான்
விடிவு கிடைக்கும்?



த. சர்மினி, வவுனியா.

## தீபாவளித் திரையில்...

சினிமா

தீபாவளி வெளியீடாகத் திரைக்கு வந்துள்ளது 'கொடி'. இதில் தனுஷ், த்ரிஷா, அனுபமா பரமேஸ்வரன், கருணாஸ், சரண்யா பொன்வண்ணன் உள்ளிட்ட பலர் நடித்திருக்கிறார்கள். துரை. செந்தில்குமார் இயக்கி இருக்கிறார். வெற்றிமாறன் தயாரித்திருக்கும் இந்தப் படத்தை 'எஸ்கேப்' மதன் வெளியிடுகிறார். முதன் முதலாகத் தனுஷ் இரட்டை வேடங்களில் நடித்திருக்கும் படம். தாடி வைத்த அரசியல்வாதி, தாடி இல்லாத பேராசிரியர் என இரட்டை வேடங்களில் நடித்திருக்கிறார் தனுஷ். அரசியல்வாதிக்கு ஜோடியாக த்ரிஷாவும், பேராசிரியருக்கு ஜோடியாக அனுபமாவும் நடித்திருக்கிறார்கள்.



அரசியல்தான் கதைக் களம்என்றாலும், அதனை மட்டும் சித்திரிக்கும் படம் கிடையாது. அரசி யலில் கீழ்மட்டத்தில் இருப்பவர்களின் குணாதிசயம், குடும்பப் பிணைப்பு என மனித உணர்வுக்ளைச் சொல்லும் படமாக திரைக்கதை அமைத்திருக்கிறார் துரை. செந்தில்குமார்.

இரட்டை வேடக் கதை என்றவுடன் புதிதாக இருக்க வேண்டும்என இரட்டையர்களைப் பற்றி சொல்ல தீர்மானித்திருக்கிறார்கள். இரட்டையர்களாக பிறப்பவர்களுக்குள் ஒருவித மருத்துவ குணாதிசயம் இருக்குமாம். அந்த ஒற்றுமையை வைத்துத்தான் கதை, திரைக்கதை எழுதியிருக்கிறார் துரை.செந்தில்குமார்.

இரண்டு கதாபாத்திரங்களாக நடிப்பில் மட்டுமன்றி, குரலில் கூட வித்தியாசம் காட்டிப் பேசியிருக்கிறார் தனுஷ்.

'ஆடுகளம்' படத்தில் டாப்ஸி கதாபாத்திரத்தில் முதலில் த்ரிா தான் நடித்தார். திகதிகள் பிரச்சினையால் விலகிவிட்டார். அதனைத் தொடர்ந்து தனுஷ் – த்ரிஷா இருவரும் இணைந்து நடித்திருக்கும் முதல் படமாகக் 'கொடி' அமைந்திருக்கிறது.


இந்தப்படத்தில் ருத்ரா என்ற அரசியல்வாதிக் கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார் த்ரிஷா. வழக்கமான பாடல் காட்சிகளுக்கு வரும் நாயகியாக இல்லாமல் எதிர் மறை கலந்த கதாபாத்திரத்தில் நடித்திருக்கிறார்.


இந்தப்படத்தில் தாய் – மகன் இருவருக்கும் இடையே ஒரு புதுவிதமான பாடல் காட்சி இருக்கிறது. அதனைச் சித்ரா பாடியிருக்கிறார். அதே போன்றதொரு பாடல் காட்சி இதுவரை தமிழ் சினிமாவில் வந்ததே இல்லை என்கிறது படக்குழு.

முதன் முதலாக இந்தப்படத்தின் இசைக்காக சந்தோஷ் நாராயணனுடன் கூட்டணி சேர்ந்திருக்கிறார் தனுஷ்.

முதலில் அனிருத்தான் இசையமைப்பதாக இருந்தது.

ஆனால், ஒரே திகதியில் உடனடியாக பாடல்கள் வேண்டும் என்றதால் அனிருத் விலக, சந்தோஷ் நாராயணனை இசையமைப்பாளராக ஒப்பந்தம் செய்தது படக்குழு.




நீண்ட நாள்களாகத் தயாரிப்பில் இருந்துவரும் 'காஷ்மோரா' தீபாவளி வெளியீடாகத் திரைக்கு வந்துள்ளது. கார்த்தி, நயன்தாரா, ஸ்ரீதிவ்யா, விவேக் உள்ளிட்ட பலர் நடித்திருக்கும் இந்தப் படத்தை கோகுல் இயக்கி இருக்கிறார்.



செய்வினை வைப்பது, எடுப்பது போன்ற விடயங்கள் அடங்கிய கதைதான் 'காஷ்மோரா'. அவையெல்லாம் உண்மைதானா? என்பதையும் சொல்லியிருக்கிறார்கள்.

இதுவரை கார்த்தி நடித்த படங்களின் தோற்றங்கள் எதுவுமே இந்தப் படத்தில் இடம்பெறக் கூடாது என்று தீர்மானித்திருக்கிறார்கள். இதனாலே சுமார் 47வேடங்களைப் போட்டுப் பார்த்து, 3வேடங்களைத் தெரிவுசெய்திருக்கிறார்கள்.

இந்தப்படத்தின் கதையைக் கேட்டவுடன், சிறிய கதாபாத்திரம் என்றாலும் அரசி கதாபாத்திரத்தில் இதுவரை நடித்ததில்லை, புதுமையாக இருக்கும் என்று சொல்லி நடித்துக் கொடுத்திருக்கிறார் நயன்தாரா. அவருடைய காட்சிகள் படத்தில் 30நிமிடங்கள் மட்டுமே. படப்பிடிப்பு நாள்கள் குறைவு தான் என்றாலும், அரங்குகள் அமைக்கும் பணிக்கு மட்டும் நீண்ட காலம் ஆகியிருக்கிறது. இப்படத்துக்காக மட்டும் 19வரையில் அரங்குகள் அமைத்துப் படப்பிடிப்பு நடத்தியிருக்கிறார்கள்.

பில்லி – சூனியம் ஆகியவற்றைப் பற்றி ஆராய்ச்சி செய்யும் மாணவியாக ஸ்ரீதிவ்யா நடித்திருக்கிறார். நகைச்சுவை கலந்த கதாபாத்திரம் கண்டிப்பாக தனக்குப் புதுமையானதாக இருந்ததாகத் தெரிவித்தார். முக்கியமாக, இரண்டு நாயகிகள் இருந்தாலும் இந்தப்படத்தில் காதல் காட்சிகள் கிடையாது என்பது ஒரு பெரிய ஆறுதல்

'மாற்றான்','எந்திரன்' படங்களுக்குப்பயன்படுத்திய உடல், முகத் தோற்றத்தை வார்ப்புச் செய்யும் நுட்பத்தை இந்தப் படத்திலும் பயன்படுத்தியுள்ளார்கள். கார்த்தியின் 3ஆவது கதாபாத்திரத்தை இதன் மூலமாக வடிவமைத்திருக்கி றார்கள்.

இந்தப்படத்தின் கிராபிக்ஸ் காட்சிகளுக்கு மட்டும் 8நிறுவனங்கள் பணியாற்றி இருக்கின்றன.

கார்த்தி இதுவரை நடித்து வெளிவந்த படங்களின் பட்ஜெட்டைவிட இந்தப் படத்துக்கு ஒதுக்கப்பட்ட பட்ஜட் 2மடங்கு அதிகம் என்கிறது படக்குழு.





# உமலும்... ஊமலும்...

தென்னவன்

இந்தத் தலைப்பைப் பார்த்ததுமே பாலர் வகுப்புக்குரிய படங்கள் பதித்த புத்தகத்தில் உள்ளவையே என்று நினைத்து விடாதீர்கள். காலங்காலமாக எமது மக்களால் பயன்படுத்தப்பட்டு வந்து தற்போது காணக் கிடைக்காத பொருள்களாக உள்ள பனம் பொருள்களே உமலும் ஊமலும். பனைவளம் நிறைந்த எமது தேசத்தில் மூதாதையர் காலத்தில் பல குடும்பங்களின் வாழ்வாதாரப் பொருள்களாக நீண்ட காலம் அனைத்து வீடுகளிலும் இவை காணப்பட்டன. தற்போது பொலித்தீன் பைகளும் மின்சார அடுப்புக்களும் பிரபல்யமடைந்ததால் இவற்றின் பயன்பாடு இல்லாமல் உற்பத்தி அற்றுக் காணப்படுகிறது.

## உமல்

யாழ்.குடாநாட்டில் பனைகள் இல்லாத ஊர்களே இல்லையெனலாம். அந்த அளவுக்குப் பனை உற்பத்திக்கு நம் முன்னவர்கள் முன்னுரிமை கொடுத்து பனை வளர்ப்பில் ஈடுபட்டுவந்தனர். பனையின் இளமைப்பருவமான வடலியிலிருந்து வளர்ந்த மரம் வரைக் கிடைக்கின்ற ஒவ்வொரு பொருளிலும் உற்பத்திப் பொருள்களை உருவாக்க முடியும் என்ற நம்பிக்கையில் ஒவ்வொரு குடும்பமும் பனை உற்பத்தியில் ஈடுபட்டிருந்தன.

பனை மரத்திலிருந்து எடுக்கப்படும் ஓலையிலிருந்து பல்வேறு வகையான உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்து தமது வாழ்வாதார மேம்பாட்டினை மேற்கொண்டு வந்தனர். பனையோலையிலிருந்து கடகம், பெட்டி, பாய் போன்றவற்றைப் பின்னியதுடன் அதிலிருந்து பெறப்படும் ஈர்க்கிலிருந்து சுளகு, உறி போன்றவற்றையும் பின்னிப் பயன்படுத்தியும் விற்பனை செய்தும் வந்தன்ர். ஆனால் இன்று பிளாஸ்ரிக் பொருள்களின் வருகை பனம் பொருள்களின் உற்பத்தியில் பெரும் வீழ்ச்சியை ஏற்படுத்தி விட்டதுடன் சூழலையும் பாழாக்குகின்றது. ஆனாலும் கிராமப் புறங்களில்இன்னமும் பனம்பொருள்களின் பாவனை தொடர்ந்து கொண்டிருப்பது மகிழ்வினைத் தருகின்றன.

தற்போது பிளாஸ்ரிக் கதிரைகளும் மரக் கதிரைகளும் வீடுகளில் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருகின்றன. விருந்தினர்கள் அயலவர்கள் வீடுகளுக்கு வருகை தந்தால் கதிரைகளைக் கொடுத்து அமர வைக்கின்றோம். முன்னைய காலங்களில் தடுக்கு எனப்படும் சிறிய அளவிலான பாய் அனைத்து வீடுகளிலும் காணப்பட்டது. விருந்தினராக எவர் வந்தாலும் தடுக்கினை நிலத்தில் விரித்து அமர்ந்து கொள்வதே முறை.

உமல் என்பது சந்தைகளுக்கு வருவோர் தமக்குத் தேவையான பொருள்களை வாங்கி அதனுள் போட்டு வீடுகளுக்குக் கொண்டு செல்லப் பயன்படும். குறிப்பாக கடல் உணவுகள் விற்பனை செய்யும் இடங்களில்உமல் வியாபாரிகள் பலர் காணப்படுவர். கடல்உணவு வியா பாரிகளிடம் கடல் உணவுகள் பெறுவோர் அருகில் காணப்படும் வியாபாரியிடம் உமலை வாங்கி அதில் போட்டுக் கொண்டு செல்வர். உமல் சிறிய பெரிய அளவுகளில் காணப்படும். மூன்று சென்றி மீற்றர் அகலமாக பனையோலையை வார்ந்து அதில் உற்பத்தி செய்யப்படும் உமலே சந்தைகளில் காணப்பட்டன. அந்த அளவுக்கு தின மும் பெருமளவு உமல்கள் விற்பனையாகும்.

இதனை விட வீடுகளில் உமல் வடிவில் ஓலைப் பைகள் நிறையக் காணப்படும்.அவற்றில் அரிசி போன்ற தானியங்கள் போட்டு வைத்திருப்பார்கள். அந்தக் காலத்தில் அரிசியின் பாவனை குறைவு என்பதால் சாமை, குரக்கன், வரகு, ஒடியல் போன்றவை பழுதடையாமல் இருக்க ஓலைப் பைகளில் போட்டுப் பாதுகாப்பாக வைத்திருப்பர். அனைத்து வீடுகளிலும் ஓலைப் பைகள் காணப்படும். ஆனால் தற்போது நாம் எமக்கும் சூழலுக்கும் பாதிப்பைத் தரும் பிளாஸ்ரிக் பைகளையே பொருள்கள் வாங்கவும் பயணங்களுக்கும் கொண்டு செல்கின்றோம். முன்னைய காலங்களில் பனையோலை மற்றும் ஈர்க்குகளால் உற்பத்தி செய்யப்பட்ட பைகளையே அனைவரும் பயன்படுத்தினர். பனையோலைகளால் செய்யப்படும் ஓலைப்பைகளுள் காற்றுப் புகமுடிவதால்; பொருள்கள் பழுதடையாமல் இருக்கும். இந்த ஓலைப் பைகள் ஒவ்வொரு வீட்டுக் குசினிகளுள்ளும்(சமையலறை) புகை படுவதால் கிருமிகள் பூச்சிகள் போன்றவை உள்நுழையாது என்ற காரணத்தால் பொருள்களை உமலில் இட்டு சமையலறை மரங்களில் கட்டி வைப்பர். பொருள்கள் பாதுகாப்பதற்கென ஒரு சென்றி மீற்றர்; அகலத்துக்கு வார்ந்தெடுக்கப்படும் ஓலைகளால் பைகள் உற்பத்தி செய்யப்பட்டு அதே அளவு இரட்டை ஓலைகள் வார்ந்தெடுத்து அவற்றையும் பொருத்திப் பயன்படுத்துவர்.அவ்வாறு இறுக்கமாகப் பின்னுவதால் பைகள் கிழியாமல் நீண்ட நாள்களுக்குப் பயன்படுத்துவர். முன்னைய காலங்களில் ஆலயங்களில் பொங்கலிடுவதற்கான அரிசியினை ஓலைப் பைகளிலிட்டு பானை மற்றும் தென்னம் பாளை போன்றவற்றுடன் வீடுகளிலிருந்து ஆலயத்திற்குக் கொண்டு வருவார்கள்; சந்தைகளில் கடதாசியிலிருந்து தயாரிக்கப்படும் பைகள் காணப்படுகின்ற போதிலும் ஓலைப்பைகள் போன்று ஊறும் தன்மை காணப்படாததால் மக்கள் உமலையே விரும்பி வாங்கிப் பொருள்களைக் கொண்டு செல்வார்கள்.

இரசாயனப் பொருள்களின் உற்பத்தியில் உருவாக்கப்பட்ட சொப்பிங் பைகள் என்றைக்கு சந்தைகளுக்கு கொண்டு வரப்பட்டனவோ அன்றிலிருந்து உமல்களின் பாவனை வீழ்ச்சியடைந்து அதன் உற்பத்தியம் இல்லாமல் போய்விட்டது. உமல் என்ற பனை உற்பத்திப் பொருளைக் காண்பது அரிதாகி விட்டது. சொப்பிங் பைகளின் பாவனை நிறுத்தப்படுமாயின் உமலின் உற்பத்தியும் மீண்டும் தலை தூக்கும் என்பது உறுதி. உமலின் வருகை பல ரின் வாழ்வாதாரத்துக்குப் பெரிதும் உதவும் என்பதும் வெளிச்சம்.

## ஊமல்

ஊமல் என்றால் என்ன பொருள் என்று கேட்கும் அளவுக்கு இன்றைய தலைமுறையினர் உள்ளனர். அந்த அளவுக்கு ஊமல் எமது மத்தியில் இல்லாமல் போயுள்ளது.

பனம்பழத்திலுள்ள விதைகளே இந்த ஊமல்கள். பனம் விதைகளைச் சேர்த்து ஓரிடத்தில் பாத்தி அமைத்து பனங்கிழங்கு உற்பத்தி செய்யும் போது இந்த விதையிலிருந்து பனங்கிழங்கு உற்பத்தியாகின்றது. பின்னர் பிரிந்து தனியாகக் காணப்படுவதே ஊமலாகும். கிழங்கு உற்பத்தியாகாமலுள்ள பனம்பழ விதைகள் கூட ஊமல்களே. பனை மரங்கள் அதிகரித்திருந்த காலத்தில் மக்கள் அவற்றிலிருந்து விழும் பனம் பழங்களிலிருந்து களி எடுத்துப் பனாட்டுத் தயாரித்தபின் பனம் விதைகளைச் சேகரித்து மழை காலம் ஆரம்பிப்பதற்கு முன்னர் ஓரிடத்தில் பாத்தியமைத்து மூடி விடுவார்கள். வருடத்தின் நவம்பர் டிசெம்பர் மாதங்களில் பாத்தியினைப் பிரித்து பனங்கிழங்கு எடுத்த பின்னர் அதனுடன் காணப்படும் பனம்விதையை ஓர் இடத்தில் குவித்து வைப்பர். அவற்றை ஒரு வருடத்தின் பின்னரே பயன்படுத்துவர்.ஏனெனில் அவற்றில் காணப்படும் தும்புத் தன்மை சில தேவைகளுக்கு எதிரானவையாக அமைந்து விடும். முன்னைய காலங்களில் வீடுகளில் அடுப்புக்கு விறகாகப் பயன்படுத்தி நெருப்பாக இருக் கும் வேளையில் அவற்றினை வெளியே எடுத்து நீர் ஊற்றி அதன் வெப்பம் குறையும் வரை வைத்திருந்து அந்தக் கரியையே தினமும் குடும்பத்திலுள்ள அனைவரும் பல் தீட்டுவதற்குப் பயன்படுத்துவர். வேலம் குச்சியும் ஊமல் கரியும் பற்களைச் சுத்தமாக வைத்திருக்குமென்ற மூதாதையரின் கூற்று இதற்கமைவானதே.

புகையிலை உற்பத்தி செய்யும் இடங்களில் அவற்றினை புகை ஊட்டிப் பதப்படுத்த குடில் என்னும் மண்ணால் மூடி அமைக்கப்பட்ட இடத்தில் உயரமாக புகையிலைகளைக் கட்டி ஊமல் கொண்டு புகையிடுவார்கள். ஊமல் பெரிதாக எரியாது என்பதாலும் பெருமளவு புகையை வெளிவரச் செய்யும் என்பதாலும் புகை யிலையைப் புகையூட்ட ஊமலைப் பயன்படுத்துவர். என்றைக்கு எமது மத்தியில் பற்பொடிகளும் பற்பசைகளும் பாவனைக்கு வந் ததோ அன்றிலிருந்து ஊமல் கரியில் பல் துலக்கும் பணிகளும் நிறைவடைந்தன எனலாம். எப்போதும் இயற்கையோடு ஒன்றியிருந்து சூழலையும் சுற்றத்தாரையும் காப்பது நம் கடமையே.

"பனம்பழத்திலுள்ள விதைகளே இந்த ஊமல்கள். பனம் விதைகளைச் சேர்த்து ஓரிடத்தில் பாத்தி அமைத்து பனங்கிழங்கு உற்பத்தி செய்யும் போது இந்த விதையிலிருந்து பனங்கிழங்கு உற்பத்தியாகின்றது. பின்னர் பிரிந்து தனியாகக் காணப்படுவதே ஊமலாகும். கிழங்கு உற்பத்தியாகாமலுள்ள பனம்பழ விதைகள் கூட ஊமல்களே.





# பெண்களின் உடை அலங்காரம்

பெண்களின் உடை அலங்கரிப்பு அவர்களின் உடல் அமைப்புக்கு ஏற்றவாறு அமையப்பெற்றிருக்க வேண்டும்.

ஆனாலும் தமிழர் கலாசார பாரம்பரியத்துக்கு ஏற்றவாறு அமைந்திருக்க வேண்டும்.

உடல் நிறத்திற்கு ஏற்றவாறான ஆடைகளைத் தெரிவு செய்து அணியவேண்டும் எளிமையான உடைகள் ஒருவித அழகைத் தருவன. சில ஆடம்பர உடைகளில் இது கிடைப்பதில்லை. ஆடை அழகாக இருக்குமே தவிர, அணிபவர் அழகாக இருப்பதில்லை. பெண்கள் தமது உயரம், பருமன் என்பனவற்றிற்கு ஏற்ப ஆடைகளை அணிய வேண்டும். உடற்பருமனானவர்கள் தங்களை மெலிதாகக் காட்டக்கூடிய ஆடைகளையும் மெலிவாக இருப்பவர்கள் ஓரளவு பருமனாகக் காட்டக்கூடிய உடைகளையும் அணிந்தால் அழகாகக் காட்சியளிப்பர்.

அதேபோல் உயரம் கூடிய பெண்கள் சற்று உயரம் குறைவாகக் காட்டிக்கொள்ள பெட்டிகள் வரையப்பட்டுள்ள ஆடைகளை அணியலாம் இவ்வாறே உயரம் குறைந்த பெண்கள் ஓரளவு உயரமாகக் காட்டுவதற்கு நீள்கோடிட்ட ஆடைகளை அணியலாம்.

உடை அணிவது ஒருவரது மனோ நில்லையைக் கூடப் பிரதி பலிக்கும். ஆகவே தகுந்த முறையில் ஆடைகளை அணிந்து கொள்வதே சிறந்து.

# கர்ப்பகாலத்தில் வேண்டாத உணவுகள்

கர்ப்பிணிகள் அளவாக பப்பாளி சாப்பிட்டால் எந்த ஒரு பிரச்சினையும் இல்லை என்று சொல்லப்பட்டாலும், பப்பாளி விதை மற்றும் பச்சையான பப்பாளி உட்கொள்வதைத் தவிர்ப்பதே நல்லது.

கர்ப்ப காலத்தில் பெண்கள் பாண் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும்.

கர்ப்ப காலத்தில் ஓமோன்களை சமநிலையாக வைத்துக் கொள்வது மிகவும் முக்கியம். சோயாபீன்ஸில் புரோஜெஸ்டிரோன் உள்ளது. இது உடலில் ஈஸ்ட்ரோஜென் செயற்பாட்டைத் தூண்டி, ஓமோன் சமநிலையின்மையை ஏற்படுத்திவிடும். அதுமட்டுமின்றி, கர்ப்ப காலத்தின் முதல் மூன்று மாத காலத்தில் ஈஸ்ட்ரோஜென் அதிகம் இருந்தால், அது குமட்டலை ஏற்படுத்தும்.



நீங்கள் கிரீன் ரீ குடிக்கும் கர்ப்பிணிகளாக இருந்தால் குடிப்பதற்குமுன், மருத்துவரிடம் கலந்தாலோசித்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் கிரீன் ரீயில் உள்ள சேர்வை, உடலில் இருந்து கருவளர்ச்சிக்குத் தேவையான போலிக் அமிலத்தை உறிஞ்சுவதற்கு இடையூறை ஏற்படுத்திவிடும். மீன் உண்ணாத சைவர்களாயின் இத்தகைய பெண்கள் அதற்கு சிறந்த மாற்றாக, அதே சத்துக்கள் நிறைந்த தயிர் மற்றும் ஆளி விதைகளை உணவில் சேர்த்துக் கொள்ளுங்கள்.



# இஞ்சி தரும் நலம்

இஞ்சியைத் தோல் நீக்கி, சிறு துண்டுகளாக நறுக்கி, தேனில் ஊற வைத்துத் தினமும் காலையில் ஒரு துண்டு வீதம் சாப்பிட்டுவர முடி நரையாதல், தோல் சுருக்கங்கள் அணுகாது. தேகம் அழகு பெறும். அஜீரணம், பசியின்மை, வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, சளி, தலைவலி, மயக்கம், இருமல் எனப்பல நோய்களிலிருந்தும் நமக்கு விடுதலை அளிக்கும் சமையல் நண்பன் இஞ்சி ஆகும். இதன் பச்சைக் கிழங்கு இஞ்சியாகவும், பதப்படுத்திக் காய வைத்தது வேர்க்கொம்பாகவும் நமக்குப் பயன் அளிக்கிறது.

இஞ்சி மருத்துவப் பண்பும், உணவுஉபயோகமும் உடையது. வாசனைக்காகவும், காரத்திற்காகவும் இது உணவில் சேர்க்கப்படுகின்றது. இது பசியைத் தூண்டும், இஞ்சிக்கிழங்குகள் கார்ப்புச் சுவையும், வெப்பத் தன்மையும் கொண்டவை. இவை, வியர்வை மற்றும் உமிழ்நீர்ப் பெருக்கியாகவும் பசித்தூண்டியாகவும் வாயுவை அகற்றும் மருந்தாகவும் செயற்படும். காசம், கபம், பித்தம், வாதசுரம் ஆகியவற்றையும் போக்கும்.

வயிற்று வலி மற்றும் வயிறு கனமாக இருத்தல் குணமாக இஞ்சிச் சாறு குடிக்க வேண்டும். சளியுடன் கூடிய இருமலைக் குறைக்க இஞ்சிச் சாறு பருகவும்.

# கட்டாயம் தாய்ப்பாலூட்டுங்கள்



நீண்ட காலமாகவும் அதிகமாகவும் தாய்ப்பால் குடிக்கும் குழந்தைகள் நல்ல வளர்ச்சியுடனும், புத்திக் கூர்மையுடனும் விளங்குகின்றனர் என்பது உலகறிந்த உண்மையே.

பால் கொடுக்கும் தாய்க்கு சளி, காய்ச்சல் போன்றவை ஏற்படினும் அவர்கள் அதற்கான மருந்துகளை உட்கொண்டவாறே குழந்தைக்குப் பாலூட்டுவதைத் தொடரலாம். ஆனால் மருந்துகள் உட்கொள்ளும்போது தாய்மார்கள் மருத்துவரின் ஆலோசனையைப் பின்பற்றுவதோடு தொடர்ந்தும் தாய்ப்பாலூட்ட முடியும். பாலூட்டும் பருவத்தில் குழந்தைக்குத் தாய்மார்கள் பால் கொடுக்க மறுப்பின் தாயின் மார்பகத்தில் பால்கட்டி ஏற்பட்டு அந்த இடத்தில் சீழ் போன்று வரும் அபாயம் உள்ளது. அவை பெரிய கட்டிகள் என்றால் அறுவைச் சிகிச்சை மூலமும் சிறிதான பால் கட்டிகள் ஏற்பட்டால் சுடுநீர் வைத்து ஒத்தடம் கொடுத்து கட்டியுள்ள பாலை வெளியேற்ற வேண்டும். தாய்மார்கள் குழந்தைக்கு வேண்டிய காலம் வரை பால் கொடுக்க வேண்டும்.

இதன்மூலம் மார்பகத்தில் உண்டாகும் பால்கட்டிகளைத் தடுக்கலாம். பால் குடிக்கமுடியாதிருக்கும் குறைப் பிரசவத்தில் பிறந்த குழந்தைகளுக்குத் தாய்ப்பாலைத் தாயின் முலைகளிலிருந்து எடுத்து மருத்துவரின் ஆலோசனையின்படி குழந்தைக்கு ஊட்டுவதும் சிறந்தது. எவ்வாறாயினும் உங்கள் குழந்தைக்குக் கட்டாயமாகத் தாய்ப்பாலை மட்டுமே கிடைக்கச் செய்யுங்கள்.

# வேண்டாமே மணமுறிவு

எஸ்.மல்லிகா

ஆயிரம் எண்ணங்கள் தோன்றுவதும் அவற்றின் அழுத்தத்தில் ஆடுவதும் மனதின் இயல்பு. ஆனால், அத்தனை எண்ணமும் எதிர்பார்க்கும் வண்ணம் ஈடேற வேண்டும் என நினைப்பது மடத்தனம். இதனைத் தம்பதியர் புரிந்துகொண்டால் வாழ்க்கையே ஆனந்தம்.

ஆனால், வெளிநாட்டுக் கலாசாரத்தில் வாழ்ந்த மதுமிதாவால் (பெயர் மாற்றப்பட்டுள்ளது) அப்படி வாழ முடியவில்லை. தான் என்ன நினைக்கிறாளோ, அதுபோல வாழவே பிரியப்படுபவள். எதிலும் பிடிவாதக்காரி போன்று நடப்பவள். திருமணம் செய்து வைத்தால் அவள் போக்கு மாறிவிடும் என்று நினைத்தனர் பெற்றோர். தாய் மாமன் மகனை வரன் கேட்டுப்போன அவளது பெற்றோர், அவன் சம்மதித்ததும் பதிவுத் திருமணம் செய்தனர்,

தான் ஆட்டுவிக்க ஆடும் பொம்மையாகக் கணவன் இருக்கவேண்டும் என்று எதிர்பார்த்திருந்த அவளுக்குப் பெருத்த ஏமாற்றம். தன் மனைவியைப் பற்றிக் கற்பனை செய்திருந்த அவன் மனதில், சிறு தடுமாற்றம். ஆகாயத்தில் அவளும் பூலோகத்தில் அவனும் என நகர்ந்தது ஒரு வாரம்.

அவர்களுக்குள் நடந்தது சட்டபூர்வத் திருமணமே ஒழிய உணர்வுபூர்வத் திருமணம் அல்ல. ஒரு முத்தப் பரிமாற்றம் கூட இருவருக்குள் இருக்கவில்லை. அவனுடன் அவள் அன்பாகப் பேசவில்லை. விட்டேத்தித்தனமாக நடந்துகொண்டாள். ஏன் அவள் அப்படி இருக்கிறாள் என்று அவளது தாயாரிடம் கேட்டதற்கு, அவள் வெட்கம் கொண்டவள். சிறிது நாளில் எல்லாம் சரியாகிவிடும் என்று தாயார் சமாளித்தார். அவன் மௌனித்தான். லண்டனில் வதியும் மதுமிதாவின் பெற்றோர், மிக்க வசதி படைத்தவர்கள். அதேநேரம், பண்பானவர்கள். ஆனால், அவர்களது மகள் அவர்களுக்கு முற்றும் புறம்பானவள். பணம்தான் எல்லாம் என்று நினைப்பவள். மாப்பிள்ளையை வெளிநாட்டுக்கு அழைத்து, ஊரறியத் தாலி கட்டும் எண்ணத்துடன் தான் அந்தப் பதிவுத் திருமணம் நடந்தது. அது தடம்மாறும் என்று அவளது பெற்றோர் கனவிலும் நினைக்கவில்லை.

இலங்கை வந்திருந்த அவர்கள் மீண்டும் லண்டன் செல்லத் தயாராயினர். அவர்களைச் சுமந்து சென்ற வாகனம், கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஓய்வெடுத்தது. அவர்களை வழியனுப்ப மதுமிதாவின் கணவனும் நண்பர்களும் சென்றிருந்தனர். அவனிடமிருந்து பிரியும் சில தருணங்களில் போட்டுவாறேன் என்று ஒரு வார்த்தைகூடச் சொல்லாது செல்வாள் மதுமிதா. பெற்றோர் மிகுந்த மன வருத்தத்துடன், ‘அவள் நடந்துகொண்டதைப் பெரிதாக எடுக்க வேண்டாம். சின்னப் பொண்ணுதானே? நாளடைவில் சரியாகிவிடும். அவளுக்காக நாங்கள் மன்னிப்புக் கேட்கிறோம் என்று அவனிடம் கூறி விடைபெற்றனர்.

உருண்டது ஓராண்டு. மதுமிதாவின் நடவடிக்கையில் எந்தவித மாற்றமும் ஏற்படவில்லை. தன் கணவனைத் தனக்குப் பிடிக்கவில்லை. அவரை விவாகரத்துச் செய்யப்போகிறேன் என்று பெற்றோரிடம் பெரிய குண்டைத் தூக்கிப் போட்டாள் மதுமிதா. அதற்கான காரணத்தை அவர்கள் கேட்டும், அவள் கூற மறுத்துவிட்டாள். அவளது பெற்றோர்கள் நொந்து நொடிந்தனர். மதுமிதாவின் நற்பதிலை எதிர்பார்த்துக் காத்திருந்தவனுக்கு, விவாகரத்து நோட்டீஸ்தான் வீடு தேடி வந்தது.


மனமுடைந்து போனவன், நண்பர்களின் தேற்றுதலால் தேறினான். விவாகரத்துப் பெற்ற பின் ஐந்து வருடங்களாகத் தனித்திருந்தவனிடம், அவனுடைய உறவுகள் மறுமணம் செய்யுமாறு வற்புறுத்தியும் அவன் மறுத்து வந்தான். எல்லாப் பெண்களும் மதுமிதாவைப் போலத்தான் இருப்பார்கள் என்று மனதுக்குள் அவன் போட்ட தப்புக்கணக்குத் தான் அதற்குக் காரணம்.

கரைப்பார் கரைத்தால் கல்லும் கரையும் என்பார்கள். அவனுடைய தாயின் தொடர் போதனையால் மனம் மாறியவன், வேறு ஒரு பெண்ணைத் திருமணம் செய்தான். கடவுள் படைப்பில் ஆண் பாதி, பெண் பாதி. இந்த இரண்டின் மீதியும் இரண்டற இணைவதுதான் அழகிய கல்யாணம். எந்தப் பாதி எங்கே சேரும் என்று யாருக்குத் தெரியும்?

அவன் உணர்வுகளை அவளும், அவள் உணர்வுகளை அவனும் புரிந்து அழகாகக் குடித்தனம் செய்கின்றனர். நேசிப்பைத் தவிர இந்த பூமியில் எதுவுமே நிரந்தரமில்லை என்பதனை அவனுக்கு உணர்த்தி- தன்னுடைய மிகுந்த அன்பினால் அவன் காயங்களை ஆற்றிக்கொண்டிருக்கிறாள் அவனுடைய இந்நாள் மனைவி.

*(தொடரும்...)*





# நீர் உடைமை

கண்விழியோரத்தில் கரைந்தது வெந்நீர்
சொந்தங்கள் சிதறி செறிந்தது செந்நீர்
உண்ணும் பண்டங்களால் சென்றது சிறுநீர்
வெய்யோன் வருகையில் பரந்தது கானல் நீர்
உற்றார் வரவு வேண்டி தெளித்தது பன்னீர்
பகழிகள் போக்கிட குடித்தது பதநீர்
பற்றாத வடியாய் அடைத்தது குடிதண்ணீர்
உலகின் உதிர்விலும்
ஈற்றிலும் சிந்தியது கண்ணீர்
குளிரினைப் போக்கிட ஊற்றியது வெந்நீர்
அதிகாலைப் பொழுதில் அருந்தியது தேநீர்
வெப்பத்தினைத் தணித்திட அருந்தியது இளநீர்
பொழுதுகள் புலர வாயில் உமிழ்ந்தது உமிழ்நீர்

*சுருத்திகா சுதாகரன்*

# ஹைக்கூ



## வெட்டிய துண்டுகள்

குளப்பிட்டிச் சந்தியில்
கூற்றுவனின் இருப்பிடம்
காக்கிச் சட்டைகள்.

...

எதுவும் நிரந்தரமில்லை
இலங்கை அர்சியலில்
‘சிவப்புச் சால்வைகள்’.

...

எழுதப்பட்டது முடிவுரையல்ல
ஒரு விடிவுக்கான முன்னுரை
முள்ளிவாய்க்கால்.

...

குருதியுறை மணல் மீது
குதூகலத்தின் பதிவுகள்
வடக்கு—கிழக்கு—வன்னி.

*அலெக்ஸ்பரந்தாமன்,*
*புதுக்குடியிருப்பு.*

# தீபாவளிப் பரிசு

தீபாவளிக்கு முதல் நாள் இரவு, சம்பளம் வாங்கிய கையோடு வீட்டுக்கு வந்தார் அப்பா. அவரது அன்பு மகள் ஜெனி தூங்காமல் அவருக்காகக் காத்திருந்தாள். இருவரும் உணவு உண்டபின் தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்தனர். அந்த நேரம், "அப்பா... அப்பா... இந்தத் தீபாவளிக்கு எனக்குப் பரிசு எதுவும் இல்லையா?" என்று கேட்டாள் ஜெனி. "ம்ம்...ம்... கண்டிப்பா உண்டு செல்லம். உனக்கு என்ன வேணும்"அன்புடன் கேட்டார் அப்பா. அப்பாவின் கைகளைப் பிடித்தவாறே, "எனக்கு அழகான சட்டைகள் இரண்டு, அழகான காலணிகள் இரு சோடி வேணும் அப்பா" என்றாள் ஜெனி. "நாளைக்கு வாங்கித் தாறேன். இப்ப போய்த் தூங்கும்மா" என்றார் - அப்பா.



ஜெனி கேட்டபடியே, மறுநாள் தீபாவளிப் பரிசை வாங்கிக் கொடுத்தார் அப்பா. மிகுந்த மகிழ்ச்சியோடு அதனைப் பெற்றுக் கொண்டாள் ஜெனி.சிறிது நேரம் கழித்து, ஒரு சட்டையையும் ஒரு சோடி காலணியையும் வண்ணத்தாளில் சுற்றிக் கட்டிக்கொண்டிருந்தாள் ஜெனி. இதைக் கவனித்த அப்பா, "எவருக்கு இந்தப் பரிசைக் கொடுக்கப் போகிறாய் ஜெனிக்குட்டி?" என்று அன்புடன் கேட்டார்.

"அது வந்துப்பா... என் நண்பி மதுவுக்கு. பாவம் அப்பா அந்தப் பொண்ணு. அவகிட்ட ஒரே ஒரு காலணி தான்இருக்கு. அவாட சட்டையும் கிழிஞ்சிருக்கப்பா. அதனாலதான்தீபாவளிப் பரிசஎன்னோட இந்தச் சிறிய அன்பளிப்பைக் கொடுக்கலாம் என்று முடிவு பண்ணியிருக்கேன்' என்று தயக்கத்தோடு சொன்னாள் ஜெனி.

"அருமையான செயல் ஜெனி. ஆனால், என்கிட்டே பரிசு உனக்குன்னு ஏன் பொய் சொல்லிக் கேட்டாய்?" என்று அப்பா செல்லக் கோபத்துடன் கேட்டார். "அப்பா, ஒருவேளை நான் சொல்லியிருந்தால், நீங்க அடுத்த பொண்ணுக்குத்தானே என்று மலிவான விலையில் வாங்கி வரக்கூடும். அதனாலதான் எனக்கு வேணும்னு பொய் சொன்னேன்" என்று தைரியமாகச் சொன்னாள் ஜெனி. என்ன சொல்வதென்று தெரியாமல் திகைத்தார் அப்பா.

அந்தப் பரிசை நண்பியிடம் கொடுப்பதற்குப் புறப்பட்டாள் ஜெனி. ஆனால், சில நிமிடங்களிலேயே திரும்பி வந்தாள். இதைக் கவனித்த அப்பா, "என்ன ஜெனி, மது வீட்டில இல்லையா? விரைவாக வந்திட்டியே?" என்று கேட்டார். "நான் மதுவிடம் பரிசு கொடுக்கலைப்பா. அவங்க வீட்டுக் கதவு கிட்ட வைச்சுட்டு ஓடி வந்துட்டேன்" என்றாள் ஜெனி. "ஏன், மதுவுடன் சண்டையா? அல்லது நீ கொடுத்தால் வாங்க மாட்டாளா?" என்று அப்பாகேட்க, "நான் அந்தப் பரிசை மதுவிடம் கொடுத்தால், அவள் வாங்கிக் கொள்வாள். ஆனால், அதன்பின் என்னைப் பார்க்கும் போதெல்லாம் நன்றியுணர்ச்சியோடு தான் பார்ப்பாள். இயல்பாகப் பழகமாட்டாள். கடவுள் உண்டியலில் போடும் காசுக்கு விளம்பரம் தேவையா அப்பா?"என்றாள் பிஞ்சுக்குரலில் ஜெனி. பிறருக்கு உதவ வேண்டுமென்று எண்ணும் தனது பதின் மூன்று வயது மகளைப் பார்த்து நெகிழ்ந்து போனார் அப்பா.

நீதி: பிறருக்கு உதவி செய்வதற்கு, மனம் இருந்தால் போதும். மற்றது தானாக நடக்கும்.

பிள்ளைகள் பெற்றோர்கள் சொல்வதிலிருந்து கற்றுக்கொள்வதை விட, பெற்றோர்கள் செய்வதைப் பார்த்தே அதிகம் கற்றுக்கொள்கிறார்கள். -ஓர் அறிஞர்

## எவரையும் ஏளனம் செய்யாதே!

மனிதர் வெறுக்கும் சேற்றிலே
மலர்ந்து நிற்கும் தாமரை;
புனிதமான கடவுளை
பூசை செய்ய உதவுதே!

அழுக்கடைந்த சிப்பியில்
அழகு முத்தைக் காணலாம்;
கழுத்தில் நல்ல மாலையாய்
கட்டி மகிழ உதவுதே!

கன்னங்கரிய குயிலிடம்
காது குளிரும் கீதமோ;
இன்பம் இன்பம் என்றுதாம்
இன்னும் கேட்க செய்யுதே!

விசத்தில் மிக்க பாம்பிடம்
விலையுயர்ந்த இரத்தினம்;
அடடா அந்த இரத்தினம்
மனிதருக்கும் கிட்டுமோ?

ஊசி போன்ற முள்ளிலே
உயர்ந்த ரோஜா மலருதே;
வீசி நல்ல மணத்திலே
விரும்பி அணியச் செய்யுதே!

மோசமான இடத்திலும்
மிகுந்த நல்ல பொருளுண்டு;
யோசிக்காமல் எவரையும்
ஏளனம் நீ செய்யாதே!

## வரலாற்றில் இன்றைய தினம்



1485 - ஏழாம் ஹென்றி இங்கிலாந்தின் அரசராக முடி சூடினார்.
1817 - வெனிசுவெலா சுதந்திர அரசு சிமன் பொலிவரால் ஸ்தாபிக்கப்பட்டது.
1918 - ஒட்டமான் பேரரசு கூட்டுப் படைகளுடன் இராணுவ ஒப்பந்தம் ஒன்றை மேற்கொண்டதையடுத்து, மத்திய கிழக்கில் முதலாவது உலக மகா போர் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டது.
1920 - சிட்னியில் ஆஸ்திரேலிய கம்யூனிஸ்ட் கட்சி உருவாக்கப்பட்டது.
1925 - பிரித்தானியாவின் முதலாவது தொலைக்காட்சி ஒளிபரப்பு சாதனம் ஜோன் லோகி பயர்ட்டால் உருவாக்கப்பட்டது.
1941 - இரண்டாம் உலக மகா போர், அமெரிக்க ஜனாதிபதி பிராங்ளின் டி.றூஸ் வெல்ற், கூட்டு நாடுகளுக்கான கடன் - குத்தகை உதவியாக ஒரு பில்லியன் டொலருக்கு அனுமதியளித்தார்.
1941 - 1500 யூதர்கள், மேற்கு உக்ரைன் பிட்யாற்சிலிருந்து நாஸிகளால் பெல்ஷெக் வதை முகாமுக்கு அனுப்பப்பட்டனர்.
1950 - வத்திக்கானிலிருந்தபோது 12 ஆம் பியஸ் பாப்பரசரால் 'சூரிய அற்புதம்' அவதானிக்கப்பட்டது.
1960 - மைக்கல் வூட் றப்பினால் எடின்பரோ றோயல் இன்பேர்மரி மருத்துவமனையில் முதன்முதலாக வெற்றிகரமாக சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது.
1970 - வியட்நாமில் மிக மோசமான பருவ மழையால் ஏற்பட்ட வெள்ளத்தில் 293 பேர் உயிரிழந்ததுடன், 200 000 பேர் வீடிழந்தனர்.
1983 - ஆர்ஜென்ரீனாவில் 7 ஆண்டு இராணுவ ஆட்சியின் பின் முதலாவது ஜனநாயகத் தேர்தல் இடம்பெற்றது.
1992 - முக்கிய ஜே.வி.பி. பிரமுகர் சுட்டுக் கொல்லப்பட்டதாக பொலிஸார் தெரிவிப்பு.
- வடக்கு கிழக்கில் பிரதேச செயலகங்களால் இயங்க முடியவில்லையென துணையமைச்சர் விமல் விக்கிரமசிங்க நாடாளுமன்றில் தெரிவிப்பு.
- பழம்பெரும் நடிகர் குலதெய்வம் ராஜகோபால் காலமானார்.
2007 - அ"புரத் தாக்குதல் அரசுக்கு 660 கோடி இழப்பு என ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர் தெரிவிப்பு.
2013 - இந்திய மஹாபுப் நகரில் எண்ணெய்த் தாங்கி தீப்பிடித்ததில் 45 பேர் உயிரிழந்தனர்.
2014 - பாலஸ்தீனத்தை அங்கீகரித்த முதலாவது ஐரோப்பிய அங்கத்துவ நாடானது சுவீடன்.





## எது சிறந்த புத்தகம்?

பாட நூல்களைப் படிப்பது மிகையாக மதிப்பெண் பெறுவதை நோக்கமாகக் கொண்டது. ஆனால், பொது நூல்கள் வாழ்க்கை முறை மற்றும் ஒழுக்க நெறிகளை நோக்கமாகக் கொண்டவை. நல்வாழ்வுக்கு அடித்தளம் அமைப்பது நற்குணங்கள். அந்த நற்குணங்களை நம்முள் விதைப்பவை நல்ல நூல்களே.



படிக்க எடுத்த பின்னர், படித்து முடிக்கும் வரை கீழே வைக்கவிடாமல் நமது ஆர்வத்தைத் தூண்டச் செய்யும் புத்தகம் எதுவோ- அதுவே சிறந்த புத்தகம். பக்கத்துக்குப் பக்கம் அடிக்கோடு இட்டு வைக்கக்கூடிய அற்புத வரிகளைத் தாங்கிக் கொண்டிருக்கிற புத்தகம் எதுவோ- அதுவே சிறந்த புத்தகம். ஒரு முறைக்குப் பல முறை திரும்பத் திரும்பப் படிக்கத் தூண்டும் புத்தகம் எதுவோ-அதுவே சிறந்த புத்தகம்.

தூங்கச் சென்றவன் தூக்கம் வருவதற்காகப் புத்தகத்தைப் புரட்டுகிறபோது, எந்தப் புத்தகம் அவனைத் தூங்க விடாமல் புரட்டிப் போடுகிறதோ- சொக்க வைக்கும் தூக்கத்தில் படிக்கும் போதும் எந்த நூல் ஒருவனை விழிப்படையச் செய்கிறதோ- அதுவே சிறந்த புத்தகம். நல்ல நூல்களைப் படிப்பதற்கு ஆகும் நேரத்தைவிட அவற்றைத் தேர்ந்தெடுப்பதற்குத் தான் அதிக நேரமாகும்.

புத்தகச் சந்தையில் எண்ணற்ற நூல்கள் குவிந்து கிடக்கின்றன. அவற்றுள், எமது வாழ்க்கைக்குப் பயனளிக்கும் நூல்களைத் தேர்ந்தெடுத்துப் படித்தல் அவசியம். இதற்கு ஆசிரியர்களின் உதவியை நாடலாம்.



அபிசாந்,
தரம் 5,
புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.





த.சாறுகா,
தரம் - 6
வ/நெளுக்குளம் கலை மகள் மகா வித்தியாலயம்.

## ஆறுவது சினம்

வெளியூர் சென்று திரும்பும் முன், தான் எழுதிய நூலைப் படித்து முடித்துவிடுமாறு குருகுலத்தில் உள்ள சீடர்களிடம் சொல்லிச் சென்றார் அந்தக் குருநாதர். எல்லோரும் முழுமையாகப் படித்து முடித்திருந்தார்கள். ஒரேஒரு சீடர், அதில் ஒரேயொரு வரியை மட்டுமே படித்ததாகச்சொன்னார். கடுமையான வார்த்தைகளால் அந்தச் சீடரை ஏசினார் குரு. சீடர் முகம் வாடவில்லை. மௌனமாக நின்றார். ஆத்திர மேலீட்டினால் சீடரை ஓங்கி அறைந்தார் குரு. எனினும், அந்தச் சீடர் வருந்தவில்லை. சற்று நேரத்தின் பின்னர் அமைதியடைந்த குரு, அந்தச் சீடரை அழைத்து- " நீ படித்த வரி என்ன?" என்று கேட்டார். "உன் கோபத்தைக் கட்டுப்படுத்து; எப்போதும் நிதானமாக இரு என்பதே அந்த வாசகம்" என்றார் சீடர். வெட்கித் தலை கவிழ்ந்தார் குரு. அந்தக் குரு, துரோணர். சீடர் தருமர்.



பாலாஜினி



# புரிய முடியாத உறவுகள்

பூமி தட்டையானது என்று சொன்ன காலம் போய், இன்று பூமி கோள வடிவானது என்று உண்மை அறிந்தனர் ஆய்வாளர்கள். ஆனால் இதை அறியும் முன்பே பூமியில் உயிரினங்கள் தோன்றிவிட்டன. இனப்பெருக்கம் செய்யவும் இயை படைந்து விட்டன. இன்று அதை விடுத்து எத்தனையோ தொழில் நுட்பங்களைப் படைத்துவிட்டான் மனிதன். அவற்றின் உச்சப் பயனை அனுபவிக்கவும் தொடங்கிவிட்டான். என்ன தான் தொழில்நுட்பங்கள் வளர்சியடைந்து மனிதன் இயந்திரமாகி விட்டாலும், இந்த மனிதர்களுக்கும் வேறு உயிர் உள்ள உயிரற்ற பொருள்களுக்குமிடையிலான உறவுகள் முறிந்து விட்டனவா? என்றால் நிச்சயம் இல்லை என்றுதான் சொல்ல வேண்டும்.

அன்றில் இருந்து இன்று வரைக்கும் ஏதோ ஓர் உறவு இவர்களுக்கு இடையில் இருந்துகொண்டுதான் இருக்கின்றது. அவை வெறும் கண்களுக்கு புலப்படுவதே இல்லை. உண்மையான மனக் கண்களுக்குத்தான் அந்த உறவுகள் தென்படும். அதாவது உலகிலே இடங்களைத் திருத்தமாக அறிந்து கொள்வதற்காக நாம் உருவாக்கி இருக்கின்றோமே சில கோடுகள். கிறீன்விச்கோடு, அகலாங்கு, நெட்டாங்கு போன்ற கற்பனைக்கோடுகள் போலத்தான் இந்த உறவுகளும் வெளிக் கண்களுக்கு எட்டாக்கனிபோல் தென்படும். ஆனால் உறவுகளும் அவ்வாறு கற்பனை என ஒருபோதும் தவறாக எண்ணி விடாதீர்கள். உறவுகள் மனித மனங்களையும் பிறதையும் பிணைக்கின்ற ஓர் உன்னத உணர்வு ஆகும். உறவு என்று கூறுகின்ற போது அது வெறும் மனிதர்களுக்கு இடையில் மட்டும் தான் வருகின்றது என்று நீங்கள் நினைத்தீர்கள். ஆனால் அது மிகத்தவறு. ஏன் பறவைகள், விலங்குகளுடன் நீங்கள் உறவு கொள்வதில்லையா? அன்பு வைத்து அவற்றுக்கு உணவு ஊட்டி அவற்றைக் காப்பதில்லையா? இதுவும் உறவு தானே. இதைவிட உறவில் இன்னொரு வகையும் உண்டு. அதாவது சில பொருள்களை எப்போதும் எம்முடன் வைத்துக் கொள்ளவே நாம் விரும்புகின்றோம். அதை யாருக்கும் கொடுத்து விட மனம் வருவதே இல்லை எமக்கு இதுவும் ஒரு உறவு தானே. ஆனால், நாம் அதை உறவு என்று ஒருபோதும் உணர்ந்து கொள்வதே இல்லை.

இதற்கு எமது சிந்தனைதான் காரணம். உறவு என்றதும் உடனே காதல் மட்டும் தான் என்று தப்பான கருத்தை நாம் எமது மனங்களில் ஆரம்பம் முதலே வளர்த்து விட்டோம். ஏன் தாய்-பிள்ளை தொடர்பு ஆசிரியர்- மாணவர் தொடர்பு இவை எல்லாம் உறவு இல்லையா? இவையும் உறவுதானே. ஆனால், இவை உணராமலே ஏற்படுகின்ற உறவுகள். காதல் உணர்வுடன் ஏற்படுகின்ற உறவு இதுதான். இவற்றுக்கிடையிலான ஒரே வேறுபாடு.

விலங்குகள், பறவைகளுடனான மனிதர்களின் தொடர்புகள் எல்லாம் புரிந்துகொள்ளக்கூடிய உறவுகள் ஆனால், இதை ஒரு தரம் சிந்தித்துப் பாருங்கள். நான் பாடசாலைக் கல்வியை முடித்துப் இரண்டு வருடங்களாகின்றது. முன்பு தினமும் பஸ்ஸில் தான் பாடசாலைக்குச் செல்வேன். இப்போது வெளியே செல்லும்போது பஸ்ஸில் செல்வது மிகமிக குறைந்துவிட்டது. ஆனாலும் எப்போதாவது இருந்து விட்டு முன்பு பாடசாலை சென்ற பஸ்ஸில் ஏதேனும் அலுவல் காரணமாக இன்று ஏறி அமருகின்ற போதெல்லாம் நான் முன்பு அமர்ந்த இருக்கைகள், பஸ் கைபிடிகள் எல்லாம் எனக்குள் ஏதோ ஒருவித உணர்வைத் தருகின்றன.


அந்த சமயத்தில் அழ வேண்டும் போலவும் சிரிக்க வேண்டும்போலவும் எனக்கு தோன்றுவதுண்டு. ஏன் அதை விட்டுச் செல்ல முடியாத அளவுக்கு நெஞ்சுக்குள் ஏதோ பெரிய பார உணர்வு தோன்றுவதுமுண்டு.

இது ஏன் எப்படி என்று அரம்பத்தில் என்னால் சிந்திக்க முடியவில்லை, இப்போது முடிகிறது. நான் கூறிய இந்தச் சந்தர்ப்பமானது உங்களுக்கு முட்டாள் தனமான காரியமாகத் தென்படலாம். ஆனால், இது நூறு வீத உண்மை . ஏன் உங்களுக்கு இது போன்ற சந்தர்ப்பங்கள் ஏற்பட்டதே இல்லையா? சிந்தித்துப் பாருங்கள் நிச்சயம் ஒவ்வொரு மனிதர் வாழ்விலும் இப்படி ஏதேனும் ஒரு சம்பவம் நிகழ்ந்திருக்க வாய்ப்புண்டு. நான் கூறிய, புரிந்த கொள்ள முடியாத உறவுகள் என்பது இதைத் தான். புரிந்து கொள்ள முடிகின்ற உறவுகளைவிட, புரிந்து கொள்ள முடியாத உறவுகளுக்கு நாம் தான் அதிக முக்கியத்துவம் கொடுக்கின்றோம். எம் வாழ்க்கை யில் இந்த உறவுகள் தான் எமை முன்னேற்றப் பாதைக்குக் கொண்டு செல்கின்றன அல்லது உறுதியுடன் வாழவழிகாட்டுகின்றன என்றால் உங்களால் அதை ஏற்றுக்கொள்ள முடியாதுதான். ஆனால், நிச்சயம் அது தான் உண்மை.

மற்றைய உறவுகள் எம்மை ஏமாற்றி விடுவதற்கான வாய்ப்புகள் அதிகம் காணப்படுகின்றன. அதாவது இந்த உயிருள்ள பொருள்களுக்கிடையிலான தொடர்புகள் தான் அவை. உங்களுக்கு ஒரு விடயம் தெரியுமா? மகாத்மாகாந்தியும், அப்துல்கலாமும் இறக்கும் போது பலர் அவர்கள் மீது அபிமானம் வைத்திருந்தார்கள். உறவு கொள்ள ஆசைப்பட்டார்கள். ஆனால், அவர்கள் தமது உறவாக இறுதிவரை வைத்திருக்க விரும்பியது சில வகைப் பொருள்களை மட்டும்தானாம். ஏனெனில் அவர்கள் அந்த உண்மையை உணர்ந்து கொண்டவர்கள். அதனால் தான் அவர்களால் வாழ்வில் வெற்றியடைய முடிந்தது.

நீங்களும் இவர்களைப் போல வாழ்வில் வெற்றிடைய வேண்டுமாயின், இந்தப் புரிந்து கொள்ள முடியாத உறவுகளை புரிந்து கொள்ள முயற்சி செய்யுங்கள். இவ்வாறான உறவுகளை வலிய ஏற்படுத்திக் கொள்ளுங்கள். அதன் நினைவுகள், உணர்வுகள், ஸ்பரிசங்கள் என்பவற்றை நெஞ்சிலே பத்திரப்படுத்திக் கொள்ளுங்கள். அப்போதுதான் அவற்றின் மூலம் உருவாகின்ற நேர்மறை சிந்தனைகள் எம் வாழ்க்கையை ஒளிமயப்படுத்தும்.

உயிர்வாழ எந்தளவுக்கு காற்று முக்கியமோ, அதைப் போலத்தான் இந்த உறவுகளும் முக்கியமானவை. எனவே இவற்றைப் புரிந்து கொண்டு செயற்படுங்கள்.



# ஆகுதிகள்

நள்ளிரவு...
நண்பனிடமிருந்து விடைபெற்றுக்
கொள்கின்றோம்
நாளைய பொழுதுகளில்
'ரியூட்' எழுதி முடிக்கவேணும்.
வன்னியும் வடக்குமாய் இணைந்த
இணைபிரியா நண்பர் நாம்.

நமது தேசம் விடியாமலே
இருண்டு விட்டதை
வீதியில் செல்லும் தருணங்களில்
உணர்கின்றோம்.
வேறு நாடு, நகரங்கள் போலன்றி,
பழமை மாறாமல் பழகிவிட்டனர்
யாழவர்கள்.
பத்து மணியென்றால்
மோதல்காலம் போலான
மயான அமைதி.
வீதிகள் இப்போது வெறிச்சோடிக்
கிடக்கின்றன.
தூரத்தில் நாய்கள் சில
ஊளையிட்டுக் கொள்கின்றன.

மழைக்காலம் வேறு...
வீதிகளிலும் யாருமில்லை.
வாகனங்கள் தூரத்தே வந்தாலும்
ஒளி கண்டு கவனம் கொள்வோம்.
இரவுப் பூதத்தைக்
கிழித்துக் கொண்டு
வீட்டைத் தஞ்சமடையப்
பயணிக்கின்றோம்.
மழைக்காலக் குளிர்காற்று
உரசிச் செல்கிறது.
வளைவு நெளிவு முடிஞ்சு
நெடுஞ்சாலையில் ஏறி விட்டோம்.
இன்னும் கொஞ்சம் வேகம்...
வீதிக் கரைகளில் மின்விளக்குகள்
மட்டுமே
மனிதர்கள் எவருமில்லை.

திடீரென்றோரு சத்தம்...
விழுந்துகொண்டிருக்கிறோம்...
மின்னல் தருணமது...
மிகுதியறிந்தால்... எங்களுக்கும்
கூறுங்கள்.

ந.தாஸ்

சிறுகதை

# பண்பாடுகள் படும்பாடுகள்!

மிருசுவில் தமிழ்தாசன்

“எடி பிள்ளை சறோ! இனிப் பாலைப் பருக்காதை மோனை! அவ விழுங்கிறா இல்லை. பங்கார்! கடை வாயாலை பால்வழியுது”

இவ்வாறு சொன்ன அன்னம்மாக்கா தன்னையுமறியாது ஒரு நீண்ட பெருமூச்சைப் பிரசவித்தாள். செல்வபாக்கியத்துக்கு இப்போது விடயம் புரிந்து விட்டது. பேயறைந்தவள் போல் நின்றவள் இப்போது தன்னை மறந்தாள், தன்னிலை மறந்தாள். தலைவிரி கோலமானாள்.

“அம்மா என்ரை கோயிலே! எங்களையெல்லாம் விட்டிட்டுப் போயிற்றியே எணை!” தலையிலடித்துக் கதறினாள், அவளின் குஞ்சு குருமன்களுக்கும் நிலமை புரிந்திருக்க வேண்டும். அம்மம்மா... அம்மம்மா... என்று கூப்பாடு போட்டு ஆர்ப்பரிக்க செய்தி காட்டுத்தீயாக ஊரெல்லாம் பரவியது.

“சரியடி பிள்ளை செல்வபாக்கியம், அவவின்ரை விதி முடிஞ்சிது அழுறதை விட்டிட்டுத் தேவாரம் படியுங்கோ! அழுதால் அந்தச் சீவன் அந்தரிக்குமாம்”

கனகலிங்கம் வாத்தியாரின் ஆறுதல் வார்த்தைகளுடன் அழுகைக் குரல்கள் ஓய்ந்து கொண்ட மழையாக மெல்ல அடங்கிக் கொண்டாலும் செல்வபாக்கியத்தின் விசும்பல்கள் அவ்வப்போது ஈனஸ்வரத்தில் ஒலித்துக் கொண்டேயிருந்தன. என்ன இருந்தாலும் பெற்ற தாயல்லவா! எல்லோரும் கைவிட்ட நிலையில் கடைக்குட்டிப் பிள்ளையான செல்வபாக்கியமே தன்னுடைய பயங்கரமான குடும்ப வறுமையிலும் எதுவித சீறல் சினப்புகளு மின்றி இத்தனை காலமும் வைத்துப் பராமரித்தவள். பின்னே அவளுக்குத் துடிப்பிருக்காதா!

“எப்பிடியோ வெளிநாட்டிலையிருந்து பெடியன் மூண்டு பேரும் வருவங்கள் தானே!, அவங்கள் வாற நேரம் வரட்டும். இப்ப நாங்கள் ஆளும் பேருமாய்ச் செய்யவேண்டிய காரியங்களைச் செய்வம். அவங்கள் வந்து நாங்கள் செலவழிச்ச காசைத் தருவாங்கள் தானே.”

கடைக்காரக் கனகண்ணரின் ஆலோசனை ஆமோதிக்கப்பட அயலவர்கள் அனைவரும் ஓரணியில் சேர்ந்து கொண்டனர்.

பரிமளத்தின் உடல் மூன்று நாள்களாகக் கருவாடு போட்ட நிலையில் காட்சிக்கென வைக்கப்பட்டிருந்தது. “அவங்கள் பெடியன்கள் வந்து தானே எடுக்கவேணும்.” என்ன இருந்தாலும் பரிமளக்கா பெத்தது ஆம்பிளைப் பிள்ளையும்தான்.

“ஓ! பின்னையென்ன வாத்தியார். அவங்கள் தானே கொள்ளிக்காரர். அவங்கள் வரட்டும்” சீவரத்தினம் கிளாக்கரும் தன் பங்கிற்கு எதையெதையோ சொல்லிக் கொண்டார். உற்றார் உறவினர், அயலவர்கள், தெரிந்தவர்கள், தெரியாதவர்களென்று அவ்வப்போது யார்யாரோ எல்லாம் வந்து போய்க்கொணடிருந்தார்கள்.

“டேய் ! நிசாந்தன்! அந்த வெத்திலைத் தட்டுக்கை சீவலைக் காணவில்லை. எப்பன் சீவல் எடுத்துக் கொண்டு வந்து போடு. கையோடை ஒரு பொயிலைத் துண்டும் கொண்டுவா. மிலாந்திக் கொண்டு நில்லாமல் கவனமாயிருக்க வேணும்.”

ஓடலி நல்லதம்பியரின் உத்தரவு உடன் நடைமுறைப்படுகின்றது. நகுலன் வந்திட்டானாம். தமையன் மார் வரமாட்டாங்களாம். அவன் நடுவிலான் தான் வந்திட்டானாம். சபையில் ஒரே சலசலப்பு. மூத்தவன் ராகுலனின் மனைவிக்கு முப்பத்தெட்டாவது பிறந்த தினம். இன்னும் பதினைந்து தினங்கள் இருந்தாலும் அதற்குரிய ஏற்பாடுகள், விருந்தினர் அழைப்புக்கள் போன்ற ஏகப்பட்ட வேலைப் பளுக்கள் அவனுக்கு. கடைசி மகன் சிவகுலனுக்குக் காரிலிருந்து கீழே இறங்கும்போது ஒரு சிறிய காயம். அது குணமாகி விட்டாலும் இப்போதும் சற்று மிண்டி மிண்டியே நடக்க வேண்டுமாம். அந்த நிலையில் அவன் வரவிரும்பவில்லை.

எப்படியோ நகுலன் என்றாலும் வந்து விட்டான். பெற்ற தாய்க்குக் கொள்ளிக் கடன் தீர்க்க அவனாவது வந்து விட்டானே! வெடிச்சத்தம் காதைப் பிளந்தது. கூடவே பாண்ட் வாத்தியமும் பறைமேளமும் ஒன்றுடன் ஒன்று போட்டியிட்டு மோதிக் கொண்டன.

“டேய் சுகந்தன் கொளுத்தன்ரா வெடியை, ஐம்பதினாயிரம் ரூபாக்கு வெடி வாங்கி னது வச்சு வடிவு பாக்கவே. கொளுத்தடா குலை குலையாக் கொளுத்து உங்கை ஊரிலை ஆரும் செய்யாத மாதிரிக் கலகலப்பாய்ச் செய்யவேணும். எங்கடை சிநேகிதன் நகுலன்ரை அம்மாவின்ரை செத்த வீடெல்லே! அவன்ரை காசு தானே!”

சொல்லியபடி சிறியன் வைத்திருந்த அந்தத் தோல்பையை வாங்கித்திறந்து எதையோ அண்ணாந்து பருகிவிட்டு வாயைச் சப்புக் கொட்டித் துப்பியபடி வந்தான், பாலசிங்கம் வாத்தியாரின் இரண்டாவது மகன் குணத்தான். அதையடுத்து நண்பர்கள் அனைவருமே மீண்டும் வாயை நனைத்து நனைத்து வந்தனர். சும்மா சொல்லக்கூடாது எல்லோருமே கலகலப்பாகக் காணப்பட்டனர்.

“டேய் ஒரு வாகனத்தையும் போக விடக் கூடாது. மறியுங்கோடா நிக்காட்டில் எறி கல்லாலை இஞ்சை ஒருத்தரும் சேட்டை விடேலாது பீற்றர்! என்னடா உன்ரை பாண்டிலை சத்தத்தைக் காணயில்லை. அடியடா சத்தமாய்!!”

பறைமேளக்காரர்களுக்கு உற்சாக பானம் வழங்கி விட்டு வந்த ரகு அதில் தானும் கொஞ்சத்தை அண்ணாக்காகப் பருகிக் கொண்டான். சுரேஷ் ஓடிச்சென்று மேளக்காரர்களின் கைகளில் ஆளுக்கு நூறு ரூபாத் தாள்களைத் திணித்தான். மேளக் கச்சேரி இப்போது சட்டப்படி! சொல்லி வேலையில்லை. ஒரே முழக்கம். அதனையடுத்து இனி பாண்ட் வாத்திய விற்பன்னர்களின் கைவண்ணம் கூடவே வெடியோசை போர்க்காலத்துப் பல் குழல் செல் வெடிகளை நினைவூட்டியது.

“டேய் அந்த பஸ்ஸை மறிச்சுவச்சிரடா. விடாதை என்ன அவசரம் அவைக்கு சேட்டை விளங்கயில்லை!”

தடித்த உடலமைப்பு நெட்ட நெடும் பனையை ஒத்த உயரம். உழுவான் வண்டுகள் ஓடித்திரிந்து குறுக்கும் நெடுக்குமாகக் கோடுகள் போட்டிருப்பது போன்ற தாடி, சிரிப்பேயில்லாத முரட்டுமுகம். இத்தனையும் கொண்டவன் தான் நகுலன். பரிமளத்தின் இரண்டாவது ஆண் மகன், பெற்ற தாயினுடைய இறுதி ஊர்வலத்தில் காட்சியளித்துக் கொண்டிருந்தான்.

“என்னப்பா மயிலண்ணை! உவன் நகுலன் தானே கொள்ளி வைக்க வேண்டியவன். அவன் சிகரெட்டும் கையுமாய் ஏதோ பிறத்தியார் மாதிரி வேடிக்கை பார்த் துக் கொண்டு நிக்கிறான். செல்வபாக்கியத்தின்ரை புருஷன் குலசிங்க மெல்லோ கொள்ளிக் குடத்தோடை நிக்குது”

“அண்ணை! நகுலனாலை பசி கிடந்து கொள்ளி வைக்கேலாதாம். அதோடை அவன் நாளையிண்டைக்கு போறானாம். அதுதான் குலசிங்கம் பாவம் தான் மாமியாருக்குக் கொள்ளி வைக்கப் போகுது”

கட்டம் போட்ட அரைக்காற்சட்டை கறுப்பு நிற சேட் பையில் துருத்திக் கொண்டிருந்த வெளிநாட்டுச் சிகரெட் பக்கெட் அநாயாசமாக சேட்டிலே தொங்கிக் கொண்டிருந்த கூலிங்கிளாஸ். எதிலும் பற்றற்றவன் போல் ஏதோவொரு வேண்டா வெறுப்பு நிலையிலே அலட்சியமாகக் காணப்பட்டான் நகுலன். அடிக்கடி துப்பிக் கொண்டிருந்தான். அத்துடன் நண்பர்களையும் துப்ப வைத்துக் கொண்டிருந்தான். விழிகளிரண்டும் கொவ்வைப் பழங்களாகச் சிவந்திருந்தன.

(43 ஆம் பக்கம் பார்க்க)



# வேற்றுக்கிரகவாசிகள் பகையா உறவா?



என்.நிவின்

அடையவே முடியாத ஒன்றைத் தேடி அலைகிறது விஞ்ஞானம். ஒவ்வொரு தேடலுக்குமான முடிவு கிடைக்கும் வரையில் விஞ்ஞானத்தையும் அது தொடர்பிலான ஆராய்ச்சியாளர்களையும் கேலியாகப் பார்க்கும் சமூகம் அன்று தொடக்கம் இன்று வரை இருக்கத்தான் செய்கிறது. ஆனால் குறித்த தேடல்களுக்கான தீர்வு கிடைத்துவிட்டால் ஆச்சரியம் தான். அப்படி முடிவு கிடைத்த தேடலாக விரைவில் மாற இருக்கும் விடயமே வேற்றுக் கிரகவாசிகள்.

### இருக்கின்றனரா? இல்லையா?

வேற்றுக்கிரக வாசிகள் உண்மையிலேயே இருக்கிறார்கள் தானா? அப்படி அவர்கள் இருந்தால், நம்மைப்போன்ற தோற்றத்தில் இருப்பார்களா? அல்லதுவேற்றுக் கிரகவாசிகள் பற்றிச் சினிமாவில் காட்டப்படும் உருவங்கள் போன்று பயங்கரத் தோற்றத்தோடு, விநோதமாக இருப்பார்களா? அவர்கள் நமக்கும், நம் பூமிக்கு ஆபத்து விளைவிப்பார்களா? இதுபோன்ற எண்ணுக்கணக்கற்ற கேள்விகள் நமது மனதில் எழுந்தாலும் இவற்றுக்கான பதில்கள் ஆதாரமற்ற நம்பகத்தன்மையற்ற ஒரு வடிவிலேயே நம்மை வந்தடைகின்றன. இஸ்ரோ விஞ்ஞானிகளின் பதில் கிட்டத்தட்ட வேற்றுக்கிரகவாசிகள் உள்ளனர் என்றமைகின்றது.

### இருப்பதற்கு அதிக வாய்ப்புண்டு

பூமியைப்போலவே தட்பவெப்பநிலையை உடைய ஒரு கோள் நமது பூமியிலிருந்து 39 ஒளியாண்டுகள் தொலைவில் இருக்கின்றது என நாஸாவினால் வெளியிடப்பட்ட தகவல்களை அடிப்படையாக வைத்து பூமியை போலவே அமைப்பினை உடைய கிரகங்கள் இருக்கின்றன என்ற முடிவுக்கு நாம் வருவோமானால், அந்தக்கிரகங்களில் ஏதாவது ஒன்றில் கூடவா உயிரினங்கள் இல்லாமலிருக்கும். வேற்றுக்கிரக வாசி கள் இருக்கலாம் என கருதக்கூடியதான 42 கிரகங்களை ஆய்வு செய்யும் திட்டத்தின் கீழ் தன்னார்வ வானியலாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். வேற்றுக்கிரக வாசிகள் நமக்கு அருகிலோ அல்லது தொலைவிலோ இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன என்பது இப்போது உங்களுக்குப் புரிந்திருக்கும். ஆனால் அவர்கள் வாழ்க்கை முறையும் நம்மைப் போன்றே அமைந்திருக்குமா? என்பது சந்தேகமே.

### இப்போதும் இங்கிருக்கலாம்

"இன்னும் இருபத்தைந்து ஆண்டுகளில் வேற்றுக்கிரக வாசிகளை நாம் நேரில் சந்திக்கலாம்" என்று விஞ்ஞானி ஹிஷத் ஷொஸ்டாக் தெரிவித்த கருத்து நிஜமாகலாம். "வேற்றுக்கிரக வாசிகள் இருப்பது உறுதி. பிரபஞ்சத்தில் 10ஆயிரம் கோடி நட்சத்திர மண்டலங்கள் உள்ளன. ஒவ்வொரு நட்சத்திர மண்டலத்திலும் இலட்சக்கணக்கான நட்சத்திரங்கள் உள்ளன. இவற்றில் பூமியில் மட்டும் உயிரினங்கள் வசிக்கின்றன என்று கூறுவது தவறு. எனவும் தனது முடிவின்படி வேற்றுக்கிரக வாசிகள் இருக்கிறார்கள் என்பது தெரிகிறது ஆனால் அவர்கள் எந்த உருவத்தில் இருக்கிறார்கள் என்பதைக் கண்டறிவதே சிரமமான காரியம். ஏனென்றால் அவை நுண்ணுயிரிகளாகவும் இருக்கலாம், அல்லது பரிணாம வளர்ச்சியடைந்த உருவங்களாக இருக்கலாம். அவர்களது வளர்ச்சி எப்படி இருக்கும் என்பதற்கு நமது மனித இனத்தின் பரிணாம வளர்ச்சியையே உதாரணமாக எடுத்துக்கொள்ளலாம்" எனத் தற்காலத்திலிருக்கும் வேற்றுக்கிரக வாசிகள் பற்றி ஆராயும் தலைசிறந்த விஞ்ஞானியாகிய ஸ்ரீபன் ஹாக்கிங் வேற்றுக்கிரக வாசிகள் தொடர்பில் தெரிவித்த கருத்து இவ்வாறாக அமைந்திருக்கிறது.



### புதிய கிரகம் கண்டுபிடிப்பு

அண்மையில் அமெரிக்க விஞ்ஞானிகளால் வேற்றுக்கிரக வாசிகள் இருக்கலாம் என்று சந்தேகிக்கப்படும் ஒரு கிரகம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தக் கிரகம் குறித்து நாஸாவால் வெளியிடப் பட்ட காணொலி ஆதாரத்தில் இது பூமி யைப் போலவே சுற்றுச்சூழலைக் கொண்டமைந்து காணப்படுகிறது. பூமியிலிருந்து 39ஒளியாண்டுகள் தூரத்தில் அமைந்துள்ள "இந்தக் கிரகத்தில் இருந்தே பூமிக்குப் பறக்கும் தட்டுக்கள் என்று அழைக்கப்படும் மர்மப்பொருள் கள் வந்திருக்கலாம் எனவும் இங்கு வேற்றுக் கிரக வாசிகள் இருப்பதற்கான சாத்தியக்கூறுகள் நிறையவே உள்ளன" எனவும் வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய ஆய்வாளர்கள் கருத்து வெளியிட்டுள்ள னர். இந்தக் கிரகத்தின் கண்டுபிடிப்பு விண்வெளி ஆய்வு வரலாற்றில் மிகச் சிறந்த முன்னேற்றம் என விஞ்ஞானிகளே வியக்கின்றனர்.

### நம்மைவிட சக்தி கொண்டவர்கள்

நம்மை விட வேற்றுக்கிரக வாசிகள் எல்லா வகையிலும் சக்திமிக்கவர்களாக இருப்பார்களா? என்றால் அதிக பட்சமாக வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய ஆராய்ச்சியாளர்களின் பதில் "ஆம்" என்றே இருக்கும், இதற்கு என்ன ஆதாரம் என்று கேட்கிறீர்களா? பூமியின்துணைக் கிரகமான நிலவுக்கான மனிதர்களின் பயணமே இன்னும் உறுதியாகச் சாத்தியப்படாத நிலையில் கிட்டத்தட்ட 40 ஒளியாண்டுகள் தூரம் கொண்ட கிரகத்திலிருந்து அடிக்கடி நம் பூமிக்கு பறக்கும் தட்டுக்களில் வந்து போகும் அவர்களின் விஞ்ஞான வளர்ச்சி நிச்சயமாக சக்தி கொண்டதாக இருக்குமல்லவா? வேற்றுக்கிரக வாசிகளின் பூமிக்கான வருகை உறுதியானதா? அப்படி நிச்சயம் என்றால் அவர்களால் மனித இனத்துக்கு ஆபத்து உண்டா? என்ற உங்கள் மனக் கேள்விகள் எனக்குப் புரிகின்றது.

### பூமி மீது ஆதிக்கம்

அண்மைக்காலமாக மர்மப்பொருள்கள் மற்றும் மர்ம சமிக்ஞைகளின் பூமி நோக்கிய வருகை கணிசமான அளவு உயர்ந்திருக்கிறது என்ற வேற்றுக்கிரக வாசிகள் பற்றிய ஆராய்ச்சியாளர்களின் கருத்து வெளியீடு வேற்றுக்கிரக வாசிகளின் பார்வை வலுவாக நமது பூமியின் மீது திரும்பியிருக்கின்றமைக்குச் சான்றாகும். எது எவ்வாறு இருப்பினும் எதிர்காலத்தில் வேற்றுக்கிரக வாசிகளின் பூமிக்கான வருகை சாதரணமானதொன்றாகினாலும் கூட வியப்பதற்கில்லை. இது நிஜமானால் வருங்காலத்தில் வேற்றுக்கிரக வாசிகளுடன் ஹாய் மச்சான் எப்பிடி இருக்கிறாய்? சாப்பிட்டியா? எங்கட வீட்டுக்கு எப்ப வருவாய்? என முகநூலில் அரட்டை அடிக்கும் ஒரு சாதாரண நிலையும் வரலாம். மனித இனம் பூமியில் இருந்ததற்கான ஓர் அடையாளமும் இன்றி வேற்றுக்கிரக வாசிகளின் ஆளுகையில் வேற்றுக்கிரக வாசிகள் மட்டுமே இந்தப் பூமியில் நிலைகொண்டு இருக்கும் அசாதாரண நிலையும் வரலாம்.

## சுன்னாக மண்ணே! என்னாகும் உன்நிலமை...!

சுந்தரத் தமிழுடனே சூழ்நல்ல சைவமும்சேர்
இந்திர உலகாக விளங்கி வந்த இனிய ஊர்
முத்தமிழ் நர்த்தனங்கள் ஆடிவந்த பதியென்று
வித்தகர்கள் விறன்கொண்டோர் விரும்பிடும் பதியென்று
அத்தனை அழகாக அற்புதமாய் அமைந்திருந்த
எத்தனை பெருமைகளை அருமைகளை வைத்திருந்த
சுன்னாக மண்ணே!நீ மண்ணாகிப்போவதுமேன்!
என்னாகும் எதிர்காலம் என எண்ணாதிருப்பதுமேன்!

நிலத்தடி நீர் ஒருபக்கம் நீசர்களோ மறுபக்கம்
கலகங்கள் முழுப்பக்கம் அது தானோ எம்துக்கம்

ஆள்வெட்டும் வாள்வீச்சு வீணர்கள் விளையாட்டு
பாழ்பட்ட பாதகரால் எங்களுக்கோ துயர்ப்பாட்டு
காவற்றுறை மீதும் கைவைத்தார் காண்பதென்ன!
ஆவதென்ன அழிவுதான் அதைவிடவும் வேறென்ன!
எத்தனை கேடு செய்யும் எத்தர்களை எதிர்த்து நிற்க
இத்தனை ஊர்மக்கள் போதாதோ துணிந்து நிற்க!

தட்டித்தான் கேட்போமே தக்கவழி நாம் நின்று
எட்டியே நிற்காது ஒட்டியிங்கே நாமின்று
காட்டிடுவோம் காத்திடுவோம் எம்மண்ணின் அருமையினை
சூட்டிடுவோம் ஈட்டிடுவோம் நம்மூர்ப் பெருமையினை.

மங்கை மணாளன்





# படுகொலைகளின் தேடப்பட வேண்டிய மூலகங்கள்

சந்திரசேகர ஆசாத்

அண்மையில்யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற இரண்டு பல்கலைக்கழக மாணவர்களின் இறப்பு தமிழ்மக்கள் மத்தியிலும். அனைத்திலங்கைப் பல்கலைக்கழக சமூகத்தின் மத்தியிலும் பெரும் கிளர்ச்சியையும் எதிர்ப்பலை களையும் உருவாக்கியுள்ளது.

விருந்துபசாரம் ஒன்றில் கலந்து விட்டு மோட்டார் சைக்கிளில் வீடு சென்றுகொண்டிருந்த மாணவர்கள் மேல் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டதாகவும், அதனால் ஒரு மாணவர் உயிரிழந்ததாகவும் அந்த நிலையில் மோட்டார் சைக்கிள் மதில் ஒன்றில் மோதியதில் மற்ற மாணவர் இறந்ததாகவும் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது.

### மூடி மறைத்தது ஏன்?

ஆரம்பத்தில் இது ஒரு விபத்தினால் ஏற்பட்ட இறப்பு எனக் கூறப்பட்டு உண்மையை மறைக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன, எனினும் மாணவர்களின் உடல்கள் பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டதையடுத்து மாணவன் ஒருவரின் உடலில் காணப்பட்ட துப்பாக்கிக் குண்டு அவன் சுடப்பட்டதாலேயே இறந்துள்ளான் என்பதை வெளிப்படுத்தியது.

அதனையடுத்து ஐந்து பொலிஸார் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளதுடன் பணி இடைநீக்கமும் செய்யப்பட்டனர். எனினும் பொலிஸார் தரப்பில் மாணவர்கள் அதி வேகத்தில் வந்ததாகவும் மறிக்கும் போது நிற்காமல் ஓடிய காரணத்தாலே துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் கேள்வி எழுப்பிய எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன், மறிக்கும் போது நிற்காமல் ஓடியிருந்தால் பின்னால் அமர்ந்திருந்தவர் மேல் துப்பாக்கிக் குண்டுகள் படாமல் எப்படி ஓடிக் கொண்டு போனவர் மேல்பட முடியும் என வினாவியிருந்தார்.

அதிலிருந்து மாணவர்கள் தப்பியோட ம்யலும்போது சுடப்பட்டது பொய் என்பதும். அவர்கள் வந்து கொண்டிருக்கும் போதே சுடப்பட்டு விட்டனர் என்பதும் அம்பலப்பட்டது. தப்பியோடுபவர்களை விரட்டிப்பிடிக்க முடியாவிட்டால் பொலிஸாருக்கு ஏன் ஆயிரம் சீ.சீ. வலுவுடைய மோட்டார் சைக்கிள் எனக்கேள்வி எழுப்பியுள்ளார் அமைச்சர் மனோகணேசன்.

### தவறை ஏற்றுக் கொண்ட பூஜித

எப்படியிருப்பினும் பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர பொலிஸார் குற்றமிழைத்ததை ஏற்றுக் கொண்டதுடன் உரிய நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்திருந்தார். அவ்வாறே பிரதமர், ஜனாதிபதி ஆகியோரும் தங்கள் வருத்தத்தைத் தெரிவித்ததுடன் உரிய சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவித்திருந்தனர்.

வடமாகாணம் முழுவதுமே முழு அடைப்பு அமைதியான முறையில் இடம் பெற்றது. யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்ட முக்கிய நகரங்கள் வெறிச்சோடிப் போயிருந்தன. எங்கும் முழு அடைப்பு கடைப்பிடிக்கப்பட்டிருந்தது.

மேலும்கிழக்கிலும்தென்னிலங்கையிலும் மேற்படி படுகொலைகளை அடுத்து ஆர்ப்பாட்டங்களும் கவன ஈர்ப்புப் போராட்டங்களும் மாணவர்களாலும் பொதுமக்களாலும்மேற்கொள்ளப்பட்டன. இப்படியாக நாடுபரந்த அளவில் அமைதியான முறையில் இடம்பெற்ற போதிலும் வடக்கில் ஏராளமான அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டிருந்தனர் ஏன் இவர்கள் களமிறக்கப்பட்டனர் என்ற கேள்வி எழுகிறது. அதாவது மக்களையும் மாணவர்களையும் அச்சுறுத்தி முழு அடைப்பு நடவடிக்கைகளைக் குழப்பும் நோக்குடன் சிலமுயற்சிகள்மேற்கொள்ளப்பட்டனவா? என்ற சந்தேகம் எழுகிறது. குறிப்பாக கிளிநொச்சியில் வீதிமறியல் போராட்டத்தில் ஈடுபட்ட மக்களை போகுவரத்துக்கு இடையூறு செய்கின்றனர் எனக் கூறப்பட்டு அவர்களை விரட்டும் வகையிலான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதம் அடைந்த நிலையில் எப்படிப் போக்குவரத்துக்கு இடையூறு செய்ய முடியும். இப்படியான ஒரு சம்பவம் இரணைமடுவிலும் இடம் பெற்றுள்ளது.

இந்தச் சம்பவங்களின்போது ஒரு பொலிஸார் மீது போத்தல் வீசப்பட்டதாகவும் பஸ் ஒன்றுக்குக் கல்லெறியப்பட்டுள்ளதெனவும் தகவல்கள் வெளிவந்துள்ளன. சந்தேகத்தின் பேரில் ஒருவர் கைது செய்யப்பட்டுத் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

எப்படியிருந்தபோதிலும் அமைதியான முறையில் இடம்பெற்ற போராட்டத்தில் பொலிஸாரின் அநாவசியமான நடவடிக்கைகள் காரணமாக வன்முறை வெடிக்கும் சூழல் ஏற்பட்டாலும் அது அதிஷ்டவசமாகத் தவிர்க்கப்பட்டுவிட்டது.

### ஆவா குழுவின் பெயரில் உரிமை

மறுநாள் சுன்னாகத்தில் பொலிஸார் மீது வாள் வெட்டு நடத்தப்பட்டதில் இரு பொலிஸார் காயமடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். அங்குஒருகொள்ளை முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் அதைத் தடுக்க முயன்ற பொலிஸார் மீதே தாக்குதல் நடத்தப்பட்டதாகவும் முதலில் தெரிவிக்கப்பட்டது. எனினும் அடுத்த நாளில் பல்கலைக்கழக மாணவர்கள் படுகொலை செய்யப்பட்டமைக்குப் பழி வாங்கும் முகமாகத் தாமே செய்ததாக ஆவா குழுவினர் என்ற பேரில் உரிமை கோரப்பட்டிருந்தது.

வடக்கில் அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டமை, கிளிநொச்சியில் வன்முறைகளைத் தூண்டமுயற்சிகள் மேற்கொள்ளப்பட்டமை, பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டு ஒரு பழிவாங்கல் நடவடிக்கை என உரிமை கோரப்பட்டவை போன்ற அடுக்கடுக்கான சம்பவங்கள் மக்கள் மத்தியில் பல கேள்விகளையும் சந்தேகங்களையும் எழுப்பியுள்ளன.

### பொய்யுரைத்த சாஹல ரத்னாயக்கா

மக்களுக்குச் சந்தேகங்களை வலுப்படுத்தும் வகையில் பாதுகாப்புப் பிரதியமைச்சர் சாஹல ரத்னாயக்கா தெரிவித்துள்ள கருத்துகள் அமைந்துள்ளன.

அவர் வாள்வெட்டுக் குழுக்களைப் பிடிக்கும் நோக்குடன் பொலிஸ் ரோந்துப் பணிகள் அதிகரிக்கப்பட்டதாகவும். அப்படியான கடமையில் ஈடுபடடிருந்த பொலிஸ் குழுவினராலேயே மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் நடத்தப்பட்டதாகவும் தெரிவித்தார். மேலும் மோட்டார் சைக்கிளில் வேகமாக வந்த மாணவர்கள் பொலிஸாரை நோக்கி மோட்டார் சைக்கிளை ஓட்டியதாகவும் அப்போது பொலிஸார் வான் நோக்கிச் சுட்டதாகவும் அது தவறுதலாக மாணவர் மேல்பட்டு விட்டதாகவும் கூறியுள்ளார்.

அப்போது இவர்கள் தலைக்கவசத்தில் எவ்வித சேதமுமின்றி எப்படித்தலையில் சூடுபட்டதெனவும் பொலிஸார் மீது வாள் வெட்டு நடத்தியதாக உரிமை கோரியுள்ள ஆவா குழுவினருக்குப் பின்னணியில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினர் உள்ளனரா? எனவும் ஊடகவியலாளர்களால் எழுப்பப்பட்ட கேள்விகளுக்குப் பிரதியமைச்சர் பதிலளிக்கவில்லை.

பொலிஸார் குற்றமற்றவர்களெனவும் மேற்கொள்ளப்பட்ட படுகொலை ஒரு தற்செயலான சம்பவம் எனவும் நம்பவைக்க முயன்று உட்புகுத்தப்பட்ட ஆவா குழுவினரின் பின்னணி பற்றி எதுவும் கூற மறுத்து விட்டார். வாள்வெட்டுச் சம்பவங்கள் கடந்த ஒரு வருடத்துக்கு மேலாகவே இடம்பெற்று வருகின்றன. இவர்கள் தாக்கி விட்டு ஓடி ஒளிந்து விடுவதில்லை பகிரங்கமான இடங்களில் கும்பலாக வந்து தாக்குதலை நடத்தி விட்டு பெரும் அட்டகாசம் போட்டு அந்தச் சுற்றாடலையே கலக்கி விட்டு எவ்வித பயமுமின்றி திரும்புவார்கள். அரைமனி நேரத்துக்குக் கூடுதலாக அவர்கள் பகிரங்க இடத்தில் நின்று அட்டகாசம் போட்டாலும் இதுவரை பொலிஸார் அந்த இடங்களுக்குச் சென்று அவர்களைக் கைது செய்ததோ அவர்கள் மீது துப்பாக்கிச் சூடு நடத்தியதே கிடையாது. ஆனால், பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளதாகப் பத்திரிகைகளில் செய்தி மட்டும் வரும். ஓரிருவர் சிலரின் முறைப்பாட்டில் கைது செய்யப்பட்டாலும் அவர்கள் பிணையில் விடப்பட்டு விடுவார்கள்.

### நடவடிக்கை எடுக்காத பொலிஸார்

இது வரை இந்த ஆவா குழு, சன்னாகுழு, றெட்குழு என தமக்குப் பெயர்வைத்தே சட்ட விரோத வன்முறைகளில் ஈடுபட்டு மக்களை அச்சுறுத்தி வரும் இவர்கள் இது வரை நீதியின் முன் நிறுத்தப்பட்டுத் தண்டிக்கப்பட்டது கிடையாது. ஆனால் தனியார் கல்வி நிலையத்திலிருந்து திரும்பிய மாணவர்களே வாள் வெட்டுத் தாக்குதலுக்கு ஆயத்தமானார்கள் எனச் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் நிறுத்தப்பட்டதை நாம் மறந்து விடமுடியாது.

சங்கானைப் பூசகர் படுகொலை, உரும்பிராய் உத விக்கல்விப் பணிப்பாளர் கொலை, ஊடகவியலாளர்கள், ஊடகப்பணியாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட கொலைகள், படுகொலை முயற்சிகள் போன்ற சட்ட விரோத பயங்கரவாத நடவடிக்கைகள் தொடர்பாக இதுவரை எவரும் தண்டிக்கப்படவில்லை. இனம் தெரியாதோர், துணை இராணுவக்குழு கிறீஸ் பூதங்கள், வாள்வெட்டுக் குழ்க்கள் என வெவ்வேறு பெயர்களில் சட்ட விரோத வன்முறைகள் இடம்பெற்றாலும் இவர்கள் அனைவரும் ஒரேநபர்களே என்பதையும் இவர்களுக்குப் பின்னால் இராணுவப் புலனாய்வுப் பிரிவு உள்ளது என்பதையும் மக்கள் சந்தேகத்துக்கிடமின்றி நம்பி வருகின்றனர்.

### அரசியல் பின்னணிகள்

சுன்னாகத்தில் பொலிஸார் மேல் நடத்தப்பட்ட தாக்குதல், மாணவர்களின் கொலைக்குப் பழிவாங்கல் என ஆவா குழுவினர் உரிமை கோரியமை, வாள் வெட்டுக் குழுக்களை கட்டுப்படுத்த உரிய நடவடிக்கை எடுக்காமை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வடக்கில் பொலிஸாருக்கும் பாதுகாப்பு இல்லையெனத் தெரிவித்தமை என அனைத்துமே ஒரு திட்டமிட்ட நிகழ்ச்சி நிரலின் அடிப்படையிலேயே இடம் பெறுகின்றன எனத் தோன்றுகிறது.

அதை மேலும் உறுதிப்படுத்தும் வகையில் இரு அறிவித்தல்கள் வந்துள்ளன. ஒன்று ஆவா குழுவை ஒரு வருடத்துக்குள் கட்டுப்படுத்தாவிடில் நாங்கள் பலய என ஒரு குழுவை அமைக்கப்போவதாக இராவண பலய அறிவித்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச வடக்கில் தேசிய பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக வும் வடக்கில் தேசிய பாதுகாப்பு பலப்படுத்த வேண்டுமெனவும் கூறியுள்ளார்.

வடக்கில் இராணுவப் பிரசன்னம் குறைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கை வலுப்படும் நிலையில் அதைமுறியடித்து எப்போதும் தமிழ் மக்களை இராணுவ சர்வாதிகார மேலாதிக்கத்தில் வைத்திருக்கும் நோக்குடன் ஒரே மூலத்திலிருந்து பல்வேறு முனைகளூடாக ஒரு நிகழ்ச்சி நிரலின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டு வரும் நடவடிக்கைகளின் ஒரு பகுதியே இந்தப் படுகொலையும் அதைத் தொடர்ந்து இடம்பெறும் சம்பவங்களும் என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.



# மனிதப் பேரவலம் வழிந்தோடிய 1995 ஒக்ரோபர் 30

யாதுமாகி

யாழ். நகரைக் கைப்பற்றும்வரை இராணுவ நடவடிக்கை தொடரும் என்கின்ற பிரிகேடியர் சரத் முனசிங்கவின் அடக்குமுறைச் செய்தி பத்திரிகைகள் மூலம் அறியக் கிடைக்கின்றது. அச்செழு, நீர்வேலிப் பகுதிகளில் கடும் சண்டை, வலிகாமம் கிழக்குகளில் தொடரும் ஷெல் வீச்சு, பலாலி இராணுவ முகாமிலிருந்து யாழ்ப்பாணத்தைக் கைப்பற்ற இராணுவத்தினர் தாக்குதலை நடத்தி வருவதும், அன்றைக்குச் சில நாள்களுக்கு முன்பாக அந்த நடவடிக்கையை முறியடிக்கப் புலிகள் மேற்கொண்ட பதில் நடவடிக்கைகள் வெற்றியைத் தராமல் போனதும் அப்போதைய பரபரக்கும் செய்திகள். மக்களைத் துரத்தும் இது இராணுவத்தினரின் சூரியப் பிரகாசம் நடவடிக்கை என்றும் அறிவிக்கப்பட்டிருந்தது. அன்று திங்கட்கிழமை. தமிழர்கள் வேரூன்றியிருந்த தமது யாழ்ப்பாண மண்ணை விட்டும் தமது உடைமைகளை விட்டும் உயிரைக் காப்பதற்காக உடலைக் காவித் திரிய ஆரம்பித்த அவலங்களின் ஆரம்ப நாள். மழைக்கால ஆரம்பம். முதன்மை வீதிகளைத் தவிர்ந்த நிலங்கள் வெள்ளக் காடாகக் காட்சி தருகின்றன.

### ஆமி வருகிறான்

இன்றைய மாலையே வீதியெங்கும் அல்லோல கல்லோலம். நிறைந்த சனக் கூட்டம். எங்கே போவது? என்ன செய்வது? என்னும் எந்தச் சிந்தனையும் இன்றி, உயிர் பிழைக்க வேண்டும் என்ற நோக்கோடு மட்டும் நடந்தபடியுள்ளனர். இல்லை இல்லை நகர்ந்தபடியுள்ளார்கள். இரவு நெருங்குகிறது. இன்றைக்கும் புத்தூர்ப் பகுதிகளில் சண்டை நடந்தது எனப் பேசிக்கொள்கிறார்கள்.

வீடுகளில் மின்சாரம் இல்லாததால் அந்தக் காலத்து யாழ்ப்பாணம் மாலையுடன் இருண்டு விடும். 8 மணியிருக்கும். பரவலாக எல்லா இடங்களிலும் ஒலிபெருக்கி கட்டிய வாகனங்களில் அறிவிப்புக்கள் பெருகுகின்றன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிப் பெரும் இனஅழிப்பு நடவடிக்கையை இராணுவம் மேற்கொள்ள இருப்பதால், உடனடியாகப் பாதுகாப்பான பிரதேசங்களான தென்மராட்சி, வடமராட்சி, வன்னிப் பகுதிகளுக்குப் பொதுமக்களை இடம்பெயருமாறு கோரியது அந்த அறிவிப்பு.

### வீதியில் இறுகிப்போன மக்கள்

யாழ்ப்பாணத்தினுள் (யாழ்ப்பாணம் மற்றும் வலிகாமம் இதற்குள் அடக்கம்) அப்போதிருந்த அண்ணளவான மக்கள் தொகை 4 லட்சம். குடாநாட்டினை வட பகுதியின் மற்றைய பிரதேசங்களுடன் இணைத்திருந்த வெறும் இரண்டு வீதிகளினூடாக இத்தனை இலட்சம் மக்களும் ஒரே இரவு விடிவதற்குள் கடந்து செல்ல வேண்டும் என்பதனைக் கற்பனை செய்தும் பார்க்க முடியாது. ஆனால் மக்களுக்குக் கற்பனை செய்ய நேரமிருக்கவில்லை. மூடை முடிச்சுக்களைக் கட்டி எல்லோரும் வீதிகளில் இறங்கியபோது இறுகிப்போயின வீதிகள்.

மக்கள் வெளிக்கிட்ட குறை . வெளிக்கிடாத குறை, தத்தமது உடைமைகளைச் சுமந்த சைக்கிள்களை உருட்டிய சின்னஞ்சிறுசுகள், லொறிகள், உழவு இயந்திரங்கள், லாண்ட் மாஸ்ரர்கள், தட்டிவான்கள் என வீதிகளை வாகனங்கள் ஆக்கிரமித்துக் கொள்ள, வெள்ளக்காடாயுள்ள செம்மணி வீதியின் இருபுற வயல்களிடையேயும் இறங்கியவர்களுமாய் வெள்ளத்தில் மிதந்தவர்களுமாய் வீதிகள் மனிதப் பேரவலங்களின் பாதைகளாய் மாறின. அந்த இரவு மிகப்பெரும் மனித அவலத்தைச் சுமந்தது.

### போய் வருகின்றோம்

இனித் திரும்பவும் வீடு வருவோமோ தெரியவில்லை... என்று உடைந்து போனவர்கள், எங்கே போவது? என்ற திசை தெரியாதவர்கள், வயதான அம்மா, அப்பாக்களை வீட்டிலே விட்டபடி வந்தவர்கள், நிறைமாதக் கர்ப்பிணிகள், முதியவர்களைச் சுமந்தவர்கள் என நிறைந்த வீதியில் ஓர் அடி எடுத்து வைப்பதற்கு ஒருமணி நேரம் ஆயிற்று.

தண்ணீர் கேட்டு அழுத குழந்தைகளுக்குப் பெய்த மழையை குடையில் ஏந்திப் பருக்கியவர்கள், லொறிகளில் றேடியேற்றருக்கென வாளிகளில் தொங்கும் தண்ணீரை எடுத்துக் குடித்தவர்கள், முதியவர்களின் தவிப்புக்கள் என உச்சக்கட்ட அவலங்களைச் சுமந்தபடி அடக்குமுறையிலிருந்து தம்மைக் காத்துக் கொள்ள வெளியேறிய தமிழர்களின் துன்பங்கள் சொல்லில் அடக்க முடியாதவை.

### துரத்தும் விமானங்கள்

அடுத்த நாள் காலையே வானத்தில் வட்டமிட்ட சீப் பிளேன், புக்காரா, சுப்பசொனிக் விமானங்கள், ஏலவே இருந்த நிலமையை இன்னும் பதற்றப்படுத்தின. பிரதான வீதிக்கு அண்மையாக எங்கு குண்டு வீசினாலும் ஆயிரக்கணக்கில் சாவுகள் விழும் நிலமையே காணப்பட்டது. நீண்ட நேரமாக நடந்தும், நின்றும் கொண்டிருந்தவர்கள் தங்க இடமெதுவும் இன்றி ஆலயங்கள், தேவாலயங்கள், நூல் நிலையங்கள் எனக் கண்ணில் பட்ட கொட்டகைகள் அனைத்திலும் தஞ்சமடைந்து நிரம்பி வழிந்தனர். அந்த மனிதப் பேரவலம் வீதிகள் வழி வழிந்து கடந்து செல்வதற்கு 10க்கும் அதிகமான நாள்கள் எடுத்தன என்பதே அதன் தாங்கொணாத துயரையும் கொடுமையையும் சொல்லப்போதுமானது.

### தமிழ், முஸ்லிம்களின் ஒரே அனுபவம்

யாழ்ப்பாணத்தை விட்டு நகர்ந்தவர்கள் இடப்பெயர்வின் பின்னர் ஒரு பத்துப் பதினைந்து நாள்கள் வரை மீண்டும் யாழ்ப்பாணம் சென்று தாம் விட்டுவந்த உடைமைகள் சிலவற்றை இராணுவப் பயத்தின் மத்தியிலும் எடுத்து வந்திருந்தனர். ஆனாலும் ஒரே இரவில் ஒன்றாய்க் கூடி வாழ்ந்த மண்ணைவிட்டு தூக்கியெறியப்படுவோம் என எவரும் நினைத்திருக்கமாட்டார்கள். காலங்காலமாக வாழ்ந்த மண்ணை விட்டு ஒரே நாளில் நிர்ப்பந்தங்களால் தூக்கியெறியப்படின், அந்த வலி எப்படியிருக்கும் என்பது அன்று அனுபவித்தவர்களுக்குத்தான் தெரியும்.

ஆனால் அதே அனுபவத்தை யாழ்ப்பாணத்திலும் வடக்கிலும் வாழ்ந்த முஸ்லிம்களுக்குத் தமிழ் இனம் வழங்கியிருந்த கொடுமையையும் யாரும் மறந்துவிட முடியாது. அது இதைவிடவும் மோசமானதாக அமைந்திருந்தது. ஒரேநாளில் உடைகளையும் மிகச் சிறியதொரு பணத் தொகையையும் தவிர மற்றைய எல்லாவற்றையும் இழந்துபோன - இழக்க வைத்த - துயரத்தை 5 வருடங்களுக்கு முன்னர் 1990 இல் முஸ்லிம்கள் அனுபவித்திருந்தார்கள். இன்றும் அவர்களின் துயரங்கள் முழுந்தபாடாயில்லை. அந்த அனுபவத்தின் ஒரு பகுதியை 1995 ஒக்ரோபர் 30இல் தமிழ் இனம் அனுபவித்தது.

### அநீதிகளுக்குத் தண்டனை?

இத்தகைய அவலங்களைய்யும் துன்பங்களையும் இறுதிவரை அடக்குமுறையை எதிர்த்த தமிழ் மக்களைத் தவிர வெறுமனே உத்தரவைப் பிறப்பித்து சொகுசு அறைகளுள் மது அருந்திக் காலம் கழித்த அன்றைய பெரும்பான்மை ஆட்சியாளர்கள் அறிந்திருக்கமாட்டார்கள். இவ்வாறான நயவஞ்சகத் தன்மையுடையோருக்குத் தமிழர் படும் துயரம் தெரிந்தாலும் அக்கறை கொள்வதில் ஆதாயம் இல்லை என்பதால் தொடர்ந்தும் பெரும் பான்மை மக்களின் அரவணைப்பிலேயே ஆட்சியமைக்கலாம் என்றும் கருதியி ருந்தனர்.

இனிவரும் காலங்களில் இலங்கையின் சிறுபான்மை இனங்களின் கைகொடுப்பும் ஆட்சியமைக்கத் தேவை என்ற நிலையை இறுதியாக நடந்த ஜனாதிபதித் தேர்தலில் இருந்து அவர்கள் புரிந்துகொண்டிருக்க வேண்டும். ஏராளம் ஏராளம் இன்னல்களையும் துன்பங்களையும் தமிழருக்கு இழைத்த பெரும்பான்மை அரசியல்வாதிகள் தண்டனை பெறாமல் இருக்கும் வரைக்கும், நல்லதொரு நீதியான தலைமை உருவாவதும், சகல இன மக்களும் ஒற்றுமைப்பட்டு வாழும் தேசம் ஒன்று மலர்வதும் சாத்தியமற்ற ஒன்றே.





**மேடம்:** சுறுசுறுப்புடன் பணியில் ஈடுபடுவீர்கள். எதிர்பார்ப்பு இனிதே நிறைவேறும். தொழில், வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். பெண்கள் சந்தோசமாக வாழ்வு நடத்துவர். உறவினரின் அன்பை பெற்று மகிழ்வீர்கள்.

**இடபம்:** நண்பர்களிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். தொழில் வியாபாரத்தில் இடையூறு விலகும். பண வரவு சராசரி அளவில் கிடைக்கும். உடல் நலனில் கவனம் தேவை. பெண்கள் குடும்ப நலனில் அக்கறை கொள்வர்.

**மிதுனம்:** பெருந்தன்மையுடன் பிறருக்கு உதவுவீர்கள். தொழில் வியாபாரம் சராசரி அளவில் இருக்கும். லாபம் சுமார். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்கும். வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். பெண்கள் சுபச்செலவு செய்வர்.

**கடகம்:** நேர்மை எண்ணத்துடன் செயல்படுவீர்கள். புதிய முயற்சி முழு அளவில் வெற்றி பெறும். தொழில், வியாபாரம் வியத்தகு வளர்ச்சி அடையும். பண வரவு அதிகரிக்கும். சுபநிகழ்ச்சியில் கலந்து கொள்ள அழைப்பு வரும்.

**சிங்கம்:** நல்லவர்களின் நட்புக் கிடைக்கும். தொழில் வியாபாரம் சீராக கூடுதல் உழைப்பு தேவைப்படும். லாபம் மிதமாக இருக்கும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை பெறுவர். பெற்றோரின் அன்பும், ஆசியும் கிடைக்கும்.

**கன்னி:** உறவினர் மத்தியில் நற்பெயர் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் திட்டமிட்ட இலக்கு நிறைவேறும். ஆதாயம் அதிகரிக்கும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். பூர்வீகச் சொத்து கிடைக்க யோகமுண்டு.

**துலாம்:** நற்செயலில் ஈடுபட்டு புகழ் பெறுவீர்கள். தொழில், வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். பணியாளர்கள் பணிச் சுமையில் இருந்து விடுபடுவர். உடல் நலம் மேம்படும். பிள்ளைகளால் நன்மையடைவீர்கள்.

**விருச்சிகம்:** அதிர்ஷ்ட தேவதையின் அருள் பார்வை கிடைக்கும். வாழ்க்கைத்தரம் மேம்படும். தொழில், வியாபார வளர்ச்சியால் பண வரவு அதிகரிக்கும். பணியாளர்கள் சலுகை கிடைக்கப் பெறுவர்.

**தனுசு:** இனிய அனுபவம் கிடைக்கப் பெறுவீர்கள். தொழில் வியாபாரத்தில் உருவான இடையூறு எளிதாக விலகும். பண வரவு அதிகரிக் கும். குடும்பத்தில் ஒற்றுமை மேலோங்கும். விரும்பிய பதவி உயர்வு பெற அனுகூலம் உண்டு.

**மகரம்:** நண்பரின் ஆலோசனையை ஏற்பது அவசியம். தொழில் வியாபாரத்தில் புதிய மாற்றங்களை உருவாக்குவீர்கள். எதிர்பார்த்த சுபசெய்தியில் தாமதம் உண்டா கும். வீடு, வாகன வகையில் திடீர் செலவு ஏற்பட வாய்ப்புண்டு.

**கும்பம்:** அனைவரிடமும் அன்பு காட்டி மகிழ்வீர்கள். தொழில், வியாபாரத்தில் அளவான பண வரவு கிடைக்கும். பணியாளர்கள் விரும்பிய இடமாற்றம் கிடைக்கும். உறவினர் மத்தியில் பெண்கள் செல்வாக்குடன் திகழ்வர்.

**மீனம்:** கடந்த கால உழைப்பின் பயனைப் பெறுவீர்கள். தொழில் வளர்ச்சியால் சாதனை படைப்பீர்கள். மாமன், மைத்துனருக்கு இயன்ற அளவில் உதவு வீர்கள். வெகுநாள் காணாமல் தேடிய பொருள் கிடைக்கும்.

WhatsApp

வீட்டு விசேஷங்களுக்கு அழைக்கப்படவில்லை என கோபித்துக் கொள்பவர்கள் குறைந்து விட்டார்கள்... நல்ல வேளை கூப்பிடவில்லை என நினைப்பவர்கள் அதிகமாகி விட்டனர்...

## சுடோக்கு எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 6 | | | | 5 | | | | |
| | | 8 | | 1 | | 3 | 7 | 5 |
| | | 2 | 3 | | 4 | | | |
| 9 | 7 | | | | | | | |
| 8 | | | 1 | | 5 | | | 9 |
| | | | | | | | 2 | 4 |
| | | | 6 | | 1 | 9 | | |
| 5 | 1 | 9 | | 3 | | 6 | | |
| | | | | 9 | | | | 7 |

நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 7 | 3 | 4 | 8 | 9 | 6 | 1 | 2 | 5 |
| 5 | 8 | 9 | 7 | 2 | 1 | 6 | 3 | 4 |
| 1 | 6 | 2 | 5 | 4 | 3 | 9 | 7 | 8 |
| 9 | 2 | 1 | 4 | 3 | 5 | 8 | 6 | 7 |
| 3 | 7 | 6 | 9 | 1 | 8 | 5 | 4 | 2 |
| 8 | 4 | 5 | 2 | 6 | 7 | 3 | 9 | 1 |
| 2 | 9 | 8 | 3 | 5 | 4 | 7 | 1 | 6 |
| 6 | 5 | 3 | 1 | 7 | 2 | 4 | 8 | 9 |
| 4 | 1 | 7 | 6 | 8 | 9 | 2 | 5 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க் கரீதியான ஒழுங்கு படுத்தல் தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளை யும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்ப வற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உப சதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்).
இந்த ஒவ்வொரு நிரையிலும், நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராது நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படு கையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வர வேண்டும். சில கட்டங்கள் ஏற் கனவே நிரப்பப் பட்டிருக்கும். தர்க்க ரீதியில் ஏனைய வற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986இல் ஜப்பானிய நிறுவன மான நிகோலி இதனை அறிமுகப் படுத்தி வெற்றிகர மாகப் பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்ய மானது.



## ஜெயலலிதாவாக மாற நடிகை த்ரிஷா ஆர்வம்

தமிழ் சினிமாவின் முன்னணி நடிகையாக பல வருடமாக இருந்து வருகிறார் நடிகை த்ரிஷா, இவர் நடித்த கொடி திரைப்படம் தீபாவளிக்கு பிரம்மாண்டமாக வெளியாகிறது. இந்த படத்தில் உள்ளூர் அரசியல்வாதியாக இவர் நடித்துள்ளார். இந்த நிலையில் சமீபத்தில் அளித்த பேட்டி ஒன்றில் தமிழக முதல்வர் ஜெயலலிதாவின் வாழ்க்கை வரலாறு படத்தில் ஜெயலலிதாவாக நடிக்க விரும்புவதாக த்ரிஷா கூறியுள்ளார். முதல்வர் ஜெயலலிதாவின் கதாபாத்திரத்தில் நடிக்க வாய்ப்புக் கிடைத்தால் அதைவிட பெரிய மகிழ்ச்சி ஒன்றுமில்லை என கூறினார் த்ரிஷா.

**குழந்தை அருண்**

எதிரிகளும் வியந்து பார்க்குமளவு வாழ்ந்து காட்டுவதே, உண்மையான வரம் நிறைந்த வாழ்க்கை

அவளை நினைத்து கவிதை எழுதி அவளிடம் கொடுத்தேன்.



வாங்கிப் படித்து விட்டு கேட்டா பாரு ஒரு கேள்வி, அண்ணா யாரையாவது லவ் பன்றீங்களா...?

"ஏண்டா. எல்லாப் பாடத்திலேயும் சைபர் வாங்கியிருக்கே"




"அப்பா, அது சைபர் இல்லேப்பா, என் மார்க்கை எல்லாம் பார்த்து ரீச்சர் 'ஓ' போட்டிருக்காங்க!"

என் பொண்டாட்டி சமையலை வாயில வைக்க முடியாது; அவ பேச ஆரம்பிச்சா பைத்தியமே பிடிச்சிடும்...
யோவ்... பாங்க்ல வந்து ஏன்யா இதையெல்லாம் சொல்றே...?



நம்ம கஷ்டத்தை சொன்னாதான் லோன் கிடைக்கும் என்று சொன்னாங்க!



## இது புதுசு

நெற் மேற்சட்டை அறிமுகமாகியுள்ளது. சுற்றுலா, குடும்ப ஒன்று கூடல்களின்போது பொதுவாக பெண்கள் மேலைத்தேய பாணியில் ஆடை அணிவர். அவ்வாறான சந்தர்ப்பங்களில் இவ்வாறான நெற் மேற்சட்டைகள் சொகுசாக இருப்பதுடன், கவர்ச்சியை குறைக்க உதவும். பல்வேறு வர்ணங்களிலும் கிடைக்கும் இந்த ஆடை 550 ரூபாவில் இருந்து விற்பனை செய்யப்படுகிறது.

## நாளை ஐப்பசி-15

திங்கட்கிழமை -31.10.2016
திதி: பிரதமை பி.இ. 01.05
நட்சத்திரம்: சுவாதி பி.ப.12.17

ராகுகாலம்:
07.33-09.03 வரை
சுபநேரம்:
12.03-01.33 வரை
ஸ்கந்தஷஷ்டி விரதாரம்பம்



## நேற்றைய மரக்கறி விலை நிலவரம்

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| முள்ளங்கி | 50 | – | 60 | 60 | 40 | 40 | 30 | 50 |
| கத்தரி | 60 | 40 | 100–120 | 60 | 40 | 50 | 90 | 35 |
| கரட் | 80 | 80 | 60–140 | 80 | 80–100 | 100 | 110 | 100 |
| மரவள்ளி | 60 | 60 | 60 | 60 | 50–60 | 60 | 80 | 60 |
| பயிற்றை | 150 | 60 | 200 | 80 | 140 | 160 | 100 | 60 |
| பாகல் | 120 | 100 | 240 | 120 | 180 | 120 | 150 | 70 |
| கருணைக்கிழங்கு | 80 | 100 | 100 | 100 | 80 | 120 | 120 | 80 |
| பெ.வெங்காயம் | 100 | 90 | 90 | 100 | 100 | 100 | 75 | 80 |
| சி.வெங்காயம் | 100 | 110 | 120 | 100 | 80–100 | 120 | 90 | 70 |
| பூசணி | 30 | 30 | 40 | 40 | 25–30 | 60 | 70 | 30 |
| தக்காளி | 80 | 60 | 80 | 60 | 80 | 80 | 120 | 40 |
| வாழைக்காய் | 60 | 50 | 50 | 60 | 60 | 80 | 70 | 40 |
| கீரை | 30 | 20 | 30 | 10 | 20 | 20 | 20 | 20 |
| பொன்னாங்காணி | 20 | 30 | 30 | 30 | 20 | 40 | 20 | 10 |
| பச்சை மிளகாய் | 80 | 70 | 70 | 80 | 70 | 100 | 200 | 70 |
| புடோல் | 50 | 40 | 80 | 60 | 30 | 40 | 70 | 50 |
| கோவா | 80 | 80 | 80 | 80 | 80 | 100 | 90 | 50 |
| வெண்டி | 100 | 80 | 200 | 80 | 80 | 40 | 70 | 30 |
| போஞ்சி | 180 | 160 | 200 | 160 | 180 | 200 | 130 | 120 |
| லீக்ஸ் | 180 | 100 | 160 | 140 | 80 | 100 | 90 | 100 |
| தேங்காய் | 50 | 40 | 45 | 35–40 | 30 | 20 | 15–25 | 30 |
| உருளைக்கிழங்கு | 100 | 100 | 110 | 100 | 120 | 100 | 85 | 120 |
| தேசிக்காய் | 500 | 600 | 600 | 500 | 300 | 200 | 120 | 200 |
| வல்லாரை | 15 | 20 | 10 | 15 | 10 | 10 | 10 | 10 |
| கறிமிளகாய் | 100 | 100 | 160 | 140 | 100 | 100 | 200 | 70 |
| இராசவள்ளி | 180 | – | – | – | – | – | – | 120 |
| முருங்கைக்காய் | 80 | 80 | 50 | 80 | 80 | 200 | 80 | 100 |



## நேற்றைய கடலுணவு விலை நிலவரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| இறால் | 600 | 600 | 500 | 700 | 800 | 800 | 700 |
| நண்டு | 250 | 400 | 200 | 400 | 400 | 400 | 600 |
| கணவாய் | 600 | 600 | 400 | 600 | 700 | 400 | – |
| பாரை | 550 | 400 | 400 | 800 | 600 | 500 | 390 |
| சுறா | 500 | 500 | 500 | 800 | 800 | 700 | 600 |
| சீலா | 300 | 400 | 300 | 600 | 400 | 300 | 400 |
| விளை | 650 | 400 | 300 | 600 | 450 | 500 | 300 |
| முரல் | 300 | 200 | 300 | 500 | 350 | 300 | – |
| கும்பிளா | 400 | 200 | 400 | 400 | 300 | 400 | – |
| கிளாக்கன் | 800 | 1000 | 300 | 500 | 400 | 500 | – |
| ஒரா | 400 | 300 | 300 | – | 300 | 300 | 350 |
| திரளி | 300 | 200 | 100 | 150 | 250 | 300 | 300 |
| நகரை | 250 | 200 | 100 | 250 | 300 | 150 | 300 |
| சூடை | 150 | 100 | 100 | 200 | 120 | 200 | – |
| ஒட்டி | 300 | 100 | 200 | – | 300 | 300 | 200 |
| திருக்கை | 150 | 200 | 200 | 400 | 400 | 200 | 130 |
| மதனம் | 150 | 100 | – | 400 | 300 | 300 | – |
| கொய் | 100 | 100 | 50 | 70 | 80 | 80 | 200 |
| பாலை | 400 | 100 | 300 | 400 | 100 | 400 | – |
| வாழை | 100 | 100 | – | 400 | 300 | 300 | – |

## உலர் திராட்சையின் பயன்கள்



- உலர் திராட்சை எண்ணற்ற நன்மைகளைத் தன்னுள் கொண்டுள்ளது. உலர் திராட்சை கருப்பு, பச்சை மற்றும் தங்க நிறங்களில் கிடைக்கிறது.
- உலர் திராட்சையில் விட்டமின் பி, சி, ஃபோலிக் ஆசிட், இரும்புச்சத்து, கரோட்டீன்கள், லுடீன், பொட்டாசியம், கல்சியம் மற்றும் மக்னீசியம் போன்ற சத்துக்கள் உள்ளன.
- சிறுநீரகப் பாதையில் ஏதேனும் நோய்த்தொற்று ஏற்பட்டிருந்தால், அதைக் குணமாக் ஆயுர்வேதம் பரிந்துரைப்பது இந்த வழியைத்தான். அது என்னவெனில் இரவில் படுக்கு போது ஒரு கப் நீரில் 8-10 உலர் திராட்சையை ஊற வைத்து, மறுநாள் காலையில் வெறு வயிற்றில் நீருடன் சேர்த்து அதனை உட்கொண்டு வருவதுதான்.
- சமிபாடின்மைக் கோளாறுகளால் குடலில் உள்ள வாய்வுக்கள் சீற்றம் ஏற்பட்டு குட சுவற்றை புண்ணாக்கி விடுகின்றன. இவர்கள் உலர்ந்த திராட்சைப் பழங்களை நீரி கொதிக்க வைத்து காயம் போல் செய்து அருந்தி வந்தால் குடற் புண்கள் குணமாகும்.
- உடல் சூட்டினால் அவஸ்தைப்படுபவர்கள், ஒரு லிற்றர் தண்ணீரில் 25 உலர் திராட்சை சேர்த்து கொதிக்க வைத்து இறக்கி குளிர வைத்து, நாள் முழுவதும் அந்த நீரைக் குடித்து உலர் திராட்சையை உட்கொண்டு வந்தால், விரைவில் உடல் வெப்பம் தணியும்.

(தொடரும்



## அரிசிப் பணியாரம்

**தேவையான பொருள்கள்**

பச்சரிசி - 400 கிராம்
புழுங்கல் அரிசி - 100 கிராம்
உளுத்தம் பருப்பு - 200 கிராம்
சீனி - 300 கிராம்

**செய்முறை**

பச்சரிசி, புழுங்கல் அரிசி, உளுத்தம் பருப்பு மூன்றையும் தனித்தனியாக முதல் நாளே ஊற வைத்து விடவும்.
மறு நாள் எடுத்து அரைத்து அதோடு சீனியைக் கரைத்துக் கொள்ளவும்.
சட்டியில் எண்ணெயை ஊற்றி காய்ந்தவுடன் ஒரு குழிக் கரண்டி மாவை ஊற்றவும்.
பணியாரம் வெந்து மேலே வரும்போது அதைத் திருப்பிப் போட்டு வெந்ததும் எடுக்கவும்.
சீனிக்குப் பதிலாக கருப்பட்டியும் சேர்த்துச் செய்யலாம்.

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT




# எல்லாப் புகழும் மெஸ்ஸிக்கே

## உருகுகிறார் நெய்மரின் தந்தை

தனது மகன் நெய்மர் பார்சிலோனா அணியில் இணைந்து விளையாடுவதற்கு ஆர்ஜென்ரினா அணியின் தலைவர் மெஸ்ஸியே காரணம் என்று நெய்மரின் தந்தை தெரிவித்துள்ளார்.

பிரேஸில் கால்பந்து அணியின் இளம் வீரரான நெய்மர் 2013ஆம் ஆண்டு பார்சிலோனா அணியில் இணைந்தார். தற்போது அவர் குறித்த கழகத்தின் சக வீரர்களான சுவராஸ், மெஸ்ஸி ஆகியோருடன் இணைந்து கலக்கி வருகிறார்.

இந்த நிலையில் நெய்மர், பார்சிலோனா அணியில் இணைந்து விளையாட மெஸ்ஸிதான் காரணம் என்று நெய்மரின் தந்தை தெரிவித்துள்ளார்.

மெஸ்ஸியை பற்றி அனைவருக்கும் தெரியும். அவருக்காகவே நெய்மர், பார்சிலோனா அணியில் விளையாடுகிறார். மெஸ்ஸி, ரொனால்டோ போன்ற வீரர்கள் இல்லை என்றால் நெய்மர் போன்ற இளம் வீரர்களை நாம் கண்டிருக்க முடியாது. அவர்கள் பிலே, மரடோனா போன்றவர்கள். அந்த வீரர்கள் தான் பலருக்கு ஊக்கம் அளித்தவர்களாக உள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். பார்சிலோனா – நெய்மர் இடையிலான ஒப்பந்தம் நீடிக்கப்பட்டுள்ளது. இதன்படி எதிர்வரும் 2021 ஆம் ஆண்டு வரை பார்சிலோனாவுக்காகவே நெய்மர் விளையாடவுள்ளார்.

# இங்கிலாந்தில் கலக்கவுள்ளார் மெண்டிஸ்

அடுத்த வருடத்துக்கான றோயல் லண்டன் தொடரில் இங்கிலாந்தின் கழகமொன்றுக்காக ஒப்பந்தமாகியுள்ளார் ஜீவன் மெண்டிஸ்.

இங்கிலாந்துக் கழகங்களுக்கு இடையில் ஒவ்வொரு வருடமும் மூன்று வகைக் கிரிக்கெட் ஆட்டங்களும் (ஐ.பி.எல். போன்று) நடத்தப்படுவது வழமை. இந்த வருடத்துக்கான அட்டவணைகள் முடிவடைந்துள்ள நிலையில் அடுத்த வருடத்துக்கான தொடர்களுக்கு வீரர்களுடன் ஒப்பந்தம் செய்ய ஆரம்பித்துள்ளன கழகங்கள். டெர்பிசயர் கழகம் ஒருநாள் தொடருக்காக ஜீவன் மெண்டிஸை ஒப்பந்தம் செய்துள்ளது.

"றோயல் லண்டனில் களமிறங்க ஆர்வமாக உள்ளேன். அதில் விளையாடும் சக வீரர்களைச் சந்தித்து டெர்பிசயரின் வெற்றிக்கு என்னால் இயன்ற அளவுக்கு உதவுவேன்" என மெண்டிஸ் தெரிவித்தார்.






# மறுபரிசீலனை முறை இல்லை

இலங்கை – சிம்பாப்வே அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடரில் நடுவர் முடிவை மறுபரிசீலனை செய்ய இயலாது என்று சிம்பாப்வே கிரிக்கெட் சபை தெரிவித்தது. சிம்பாப்வேக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்ட் நேற்று ஆரம்பமானது. இந்தத் தொடரில் நடுவர் முடிவை மறு பரிசீலனைசெய்யஇயலாது என்று சிம் பாப்வே கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது. பணப் பிரச்சினையாலேயே இந்த முடிவுக்கு வந்ததாக சிம்பாப்வே கிரிக்கெட் சபை மேலும் தெரிவித்தது.

# பங்களாதேஷின் நிலமைகளை பரிசீலிக்கிறது ஆஸியின் குழு

ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையின் பாதுகாப்புக் குழுவொன்று பங்களாதேஷின் நிலைமைகளை பரிசீலிக்க அங்கு சென்றுள்ளது.

ஆஸ்திரேலிய கிரிக்கெட் அணி கடந்த ஆண்டு பங்களாதேஷில் சுற்றுப் பயணம் செய்து இரண்டு டெஸ்ட் ஆட்டங்கள் கொண்ட தொடரில் விளையாடுவதாக இருந்தது. ஆனால், ஆஸ்திரேலிய வீரர்கள் புறப்படும் நேரத்தில், பங்களாதேஷில் உள்ள ஆயுதக் குழுக்களால் ஆஸ்திரேலிய மக்களினதும் வீரர்களினதும் உயிருக்கு ஆபத்து உள்ளது, இதனால் பங்களாதேஷ் சுற்றுப் பயணங்களை தவிர்க்க வேண்டும் என்று ஆஸ்திரேலிய உளவுத்துறை எச்சரித்தது. இதனால் குறித்த இரு அணிகளுக்கும் இடையிலான இருதரப்புத் தொடர் கைவிடப்பட்டது.

அதன்பின் நடைபெற்ற 19 வயதிற் குட்பட்டோருக்கான உலகக் கிண்ணத் தொடரிலும் ஆஸ்திரேலியா பங்கேற்கவில்லை.

தற்போது இங்கிலாந்து அணி பங்களாதேஷில் சுற்றுப் பயணம் செய்து விளையாடி வருகிறது. கடந்த சில மாதங்களுக்கு முன் வெளிநாட்டினர் தங்கியிருந்த விடுதியொன்றின் மீது ஆயுததாரிகள் நடத்திய தாக்குதலில் 20 பேர் சாவடைந்தனர். இதனால் இங்கிலாந்து அணி ஆரம்பத்தில் சிறிது தயக்கம் காட்டியது. ஆனால் இங்கிலாந்து அணிக்கு உச்ச கட்ட பாதுகாப்பு வழங்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டதன் அடிப்படையிலேயே இங்கிலாந்து அணி அங்கு சென்று விளையாடிவருகிறது. திருப்திகரமான பாதுகாப்பு அங்கு வழங்கப்பட்டுள்ளதால் ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபையும் பங்களாதேஷுக்கு எதிரான தொடருக்கு ஆர்வம் காட்டி வருகிறது.

இதன் ஒரு கட்டமாக ஆஸ்திரேலிய அணியின் பாதுகாப்புக் குழு தற்போது பங்களாதேஷுக்கு வந்து அங்குள்ள நிலமைகளைப் பரிசீலனை செய்து வருகிறது. குழுவின் அறிக்கை சாதகமாக அமைந்தால் அடுத்த வருடம் ஓகஸ்ட் மாதம் தொடர் நடத்தப்படலாம்.



# பண்பாடுகள் படும்பாடுகள்!

(36 ஆம் பக்கத் தொடர்ச்சி)

"டேய் அடியுங்கோடா பான்டை: மேள காறர் அடிக்கிற தாளத்துக்கு நீங்களும் அடிக்க வேணும் அடியுங்கோடா சத்த மாய் டேய் சசி மறியடா உந்த ஆட் டோவை விடாதையுங்கோ, ஒருத் தனையும் விடக் கூடாது"

பகீரதன் சொல்லியபடி நகுலனிடம் ஓடிப்போய் அவனிடம் ஏதோ சொல்ல அவன் தனது சேட்டின் உள்புறப்பையிலி ருந்து கற்றையாகப் பணநோட்டுக்களை உருவியெடுத்துக் கொடுத்தான். கைவசமிருந்த உற்சாக பானம் தீர்ந்துவிட்ட தாம். அதை வாங்குவதற்குத் தான் எண்ணாமல் கொள்ளா மல் எவ்வளவென்று கூடப்பாராது காசை அள்ளிக் கொடுத்தான் நகுலன்.

"டேய் சிறி! வெடியைக் கொளுத்தி உந்த ஆட்டோவுக்கை போடடா அவை ஏதோ பெரிய அந்தரப்படுகினம் போலை"

அந்தச் சிறிய வீதியிலே பயணித்துக் கொண்டிருந்த வாகனங்கள் அத்தனையும் அப்படியே நிறுத்தப்பட்டிருந் தன. இம்மியளவும் நகர முடியவில்லை. நகரவிடவுமில்லை.

கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த அந்த சொகுசு பஸ்சுக்குள் மகாலிங்கம் மாஸ்டர், தேவசகாயம் டாக்குத் தர், பாங்கர் பத்தமநாதபிள்ளை இவ்வாறு யாழ்ப்பாணம் போய்ச் சேர வேண்டியவர்கள் ஏராளமானோர் அடைத்து விட்ட ஆட்டுமந்தைகளாகப் பரிதாபமாகக் காட்சியளித்தனர். வாராந்த விடுமுறையில் குடும்பங்களைப் பார்க்க ஆசை யுடன் வந்தவர்கள் மணிக்கணக்காக பஸ்ஸிலே அடை பட்டுக்கிடந்தனர். வாகனங்கள் வரிசையிலே தடுத்து வைக் கப்பட்டிருப்பதைப் பார்க்க அன்றைய போர்க் காலங்களில் இராணுவ வாகனங்களுக்கு வழி விடுவதற்காக மறித்து வைக்கப்படுவது போன்றிருந்தது.

தேவசகாயம் டாக்குத்தருக்குப் பக்கத்து சீற்றில் யாரோ ஒரு வெளிநாட்டு வெள்ளைக்காரச் சுற்றுலாப்பயணி. பாவம் பார்க்க வேறு இடங்களில்லாது போயும் போயும் யாழ்ப்பா ணத்தைப் பார்க்க வந்திருக்கின்றார். பொறுமையையிழந்த நிலையில் தேவசகாயத்திடம் மெல்லப் பேச்சைக் கொடுத் தார். கண்ணாடி யன்னலூடாக வேடிக்கை பார்த்தார். இருப்புக் கொள்ளவில்லை.

"என்ன விசேஷம் ஏன் இந்த வாக னங்களெல்லாம் நிறுத்தப்பட் டிருக்கின்றன".

சந்தேகத்தைக் கேட்டார் செத்த வீடு என்று கூறியதும் "என்ன செத்த வீடா! அதற்கு ஏன் வாகனத்தை நிறுத்தி வைக்கின்றார்கள் தேவசகாயம் உட்பட அனைவரும் வாயடைத்துப் போய் நின்றனர். என்ன சொல்வதென்றே தெரியவில்லை.

"எங்களுடைய நாட்டில் பிரதமரோ ஜனாதிபதியோ வந்தாலும் கூட அவர்களுக்காக விசேடமாக வாகனங்களை நிறுத்தத் தேவையில்லை. இங்கே ஒரு சாதாரண சாவு ஊர்வலத் துக்காக இத்தனை வாகனங்களையும் பயணிகளையும் இத் தனை நேரமாகத் தடுத்து வைத்திருப்பது குற்றமில்லையா இது பெரிய சட்டவிரோதமல்லவா" மீண்டும் அனைவரும் மௌன விரதத்தையே கடைப்பிடிக்க வேண்டிய நிலை.

"அது சரி சாவு ஊர்வலம் என்று கூறுகின்றீர்கள். அதற் கேன் இத்தனை ஆரவாரங்கள். மேளங்களடித்துப் பட்டாசு கள் கொளுத்தி மிகப்பெரிய மகிழ்ச்சியான கொண்டாட்டமா கக் கொண்டாடுகின்றீர்களே! மரணச் சடங்கு சாவு ஊர்வல மென்பது மகிழ்ச்சியைத் தரக்கூடிய கொண்டாட்டமா! எங்களுடைய நாட்டில் மிக அமைதியாகவே சாவுச் சடங் கைக் கொண்டாடுவோம். சாவு என்பது அமங்கலகரமான ஒரு நிகழ்வு. சோகத்தைத் தருவது. அதைப் போய் இத்தனை ஆடம்பரமாக வீதியை மறித்து வெடிகளைக் கொளுத்தி மேளங்களை உரக்க அடித்து சே! வட்?"!

சொல்லியபடி தனது பிரயாணப் பையிலிருந்த கமராவை எடுத்த அன்றைய சாவு ஊர்வலத்தின் கண் கொள்ளாக் காட்சிகளைப் படம் பிடித்ததுடன் தனது டயரியையும் எடுத்து ஏதோதோ எழுதினார் அந்தச் சுற்றுலாப்பயணி.

ஆட்டோவிலிருந்து வந்திறங்கிய உற்சாக பானம் மீண்டும் மேளக் கலைஞர்களுக்கு வஞ்சனையின்றி வழங்கப்பட்ட தும் அடுத்த சுற்றுச் சமா ஆரம்பமாகியது.

அத்துடன் அன்றைய விழாவின் ஊர்வலத்தை நெறிப்படுத் திக் கொண்டிருந்த வாலிபர்களும் அவ்வப்போது தங்களின் வாய்களையும் நனைத்துக் கொள்ளத் தவறவில்லை.

இது யாழ்ப்பாணம் தானே!

சற்று சந்தேகப்பட்டார் சுற்றுலாப்பயணி


"நண்பர்களே! இலங்கையில் மட்டுமல்ல உலகத்திலேயே உங்களுடைய யாழ்ப்பாணத்துக்கு ஒரு தனிப்பெருமை யிருப்பதாக அறிந்தேன். கல்வி, கலாசாரம் பண்பாடு களில் உங்கள் மக்கள் முன்னோடிகளாம். அதுதான் நானும் ஒரு தடவை உங்கள் பெருமைகளைப் பார்த்துவிட வேண்டுமென்று ஆசைப்பட்டு வந்திருக்கின்றேன். ஆனால் உங்களுடைய இந்தச் சாவு ஊர்வலத்தைப் பார்த்தவுடன் எனக்கு எல்லாமே சந்தேகமாயிருக்கின்றன"

மீண்டும் அனைவரையும் வம்புக்கிழுத்து அவமானப்படுத் தியது அந்த வெள்ளை. யாழ்ப்பாண மண்ணில் நுழைந்த நுழைவதற்கு முன்பே இத்தனை கேலியாக எண்ணுமிந்த மனிதன் முழுமையாக உள்ளே நுழைந்து எமது இளை ஞர்களின் போக்குகளையும் பழக்க வழக்கங்களையும் பார்த்து விட்டால்....! அனைவரும் வெட்கித்துப் போய் பேயறைந்தவர்களின் நிலையில் காணப்பட்டனர்.

நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்கள் யாவும் மெல்லப் புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தன. எப்படியிருந்த யாழ்ப்பாணத்துப் பண்பாடு இப்படி அன்னியனால் கேலிக் குள்ளான வேதனையைத் தாங்க முடியாது மகாலிங்கம் மாஸ்டர் நீண்டதொரு பெருமூச்சை வெளியே தள்ளினார். கூடவே தேவசகாயம் டாக்குத்தர், பாங்கர் பத்மநாதபிள்ளை ஆகியோரும் தங்கள் தங்கள் கவலைகளைக் காண்பித் துக் கொண்டிருந்தனர்.

ஒரு சாதாரண சாவுச் சடங்கின் இறுதி ஊர்வலத்திலே நாங்கள் சாதாரணமாக எடுத்துக் கொள்ளும் விடயங்கள் ஓர் அன்னிய நாட்டவனுக்கு எத்துணை பாதிப்புக் களையும் கொடுத்து எமது மண்ணையும் கலாசாரத் தையும் இழிவுபடுத்திவிட்டதை நினைக்க அவர்களுக்கு வாழ்க்கையே வெறுத்துவிட்டது போன்ற பிரமை ஏற்பட்டு விட்டது.

## சொற்சிலம்பம் - போட்டி இல: 444



அனுப்புபவர் பெயர்:.........................................

பூரணமான தபால் விலாசம்: .........................................

.........................................

கையொப்பம்:.........................................

### இடமிருந்து வலம்

1. ஒருவரை ஒருவர் தெரிந்து பரிச்சயமாவது
4. மக்களகரமான
6. உயரின் தொடக்கம் இங்கே
7. அளவுக்கு மேலதிகமாக
8. சமனாக அனைத்தையும் பேணும் பண்பியல்பு
11. கடுமையானது
12. உணவுக்குழாயில் நடக்கும் செயற்பாடு
14. மணம்
16. வதந்தி
17. இளைய சகோதரன்
19. நிறப்பூச்சு
20. நடக்கும்படியான ஏவல்
21. முற்கால ஆயுதமொன்று
22. அம்மா, அப்பா, பிள்ளைகள் ஒருங்கே சேர்ந்த குழுமம்

### மேலிருந்து கீழ்

1. பதிப்பகம்
2. கடலும் ஆறும் கலக்கும் இடம்
3. எண்ணிக்கொள்
4. சுருதி
5. டாம்பீகம்
7. ஓர் அரைக்கும் கருவி
9. தாய் குழந்தையை வைத்துத் தாலாட்டுவது இதன் மீதுதான்
10. ஈர்ப்பு
13. கால்
15. தடிமன் பீடித்தால் இதுவும் பீடிக்கும்
16. சுறாவளி
17. கண்ணி
18. சடலம்
19. திறப்பு
20. மத்தி

வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்துவிடத் தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள். ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிர்ஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 442 இற்கான சரியான விடைகள் வருமாறு:-

### இடமிருந்து வலம்

(1) சமத்துவம் (6) கரு (7) கிளி (8) தாலி (9) வாங்கல் (11) சக (12) சகுனி (13) உடம்பு (15) தகரம் (17) செல்வம் (18) மணி (19) பால் (20) விடிய (21) சிவிகை (22) மதியம்

### மேலிருந்து கீழ்

(1) சகவாசம் (2) மருங்கு (3) துகில் (4) வளி (5) வலி (8) தாகம் (10) கனிதல் (11) சடம் (13) உரம் (14) புண்ணியம் (16) கவலை (17)செல்வி (18) மடிய (19) பாசி (20)விதி

சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

## போட்டி விதிகள்

**1.வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.**
**2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்**
**3.உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.**
**4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.**
**5. வெற்றி பெறும் முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும். அத்துடன் பாராட்டுப் பெறும் மூன்று அதிர்ஷ்டசாலி களது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.**

சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 442 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் முறை மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:-

**1 ஆம் பரிசு**
செல்வி இந்துஜா அருள்லிங்கம்,
இல.364/8, சாந்தசோலை வீதி,
தம்பனைச்சோலை, வவுனியா.

**2 ஆம் பரிசு**
கஸ்தூரி சற்குணராசா,
இல.87,சீனிவாசகம் வீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.

**3 ஆம் பரிசு**
திருமதி ராமுப்பிள்ளை
இல.11-4-1, சென்ற். லோறன்ஸ் வீதி,
கொழும்பு - 06.

**4 ஆம் பரிசு**
ச.சாரங்கன்,
இல. 68, கிருஷ்ணா நகர்,
முழங்காவில்

**5 ஆம் பரிசு**
பா.தர்ஷிகா,
இல.73/7, புதிய மூர்வீதி,
மன்னார்.

**பாராட்டுப் பெறுவோர்**

த.பிறைன்காந்,
தரம் 8, புனித பத்திரிசியார் கல்லூரி,
யாழ்ப்பாணம்.

டஸ்வினி கணேந்திரா,
உடுவில் வீதி, மானிப்பாய்.

உ.ஹம்சத்வன்,
இல. 09, முதலாம் ஒழுங்கை,
லிங்க நகர், திருகோணமலை.

சொற்சிலம்பம் போட்டி
இல.444
பூர்த்தி செய்யப்பட்ட
கூப்பன்கள்
நியூ உதயன் பப்ளிக்கேஷன்
(பிறைவேற்)லிமிட்டெட்,
இலக்கம் 361, கஸ்தூரியார்
வீதி, யாழ்ப்பாணம்.
என்னும் முகவரிக்கு
எதிர்வரும் புதன்கிழமைக்கு
அடுத்து வரும்
புதன்கிழமைக்கு முன்னர்,
(09.11.2016 ஆம் திகதிக்கு
முன்னர்) கிடைக்கத்
தக்கதாகத் தபாலட்டையில்
ஒட்டி அனுப்பி
வைக்கப்படவேண்டும்.

சொற்சிலம்பம் போட்டி இல.444இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 13.11.2016 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொண்டு வெற்றியீட்டுவோருக்கான பரிசுக் காசோலைகள் வெற்றி பெற்றோரால் கொடுக்கப்படும் விலாசத்துக்கே அனுப்பி வைக்கப்படும். சரியான தபால் விலாசம் கொடுக்கப்படாமையால் சில சமயம் காசோலைகள் உரிய வெற்றியாளரைச் சென்றடையாமை அவதானிக்கப்பட்டுள்ளது. போட்டியில் கலந்து கொள்வோர் தத்தமது சரியான, முழுமையான தபால் விலாசத்தையும் குறிப்பிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள்.

**சொற்சிலம்பம் போட்டி 442இல் பரிசு பெற்றோருக்கான கொடுப்பனவுக் காசோலைகள் காலக் கிரமத்தில் அவரவர்களது விலாசத்துக்கு அனுப்பி வைக்கப்படும்.**

# இந்த வாரம்


**30.10.2016 முதல் 05.11.2016 வரை**

உங்களுக்கு எப்படி?



## மேடம்

குரு, கேது, சுக்கிரனால் நன்மை அதிகரிக்கும். பெருந் தன்மையுடன் பிறருக்கு உதவி செய்வீர்கள். புதிய முயற்சியில் வெற்றி காண்பீர்கள். பூர்வீகச் சொத்து மூலம் ஆதாயம் கிடைக்கும். பிள்ளைகள் கல்வி, வேலைவாய்ப்பில் முன்னணி வகிப்பர். கையில் அதிக பணம் புழங்கும். கடனில் ஒரு பகுதியை செலுத்து வீர்கள். மனைவியின் செயற்பாடு, குடும்ப ஒற்று மைக்கு வழிவகுக்கும். தொழிலில் குறுக்கிடும் இடையூறுகளை சாதுர்யமாக முறி யடிப்பீர்கள். வருமானம் படிப்படியாக உயரும். பணியா ளர்கள் நிர்வாகத்தின் நன்ம திப்பிற்கு உரியவராகத் திகழ்வர். மாண வர்கள் படிக்கும் நேரத்தை அதிகப்படுத்து வர்.



## இடபம்

குரு, சூரியன், புதன் அதிக நற்பலன் தருவர். அன் றாடப் பணிகளில் ஆர்வமுடன் ஈடுபடுவீர்கள். விலகிச் சென்ற பகை வரும் விருப்பமுடன் நெருங்கி வருவர். எதிர்பார்த்த சுப செய்தி வீடு தேடி வரும். வாகனப் பயணத் தால் இனிமை காண்பீர்கள். பிள்ளைகள் படிப்பில் நல்ல தேர்ச்சி பெறுவர். ஆரோக்கியம் பலம் பெறும். குடும்பத்துடன் விருந்து விழாவில் கலந்து கொள்வீர்கள். பெற்றோரின் அன்பும் ஆசியும் கிடைக்கும். மனைவி யின் கருத்துக்கு மதிப்பளிப்பீர்கள். தொழில், வியாபார வளர்ச்சி யால் லாபம் பன்மடங்கு உயரும். பணியாளர் களுக்கு நிர்வாகத்தினரின் ஆதர வால் சலுகை கிடைக் கும். பெண்களுக்கு தாய்வழி உறவினரால் உதவி உண்டு. மாணவர்கள் படிப் புடன் விளையாட்டிலும் ஆர் வம் கொள்வர்.



## மிதுனம்

நட்புக் கிரகங்களான சனீஸ் வரர், ராகு அனுகூல அமர்வில் உள்ளனர். நண்பர்களின் மத்தியில் உங்கள் மீதான மதிப்பு உயரும். சகோதர வகையில் உதவி கிடைக்கப் பெறுவீர்கள். உறவினர் வருகை யால் குடும்பச் செலவு அதிகரிக்கும். புத்திரர்களின் பிடிவாதத்தால் சிரமத்திற்கு ஆளாக நேரிடலாம். சொத்து ஆவணங்களைப் பிறர் பொறுப்பில் தர வேண்டாம். தொழில், வியாபாரத்தில் நல்ல வளர்ச்சி உண்டாகும். பணி யாளர்கள் திட்டமிட்டு பணியாற்றி பணி இலக்கை நிறைவேற்றுவர். வெளி யூர் பயணம் பயன் அறிந்து மேற்கொள்வது நல்லது. மாணவர்கள் படிப்பில் சிறந்துவிளங் குவர்.



## கடகம்

புதன், சுக்கிரன், சந்தி ரன் நற்பலன் வழங்குவர். புதி ய உத்தியால் தடைப்பட்ட பணிகளை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் எதிர் பார்த்த உதவி கிடைக்கும். இனிய பேச்சால் அனை வரின் அன்புக்குரியவராகத் திகழ்வீர்கள். வாகனத்தின் பயன்பாட்டால் நன்மை உண்டாகும். பிள்ளைகளின் செயற்பாடு பெருமையளிக்கும். அலைச்சலால் உடல்நலக் குறைவுக்கு ஆளாக நேரிடலாம். மனைவியின் செயல்கள் வளர்ச்சிக்கு வழி வகுக்கும். தொழில் வியாபாரத்தில் கடின உழைப்பால் பண வரவு பன்மடங்கு உயரும். பணியாளர்கள் ஆர்வமுடன் பணிபுரிந்து நற்பெயர் பெறு வர். மாணவர்கள் நன்றாக படித்து கல்வியில் வளர்ச்சியடை வர்.



## சிங்கம்

எல்லா கிரகங்களாலும் நன்மை கிடைக்கப் பெறுவீர்கள். பேச்சிலும், செயலிலும் சமயோசிதம் நிறைந்திருக்கும். உடன்பிறந்தவர்களால் உதவி உண்டு. வெளியூர் பயணத்தால் இனிய அனுபவம் உருவாகும். புதிய வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்பு கிடைக்கும். புத்திரர் உங்கள் அறிவுரையைப் பின்பற்றி முன்னேறுவர். உடல் நலம் சீராக இருக்கும். மனைவியின் ஆலோசனை, வளர்ச்சிக்கு வழி வகுக்கும். குடும்பத்தில் ஒற்றுமை நிலைக்கும். பணியாளர்கள் எளி தாக பணி இலக்கை நிறை வேற்றுவர். எதிர்பார்த்த சலு கை களும் கிடைக்கும். பெண்கள் மகிழ்ச்சி கர வாழ்க்கை நடத்துவர். மாணவர்கள் படிப்பில் சிறந்து விளங் குவர்.



## கன்னி

சனீஸ்வரர், கேது, சுக்கி ரனால் அளப்பரிய நற்பலன் கிடைக் கும். மனதில் புத்துணர்வும், செயலில் உற்சாகமும் நிறைந்திருக்கும். திட்டமிட்ட பணிகள் சிறப்பாக நிறைவேறும். கடந்த கால நற் செயலுக்கு பாராட்டு தேடி வரும். வாகனப் பயணம் இனிமை யளிக்கும். புத்திரர் அறிவாற்றலில் சிறந்து படிப்பு, வேலையில் முன்னேற்றம் காண்பர். பூர்வபுண்ணிய நற்பலனால் ஆன்மிகச் சுற்றுலா செல்ல வாய்ப்புண்டு. நோய் தொந்தரவு குறையும். மனைவியின் அன்பைப் பெற்று மனம் நெகிழ்வீர்கள். தொழில், வியா பாரத்தில் இடையூறுகளை தாமதமின்றி சரி செய் வீர்கள். லாபம் அதிகரிக்கும். பணியாளர்கள் பெண்கள் குடும்ப நலன் சிறக்க பாடு படுவர். மாணவர்கள் பெற் றோரின் எதிர்பார்ப்பை நிறைவேற்றுவர்.

## துலாம்

ராகு, சுக்கிரன், சந்திரன் நற் பலன் வழங்குவர். மனதில் தைரியம் மேலோங்கும். நீண்ட நாள் எதிர்பார்ப்பு நிறைவேறும். சாதுர்யமாகப் பேசி முக்கிய பணி களை நிறைவேற்றுவீர்கள். உறவினர்களிடம் கேட்ட உதவி கிடைக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி நிறைந்திருக்கும். வாகனத்தில் மித வேகம் பின்பற்றுவது நல்லது. பிள்ளைகள் படிப்பில் சிறந்து விளங்குவர். மனைவி உங்களின் கருத்துக்கு முக்கியத்துவம் அளிப்பார். தொழில், வியாபார வளர்ச்சியால் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். பணியாளர்கள் நிர்வாகத்தினரின் நன்மதிப்பிற்கு உரியவராவர். பெண்கள் அக்கம் பக்கத்தினர் மத்தியில் செல்வாக்குடன் திகழ்வர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து கல்வி வளர்ச்சி காண்பர்.



## விருச்சிகம்

குரு, சுக்கிரன், செவ்வாய் அளப் பரிய பலனை வாரி வழங்குவர். மன தில் இருந்த தயக்கம் விலகும். உறவினர் களுடன் அன்பைப் பெற்று மகிழ்வீர்கள். வாகனப் பாதுகாப்பில் உரிய கவனம் செலுத்துவது நல்லது. பிள்ளை களின் செயல்பாடு பெருமையளிக்கும். பூர்வீகச் சொத்தில் அதி ர்ஷ்டவசமாக வருமானம் கிடைக்கும். குடும்பத்தில் சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும். மனைவி விருப்பம் அறிந்து நிறைவேற்றுவீர்கள். வெளி யூர் பயணத்தால் திடீர் செலவு உண்டாகும். தொழில், வியா பாரத்தில் குறுக்கிடும் தடைகளை சரி செய்வீர்கள். பணியாளர்கள் எதிர் பார்த்த சலுகை கிடைக்கப் பெறுவர். பெண்கள், உறவினர் மத்தியில் நன் மதிப்பு பெறுவர். மாணவர் கள் படிப்பில் சாதனையாளர் களாகத் திகழ்வர்.



## தனுசு

கிரகங்கள் பெரும்பா லும் நன்மை தரக் காத்திருக் கின்றன. பிள்ளைகளின் வளர்ச்சிக் கான ஆலோசனை வழங்குவீர்கள். திட்ட மிட்ட பணிகள் குறித்த காலத்தில் நிறைவேறும். புதிய வீடு, வாகனம் வாங்கும் எண்ணம் மேலோங்கும். நண்பரிடம் கடனாகக் கொடுத்த பணம் கிடைக்கும். உறவினர் மத்தியில் செல்வாக்கு அதி கரிக்கும். மனைவியின் அன்பைப் பெற்று மனம் நெகிழ் வீர்கள். தொழில், வியாபாரத்தில் லாபம் படிப்படியாக அதிகரிக்கும். பணியாளர்களுக்கு விரும்பிய பணி, இடமாற்றம் கிடைக்கும். பெண்கள் வீட்டு உபயோகப் பொருள் வாங்கி மகிழ்வர். மாணவர்கள் ஆர்வமுடன் படித்து பரிசு பெறு வர்.



## மகரம்

குரு, சனி, சுக்கிரன் ஆகிய கிரகங்களால் நன்மை அதி கரிக்கும். மனதில் உற்சாகம் நிறைந்தி ருக்கும். பிள்ளைகள் வழியில் சுப விடயம் குறித்த பேச்சு நடக்கும். திடீர் வெளியூர் பயணம் செல்ல நேரிடலாம். புத்திரர் அறிவாற்றலில் மேம்பட்டு விளங்குவர். அவர்களின் வளர்ச்சி கண்டு பெருமிதம் கொள்வீர்கள். மறைமுக எதிரிகளை இனம் கண்டு விலகுவீர்கள். உடற்பயிற்சி மூலம் ஆரோக்கியத்தை மேம்படுத்துவீர்கள். பணியாளர்கள் பண விடயமாக வெளியூர் செல்ல நேரிடும். விண்ணப் பித்த கடனுதவி கிடைக் கப் பெறுவர். பெண் கள் ஆன்மிக நிகழ்ச்சிகளில் அடிக் கடி பங்கேற்பர். மாணவர்கள் படிப்பில் கண்ணும் கருத் துமாக படிப்பர்.



## கும்பம்

நவக் கிரகங்களில் சந்திரனால் வளர்ச்சி உண்டாகும். குடும்பத்தில் ஒற் றுமை காப்பது அவசியம். வாகனத்தில் பராமரிப்பு செலவு அதிகரிக்கும். புத்திரரின் செயல் குறையை இதமாக சரி செய்வது நல்லது. அதிக நிபந்தனையுடன் சொத்தின் பேரில் கடன் பெற நேரிடலாம். மனைவியின் ஆலோசனை வளர்ச்சிக்கு வழிவகுக்கும். தொழில் வியாபாரத்தில் கூடுதல் உழைப் பால் பண வரவு சீராகும். பணியாளர்கள் பணிச் சுமை யைச் சந்தித்தாலும் வருமானத்திற்கு குறைவி ருக்காது. பெண்கள் சிக்கனம் மூலம் செலவைக் கட்டுப்படுத்துவர். மாணவர்கள் படிப்பில் அக் கறையுடன் ஈடுபடு வர்.



## மீனம்

பெரும்பாலான கிரகங்கள் நன்மை அளிக்க காத்திருக்கின்றன. புதிய முயற்சி யில் ஈடுபட்டு வெற்றி காண்பீர்கள். கையில் பெரும் பணம் புழங்கும். வீடு, வாகனம் வாங்க யோகம் உண்டாகும். பிள்ளைகளின் அன்பும், ஆதரவும் கிடைக்கப் பெறுவீர்கள். மனைவி உங்களின் கருத்துக்கு முக்கியத்துவம் அளிப்பார். அரசு வகையில் எதிர்பார்த்த உதவி எளிதில் கிடைக் கும். தொழில், வியாபாரத்தில் அளப்பரிய வளர்ச்சி உண்டாகும். சேமிக்கும் விதத்தில் வரு மானம் வரும். பணியாளர்கள் எதிர்பார்த்த சலுகை அனைத்தும் கிடைக்கும். பணி விடயமாக அடிக்கடி வெளி யூர் செல்வர். பெண்கள் மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர்.

அருள்திரு ரூபன் மரியாம்பிள்ளை
ஊடக வருகை விரிவுரையாளர் – யாழ் பல்கலைக்கழகம்

# 47 ஆண்டுகளைத் தாண்டியுள்ள மானிப்பாய் சுதுமலை தெற்கு புனித யூதாததேயு ஆலயம்

மானிப்பாய் சுதுமலை தெற்கு புனித யூதாததேயு ஆலய பெருவிழாவுக்கான மூன்று நாள் ஆயத்த வழிபாடுகள் கடந்த 27ஆம் திகதி முதல் நேற்று வரை பங்குத்தந்தையும் மானிப்பாய் புனித அந்தோனியார் யாத்திரைத்தலப் பரிபாலகருமாகிய எஸ்.ஜே.கியூ. ஜெயறஞ்சன் அடிகளாரின் தலைமையில் நடைபெற்று இன்று 30ஆம் திகதி பெருவிழா கொண்டாடப்படுவதையொட்டி இந்தக் கட்டுரை பிரசுரிக்கப்படுகிறது.



**பெருவிழா பற்றி பங்குத்தந்தை எஸ்.ஜே.கியூ. ஜெயறஞ்சன் அடிகளார்**

மேற்படி பெருவிழா பற்றி பங்குத்தந்தை எஸ்.ஜே.கியூ. ஜெயறஞ்சன் அடிகளார் தெரிவிக்கும் போது முதல் மூன்று நாள் வழிபாடுகளையும் சுதுமலை தெற்கு புனித யூதாததேயு ஆலய இறைமக்கள், புதுமடம் கத்தர் ஆலய இறைமக்கள், மானிப்பாய் புனித அன்னாள் ஆலய இறைமக்கள் முறையே முன்னின்று பங்குபற்றிச் சிறப்பித்தனர். திருநாள் எல்லோருக்கும் பொதுவான விதமாக கொண்டாடப்படுகிறது. திரிதின நாள்களுக்கான மறையுரைகளை ஜே.றமேஸ் அ.ம.தி அடிகளார் ஆற்ற திருநாள் திருப்பலியை ஏ.ஜேம்ஸ் நாதன் அடிகளார் தலைமைதாங்கி நடத்தவுள்ளார்.

**கைவிடப்பட்வர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பக்தி**

கைவிடப்பட்வர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பக்தி இலங்கையில் நீண்ட காலத்திற்கு முன்னரே அறிமுகப்படுத்தப்பட்டிருந்தாலும் இன்னும் வளருகின்ற ஒரு பக்தியாகவே உள்ளது என்றே எண்ண வேண்டியுள்ளது. தேற்றாதீவு (மட்டக்களப்பு மறைமாவட்டம்) - இந்திகொல (கொழும்பு மறைமாவட்டம்) - அரியாலை (யாழ்ப்பாண மறைமாவட்டம்) ஆகிய 3 மறைமாவட்ட யாத்திரைத்தலங்களும் இலங்கையில் பிரசித்தி பெற்ற யாத்திரைத்தலங்களாக உள்ளன. யாழ். மறைமாவட்டத்தில் கைவிடப்பட்வர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் பெயரில் அரியாலை, சுதுமலை, இளவாலை, கிளிநொச்சி, கனகபுரம், செல்வபுரம், உடையார்கட்டு, வெல்லை நெடுந்தீவு ஆகிய இடங்களில் ஆலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன என திருவழிபாட்டு நாட்காட்டியின் பதிவுகள் தெரிவிக்கின்றன.

**மானிப்பாய் சுதுமலையில் 47 ஆண்டுகளாக அருள்பாலிக்கும் புனித யூதாததேயு**

மானிப்பாய் சுதுமலை - தாவடி வீதியில் வானுயர்ந்து வளர்ந்து கிளை பரப்பி விழுது விட்ட ஆலமரம், பச்சைப் பசேலென காட்சி தந்து குளிரூட்டி நிற்கும் வாகைமரம், ஆங்காங்கே நீண்டு நெடிந்துயர்ந்து சலசலத்து நிற்கும் பனைமரங்கள், இந்த இயற்கை பாதுகாப்பின் மத்தியில் கோவில் கொண்டு எழுந்தருளி இருந்து கடந்த 47 ஆண்டுகளாக அருள்பாலித்து வருகிறார் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயு.


**எஸ்.ஜே. இம்மனுவேல் அடிகளார் காலத்தில் புனித அந்தோனியார் புனித யூதாததேயு ஆக மாற்றம்**

1969ஆம் ஆண்டு சிறிய ஆலயம் கட்டப்படுவதற்கு முன்னர் மண்மேட்டில் புனித அந்தோனியார் சொருபத்தை வைத்து மக்கள் வழிபட்டு வந்ததாக அறிய வருகிறது. செல்லத்துரை என்பவரால் தற்போதைய ஆலயம் இருக்கும் காணி கொள்வனவு செய்யப்பட்ட பின்னர் 1969ஆம் ஆண்டு திருமதி சூசைப்பிள்ளை லீலா என்பவர் சிறிய கொட்டில் கோவில் ஒன்றை அமைந்தார். பின்னர் இயக்கரசு மற்றும் தம்பையா சிறில் என்பவர்களின் அயராத முயற்சியால் கொட்டில் கோவில் சிமெந்துக் கட்டமாக மாற்றி அமைக்கப்பட்டது. எஸ்.ஜே. இம்மனுவேல் அடிகளார் மானிப்பாய்ப் பங்குத்தந்தையாக (1969 - 1972) இருந்த காலத்தில் அவர் பிரசித்தி பெற்ற அந்தோனியார் ஆலயத்தை மானிப்பாயில் அமைத்தமையாலோ என்னவோ மானிப்பாய் சுதுமலை தெற்கு புனித அந்தோனியார் ஆலயத்தை புனித யூதாததேயு ஆலயமாக மாற்றி அமைத்தார் என அறியவருகிறது. பத்துக் குடும்பங்களுக்கு சற்று அதிகமாக இருந்த மேற்படி ஆலயத்தில் மாதத்தின் இரண்டு வெள்ளிக்கிழமைகளில் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டதாக அறியவருகிறது. போர் மற்றும் இடப்பெயர்வினால் வசதிக்கேற்றவாறு திருப்பலிகள் ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளன.

கோவில் கட்டப்பட்ட காலம் முதல் இன்று வரை திருநாள் சிறப்பாகக் கொண்டாடப்பட்டுள்ளது. பங்கு மக்கள் போரினால் இடம்பெயர்ந்த போதும் திருப்பலிகளும் திருநாள்களும் அயல் பங்கான மானிப்பாய் புனித அன்னாள் ஆலப்பங்கு மக்களால் நிறைவேற்றப்பட்டு வந்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது. போரின் பின்னர் சமுர்த்தி அதிகார சபையினால் ஆலய வளாகத்தில் குழாய்க் கிணறும் மலசல கூடமும் அமைத்து பொதுமக்களின் பாவனைக்கு வழங்கப்பட்டது.

**2016ஆம் ஆண்டில் மானிப்பாய் சுதுமலை புனித யூதாததேயு ஆலய கட்டுமானப்பணிகள்**

தற்போதைய பங்குத்தந்தை எஸ்.ஜே.கியூ. ஜெயறஞ்சன் அடிகளார் மானிப்பாய் சுதுமலை புனித யூதாததேயு ஆலய கட்டுமானப்பணிகளில் அதிக அக்கறை கொண்டவராக ஆலயத்தை புனருத்தாரணம் செய்து , முதற்தடவையாக நற்கருணைப் பேழை அமைத்துள்ளார். ஆலயத்து மதிலை உயர்த்தி, ஒருபக்க மதிலை முழுமையாகக் கட்டி, திருப்பலிப் பொருள்கள் வைப்பதற்கான திருப்பண்டக் காப்பகமும் அமைத்துள்ளார். பல உதவும் மனப்பான்மை கொண்ட அன்பு நெஞ்சங்களின் தியாக நிதியிலும் உடல் உழைப்பிலும் ஆலயம் இன்று புதுப் பொலிவு பெற்றுள்ளது. கோவிலம்மா என அன்போடு அழைக்கப்படும் திருமதி சிறில் யோகம்மா தனது கணவரால் உருவாக்கப்பட்ட இவ்வாலயத்தையும் ஆலயச்சுற்றாடலையும் கண்ணின் மணி போல் பாதுகாத்து வருவது பாரட்டுதற்குரியது. வெளிநாட்டில் உள்ள தமது பிள்ளைகளிடம் ஓயாது உதவி கோரி ஆலயத்தை பேணிக் காப்பதிலும் அழகுறச் செய்வதிலும் அவர் எப்போதும் ஈடுபட்டுள்ளார்.



பங்குத்தந்தையர்கள் பங்கு மக்கள் மற்றும் அயல் பங்குகளின் பெரு முயற்சியிலும் கடின உழைப்பிலும் மானிப்பாய் சுதுமலை தெற்கு புனித யூதாததேயு ஆலயம் சத்தமின்றி 47 ஆண்டுகளைத் தாண்டியுள்ளது. தற்போதைய பங்குத் தந்தை எஸ்.ஜே.கியூ. ஜெயறஞ்சன் அடிகளார் மானிப்பாய் சுதுமலை புனித யூதாததேயு ஆலய வளர்ச்சியில் அதிக அக்கறை கொண்டவராகப் பணியாற்றி வருவது வரவேற்கத்தக்கது. இவரின் அயராத முயற்சியிலும் அர்ப்பணிப்புமிக்க பணியிலும் பங்குமக்கள் மற்றும் புனித யூதாததேயு வின் பக்தர்களின் ஒத்துழைப்பிலும் மானிப்பாய் சுதுமலை புனித யூதாததேயு ஆலயத்திருச்சபை வளர வாழ்த்துவோம்.

திருக்குடும்பத்தின் உறவினரான யூதாததேயு, இயேசுவின் சிறுபராய நண்பர். புனித யூதாததேயுவின் வாழ்வையும் பணியையும் அறிந்து அவரின் அருளைப் பெற அவரின் வாழ்வு எமக்கு மேல்வரிச்சட்டமாகும்.

புனித யூதாததேயு இயேசுவின் ஒன்றுவிட்ட சகோதரர் என்பது நற்செய்தியும் பாரம்பரியமும் சொல்லுகின்ற உண்மையாகும். அதாவது இவர் குளோப்பாவினதும் இயேசுவின் தாய் மரியாவின் சகோதரியாகிய மரியாவினது மகனாவார். சின்ன யாக்கோபு, சீமோன், யோசே ஆகியோரின் சகோதரர் ஆவார். திருக்குடும்பமாகிய இயேசு மரியா யோசேப்பு ஆகியோரின் இரத்த உறவினராக யூதாததேயு இயேசுவின் சிறுபராய நண்பர் ஆவார். இளமைப் பருவத்தில் இயேசுவோடு உண்டு அன்போடு உறவாடிய ஒருவர். இவர் எப்போது எவ்வாறு இயேசுவின் திருத்தூதர் ஆனார் என்பது தெரியாது.

நற்செய்திகளிலே திருத்தூதர்களின் பெயர்ப்பட்டியல் சொல்லப்படமுன் புனித யூதாவைப் பற்றி எதுவும் சொல்லப்படவில்லை. ஆனால் இயேசுவின் பன்னிரெண்டுதிருத்தூதர்களுள் யூததேயுவும் ஒருவர் என்று நற்செய்தி ஆசிரியர்களான மத்தேயு (10:33) மாற்கு (03:11) ஆகியோர் ஆணித்தரமாக சொல்லுகின்றனர்.

**இரவு உணவில் இயேசுவிடம் கேள்விகேட்ட புனிதயூதாததேயு**

இரவு உணவின் பின் தம்மை அன்பு செய்பவருக்கு வெளிப்படுத்துவேன் என இயேசு கூறிய போது புனித யூதா ஏன் உலகிற்கு வெளிப்படுத்தவில்லை என்று இயேசுவிடம் கேள்வி கேட்டார் (யோவான் 14:22). புனித யூதா எழுதியதாக ஏற்றுக்கொள்ளப்பட்ட யூதா திருமுகத்தை வேதாகம ஏடுகளில் காணலாம். புனித யூதாததேயு இயேசுவின் நெருங்கிய உறவினராய் இருந்த போதிலும் தாம் எழுதிய திரு முகத்தில் தமது தாழ்மையின் நிமித்தம் தந்தையாம் கடவுளால் அழைக்கப்பெற்று அவரது அன்பிலும் இயேசுக்கிறிஸ்துவின் பாதுகாப்பிலும் வாழ்வோருக்கு இயேசுக்கிறிஸ்துவின் பணியாளனும் யாக்கோப்பின் சகோதரருமாகிய யூதா எழுதுவது என்றே ஆரம்பிக்கிறார்.

சிரிய மொழியில் ததேயுஸ் என்றால் புகழ்ச்சி அல்லது விசுவாசத்தை அறிக்கையிடல் என்ற கருத்தையும் - யூதா என்ற சொல்லைக் குறித்து நிற்கின்ற லெபாயுஸ் என்ற எபிரேய சொல் புரிந்து கொள்ளும் மனிதர் என்ற கருத்தையும் – லெப் என்ற கிரேக்க சொல் இதயம் என்ற கருத்தையும் குறித்து நிற்கின்றது. சிரிய மொழியில் கபடமற்றவர் - சாந்தமும் அன்பும் உடையவர் என்று பொருள்படுகிறது.

**கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர் புனித யூதாததேயு**

புனித யூதாததேயு கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலர் என அழைக்கப்படுகிறார். மொசப்பத்தேமியாவில் நற்செய்தி அறிவித்த யூதாததேயு அங்கிருந்து பேர்சியா செல்ல நேர்ந்தது என்றும் அங்கேயே அவர் வேத சாட்சியாக சாவு அடைந்தார் என்றும் மேற்கத்தைய வேத சாட்சிகளின் வரலாறு கூறுகிறது.

**அம்புகளால் தைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார்**

பேர்சியாவில் ஆர்ற் என்ற இடத்தில் நற்செய்தி அறிவித்துக்கொண்டிருந்த போது அம்புகளால் தைக்கப்பட்டு கொலை செய்யப்பட்டார் என்று பஸில் பேரரசனின் புனிதர்களின் பட்டியல் நூல் கூறுகிறது. அவர் அங்கே சிலுவையில் கட்டப்பட்டு அம்புகளால் எய்யப்பட்டு கொலை செய்யப்பட்டார். ஆர்மீனியர்களின் பெரு வணக்கத்துக்குரிய புனிதராக இவர் விளங்குகிறார். கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரான புனித யூதாததேயுவின் திருச்சொருபத்தைப் பார்க்கும் போதெல்லாம் அவர் கையில் வைத்திருக்கும் தடியைக் கொண்டு அவர் அறிவு மயங்கும் வரை அடித்து அவரின் தலையை ஒரு கோடரி கொண்டு வெட்டினார்கள் என்றும் இதனாலேயே ஒரு தடியைத் தாங்கியவராக புனித யூதாததேயு சித்திரிக்கப்படுகிறார் என்பதையும் இதனாலேயே இவர் வேத சாட்சியாக அறிவிக்கப்பட்டார் என்பதையும் நினைவிற் கொள்வோம்.

கைவிடப்பட்வர்களின் பாதுகாவலர் என அழைக்கப்படும் புனித யூதாததேயுவின் அருள் துன்பத்தில், வேதனையில், தனிமையில், விரக்தியில் வாழும் தமிழ் மக்கள் அனைவர்க்கும் நிறைவாகக் கிடைப்பதாக. குறிப்பாக இன்று யார் சொல்லையும் கேட்காமல், ஏனோதானோ என்ற போக்கில் வாழ்ந்து, எல்லோராலும் விமர்சிக்கப்பட்டு, எல்லோராலும் பேசப்பட்டு, அனைவரது வெறுப்பையும் பெற்று கைவிடப்பட்ட நிலையில் இருக்கும் இளைய சமுதாயத்தின் மேல் கைவிடப்பட்டவர்களின் பாதுகாவலரின் அருள் நிறைவாகக் கிடைப்பதாக.

# மனிதச் சாம்பலில் பாத்திரங்கள்



அமெரிக்கா-மெக்ஸிகோவைச் சேர்ந்த கலைஞர் ஜஸ்டின் க்ரோவ், மனிதச் சாம்பலில் இருந்து பாத்திரங்களைச் செய்கிறார். கடந்த ஆண்டு ஒரு செயற்றிட்டத்துக்காக மனிதச் சாம்பலிலிருந்து பாத்திரங்களை உருவாக்கியவர், பின்னர் அதைத் தொழிலாக மாற்றிக்கொண்டார். 'க்ரானிகல் க்ரிமேன் டிசைன்' என்ற பெயரில், மனிதச் சாம்பலில் இருந்து தேநீர்க் கோப்பைகள், தட்டுகள், கிண்ணங்கள், மெழுகுவர்த்தி ஏந்திகள் போன்றவற்றை உருவாக்குகிறார். 'நான் 2015ஆம் ஆண்டு செயற்றிட்டம் ஒன்றுக்காக 200 வரையிலான மனித எலும்புகளை வாங்கினேன். அவற்றைத் தூளாக்கி, மண்ணுடன் கலந்து அழகிய பாத்திரங்களாக மாற்றினேன். மறுசுழற்சி முறையில் மனித எலும்புகளை பயன்படுத்துவதுதான் என்னுடைய திட்டம்.

மனிதச் சாம்பலில் தயாரிக்கப்பட்டது என விளம்பரம் செய்தபோது, எதிர்வினைகள் மிக மோசமாக இருந்தன. இந்தத் திட்டத்தைக் கைவிட எண்ணினேன். ஆனால் நண்பர்கள் என்னை உற்சாகப்படுத்தினார்கள். ஒரு நிறுவனத்தை ஆரம்பித்தேன். நான் எதிர்பார்க்காத அளவுக்கு வரவேற்பும் இருந்தது. தங்கள் அன்புக்குரியவர்களின் சாம்பலில் இருந்து தயாரிக்கப்படும் பொருள்களைத் தங்களுடன் வைத்துக்கொள்ள ஆர்வம் காட்டியவர்கள் எனக்கு ஊக்கம் தந்தனர். இறந்தவர்கள் வாய்பேசாத பொருள்களாகத் தங்களுடனே இருக்கிறார்கள் என்ற திருப்தி பலருக்கும் கிடைத்திருக்கிறது.

முதிய மனிதர் ஒருவரின் உடலை எரித்தால் 1.8 கிலோவில் இருந்து 2.7 கிலோ வரை சாம்பல் கிடைக்கும். பாத்திரம் ஒன்றைச் செய்வதற்கு 100 கிராம் சாம்பல் மட்டுமே போதுமானது. சாம்பல், மண், தண்ணீர் எல்லாம் சேர்த்து, அழகான பாத்திரங்களை உருவாக்கிவிடுகிறேன். இந்தப் பாத்திரங்களை அடுப்பில் வைக்கலாம். உணவு சமைக்கலாம். கோப்பைகளில் தேநீர் குடிக்கலாம். உங்களுக்கு மட்டுமே இது மனித சாம்பலில் செய்தது என்று தெரியும். மற்றவர்களுக்குச் சாதாரண பீங்கான் பாத்திரங்களாகத்தான் தோன்றும் என்கிறார் ஜஸ்டின் க்ரோவ்.

# ஐக்கிய நாடுகள்- ஒக்.24



ஐக்கிய நாடுகள் சபை 1945ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ஆம் திகதி தோற்றுவிக்கப்பட்டது. ஆண்டுதோறும் இந்த நாள் ஐக்கிய நாடுகள் தினமாகக் கடைபிடிக்கப்படுகிறது. ஐ.நா.வின் நோக்கங்களையும், செயற்பாடுகளையும் உலகெங்கும்எடுத்துக்கூறுவது இந்தத்தினத்தின் முக்கிய நோக்கமாகும். ஐ.நா. வில் உலகிலுள்ள 193நாடுகள் அங்கம் வகிக்கின்றன.

2ஆம் உலகப்போரில் ஏற்பட்ட அழிவு காரணமாக அந்தப்போரை நிறுத்தும் நோக்கத்துடன் சில உலகத் தலைவர்கள் ஒன்றுகூடி சமாதானத்தை நிலைநாட்டவும், எதிர்காலத்தில் இத்தகைய போர்கள் ஏற்படுவதைத் தடுக்க வேண்டும் என்ற நோக்கத்துடனும் உருவாக்கிய அமைப்பே ஐக்கிய நாடுகள் சபை ஆகும். 1945ம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 24ம் நாள் ஐக்கிய நாடுகள் கழகம் என்ற நாமத்துடன் அதிகாரபூர்வமாக நடைமுறைக்கு வந்தது. அன்றிலிருந்து பல நாடு களிலும் இடம்பெறும் போர், முரண்பாடுகளுக்குத் தீர்வு காண்பதில் ஐ.நா. கவனம் செலுத்துகின்றது. ஆனாலும் இலங்கையில் நடந்து முடிந்த போரின் போது அப்பாவித் தமிழர்கள் கொல்லப்பட்டமையைக் கண்டும் காணாமலுமிருந்தமை, அவற்றுக்கான தீர்வுகள் கிடைக்காமை போன்ற கவனவீனங்களும் இருப்பதாகக் குற்றம்சாட்டப்படுகிறது. ஐக்கிய நாடுகள் சபையின் ஆரம்பத்தில் இந்த அமைப்புக்கு அத்திபாரமிட்ட பிரிட்டன், ரஷ்யா, பிரான்ஸ், அமெரிக்கா, சீனா ஆகிய ஐந்து நாடுகளும் நிரந்தர பாதுகாப்புக்குரிய உறுப்பு நாடுகளாகவுள்ளன. ஐந்து வருடங்களுக்கு ஒருதடவை தேர்வு செய்யப்படும் ஐக்கிய நாடுகளின் செயலாளர் நாயகமாகக் கடந்த 2007இலிருந்து பதவி வகித்து வரும் பான் கீ மூனுக்கு அடுத்ததாக எதிர்வரும் 2017ஜனவரியிலிருந்து 2021 வரை அன்ரனியோ ஹற்ரோறேஸ் பதவி வகிக்கவுள்ளார்.

ஐக்கிய நாடுகள் சபை என்பது உலக சமாதானம், சமூக முன்னேற்றம் ஆகியவற்றுக்காக சுயவிருப்பத்தின் அடிப்படையில் ஒன்று சேர்ந்த சுதந்திர நாடுகளின் ஒரு தனித்துவமான அமைப்பாகும். ஐக்கிய நாடுகள் நாளன்று உலக மக்களிடையே ஐநாவின் நோக்கங்களையும் சாதனைகளையும் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்த பல கருத்தரங்குகள், கண்காட்சிகள் மற்றும் பண்பாட்டு நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஒக்ரோபர் 20முதல் 26வரை ஐக்கிய நாடுகள் வாரமாகவும் கொண்டாடப்படுகிறது.

# வாயைப் பொத்திப் பேசுகின்றீர்களா?

உங்களுடைய காதில் ஏற்படுகின்ற பிரச்சினைகளால் வாயிலிருந்து துர்நாற்றம் ஏற்படும் என்பது உங்களுக்குத் தெரியுமா? காது, மூக்கு, தொண்டை போன்ற இடங்களில் உள்ள பிரச்சனைகளாலும் வாயில் துர்நாற்றம் ஏற்படும். வாய்த் துர்நாற்றம் ஒருவரது சமூக வாழ்க்கையை மட்டுமின்றித் தன்னம்பிக்கையையும் பாதிக்கும். பொதுவாக வாய்த் துர்நாற்றமானது ஆரோக்கியமற்ற பற்கள், வாய் வறட்சி, மோசமான வாய்ச் சுகாதாரம் மற்றும் சுவாசப் பாதைத் தொற்றுக்கள் போன்றவற்றால் ஏற்படும். அத்தோடு, காது, மூக்கு, தொண்டை போன்ற பகுதிகளில் ஏற்படும் பிரச்சனைகளாலும் வாய்த்; துர்நாற்றம் ஏற்படும். கடுமையான அடிநாக்கு அழற்சி, உள் நாக்கில் வைரஸ் அல்லது பக்டீரியாக்களின் தாக்கம் கடுமையாக இருந்தால் வாய்த் துர்நாற்றம் கடுமையாக இருக் கும். இந்த மாதிரியான நோய்த்தொற் றுக்கள் வாய்ச் சுகாதாரத்தினால் மட்டும் போகாது. மருத்துவரின் உதவியுடன் தான் இந்தப் பிரச்சினையில் இருந்து விடுபட முடியும்.



நோயாளியின் மூக்கு மற்றும் தொண்டையின் பின்புறத் தில் சளியின் உற்பத்தி அதிகம் இருந் தால், அதன் காரணமாகத் துர்நாற்ற மிக்க சுவாசத்தால் அவஸ்தைப் படக்கூடும். இந்தப் பிரச்சினையைச் சரி செய்யத் தொடர்ந்து சிகிச்சைகளை எடுக்க வேண்டும். மூலம் சரிசெய்யலாம். இதனால் வாயில் உள்ள பக்டீரியாக்கள் அழிக்கப்படும். சைனஸ் பிரச்சனை இருப்பவர்கள், என்ன தான் வாய் துர்நாற்றத்தைப் போக்க இயற்கை வழிகளைப் பின்பற்றினாலும், சில நோய்த்தொற்றுகள், சளியின் தேக்கத்தை அதிகரிப்ப தோடு, பக்டீரியாக்களின் வளர்ச்சியை அதிகரித்து, வாய் துர்நாற்றத்தை உண்டாக்கும்.

நீடித்த நாசி அழற்சியினால், நாசிக் குழி தடித்து, பக்டீரியாக்களின் தாக்கத்தால், கடுமையான வாய்த் துர்நாற்றத்தை உருவாக்கும். பிளவுபட்ட உதடுகள் இருந்தாலும், அது பக்டீரியாக்களின் வளர்ச்சியை அதிகரித்து, வாய்த் துர்நாற்றத்தை ஏற்படுத்தும். வாய் தவிர்ந்த இத்தகைய அங்கங்களில் ஏற்படும் நோய்களுக்குத் தீர்வு கண்டு வாய்ச் சுகாதாரத்தை நல்ல முறையில் பேணினால் வாய் வழியே உட்சென்று உடலைத் தாக்கும் கிருமிகளுக்கு வழியில்லாமல் போய்விடும்.





மூளாய் இந்து இளைஞர்களின் வாணி விழா நிகழ்வுகள் அண்மையில் மூளாய் வதிரன்புலோ சித்திவிநாயகர் ஆலயத்தின் அருகில் உள்ள பிரசாத் கலையரங்கில் கு. கௌரிசங்கர் தலைமையில் நடைபெற்றது. இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வணிக முகாமைத்துவக் கற்கைகள் பீடப் பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பி தம்பதியரும், சிறப்பு விருந் தினராக தொழிலதிபர் இ.ச.பே. நாகரத்தினம் மூளாய் அ.மி.த.க. பாடசாலை அதிபர் இ.லோகேஸ்வரன் ஆகியோரும் கலந்து கொண்டனர். (ரி-10)





உள்ளூராட்சி மாதத்தையொட்டி சாவகச்சேரி நகரசபையினரால் வீட்டுத்தோட்டச் செய் கைக்கென சபை எல்லைக்குட்பட்ட 11 வட்டாரங்களில் இருந்தும் தெரிவு செய்யப்பட்ட 500 பயனாளிகளுக்கு ஆயிரம் தென்னம்பிள்ளைகள் வழங்கி வைக்கப்பட்டன. சாவகச்சேரி நகரசபை பொன்விழா மண்டபத்தில் அண்மையில் வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் இந்தத் திட்டத்தை ஆரம்பித்துவைத்தார். இந்த நிகழ்வில் தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் வட பிராந்திய முகாமையாளர் தே.வைகுந் தன், தென்னைப் பயிர்ச் செய்கை சபையின் யாழ்ப்பாண தென்னை அபிவிருத்தி அலுவலர் ஜெ.சத்தியேந்திரன், பண்ணை திட்டமிடல் அலுவலர் எஸ்.சற்குணன், வலிகாமம் தென்னை அபிவிருத்தி அலுவலர் செ.ஜெயநாதன் ஆகியோர் விருந்தினர்களாகக் கலந்து கொண்டனர். (10, 9)




அளவெட்டி, சீனன்கலட்டி, ஞானோதய வித்தியாலயத்தின் வருடாந்த பரிசளிப்பு விழா அண்மையில் பாடசாலையில் இடம்பெற்றது. பாடசாலையின் அதிபர் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வின் பிரதம விருந்தினராக வடமாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன் கலந்து கொண்டதுடன், தனது 2016ஆம் ஆண்டுக்கான நிதியொதுக்கீட்டில் பாண்ட் வாத்தியக்கருவிகளையும் மாணவர்களிடம் கையளித்தார். (10)





தொழிற் கல்வி வழிகாட்டல் செயலமர்வும் சான்றிதழ் வழங்கலும் அண்மையில் மாகாண தொழில்நுட்பபயிற்சிக் கல்லூரி - மாங்குளத்தில் க.சக்திதரன் மாகாண இணைப்பாளர், (மாகாண தொழில் நுட்பப் பயிற்சிக் கல்லூரி -மாங்குளம்) தலைமையில் ஆரம்பமானது. இதில் முதன்மை விருந்தினராக, செயலாளர், கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சு இ.இரவீந்திரன் கலந்து கொண்டார். (10)




உலக உளநல நாளையொட்டி வடமாகாண கல்வித் திணைக்களத்தால் நடத்தப்பட்ட கல்வி, தொழில் வழிகாட்டல் கண்காட் சிக்கான பரிசளிப்பு விழா முருங்கன் மகா வித்தியாலயத்தில் நடை பெற்றது. வயாவிளான் மத்திய கல்லூரி மாணவன் த .கனிஸ்ரன் புத்தாக்கத்திற்கான வெற்றிப் பதக்கத்தினையும், ஆசிரியை திருமதி ராஜி கேசவன் போதைப்பொருள் ஒழிப்பு சிறப்பு ஆக்கத்திற்கான சான்றிதழையும் பெற்று கொண்டமையை முன்னிட்டு கல்லூரி அதிபர் வே.த.ஜயந்தனால் கௌரவிக்கப்பட்டனர். (10)




வட மாகாண கல்வி அமைச்சின் அனுசரணையுடன் உடுவில் பிரதேசசெயலகம் பாடசாலை மாணவர்களுக்கென நடத்திய கவிதைப் பயிற்சிப் பட்டறை உடுவில் பிரதேச செயலர் தலைமையில் பிரதேச செயலகத்தில் நடைபெற்றது.

இதில் வளவாளர்களாக கரவெட்டி பிரதேச செயலர் த.ஜெயசீலன், ஓய்வு நிலைப் பேராசிரியர் க.சிவலிங்கராஜா, கவிஞர்கள் நந்தகுமார், பெ.ஐங்கரன், பரா.ரதீஸ், கோகுலன் ஆகியோர் கலந்து கொண்டனர். (10)





வருடம் தோறும் சங்கானை மாவடி இந்து இளைஞர் மன்றத்தால் நடத்தப்பட்டு வரும் கலைவிழா அண்மையில் இந்து இளைஞர் மணி மண்டபத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட யாழ். - கிளிநொச்சி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் விருந்தினர்கள் ஆலய முன்றிலில் இருந்து அழைத்து வரப்பட்டனர். முதன்மை விருந்தினர் மங்கல விளக்கேற்றினார். அதனைத் தொடர்ந்து கலை நிகழ்வுகள் இடம்பெற்றன. (ற)



வட்டு இந்து வாலிபர் சங்கத்தினால் தீபாவளி தினத்தை முன்னிட்டு முல்லைத்தீவு மாவட்ட இனிய வாழ்வு இல்ல மாணவர்களுக்கு ஒரு லட்சத்து 13 ஆயிரம் ரூபா பெறுமதியான புத்தாடைகள் வழங்கப்பட்டன. (ற-10)




பூநகரி மத்திய கல்லூரியின் முத்தமிழ் விழாவும் பூவிழை சஞ்சிகை மற்றும் கவிக் கீற்று கவிதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவும் அண்மையில் கல்லூரி முத்தமிழ் மன்ற அரங்கில் நடைபெற்றது. கல்லூரி அதிபர் தலைமையில் நடைபெற்ற நிகழ்வுக்கு தலைமை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட பேராசிரியர் க.கந்தசாமியும் சிறப்பு விருந்தினர்களாக கிளிநொச்சி கல்வி வலய தமிழ்ப் பாட உதவிக் கல்விப் பணிப்பாளர் மற்றும் பூநகரி கோட்டக் கல்விப் பணிப் பாளர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-10, 9)



வ்வுனியா திருநாவற்குளம் உமாமகேஸ்வரன் முன்பள்ளியின் கல்விக் கண்காட்சி அண்மையில் முன்பள்ளி ஆசிரியர் திருமதி மீரா குணசீலன் தலைமையில் நடைபெற்றது. இந்தக் கண்காட்சியை வடமாகாண சபை உறுப்பினர் ஜி.ரி. லிங்கநாதன் ஆரம்பித்து வைத்தார். (ற-10, 402)



தேசிய நூலக ஆவணவாக்கல் சபையினரால் நாட்டில் உள்ள பொது நூலகங்களிடையே கடந்த வருட தேசிய வாசிப்பு மாத செயற் பாடுகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட நூலகங்களுக்கு விரு துகள் வழங்கும் நிகழ்வு அண் மையில் வவுனியாவில் நடை பெற்றது. இந்த நிகழ்வில் கல்வி இராஜாங்க அமைச்சர் வே.இராதா கிருஷ்ணன், சாவகச்சேரி பிரதேசசபை செயலர் ஆகியோர் கலந்து கொண்டனர். (ற-10, 9)





யாழ். வை.எம்.சீ.ஏ. நிறுவனத்தில் அண்மை யில் சிறுவர் தின நிகழ்வு கள் நடைபெற்றன. (ற)









ஊர்காவற்றுறை பிரதேச சபையின் அனலைதீவு பொது நூலக வளாகத்தில் சிறுவர் முற்றம் அண்மையில் திறக்கப்பட்டது.
பிரதேச சபையின் அனலைதீவு உப அலுவலக பொறுப்பதிகாரி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஊர் பிரமுகர்களும் மத குருமார்களும் கலந்து கொண்டனர். (ற-10, 9)



காத்தான்குடி ஸாவியா மகளிர் வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழா அண்மையில் காத்தான்குடி ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் வித்தியாலய அதிபர் மௌலவிய்யா ஐ.என்.அப்துல் சலாம் தலைமையில் நடைபெற்றது. 2015 ஆம் ஆண்டு கல்விப் பொதுத் தராதர சாதாரண தரப் பரீட்சையில் 9ஏ சித்தி பெற்ற மாணவி யூ.பேகம் ஹனானா, தற்போது பல்கலைக்கழகத்துக்கு வைத்தியத் துறைக்காக தெரிவு செய்யப்பட்டிருக்கும் இப் பாடசாலையின் பழைய மாணவி எஸ்.பாத்திமா சஹ்னா ஆகிய மாணவிகளுக்கு மீள்குடியேற்ற மற்றும் புனர்வாழ்வு இராஜாங்க அமைச்சர் எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லாவினால் நினைவுச் சின்னமும்,பரிசும் வழங்கிக் கௌரவித்தார். (ற-10)



மன்னார் தபாலக விளையாட்டுக்கழகத்தின் உதைபந்து மற்றும் கரப்பந்து அணிகளுக்கு ஒரு தொகை உதைபந்துகள் மற்றும் கால்பந்துகள் வடக்கு கிராம அபிவிருத்தி அமைச்சர் பா.டெனிஸ்வரன், தனது 2016 ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான நன்கொடை நிதியில் இருந்து வழங்கப்பட்டது. இந்த நிகழ்வு மன்னாரில் அமைந்துள்ள அமைச்சர் அலுவலகத்தில் அண்மையில் நடைபெற்றது.(ற-10)



கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் இணைந்த மழலைகள் விளையாட்டு விழா மாங்குளம் வித்தியாலய மைதானத்தில் அண்மையில் நடைபெற்றது. (102)





நல்லிணக்க செயற்பாடுகளின் ஒரு சிறுதுளியாக தமிழ் பௌத்த அறநெறிப்பாடசாலை மாணவிக்கு இரண்டு லட்சம் பெறுமதியான அன்பளிப்புப் பொருள்கள் வழங்கப்பட்டன. உடுவில் மல்வத்தைச் சேர்ந்த அருணகிரிநாயகம் திவிந்தினி என்ற தமிழ் பௌத்த அறநெறி பாட சாலை மாணவிக்கு வண பகோட ஜெனதவன்சா தேரர் நிமேஸ் பிரவீன் குமாரதுங்கா மக்கள் நல விரும்பியின் உதவியுடன் மடிக்கணினி, போட்டோக்கொப்பி இயந்திரம், கலர்பிறிண்டர் என்பவற்றை வழங்கினார். (ற-ரி-7)



கைதடி நுணாவில் அ.த.க.பாடசாலையில் கற்கும் மாணவர்களுக்கு சுப்பிரமணியம் கார்த்திகேசு அறக்கட்டளை நிதியத்தினர் அண்மையில் பாதணிகள் வழங்கினர். நிகழ்வில் அதிபர் ஆ.தங்கவேல் மற்றும் நிதியத்தின் உறுப்பினர்களும் கலந்து கொண்டனர். (ற-10)

உங்கள் மனம் குளிரவைக்கும்
எளிய மற்றும் அற்புதமான
எயார் கூலர்

எயார் கூலர்கள் மலிவானவை, தூக்கிச் செல்லக்கூடியவை, எளிய தொழில்நுட்பத்தின் மூலம் உங்கள் சூழலுக்குக் குளிரூட்டுபவை. டெலிசொனிக் தனது எயார் கூலருக்குப் பழம்பெரும் தொடர்பினை வழங்கியிருப்பதால், அவை இலங்கையின் மிகப் பழமை வாய்ந்த மற்றும் நம்பிக்கையான இலத்திரனியல் பாவனைச் சாதனப் பெயர்களில் ஒன்றாக விளங்குகிறது.



விலை
ரூபா.17,275/-

55W — Operates on 55W
3 Speed Fan
7Hr. — 7 Hour Timer
Wide Angle Oscillation
Built-in Ionizer
LED — LED Display & Remote Control

Telesonic
SINCE 1979
டெலிசொனிக் லங்கா (பிறைவேட்) லிமிட்டட்,
இல.18, டெய்ஸி விலா அவெனியூ, ஆர். ஏ. டீ மெல் மாவத்தை, கொழும்பு 04.
மின்னஞ்சல்: info@telesoniclanka.com இணையத்தளம்: www.telesoniclanka.com
தொலைபேசி: 0112508160/1/2

# வெளிநாடு சென்றாலும் குற்றவாளிக்கு தண்டனை

## அமைச்சர் தயாசிறி தெரிவிப்பு

கொழும்பு, ஒக் 30

மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் அர்ஜுன் மகேந்திரன் தவறு இழைத்திருப்பாராயின் சட்டத்துக்கு முன் நிறுத்தப்பட்டு அவருக்கான தண்டனை பெற்றுக்கொடுக்கப்படும்என்றநிலைப்பாட்டிலேயே அரசு இருக்கின்றது என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.



திருடர்களைக் காப்பாற்றுவதற்கான அவசியம் நல்லாட்சி அரசுக்கு ஒரு போதும் இல்லை என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சர் தயாசிறி ஜயசேகர கண்டி சிறிதலதா மாளிகைக்குப் பயணம் மேற்கொண்டு வழிபாடுகளிலும் ஈடுபட்டார். இந்தப் பயணத்தின்போது மல்வத்துப்பீட மகாநாயகர் திப்பட்டுவாவே ஸ்ரீ சுமங்கல தேரரைச் சந்தித்து ஆசி பெற்றுக் கொண்டார்.

அவர் தெரிவித்ததாவது:

நாங்கள் ஒருபோதும் திருடர்களுக்கு ஒத்துழைக்கமாட்டோம். மத்திய வங்கியின் முன்னாள் ஆளுநர் தனது தனிப்பட்ட தேவைக்காகவே வெளிநாடு சென்றிருப்பதாக முகப் புத்தகத்தில் பதிவிட்டிருப்பதன் ஊடாக நான் அறிந்து கொண்டேன்.

மீண்டும் தாம் நாடு திரும்ப விருப்பதாகவும் அதில் அவர் கூறியிருக்கின்றார். பிழை செய்துவிட்டு எங்கிருந்தாலும் எவரையும் பாதுகாப்பதற்கு எமக்கு அவசியமில்லை. அர்ஜுன் மகேந்திரன் வெளிநாடு சென்றிருப்பதால் அவரை பாதுகாப்பதற்கும் எமக்கு அவசியமில்லை. அவர் தவறு இழைத்திருந்தால் சட்டத்திற்கு முன் அவர் நிறுத்தப்பட வேண்டும்.

அரசாங்கம் என்ற வகையில் திருடர்களைப் பாதுகாக்கும் நோக்கத்தில் நாங்கள் இல்லை-என்றார்.

இதேவேளை, முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச தலைமையிலான ஒன்றிணைந்த எதிர்க்கட்சியுடன் இணையப்போவதாக வெளியாகிவரும் வதந்திகள் தொடர்பாக ஊடகவியலாளர்கள் இதன்போது அமைச்சரிடம் வினா எழுப்பினர்.

அவர் பதிலளிக்கையில்,

நான் ஒருபோதும் ஒன்றிணைந்த எதிர்க்கட்சி எனக் கூறித்திரியும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள சில நண்பர்களுடன் கரம் கோர்ப்பதில்லை. கட்சியில் முரண்பட்டுக்கொண்டால் அதிலிருந்து விலகி சுயாதீனமாகச் செயற்படுவேனே தவிர வெளியேறிச்செல்ல மாட்டேன் - என்றார். (த)



ashok STEEL
நீடித்த வலிமை

அசோக் TMT
அதிகூடிய பலம் வாய்ந்த இரும்புக் கம்பிகள்

யானையின் எடையைப் போல் பன்மடங்கு எடையைத் தாங்கக்கூடிய பலம் கொண்டதோடு, பல நூற்றாண்டுகள் நிலைத்து நிற்கக்கூடிய கட்டிடங்களுக்கும், வீடுகளுக்கும், சந்தையில் உங்களுக்கு மிக அருகாமையில் இலகுவாக கிடைக்கக்கூடிய அதிகூடிய பலம் வாய்ந்த அசோக் TMT இரும்புக் கம்பிகளை பயன்படுத்தி முறுக்குக் கம்பி பெறுமதியிலும் பார்க்க 15 சதவீத சேமிப்பை அனுபவித்திடுங்கள்.

ஒரு மெட்ரிக் தொன் தலா ரூ.100,000 + VAT

வட. கிழக்கு மாகாணம் - 077 3781397/076 6084369, மேல் மாகாணம் - 077 3263518, மத்திய மாகாணம் - 077 3825832, வட. மேல் மாகாணம் - 077 3455128, தென் மாகாணம் - 076 6773659, உடனடி அழைப்புகளுக்கு - 011 7388940-3

SLS
375

## நவம்பரில்...

அமைக்கப்பட்டது. உப குழுக்கள் 6 இனதும் அறிக்கைகள் தொகுக்கப்பட்டு முதலாவது இடைக்கால அறிக்கை அடுத்த மாதம் நடுப் பகுதியில் - 16ஆம் திகதி அளவிலும், வழி நடத்தல் குழுவில் ஆராயப்பட்ட அதிகாரப் பகிர்வு, நாட்டின் தன்மை, தேர்தல் முறைமை, நிறைவேற்று அதிகாரம் ஆகிய விடயங்களை உள்ளடக் கிய அறிக்கை மாத இறுதியிலும் வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(த-5)

## இறுதிப்...

வட்டமாகத் தெரிவித்துள்ளார் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச.

தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இராணுவம் மேற்கொண்ட போரைத் திரிபுபடுத்தி, சர்வதேசத்தின் உதவியுடன் படையினரைப் போர்க் குற்றவாளிகளாக்கும் கைங்கரியத்தில் மைத்திரி ரணில் அரசு ஈடுபட்டு வருகின்றது எனவும் அவர் குற்றம் சுமத்தியுள்ளார்.

போரை முடிவுக்குக் கொண்டுவந்த படையினருக்கு எதிராக எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்க இடமளிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன திட்டவட்டமாக அறிவித்துவரும் நிலையிலேயே, கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்ட முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச இந்தக் குற்றச்சாட்டை முன்வைத்துள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதியான ஜெனரல் கெரி டி சில்வா எழுதிய மோதலில் கொல்லப்பட்ட போர் வீரர்கள் என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு நேற்றுமுன் தினம் மாலை கொழும்பிலுள்ள பண்டாரநாயக்க ஞாபகார்த்த பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த நிகழ்வுக்கு முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ச, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச, முன்னாள் பிரான்ஸ் நாட்டுத் தூதுவர் தயான் ஜயதிலக உள்ளிட்ட பலர் அதிதிகளாகக் கலந்துகொண்டனர்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் சில்வாவிடம் முதல் பிரதியைப் பெற்றுக் கொண்ட மகிந்த ராஜபக்ச, அங்கு உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

உலகில் மிகக் கொடிய பயங்கரவாத இயக்கங்களில் ஒன்றாகக் கருதப்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தோற்கடித்த படையினரைப் போர்க்குற்றவாளிகளாக்கும் முயற்சிகள் தொடர்ந்தும் இடம்பெறுகின்றன என்றும் அவர் இதன் போது மேலும் தெரிவித்துள்ளார்.

(த-4)

## வவுனியாவில்...

இளைஞர்கள் சிறிது நேரத்தின் பின்னர் வேறு சில இளைஞர்களையும் அழைத்துக்கொண்டு இடியன் துப்பாக்கி, வாள், கத்தி, பொல்லு என்பவற்றுடன் திரும்பவும் பம்பைமடுப் பகுதிக்கச் சென்று அந்தப் பகுதி இளைஞர்களை அச்சுறுத்தியதுடன் கைகலப்பிலும் ஈடுபட்டுள்ளனர். இதன் போது இரு இளைஞர்கள் வாள்வெட்டுக்கு இலக்காகினர். சம்பவத்தையடுத்து அந்தப் பகுதிக்குப் பொலிஸார் சென்றனர். அதற்கு முன்னரே வாளால் வெட்டியவர்கள் தப்பிச் சென்றுள்ளனர். பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

இதேவேளை, வவுனியா தேக்கவத்தைப் பகுதியில் நேற்றுமுன்தினமிரவு 10 மணியளவில் இளைஞர் ஒருவர் மீது வாளால் வெட்டித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. வாளால் வெட்டியவர் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளார் என்றும் தனிப்பட்ட காரணத்தால் இது நடந்ததாகவும் ஆரம்ப விசாரணையை மேற்கொண்ட பொலிஸார் கூறினர்.

(த-4)

## பொலிஸ் மா...

யுள்ளார். படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க தொடர்பாக புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 280 பேரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவுள்ளமை தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பொலிஸ்மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவிடம் விளக்கம் கேட்டிருந்தார்.

புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்த 20 பேரைத் தினமும் விசாரணைக்கு உட்படுத்துவதற்கும், இதற்கமைய 200 பேரை விசாரணை செய்ய எதிர்பார்ப்பதாகவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

ஆயினும் குறித்த அதிகாரிகளின் பணிகளுக்கு எவ்வித இடையூறும் ஏற்படாத வகையில் விசாரணைகள் முன்னெடுக்கப்படவேண்டும் என்று பொலிஸ்மா அதிபருக்கு ஜனாதிபதி ஆலோசனை வழங்கியுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த ஆலோசனைக்கு இணங்கத் தினமும் 5 புலனாய்வு அதிகாரிகளை வரவழைத்து விசாரணை செய்வதற்கான முடிவை குற்றப் புலனாய்வுப் பிரிவு எடுத்திருப்பதாக அறியமுடிகின்றது.

லசந்த விக்ரமதுங்கவின் படுகொலையுடன் புலனாய்வுப் பிரிவினரும் தொடர்புபட்டுள்ளமை விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது.

ஏற்கனவே இந்தப் படுகொலை தொடர்பாகச் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டுள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவு அதிகாரி ஒருவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேலும் இந்த வழக்குடன் சம்பந்தப்பட்ட மற்றுமொரு முன்னாள் புலனாய்வு அதிகாரி அண்மையில் தூக்கிட்டுத் தற்கொலை செய்துகொண்டிருந்தார்.

முன்னாள் கடற்படைத் தளபதிகள் மூவர் மற்றும் முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோத்தபாய ராஜபக்ச ஆகியோரை அவன்காட் விவகார வழக்கில் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தியமை தொடர்பில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அண்மையில் தனது கடும் அதிருப்தியை வெளியிட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

(தி)

## காணிகளை...

பரிந்துரைத்துள்ளதாக இராணுவ அதிகாரிகள் மாவட்ட நிர்வாகத்துக்குத் தெரியப்படுத்தியுள்ளனர்.

கிளிநொச்சி நகரில் பரவிப்பாஞ்சான் பகுதி அமைந்துள்ளது. இராணுவத்தினர் வசம் பொதுமக்களுக்குச் சொந்தமான 17 ஏக்கர் நிலப் பரப்பு இருந்தது. இந்தக் காணிகளை விடுவிக்குமாறு மக்கள் போராட்டம் நடத்தினர். மக்களின் போராட்டத்தைத் தொடர்ந்து 4 ஏக்கர் நிலப்பரப்பு இராணுவப் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்டது.

எஞ்சிய 13 ஏக்கரும் இராணுவத்தினரின் கட்டுப்பாட்டிலேயே இருந்து வருகின்றது. இந்தக் காணியை விடுவிக்குமாறு மக்கள் தொடர் போராட்டங்களை மே மாதம் நடத்தினர். எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் தலையிட்டு மக்களின் போராட்டத்தை முடித்து வைத்தார். இதன் பின்னரும் காணி விடுவிப்பு நடைபெறவில்லை.

மக்கள் மீண்டும் போராட்டம் நடத்தினர். இராணுவ முகாம் முன்பாகவே தங்கியிருந்து போராட்டத்தை இரவு பகலாக முன்னெடுத்தனர். இதன்போது இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், மக்களின் காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்துப் போராட்டத்தை முடித்து வைத்தார்.

இராணுவத்தினர் தம் வசம் வைத்துள்ள 13 ஏக்கரில் 3 ஏக்கர் காணியை விடுவிப்பதற்குப் பரிந்துரைத்து பாதுகாப்பு அமைச்சுக்குக் கடிதம் அனுப்பியுள்ளனர். எஞ்சிய 10 ஏக்கரில் முக்கிய 7 இடங்கள் அமைந்திருப்பதன் காரணமாக அந்தக் காணிகளை விடுவிக்க முடியாது என்றும் அறிவித்துள்ளனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் வைப்பகக் கட்டடம், சமாதானச் செயலக கட்டடம், சமையல் கூடம், தனியார் தொலைபேசி நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான தொலைத் தொடர்புக் கோபுரம் அமைந் துள்ள பிரதேசம், தமிழர் புனர்வாழ்வுக் கழக அமைவிடம் என்பவற்றுடன் நாமல் ராஜபக்சவினால் அமைக்கப்பட்ட பங்களா வும் இவற்றில் அடங்கியுள்ளன. அந்தப் பகுதிகளையே விடுவிக்க முடியாது என்று திட்டவட்டமாக இராணுவத்தினர் மாவட்ட நிர்வாகத்துக்கு அறிவித்துள்ளனர்.

(த-5-4-101)

## ஹைபிறிட்...

யளவில் வவுனியா கண்டி வீதியில் வைத்தியசாலைக்கு அருகில் குறித்த காரில் இருந்து கஞ்சா மீட்கப்பட்டது.

சந்தேகத்துக்கிடமான சொகுசு ஹைபிறிட் காரில் சோதனை மேற்கொண்டபோது அங்கு மறைத்து வைக்கப்பட்டிருந்த கஞ்சாவை மீட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம், சாவகச்சேரியிலிருந்து தெஹிவளை வைத்தியசாலையை அண்மித்த இடத்துக்குக் குறித்த கஞ்சா எடுத்துச் செல்லப்பட்டமை ஆரம்ப விசாரணை மூலம் தெரியவந்ததாகப் பொலிஸார் கூறினர்.

கைப்பற்றப்பட்ட கஞ்சாவின் பெறுமதி சுமார் 17 இலட்சம் ரூபா என்று கூறப்பட்டது. காரைச் செலுத்திய சாரதியையும் அவருடன் பயணம் செய்தவரையும் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட இருவரும் விசாரணையின் பின்னர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்படுவர் என்று வவுனியா பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சோமரத்ன விஜயமுனி தெரிவித்தார்.

(த-4)

## சிறப்பு...

ஆரியதாச குரே தெரிவித்தார். பொலிஸ் ஆணைக்குழுவின் சிறப்பு விசாரணையாளர்கள் கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்குச் சென்று விசாரணைகளை மேற்கொண்டிருந்த நிலையிலேயே பொலிஸ் ஆணைக்குழு வின் செயலாளர் இந்தத் தகவலைத் தெரி வித்தார்.

யாழ்ப்பாணம், கொக்குவில் பிரதேசத்திலுள்ள குளப்பிட்டிச் சந்தியில் கடந்த 20 ஆம் திகதி இரவு 11.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகிக் கொல்லப்பட்டனர். எனினும், இதனை ஒரு விபத்தெனக் கூறி மூடிமறைக்கப் பொலிஸார் முயற்சித்த போதிலும் உடற்கூற்றுப் பரிசோதனையின் போது அவர்கள் துப்பாக்கிச் சூட்டில் கொல்லப்பட்டமை உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து உடனடியாகக் கொக்குவில் பிரதேசத்தில் கடமையில் இருந்த ஐந்து பொலிஸ் உத்தியோகத்தர்கள் கைதுசெய்யப்பட்டு, அவர்கள் பணி இடைநிறுத்தமும் செய்யப்பட்டனர் எனவும் அறிவிக்கப்பட்டது.

எனினும், மாணவர்களின் உயிரிழப்புத் தொடர்பில் பல்வேறு சந்தேகங்கள் நிலவும் நிலையில் பொலிஸ் ஆணைக்குழுவும் தனித்து விசாரணையொன்றை மேற்கொண்டு வருகிறது. குற்றப்புலனாய்வுப் பிரிவுப் பொலிஸாரும் பிரத்தியேகமாக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இந்தநிலையிலேயே, பொலிஸ் ஆணைக்குழுவின் சிறப்பு விசாரணையாளர்கள் நடத்திய விசாரணையின் அறிக்கையும், குற்றப்புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வு அறிக்கையும் அடுத்த வாரம் கிடைக்கும் எனப் பொலிஸ் ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இருவரின் படுகொலை பாரதூரமான குற்றச்செயல் என்பதால், அது தொடர்பில் விசாரணை செய்யும் அதிகாரம் பொலிஸ் ஆணைக்குழுவுக்கு இல்லை. எனினும், இந்தச் சம்பவம் தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் முறையாக நடத்துகின்றனரா என்பதை மேற்பார்வை செய்வதற்கான அதிகாரம் ஆணைக்குழுவுக்கு இருக்கின்றது. அதற்கமைய தமது ஆணைக்குழு செயற்பட்டு வருகின்றது எனவும் அவர் மேலும் கூறினார்.

(த-4)

## கிழக்கு...

தேர்தலில் ஆட்சியைக் கைப்பற்றி தற்போது கொழும்பு அரசில் பிரதி அமைச்சராக இருக்கும் எம்.எஸ்.அமீர் அலியை முதலமைச்சராக்குவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டது.

கொழும்பில் ஆட்சியில் இருக்கும் ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைந்து கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிட்டால் மாத்திரமே இது சாத்தியப்படும் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கருதுவதால் அதற்கான காய்நகர்த்தல்கள் இப்போது தொடங்கப்பட்டுள்ளன என்று கட்சிவட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைமைத்துவத்துடன் முரண்பட்டுக் கொண்டு நிற்கும் அமீர் அலியை எப்படியாவது முதலமைச்சராக்கித் தலைமைத்துவத் தைப் பழிவாங்கிவிடவேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றார் என்பதும் தெரிய வந்துள்ளது.

நாடாளுமன்றத் தேர்தலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் அமீர் அலிவெற்றி பெறுவதற்குக் காரணமாக இருந்தவர் இந்த முக்கியஸ்தர் தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

நாடாளுமன்றத் தேர்தலில் மு.காவின் தலைமைத்துவம் இவருக்கு இடம் கொடுக்காமைக்குப் பழிவாங்கும் விதத் திலேயே அவர் அமீர் அலியை வெல்ல வைப்பதற்கு இரகசியமாக வேலை செய் தார். இப்போது அமீர் அலியை கிழக்கின் முதல்மைச்சராக்கி மு.காவின் செல்வாக்கை கிழக்கில் இருந்து முற்றாகத் துடைந்தெறிவதென்று அவர் திட்டம் தீட்டியுள்ளார்.

கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் கிழக்கில் மு.காவுக்கு எதிராகக் களமிறங்கிய ரிசாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் மட்டக்களப்பிலும் திருகோணமையிலும் தலா ஓர் ஆசனத்தைக் கைப்பற்றியது. அம்பாறையில் தோல்வியடைந்தது.

இதனைத் தொடர்ந்து ரிசாத் பதியுதீன் கிழக்கில் அதிக கவனம் செலுத்தத் தொடங்கினார். மு.காவை முந்திக்கொண்டு அவர் பல விடயங்களைச் செய்வதற்கு எத்தனிப்பதை அவதானிக்கக்கூடியதாக இருக்கின்றது.

மு.காவை கிழக்கில் முற்றாக ஓரங்கட்டுவதற்கு ரிசாத் பதியுதீனால் வகுக்கப்பட்டு வரும் வியூகங்களில் ஒன்றாகவே கிழக்கு மாகாண சபையைக் கைப்பற்றி அமீர் அலியை முதலமைச்சராக்கும் திட்டம் அமைந்துள்ளது என்று அமீர் அலியுடன் நெருக்கமான வட்டாரங்கள் மூலம் தெரிய வருகின்றது.

(த-4)

## தீபாவளிப்...

நேற்றுக் காலை முல்லைத்தீவு - கைவேலிப்பகுதியில் இடம்பெற்றது.

முல்லைத்தீவில் தீபாவளிப் பண்டிகையை மக்கள் பட்டாசு கொளுத்திக் கொண்டாடினர். இவ்வாறு கொளுத்தப்பட்ட பட்டாசு முல்லைத்தீவு கைவேலிப் பகுதியில் உள்ள ஒருவரின் வீட்டின் மீது விழுந்து வெடித்ததால் அது முற்றாக எரிந்து நாசமானது. தீயைக் கட்டுப்படுத்த பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும், வீட்டிலிருந்து எந்தவொரு பொருள்களையும் மீட்க முடியவில்லை. அனைத்தும் தீக்கு இரையாகின.

தனது கணவர் தன்னைப் பிரிந்து வாழும் நிலையில் இந்தத் துயரம் நேர்ந்துள்ளதாக வீட்டின் உரிமையாளராகிய உதயப்பிரகாஸ் ஜெகதாயினி தெரிவித்தார். வீடு இல்லாத நிலையில் தனது இரண்டு பிள்ளைகளுடன் தான் என்ன செய்யப் போகின்றேன் என்று தெரியாதுள்ளதாகவும் மனம் கலங்கினார்.

(த-21-7)

## சர்வாதிகார...

பதவிகளில் அமர்த்திக் கொண்டால் இவ்வாறுதான் நடைபெறும்.

நாம் ஊடகங்களை நேசிக்கின்றோம். நீங்கள் எமக்கு அடித்து உங்களுக்குள்ள சுதந்திரத்தை இல்லாமல் செய்துகொள்ள வேண்டாம். சர்வாதிகார அரசு ஒன்றை மீண்டும் இந்த நாட்டில் உருவாக்கிக் கொள்ள வேண்டாம் என்றார்.

# ரயில் மேடையில் நின்ற இளைஞர் தண்டவாளத்தில் வீழ்ந்து காயம்

## இணுவிலில் நேற்று மாலை சம்பவம்

யாழ்ப்பாணம், ஒக்.30

இணுவில் ரயில் நிலையத்தில் மேடையில் நின்று கொண்டிருந்த இளைஞன் தண்டவாளத்தில் வீழ்ந்து காயங்களுடன் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்று மாலை சேர்க்கப்பட்டார். விந்தராஜா கஜீபன் (வயது-18) என்பவரே இவ்வாறு சேர்க்கப்பட்டுள்ளவராவார்.

மேற்படி இளைஞர் ரயில் மேடையில் இருந்து தவறி வீழ்ந்தாரா அல்லது ரயிலில் பயணம் செய்தவர்களால் இழுத்து வீழ்த்தப்பட்டாரா என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

யாழ்ப்பாணத்திலிருந்து காங்கேசன்துறை நோக்கிச் சென்று கொண்டிருந்த ரயிலில், கோண்டாவில் ரயில் நிலையத்திலிருந்து இளைஞர்கள் ஏறியுள்ளனர். ரயிலினுள் ஏறிய இவர்கள் மோதலில் ஈடுபட்டதாக அதில் பயணித்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

காங்கேசன்துறையிலிருந்து மீண்டும் யாழ்ப்பாணம் நோக்கி வரும் போதும் இளைஞர் குழுக்கள் இடையே மோதல் இடம் பெற்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதன் பின்னர் இணுவில் ரயில் நிலையத்தில் இளைஞர் ஒருவர் மேடையில் இருந்து தண்டவாளத்தில் வீழ்ந்துள்ளார்.

பயணிகள் ரயிலை அவசரமாக நிறுத் தும் சங்கிலியைப் பிடித்து இழுத்து அதனை நிறுத்தினர். தண்டவாளத்தில் வீழ்ந்த நபர் காயங்களுடன் உடனடியாகவே வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டார்.

இதேவேளை அவசரமாக நிறுத்தப்பட்ட ரயில் மீளப் புறப்படுவதற்கு நீண்ட நேரம் எடுத்தமையால், மருதனார்மடம் சந்தியிலிருந்து உரும்பிராய் சந்தி வரையிலான போக்குவரத்தும் பாதிக்கப்பட்டிருந்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

(த-5-7-10)

### அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு பிற்போடப்பட்டுள்ளது

"பொற்பதி அறிவாலயம்" கட்டட நிதிக்காக பொற்பதி இந்து விளையாட்டுக் கழகத்தால் 29.10.2016 இல் நடத்தப்பட இருந்த அதிஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்க முடியாத காரணத்தால் 06.11.2016 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 5.00 மணிக்கு பிற்போடப்பட்டுள்ளது.

சிரமங்களுக்காக மனம் வருந்துகின்றோம்.

நிர்வாகம்
பொற்பதி இந்து விளையாட்டுக்கழகம்,
கொக்குவில். (J 5747) (16,17,19)

### மரண அறிவித்தல்

## கணபதிப்பிள்ளை ஏரம்பமூர்த்தி
(அப்பையா)



நீர்வேலி மேற்கு, இராஜ வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை ஏரம்பரமூர்த்தி (அப்பையா) நேற்று (29.10.2016) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கணபதிப்பிள்ளை-வேதநாயகம் தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான நாகலிங்கம்-அன்னப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மருமகனும் மங்கையர்க்கரசியின் பாசமிகு கணவரும் காலஞ்சென்றவர்களான அருணாசலம், திருநாவுக்கரசு, செல்வநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரனும் சுகந்தினி (கொழும்பு), பத்மினி (கனடா), ராஜினி, ரதீஸ்வரன், தர்சினி (உபதபால் அதிபர்,சிறுப்பிட்டி) ஆகியோரின் தந்தையும் மனோராஜ் , த்வராஜன் (கனடா) , திருக்குமரன், பகீரதன் (ஐங்கரன் தொலைத்தொடர்பு நிலையம், உரும்பிராய் கிழக்கு) ஆகியோரின் மாமனும் மிதுசன், ஹர்சனா, அஸ்மிதா, இலக்கியன், இலக்கியா, அனுராம், ஹபிஸ்னா, சிவானுஜன், அக்ஷயன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (30.10.2016) ஞாயிற்றுக் கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பிற்பகல் 2.00 மணியளவில் பூதவுடல் நீர்வேலி வடக்கு சீயாக்காடு இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜ வீதி,
நீர்வேலி மேற்கு, நீர்வேலி.

தகவல்
குடும்பத்தினர்.

(C 23048) (16,17,19)

### மரண அறிவித்தல்

## அப்பாப்பிள்ளை கதிர்காமர்



தோற்றம்
1930.03.17

மறைவு
2016.10.18

யாழ்ப்பாணம் நவாலியைப் பிறப்பிடமாகவும், நீர்வேலியை வசிப்பிடமாகவும் தற்பொழுது லண்டனில் வசித்தவருமாகிய அப்பாப்பிள்ளை கதிர்காமர் 2016.10.18 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அப்பாப்பிள்ளை - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம்-செல்லம்மா தம்பதியரின் அன்புமருமகனும், காலஞ்சென்ற இராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்றவர்களான நவரட்ணம், செல்லத்துரை, சரஸ்வதி, செல்வமணி மற்றும் சிரோன்மணி ஆகியோரின் அன்புத் தம்பியும், கனகராஜா (ராஜா - ஜேர்மனி), சிறீஸ்கந்தராஜா (சிறீ - லண்டன்), ராஜகுமாரி (குமாரி - ஜேர்மனி), யோககுமாரி (சூட்டி - லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும், சொன்யா (ஜேர்மனி), லக்னகுமாரி (லக்னா - லண்டன்), பிரிட்ஸ் (ஜேர்மனி), அம்பலவாணர் (Dr.கிருஸ்ணா - லண்டன்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், ஜெனி, லவ்ரா, மானுவேல், ரபயேல், லூர்காஸ், கவிதா, நிரஞ்சன், மகேன், லீ-ஆன், யூலியன், பிரீத்தி, ரோபின், சஞ்சீவன், டர்ஷிகா, ஒஸ்கர், ரஜீவன் ஆகியோரின் பாட்டனாரும், நிலா, ஓவியா, மாயா, ரூபன் ஆகியோரின் பூட்டனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(2016.10.30) ஞாயிற்றுக் கிழமை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பின்னர் தகனக்கிரியைகள் மதியம் 12 மணிக்கு City of London and Crematorium, Alders Brook Road, Manor Park, London E12, 5DQ எனும் முகவரியில் இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தொடர்புகளுக்கு :-
கனகராஜா (ராஜா) - 00491799764264 - கைபேசி
00495575146786
சிறீஸ்கந்தராஜா (சிறீ) - 00447442396769 - கைபேசி
00441708554040

தகவல் :-
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்,
பூட்டப்பிள்ளைகள்.

SUPER BALL
சுப்பர் போல்
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு வாரம் 569
சீட்டிழுப்பு திகதி 2016.10.29
சனிக்கிழமை
வெற்றி இலக்கங்கள்
05 43 48 61 B
சுப்பர் ஜக்பொட்
ரூ. 57,625,600/=
தொ.இல: 011 4062002 / 0114062052 Web: www.dlb.lk

சனிக்கிழமை அதிர்ஷ்டம்
வெற்றி வாரம்: 2813 திகதி 29.10.2016
17 23 38 47 T 64
ரூ. 33,781,825/-
தொ.இல: 011 4062002 / 0114062052 Web: www.dlb.lk

உடல் பருமன் கொண்டோருக்கும் உடல்எடை குறைவானோருக்கும் ஓர் அற்புதமான செய்தி (2 வாரங்களில்)
ஆண், பெண் இருபாலருக்கும் உகந்தது. 2 வாரங்களில் நல்ல அழகான மேனியுடன் திகழ ஆயுள்வேத கேர்பல் ஔடதம், பால்மா, தனிசை, டொனிக், கிறீம்.
உடல் பருமன் கொண்டோருக்கு
விலை 3500/=, 5500/=, 9000/=
உடல்எடை குறைத்தல், ஊளைச்சதை, மார்பு, கை, கால், வயிறு குறைத்தல், வயிற்றுக் கோளாறு , நாட்பட்ட அஜீரணம், மலச்சிக்கல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.
ஆச்சரியம் வயிறு, மார்பு 10 நாள்களில் குறைக்கும் கிறீம் எங்களிடம் உண்டு.
உடல் எடை குறைவானோருக்கு
விலை 3500/=, 5500/=, (24000/= 3 மாதத்திற்குரியது)
உடல் எடை கூட்டுதல், ஒட்டிய கன்னங்கள் குண்டுக் கன்னங்களாக மாற்ற பலகீனம், கணச்சூடு, எதைச் சாப்பிட்டாலும் உடம்பு தேறுகிறதேயில்லை என்கிறவர்கள், மார்பு கூட்டுதல் அனைத்துக்குமான ஆயுள்வேத மருந்து விற்பனைக்கு உண்டு.
மேலும் கறுப்பு, கண்கருவளையம், உதட்டு கறுப்பு, பருக்கள், வடுக்கள், காயங்கள், கருந்திட்டுக்கள், கரும்புள்ளிகள் நீக்கும் கிறீம் விற்பனைக்கு உண்டு. தேவையற்ற ரோமம், முகம், உடம்பு பகுதியில் உள்ள காய்கள் அகற்றும் கிறீம் விற்பனைக்கு உண்டு.
(விலை 3500, 5500)
தொடர்பு: 077 210 6155
221, நாவலர் றோட்
(பிறவுன்றோட் சந்தி அருள் கொமினிகேஷன் அருகில்) யாழ்.

### 31 ஆம் நாள் நினைவஞ்சலி

தோற்றம்
24.
01.
1928



மறைவு
30.
09.
2016

## திருமதி தங்கலக்சுமி குமாரசாமி (ருத்தி)

(பழைய மாணவி உரும்பிராய் இந்துக்கல்லூரி)

பழைய மாணவிகளான அமரர் வனசமலர் சண்முகநாதர் மற்றும் கருணாதேவி மனோகரபூபன், ஜெயமலர் - சண்முகநாதன், ஜெயந்தி-ரூபகுமார் (கனடா), பிரேமா - சிறீஸ்கந்தராசா (நோர்வே), மஞ்சுளா - செல்வன் (கனடா), மிதிலா - ரவிக்குமார் (கனடா) ஆகியோரின் அன்புத்தாயும் சண்முகநாதன் அமரர் மனோகரபூபன் (பழைய மாணவர்), சண்முகநாதன் (பழைய மாணவன்), ரூபகுமார், சிறீஸ்கந்தராசா, செல்வத்துரை, செல்வன் (பழைய மாணவர் - பொருளாளர், பழைய மாணவர் சங்கம், கனடா) ரவிக்குமார் ஆகியோரின் அன்பு மாமியும் திருமதி தங்கலக்சுமி குமாரசாமி (ருத்தி) அவர்களுக்கு 31 ஆம் நாள் நினைவஞ்சலிகளை செலுத்திக் கொள்வதோடு அவரது ஆன்மா சாந்தியடைய அருள்மிகு உரும்பிராய் பர்வதவர்த்தனி அம்பாளை பிரார்த்திக்கின்றோம்.

உரும்பிராய் இந்துக்கல்லூரி,
பழைய மாணவர்சங்கம் உரும்பிராய்.

(இ23047) (17,19,20)

வேலையாள் தேவை
சாட்டி கடற்கரையில் அமைந்துள்ள ஹோட்டல் (Charty Beach Resort) இற்கு தகுதியும் அனுபவம் வாய்ந்த பூந்தோட்ட பராமரிப்பாளர் தேவை. தங்குமிடம் வழங்கப்படும். (J 5750) (16,17,19)
077 3438373, 077 7696443

கடை & ROOMS உடன் வாடகைக்கு
நல்லூர், வடக்கு கல்வியங்காட்டில் இரு பெரிய அறைகள் சகல வசதிகளுடன் உடன் வாடகைக்கு உண்டு. அதே இடத்தில் கடையும் வாடகைக்கு இருக்கின்றது.
தொடர்பு - மதி 077 3296035, 077 5541389


வீடு வாடகைக்குண்டு
வெளியூர்களில் இருந்து வருபவர்களுக்கும் திருமணம் மற்றும் சுப காரியங்களை நின்று செய்வதற்கும் உரிய வீடு சகல தளபாடங்களுடன் நாள், கிழமை, மாத அடிப்படையில் உண்டு.
தொடர்பு - 0777 035457 (ஜே5748) (17,19,20)

நாய்க்குட்டி விற்பனைக்கு
45 நாள் நிரம்பிய தடுப்பூசி போடப்பட்ட ஜேர்மன் சப்போட், டொமன் நாய்க்குட்டிகள் விற்பனைக்கு உண்டு. 070 2913182

மணமகள் தேவை
யாழ் கத்தோலிக்க கௌரவ கவிஞர் குடும் பத்தைச் சேர்ந்த 38+வயதுடைய சர்வதேச தரத்திலான மென்பொருள் தயாரிக்கும் மண மகனுக்கு நற்குணமுள்ள மருத்துவ,BSc (cs), Soft Engineer படித்த மணமகள் தேவை.
077 2420337 www.seaaav.com

காணி விற்பனைக்கு
திருநெல்வேலி விவசாயப் பாடசாலைப் பகுதியில் 4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
(தரகர் வேண்டாம்) (J 5743) (16,17,19)
076 5695684

MAJESTIC CINEPLEX
A CEYLON THEATRES CINEMA Jaffna
கார்கில்ஸ் ஸ்குவெயர்
(யாழ் போதனா வைத்தியசாலை எதிரில்)
இப்பொழுது திரையில்



மஜெஸ்டிக் பிளாட்டினம்
10.00 a.m / 1.00 p.m / 4.00 p.m / 7.00 p.m
சில்வர்
10.15 a.m / 1.15 p.m / 4.15 p.m / 7.15 p.m
ப்ரொன்ஸ்
10.30 a.m / 1.30 p.m / 4.30 p.m / 7.30 p.m
Fri/Sat 9.30 p.m
விசாரணை 021- 2227712
CeylonTheatres
www.ceylontheatres.lk



# இந்திய நரகாசூரனின் பாதகச் செயல்கள்

முரளி வல்லிபுரநாதன்

முப்பது வருடங்களாக இந்தியாவின் நயவஞ்சகச் செயல்களின் பயனைத் தமிழர் அனுபவித்தும் இன்னமும் பலருக்கு பட்டறிவு வரவில்லைப் போலும் . எமது இனம் உரிமைக்கான தீப ஒளியைக் காண வேண்டுமாயின் முதலில் எமது இனத்தின் உண்மையான எதிரி நரகாசுரன் யார்? என்பதை அடையாளம் காண வேண்டும். கடந்த காலத்தில் இந்திய நரகாசுரனின் நயவஞ்சகத்தை மறந்தவர்களுக்காக வரலாற்றில் இடம் பெற்ற சில முக்கிய சம்பவங்களை உங்கள் கவனத்துக்கு கொண்டு வருகிறேன் . இதன் பின்பு உண்மையான நரகாசுரன் யார்? என்பதை நீங்களே அடையாளம் கண்டு கொள்வீர்கள்.

1. 1987ம் ஆண்டு அமைதிப் படை என்ற பெயரில் இலங்கையினுள் நுழைந்த இந்திய இராணுவம் பிரபாகரனை கொல்வதற்கு அவரது இரகசிய இருப்பிடத்தை இலக்கு வைத்து கொலைஆயுதங்களுடன்கொமாண்டோ படை அணியினரை யாழ் மருத்துவ பீடத்துக்கு அருகில் இறக்கி நம் பிக்கைத் துரோக முயற்சியில் ஈடுபட்டது. புலிகள் உஷாராக இருந்தமையினால் இந்த இந்திய சதி முயற்சி முறியடிக்கப் பட்டது. இதனால் சயனைட் குப்பியுடன் திரிந்த புலிகளின் தலைவரைத் தாம் கொல்ல முயலவில்லை என்றும் உயிருடன் பிடிக்கவே முயற்சி செய்த தாகவும் இந்திய இராணுவம் கதை அளந்தது. இந்தச் சீண்டலின் பின்பு தான் முழு அளவிலான புலிகள் இந்தியப் படை போர் ஆரம்பமானது என்பது வரலாறு. பொது மக்கள் இயன்றளவு பாதிக்கப்படாமல் போர் நடத்தப்பட வேண்டும் என்ற போர் தர்மத்தையும் சர்வதேச நெறிமுறைகளையும் கிடப்பில் போட்டுவிட்டு பொதுமக்களைக் கொன்று தள்ளியது. வயது முதிர்ந்த கிழவிகளையும் வல்லுறவுக்கு உட்படுத்திக் கொலை செய்தது. யாழ் போதனா வைத்தியசாலையினுள் நுழைந்து தமது உயிரை பொருட்படுத்தாது காயமடைந்த நோயாளிகளுக்கு சிகிச்சை அளித்துக் கொண்டிருந்த வைத்தியர்களையும் ஏனைய சுகாதார ஊழியர்களையும் படுகொலை செய்தது. கொலை வெறியாட்டம் முடிந்ததும் ஒழுக்கமற்ற இந்திய இராணுவம் வீடுகளில் புகுந்து வெளிப்படையாகவே பலாத்காரமாக பொருள்களைக்கைப்பற்றிக்கொள்ளையில் ஈடுபட்டது. களவு எடுத்த பொருட்களுக்கு இந்தியாவில் உரிமை கோருவதற்காக ஸ்ரான்லி வீதியில் இந்திய களவாணிப் படையினர் வரிசையில் நின்று கடைக் காரர்களிடம் களவெடுத்த பொருள்களைக் காட்டி பொய்யான சிட்டைகளை பெற்றுச் செல்லும் போது அமைதிப் படை தளபதிகள் அமைதி காத்து கொள்ளைக்கு உடந்தையாகினர்.

2. 2000 ஆண்டு மே மாதம் ஆனையிறவை அழித்து புலிகள் ஆயுதபலத்திலும் மனோபலத்திலும் உயர்ந்து நின்ற காலம் பலாலியை நெருங்க முற்பட்ட போது இந்தியா நேரடியாகப் புலிகளை எச்சரித்து தடுத்து நிறுத்தியது. இதன் பின்பு இந்தியா புலிகளின் ஆயுத வழங்கல் கப்பல்களை நேரடியாகவும் மறைமுக தகவல்களை வழங்கியும் அழித்து அதே நேரத்தில் இலங்கை அரசாங்கத்தை பலப் படுத்துவதற்கு பல்வேறு ஆயுதங்களையும் பயிற்சியையும் வழங்கியது.

3. 2009 புலிகளை அழிக்க இந்தியா முழுமூச்சாக பெரும்பான்மை அரசுக்கு ஆயுதங்களும் ஏனைய உதவிகளும் வழங்கிஉதவிசெய்தது. தொடர்ச்சியாக இந்தியா இரகசியமாக அனுப்பிய உதவிகளை அறிந்த தமிழ் ஆர்வலர்கள் தமிழ் நாட்டில் அவற்றைப் பல இடங்களில் மறித்துத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்கள்.

4. 2009 யுத்தம் முடிவடைந்த பின்னர் கனடாவுடன் இணைந்து பலநாடுகள் கொண்டு வந்த தீர்மானத்தை ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையில் முழுமூச்சுடன் தோற்கடித்து இலங்கைக்கு ஐக்கிய நாடுகளின் அமைதிப் படையை வராமல் தடுத்து நிறுத்தி போர்க் குற்ற விசாரணைகளில் இருந்து இலங்கையைப் பாதுகாத்து 2 வருடத்துக்கு மேலாகத் தமிழர் தடுப்பு முகாம்களில் இருக்கச் செய்ததும் இந்தியாவே தான்.

5. 2014 இலும் இலங்கையில் பன்னாட்டு விசாரணையைக் கோரும் தீர்மானத்தை அமரிக்கா ஆதரவு நாடுகள் கொண்டுவந்த போது அதை எதிர்த்து வாக்களித்து தன்னுடைய உண்மையான வடிவத்தை வெளிக்காட்டியது. இன்றும் பன்னாட்டு விசாரணையின்றி எமது உறவுகள் காணாமல் போனவர்களைத் தேடும் நிலையில் இருப்பதற்கும் இந்தியாவே காரணம்.

இவ்வளவு அநியாயமும் தமிழர்களுக்கு எதிராக இழைத்தபின்பும் தமிழரின் மறதியை மூலதனமாகக் கொண்டு யாழ் நகரிலேயே தனது துணைத் தூதரகத்தை அமைத்து பல்வேறு சூழ்ச்சிகளிலும் ஈடுபட்டுவருகிறது. இப்போதும் புலிகள் எங்கே மேலெழுந்து வந்துவிடுவார்கள் என்று ஐயம்கொண்டு உளவாளிகளை வைத்து பல கண்காணிப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகிறது. இதை விடத் தமிழர் பொருளாதாரத்தை சுரண்டுவதற்கு நண்பேண்டா இசை நிகழ்ச்சி, மீன் வியாபாரம் உட்படப் பல நிகழ்ச்சித் திட்டங்களை முன்னெடுத்து வருகிறது. இலங்கை நீதிமன்றம் சூழல் பாதிப்பு ஏற்படுமென காரணம் காட்டி நிராகரிக்கும் வரை சம்பூரில் வாழ்ந்த தமிழ் மக்களை துரத்தி அடித்துவிட்டு தனது இலாபத்துக்கு அனல் மின்நிலையம் அமைக்க துடித்தது. உளவு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு தமிழர் வாழும் பகுதியில் இலவச மருத்துவ முகாம் உளவியல் சிகிச்சை வழங்குவதற்கு அனுமதி கேட்டு நாடகம் ஆடுகிறது. மீனவர் வடிவில் உளவாளிகளை வட இலங்கையினுள் அனுப்ப முயல்கிறது. பல சூழ்ச்சிகள் மூலமாகத் தமிழரை அழிக்கும் நரகாசுரர்கள் யார்? இப்போது கூறுங்கள் தமிழரின் உரிமைத் தீபத்தை அடைய தடையாக இருக்கும் உண்மையான நரகாசுரன் யார்?

2009 புலிகளை அழிக்க இந்தியா முழுமூச்சாக பெரும்பான்மை அர சுக்கு ஆயுதங்களும் ஏனைய உதவிகளும் வழங்கி உதவி செய்தது. தொடர்ச்சியாக இந்தியா இரகசியமாக அனுப்பிய உதவிகளை அறிந்த தமிழ் ஆர்வலர்கள் தமிழ் நாட்டில் அவற் றைப் பல இடங்களில் மறித்துத் தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தார்கள்.



Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT


## நியூசிலாந்தும் சிறந்தது வெற்றி பெறவே செய்யும்

### கங்குலியின் கணிப்பு

நியூசிலாந்தும் சிறந்த அணியே என்பதால் வெற்றிபெறவே செய்யும். இதில் ஆச்சரியப்பட ஒன்றுமேயில்லை இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள் தலைவரான கங்குலி.

நியூசிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை இந்திய அணி 3:0 என்ற அடிப்படையில் கைப்பற்றிய போதிலும் ஒருநாள் தொடர் அவ்வளவு இலகுவாக இந்தியாவுக்கு அமையவில்லை. இதனையடுத்து கருத்துத் தெரிவிக்கையிலேயே கங்குலி இவ்வாறு தெரிவித்தார்.

ஒருநாள் ஆட்டங்களைப் பொறுத்தமட்டில் நியூசிலாந்து சிறந்த அணி. சில ஆட்டங்களில் அந்த அணியும் வெற்றிபெறவே செய்யும். ஆட்டம் இந்தியாவில் நடைபெறுகிறது என்பதற்காக தொடரை முழுமையாகக் கைப்பற்ற வேண்டும் என்று எதிர்பார்ப்பது அர்த்தமற்



றது. விராட் கோக்லி அபாரமான வீரர், ஆனால் அவர் ஒருவரை மட்டும்தான் தற்போது இந்திய அணி நம்பியிருக்கிறது என்று கூற இடமில்லை. வெற்றிக்கும் தோல்விக்கும் அனைத்து வீரர்களுக்கும் சம பங்குண்டு என கங்குலி மேலும் தெரிவித்தார். (ம)

## மேற்கிந்தியத் தீவுகளை வழித்துத் துடைப்போம்


### அகமட்டின் அச்சுறுத்தல்



மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான டெஸ்ட் தொடரை முழுவதுமாகக் கைப்பற்ற பாகிஸ்தான் தன்னாலான சகல முயற்சிகளையும் மேற்கொள்ளும். இவ்வாறு தெரிவித்தார் அந்த அணியின் இலக்குக் காப்பாளரான அகமட்.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் இன்று ஆரம்பமாகவுள்ள நிலையில் இந்த ஆட்டத்தை குறைந்த பட்சம் சமநிலையில் முடிக்கவாவது வேண்டும் என்ற இக்கட்டான நிலையில் தீவுகள் தள்ளப்பட்டுள்ளது. இந்த ஆட்டம் தொடர்பாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அகமட் இவ்வாறானதொரு கருத்தை வெளிப்படுத்தினார்.

பன்னாட்டுத் தரப்படுத்தலில் முதலிடத்தில் இருந்த பாகிஸ்தான் தற்போது இரண்டாவது இடத்துக்குப் பின்னடைவைச் சந்தித்துள்ளது. இழந்த இடத்தை மீண்டும் கைப்பற்ற வேண்டுமாயின் ஒவ்வொரு ஆட்டத்திலும் வெற்றி பெறவேண்டிய அவசியம் உள்ளது. தீவுகளுக்கு எதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டதிலும் வெற்றிபெற்று தொடரை 3:0 என்ற அடிப்படையில் கைப்பற்றுவோம் என அவர் மேலும் தெரிவித்தார். (ம)



## மலிங்கவுடன் முரண்பாடு இல்லை மௌனம் கலைத்தார் ஜெயசூரிய

இலங்கை அணியின் முக்கிய வீரர்களில் ஒருவரான மலிங்கவுடன் எந்த மோதலும் இல்லை எனத் தெரிவித்தார் தலைமைத் தேர்வாளரான சனத் ஜெயசூரிய.

இலங்கை ரி-20 அணியின் முன்னாள் தலைவரான மலிங்கவுக்கும் தலைமைத் தேர்வாளரான சனத் ஜெயசூரியவுக்கும் இடையே கருத்து முரண்பாடுகள் இருப்பதாகத் தகவல்கள் வெளியாகியிருந்தன. முழங்காலில் அறுவைச் சிகிச்சை செய்த பின்னர் நீண்டகாலமாக ஓய்விலிருந்துவரும் மலிங்க அணிக்குத் திரும்பாமலேயே ஓய்வை அறிவிக்கலாம் என்றவாறான தகவல்களும் பரவிவரும் நிலையில் ஜெயசூரியாவின் கருத்து முக்கியமானதாகப் பார்க்கப்படுகிறது. அண்மையில் நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே சனத் இவ்வாறு தெரிவித்தார்.

லசித் மலிங்க தனது உடற்தகுதியை நிரூபிக்கும் பட்சத்தில் அணிக்கு விரைவில் திரும்பலாம். அவர், தான் குணமடைந்து விட்டதை அறிவிக்கும் பட்சத்தில் அவரை அணிக்கு வரவேற்கத் தயாராக இருக்கிறோம். மலிங்காவுடன் எந்த வித மோதலும் கருத்து முரண்பாடுகளும்கிடையாது. எனதுதெரிவில்மலிங்க ஒரு முக்கியமான வீரர். அவர் அணிக்குத் திரும்பினால் மகிழ்ச்சியே என ஜெயசூரிய மேலும் தெரிவித்தார். (ம)

## கோக்லியை மட்டுமே நம்பியிருக்கக்கூடாது

### கதறுகிறார் கவாஸ்கர்

இந்திய அணி, துடுப்பாட்ட வரிசையில் கோக்லியை மட்டுமே நம்பியிருக்கக்கூடாது இவ்வாறு தெரிவித்தார் இந்திய அணியின் முன்னாள்தலைவரானகவாஸ்கர்.

எல்லா ஆட்டங்களிலும் வெற்றிக்காக விராட் கோக்லி உதவ முடியாது. மற்றவர்களும் சிறந்த ஆட்டத்தை வெளிபடுத்த வேண்டும். நியூசிலாந்துக்கு எதிரான நான்காவது ஆட்டத்தில் மனிஷ் பாண்டே, கேதர் யாதவ் இருக்கும் போது அக்சர் பட்டேலை முன்கூட்டியே களம் இறங்கி இருக்கக் கூடாது. இரு துடுப்பாட்ட வீரர்கள் உள்ள நிலையில் பந்து வீச்சாளரான பட்டேலை அனுப்பியது நல்லதாகத் தெரியவில்லை டோனி 4 ஆவது வீரராக களம் இறங்கியதால் 5 ஆவது மற்றும் 6 ஆவது வரிசையில் தொய்வு ஏற்படுகிறது. தொடரை வெல்ல வேண்டும்என்றால்இந்தியஅணி பந்து வீச்சில் கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என கவாஸ்கர் மேலும் தெரிவித்தார். (ம)

## சுவாரஸூக்கு கடும் போட்டி

பார்சிலோனா கழகம் தனது ஒப்பந்தத்தில் சுவாரஸை நீடிக்காவிட்டால் அவரை வாங்க மன்செஸ்டர் யுனைற்றெட், மன்செஸ்டர் சிற்றி அணிகள் தயாராக உள்ளதாக ஸ்பெய்ன் ஊடகமொன்று செய்தி வெளியிட்டது.

பார்சிலோனா அணியின் மும்மூர்த்திகள் என மெஸ்ஸி, நெய்மர், சுவாரஸ் வர்ணிக்கப்படுகின்றனர். இவர்களின் கூட்டணியால் பார்சிலோனா தொடர்ச்சியாக பல வெற்றிகளைக் குவித்து வருகிறது. குறித்த கழகம் மெஸ்ஸி, நெய்மர் இடையிலான ஒப்பந்தங்களை நீடித்துள்ளது. ஆனால் சுவாரஸூடனான ஒப்பந்தம் பெற்ற எந்தத் தகவலும் வெளியிடவில்லை. பார்சிலோனா - சுவாரஸ் இடையிலான ஒப்பந்தம் இன்னும் சில வாரங்களில் நிறைவடையவுள்ளது. குறித்த காலப் பகுதிக்குள் புதிய ஒப்பந்தம் செய்யப்படாவிட்டால், சுவாரஸை ஒப்பந்தம் செய்ய மன்செஸ்டர் யுனைற்றெட், மன்செஸ்டர் சிற்றி அணிகள்



பெரும் தொகைப் பணத்துடன் தயாராக உள்ளன என குறித்த ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

## மீண்டும் மிரட்டுவேன் நெக்ரா நம்பிக்கை

இங்கிலாந்துக்கு எதிரான ஒருநாள் தொடருக்கான அணியில் இடம் பிடிப்பேன் எனத் தெரிவித்தார் இந்திய அணியின் வேகப்பந்து வீச்சாளரான நெக்ரா.

இந்திய ரி-20 அணியில் இடம்பிடித்து சிறந்த பெறுபேற்றை வெளிப்படுத்திய நெக்ரா, கடந்த ஐ.பி.எல். தொடரில் காயமடைந்தார். இரண்டு அறுவைச் சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டு பயிற்சிக்குத் திரும்பிய அவர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டார். கடந்த இரு வாரங்களுக்கும் அதிகமாக ஓய்விலிருந்த அவர் தற்போது மீண்டும் பயிற்சிக்குத் திரும்பியுள்ளார். இந்த நிலையிலேயே இந்திய அணியில் இடம்பிடிப்பது தொடர்பான தனது நம்பிக்கையை அவர் வெளிப்படுத்தினார்.

இங்கிலாந்து அணிக்கெதிராக இந்திய அணி அடுத்த வருடம் ஒருநாள், ரி-20 தொடர்களில் விளையாடவுள்ளது. இந்தத் தொடர்களுக்கான அணியில் இடம்பிடிப்பதே எனது நோக்கமாகவுள்ளது. டிசெம்பர் மாதம் மத்திய பகுதிக்குள்எனதுஉடற்தகுதியைநிரூபிப்பேன் என நெக்ரா மேலும் தெரிவித்தார். (ம)




## தற்போதைய நியூசி. மிகவும் பலமானது

### சவுத்தி பெருமிதம்

இதுவரை களமிறங்கிய நியூசிலாந்து அணிகளிலேயே தற்போதைய அணிதான் மிகவும் பலமானது எனத் தெரிவித்தார் அந்த அணியின் வேகப்பந்து வீச்சாளரான ரிம் சவுத்தி.

இந்தியாவுக்கு எதிரான நான்காவது ஒருநாள் ஆட்டத்தில் நியூசிலாந்து வெற்றி பெற்றதற்கு சவுத்தியின் பந்துவீச்சும் முக்கிய காரணமாகச் சொல்லப்படுகிறது. இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்தாவதும் இறுதியானதுமான ஆட்டம் நேற்று நடைபெற்றது. இந்த ஆட்டம் தொடர்பாக நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நியூசிலாந்தை பிரதிநிதித்துவப் படுத்திக் களமிறங்கிய அணிகளிலேயே தற்போதய அணி மிகவும் பலமானது. இந்த அணியால் எதையும் சாதிக்க முடியும். எதையும் செய்ய வல்ல திறமை இந்த அணியிடத்தில் உள்ளது என சவுத்தி மேலும் தெரிவித்தார். (ம)





## வதிரி பொம்மர்ஸ் வி.கழகம் மாவட்டச் சுற்றுக்குத் தகுதி

கரணவாய், ஒக். 30

மைலோ கிண்ணத்துக்கான கால்பந்தாட்டத் தொடரில் வடமராட்சி லீக்கில் பதிவு செய்த அணிகளுக்கு இடையிலான ஆட்டங்களில் மாவட்டச் சுற்றுக்குத் தகுதி பெற்றது வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகம்.

மனோகரா வி.கழக மைதானத்தில் நேற்று முன்தினம் இந்த ஆட்டம் நடைபெற்றது. வதிரி பொம்மர்ஸ் விளையாட்டுக் கழகமும் அல்வாய் மனோகரா விளையாட்டுக் கழகமும் மோதின. நீண்ட போராட்டத்தின் பின்னர் வாய்ப்புக்கள் கிடைப்பதும் பின்னர் அவை கோல்களாக மாற்றப்படாமல் வீணடிக்கப்படுவதுமாக நகர்ந்தது ஆட்டம்.

மைலோ கிண்ணத் தொடர்

இதனால் கோல்கள் இல்லாமல் முடிவு கண்டது முதல் பாதி. இரண்டாம் பாதியிலும் அதே நிலைதான். நீண்ட இழுபறியின் பின்னர் ஆட்டத்தின் 40 ஆவது நிமிடத்தில் முதல் கோலைப் பதிவுசெய்தார் சாரங்கன். அடுத்த சில நிமிடங்களிலும் கிடைத்த பிறிதொரு வாய்ப்பு சாரங்கனால் கச்சிதமாகப் பயன்படுத்தப்பட முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று முன்னேற்றம் கண்டது பொம்மர்ஸ். (ம-108)

## ஒப்பந்தத்திலிருந்து அப்ரிடி விடுவிப்பு

பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்கும் இடையிலான ஒப்பந்தத்திலிருந்து அந்த அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடி விடுவிக்கப்பட்டார். பாகிஸ்



தான் கிரிக்கெட் சபை, தனது வீரர்களுக்கு இடையில் ஏ, பி, சி என மூன்று பிரிவின் கீழ் ஒப்பந்தம் செய்யும் நடைமுறையைக் கொண்டுள்ளது. பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரான அப்ரிடி 'ஏ' பிரிவில் இடம்பிடித்திருந்தார். தற்போது புதிதாக வெளியிட்டுள்ள ஒப்பந்தத்தில் அவர் 'ஏ' பிரிவிலிருந்து விலக்கப்பட்டுள்ளதுடன் ஏனைய பிரிவுகளிலும் இடம் பெறவில்லை.

டெஸ்ட், ஒருநாள் ஆட்டங்களில் ஓய்வை அறிவித்திருந்த அப்ரிடி, ரி-20 ஆட்டங்களில் மட்டும் விளையாடி வந்தார். அவரது பெறுபேறுகள் மோசமாக அமைந்ததையடுத்து அவரிடமிருந்து ரி-20 தலைமைத்துவம் எடுத்துக் கொள்ளப்பட்டதுடன் ஒரு வீரராகவேனும் அணியில் தொடர அனுமதிக்கப்படவில்லை. (ம)

## மெஸ்ஸி நண்பர் அல்லர் ரொனால்டோ தெரிவித்தார்

மெஸ்ஸி எனது சிறந்த நண்பர் அல்லர் இவ்வாறு தெரிவித்தார் போர்த்துக்கல் அணியின் தலைவரான ரியல் மட்ரிட்.

இந்த நூற்றாண்டின் சிறந்த கால்பந்தாட்ட வீரர்களாக போர்த்துக்கல் அணியின் தலைவரும் ரியல் மட்ரிட்டின் நட்சத்திர வீரருமான ரொனால்டோவும், ஆர்ஜென்ரினா அணியின் தலைவரும் பார்சிலோனா அணியின் நட்சத்திர வீரருமான மெஸ்ஸியும் கருதப்படுகின்றனர். உலகின் ஆகச் சிறந்த கால்பந்து வீரருக்கான விருதை 2008 ஆம் ஆண்டு முதல் இவர்கள் இருவருமே மாறிமாறிக் கைப்பற்றி வருகின்றனர்.

குறித்த விருதை மெஸ்ஸி 5 தடவைகளும், ரொனால்டோ 3 தட்வை களும் வென்றுள்ளனர். நடப்பு வருடத்துக்கான பரிந்துரையிலும் இவர்கள் இருவரதும் பெயர்களும் இது தொடர்பாக வழங்கிய நேர்காணல் ஒன்றிலேயே ரொனால்டோ இவ்வாறு தெரிவித்தார்.

"மெஸ்ஸி எனக்குச் சிறந்த நண்பர் இல்லை. எனக்கும் அவருக்கும் இடையில் பெரிய புரிந்துணர்வு மரியாதை உள்ளது. ஊடகங்கள் எங்கள் இருவருக்கும் இடையில் பெரிய பகை உள்ளது போல் சித்திரிக்கின்றன. ஆனால், அப்படி இல்லை. குறிப்பாகப் போர்த்துக்கல், ஆர்ஜென்ரினா விளையாடும் ஆட்டங்களையோ அல்லது ரியல்மட்ரிட், பார்சிலோனா விளையாடும் ஆட்டங்களையோ எனக்கும் மெஸ்ஸிக்கும் இடையிலான மோதலாகப் பார்க்கக் கூடாது. ஏனெனில் குறித்த ஆட்டத்தில் ஏனைய வீரர்களுக்கும் மிகப் பெரும் பங்குண்டு" என ரொனால்டோ மேலும் தெரி வித்தார். (ம)





## மைலோ கிண்ணம்; இன்றைய மோதல்

யாழ்ப்பாணம், ஒக். 30

மைலோ கிண்ணத்துக்காக நடத்தப்பட்டுவரும் கால்பந்தாட்டத் தொடரில் பருத்தித்துறை லீக்கில் பதிவுசெய்துள்ள கழகங்களுக்கு இடையிலான ஆட்டங்கள் இன்று ஆரம்பமாகின்றன.

நெற்கொழு கழுகுகள் விளையாட்டுக் கழக மைதானத் திலேயே ஆட்டங்கள் நடைபெறவுள்ளன. காலை 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஆட்டத்தில் சென். சேவியர் அணியை எதிர்த்து உதய தாரகை அணி மோதவுள்ளது. தொடர்ந்து நடை பெறும் ஆட்டங்களில் மயிலிட்டி கண்ணகி அணியை எதிர்த்து சென். அன்ரனிஸ் அணியும், பொலிகை பாரதி அணியை எதிர்த்து கலைவாணி அணியும் சென். தோமஸ் அணியை எதிர்த்து ஆதிசக்தி அணியும், விண்மீன் அணியை எதிர்த்து நக்கீரன் அணியும், தொண்டைமானாறு ஐக்கிய அணியை எதிர்த்து கழுகுகள் அணியும், திக்கம் இளைஞர் அணியை எதிர்த்து பருத்தித்துறை யுனைற்ரெட் அணியும், நெடியகாடு அணியை எதிர்த்து வல்வை அணியும் மோதவுள்ளன. (ம-422)

## சானியா - ஹிங்கிஸ் இணை அரையிறுதிக்கு முன்னேற்றம்

சிங்கப்பூர் ரென்னிஸ் தொடரில் பெண்கள் இரட்டையர் பிரிவில் அரையிறுதிக்குத் தகுதி பெற்றது சானியா மிர்சா, மார்டினா ஹிங்கிஸ் இணை.



பன்னாட்டு ரென்னிஸ் தரப்படுத்தலில் முன்னணியில் இருக்கும் வீராங்கனைகளுக்கான நடப்பு வருடத்தின் இறுதித் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் இடம் பெற்ற பெண்கள் இரட்டையர் பிரிவு அரையிறுதிக்குத் தகுதி பெறும் ஆட்டத்தில் இந்தியாவின் சானியா மிர்சா - சுவிட்சர்லாந்தின் மார்டினா ஹிங்கிஸ் இணை, சீன தைபே சகோத ரிகளான ஜங்ஜான்சான்-ஹயோசிங்சாங்இணையை எதிர்கொண்டது. மூன்று செற்களைக் கொண்டதாக நடைபெற்ற ஆட்டத்தின் முதலிரு செற்களையும் முறையே 7:6, 7:5 என்ற புள்ளிகளின் அடிப்படையில் கைப்பற்றிய மிர்சா கிங்கிஸ் இணை 2:0 என்ற நேர் செற் கணக்கில் வெற்றிபெற்று அரையிறுதிக்குத் தகுதி பெற்றது. (ம)

Facebook : UTHAYAN.PRINT
Twitter : UTHAYANPRINT



# சுருட்டித் தள்ளப்பட்டது நியூசி. தொடரை வென்றது இந்தியா

நியுசிலாந்துக்கு எதிரான இறுதி ஒருநாள் ஆட்டத்தில் 190 ஓட்டங்களால் வெற்றிபெற்று தொடரை 3:2 என்ற அடிப்படையில் கைப்பற்றியது இந்தியா.

இந்த இரு அணிகளுக்கும் இடையிலான ஐந்து ஆட்டங்களைக் கொண்ட ஒருநாள் தொடரின் ஐந்தாவது ஆட்டம் நேற்று நடைபெற்றது. முடிவடைந்த முதல் நான்கு ஆட்டங்களில் இரு அணிகளும் தலா இரு வெற்றிகளைக் கைப்பற்றி 2:2 என்று இருந்தமையால் இந்த ஆட்டத்தில் வெற்றி பெறும் அணியே தொடரை வெல்லும் என்ற திரில் நிலையில் ஆட்டம் ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இந்தியா முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ரகானே 20 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இந்தியாவின் முதல் இலக்கு 40 ஓட்டங்களில் சரிக்கப்பட்டது. கோக்லி, ரோகித் கூட்டணி தளம்பல் நிலையை சிறப்பாகவே சமாளித்தது. மேலதிக இலக்கை இழக்காமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இந்தியா. 70 ஓட்டங்களுடன் ரோகித்தை வீழ்த்தினார் போல்ட். 65 ஓட்டங்களுடன் கோக்லியை பவிலியனுக்குத் திருப்பினார் சொட்கி. டோனியால் முடிந்தது 41 ஓட்டங்கள். பின்வரிசை சுமாரான பங்களிப்பை வழங்க முடிவில் இந்தியா 269-5.

பதிலுக்குக் களமிறங்கிய நியூசிலாந்துக்கு முதல் பந்துப் பரிமாற்றத்திலேயே ஆரம்ப வீரரான குப்தில் ஓட்டமெதனையும் பெறாது ஆட்டமிழந்தார். முதல் கோணல் முற்றும் கோணலானது. அணி 28 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் லாதம் 19 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். 27 ஓட்டங்களுடன் வில்லியம்சனை வீழ்த்தினார் அக்சர் பட்டேல். இவரே நியூசிலாந்தின் சார்பாக அதிக ஓட்டங்களைப் பெற்றவராவார். ரெய்லரால் முடிந்தது 19 ஓட்டங்கள். வீழ்த்தியவர் மிர்சா. இந்த இலக்குச் சரிவின் பின்னரே மிர்சாவின் சுழல் நன்கு எடுபட்டது. நியூசிலாந்தின் மத்திய வரிசையும் பின் வரிசையும் ஒன்றுமில்லாமல் போனது. நீஸ்கம், வற்லிங், சவுத்தி, சொட்கி அடுத்தடுத்து மிர்சாவால் பவிலியன் திரும்ப 79 ஓட்டங்களில் சகல இலக்குகளையும் இழந்தது நியூசிலாந்து.

பந்துவீச்சில் இந்திய அணியின் சார்பில் மிர்சா 5 இலக்குகளைக் கைப்பற்றினார். அவரே ஆட்ட நாயகனாகவும் தொடராட்ட நாயகனாகவும் தெரிவானார். (ம)

## கூடைப்பந்தாட்ட இறுதியாட்டங்கள்

யாழ். மத்திய கல்லூரி மாணவர் முதல்வர் சபை, பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தக் கிண்ணத்துக்காகப் பாடசாலைகளின் 19 வயதுப்பிரிவு அணிகளுக்கு இடையே நடத்தும் கூடைப் பந்தாட்டத் தொடரின் இறுதியாட்டம் யாழ். மத்திய கல்லூரியின் கூடைப்பந்தாட்டத்திடலில் இன்று நடைபெறவுள்ளது. பிற்பகல் 3.30 மணிக்கு இடம்பெறும் பெண்களுக்கான ஆட்டத்தில் வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை அணியை எதிர்த்து யாழ். திருக்குடும்பக் கன்னியர் மட அணி மோதவுள்ளது. மாலை 6 மணிக்கு இடம்பெறும் ஆண்களுக்கான இறுதியாட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் பன்னாட்டுப் பாடசாலை அணி மோதவுள்ளது. (ம-23)

## முன்னணியில் இங்கிலாந்து

இங்கிலாந்து, பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய இரண்டாம் நாள் நிலவரத்தின் படி இங்கிலாந்து அணி முன்னணியில் உள்ளது.

நாணயச்சுழற்சியில் வெற்றி பெற்ற பங்களாதேஷ் முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்து 220 ஓட்டங்களில் சுருண்டது. அதிகபட்சமாக ரமீம் இக்பால் 104 ஓட்டங்களையும், கக்கியூ 66 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் இங்கிலாந்தின் சார்பாக மொயின் அலி 5 இலக்குகளையும், வோக்ஸ் 3 இலக்குகளையும், ஸ்ரோக்ஸ் 2 இலக்குகளையும் கைப்பற்றினர்.

பதிலுக்குக் களமிறங்கிய இங்கிலாந்து முதல் நாள் முடிவில் 50-3 என்ற நிலையில் இருந்தது. ரூட் 15 ஓட்டங்களுடனும் மொயின் அலி 2 ஓட்டங்களுடனும் இரண்டாம் நாளுக்காகக் களமிறங்கினர். 10 ஓட்டங்களுடன் அலியை வீழ்த்தினார் மிராஸ். ஸ்ரோக்ஸால் ஓர் ஓட்டத்தையேனும் பெறமுடியவில்லை. அரைச்சதத்துடன் ரூட்டின் ஆட்டமும் முடிவு கண்டது. ரூட் ஆட்டமிழந்தபோது இங்கிலாந்து 144-8. வோக்ஸ், ரசிட் இணை ஒன்பதாவது இலக்குக்காக 99 ஓட்டங்களைப் பகிர்ந்தது. 46 ஓட்டங்களுடன் வோக்ஸ் ஆட்டமிழந்தார். பின் வந்த வேகத்தில் பவிலியன் திரும்ப 244 ஓட்டங்களில் இங்கிலாந்தின் இன்னிங்ஸ் முடிவு கண்டது.

பந்துவீச்சில் பங்களாதேஷின் சார்பாக மிராஸ் 6 இலக்குகளையும், இஸ்லாம் மூன்று இலக்குகளையும், சகிப் அல் ஹசன் ஓர் இலக்கையும் வீழ்த்தினர்.

பதிலுக்குக் களமிறங்கிய பங்களாதேஷ் நேற்றைய இரண்டாம் நாள் முடிவில் 152-3 என்றுள்ளது. கையிஸ் 59 ஓட்டங்களுடன் களத்திலுள்ளார். (ம)



## வென்றது மெசனற்

கந்தானை டி மெசனற் கல்லூரிக்கும் கொட்டாஞ்சேனை சென். பெனடிற்க் கல்லூரிக்கும் இடையிலான கால் பந்தாட்டத்தில் டி மெசனற் கல்லூரி 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ம-23)

## இலங்கை பலமான தொடக்கம்

சிம்பாப்வேக்கு எதிரான முதலாவது டெஸ்ட் ஆட்டத்தின் நேற்றைய முதல் நாளில் பலமான தொடக்கம் கண்டது இலங்கை.

இரு ஆட்டங்கள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடுவதற்காக இலங்கை அணி சிம்பாப்வேக்குச் சென்றுள்ளது. முதல் டெஸ்ட் ஹராரேயில் நேற்று ஆரம்பமானது. நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது. ஆரம்ப வீரர்களாக கௌசால் சில்வா மற்றும் கருணாரத்ன. இணைப்பாட்டம் நீண்டு நிலைபெற்றது. இருவரும் ஆளுக்கொரு அரைச்சதம் கடக்க இலக்குச் சரிவில்லாமல் 100 ஓட்டங்களைத் தொட்டது இலங்கை. அணி 123 ஓட்டங்களைப் பெற்றிருந்தபோது 56 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார் கருணாரத்ன. முதல் நாளின் 45 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் இலங்கை 145-1 என்றிருந்தது. (ம)


கண்டெடுக்கப்பட்டுள்ளது

யாழ் நகரில் உள்ள மருந்தகம் (பார்மசி) ஒன்றுக்கு வருகை தந்த வாடிக்கையாளர் ஒருவரினால் (எமது CCT கமரா மூலம் பெண் என இனம் காணப்பட்டுள்ளார்) தவறவிடப்பட்ட ஒருதொகைப்பணம் கண்டெடுக்கப்பட்டுள்ளது. உரியவர் கீழ்காணும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு உரிய ஆதாரத்தைக் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்.

தொடர்பு: 077 870 2188

பணிநிலை வேண்டுகை

1. வரவேற்பாளர்
2. வெல்டர்ஸ்
3. பனர் மெசின் இயக்குநர்
4. பைண்டிங்
(முன் அனுபவம் அவசியம்)





31.10.2016 திங்கட்கிழமை நேரில் சமுகம் தரவும்

ES Printers 359, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

(C/23035)(10.18)

காணி விற்பனைக்கு

K.K.S. வீதியிலிருந்து மூன்றாவது காணி கோண்டாவில் மேற்கு K.R.S மில் வீதியில் 2 பரப்புக் காணி (கமலேஸ்வரி Building இற்கு முன்பாக உள்ள வீதி)

தரகர்கள் வேண்டாம்
076 973 4422, 077 393 4340

அமெரிக்க அதிஸ்ட விசா



ஒரு சாதாரண முடிவு உங்கள் வாழ்க்கையை மாற்றிவிடும்!
இலவசமாக அமெரிக்கா போகலாம்
3 விரையுங்கள் - இன்னும் நாட்களே உள்ளன
0768226230
2018 ல் உங்கள் தீபாவளியை அமெரிக்காவில் கொண்டாடுங்கள்
V2 Travels

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்க;த்தில் உள்ள அவர்களது பணிமனையில் 30.10.2016 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.